உமா
ஆசிரியர்: ஜி. உமாபதி
பொங்கல் மலர்
தை
ரூ 1
ஜனவரி 1960

ஜெமினியின்
மகத்தான
சமூகச் சித்திரம்
இரும்புத்
திரை
சிவாஜி கணேசன் • வைஜயந்திமாலா
பி.சரோஜாதேவி • பண்டரிபாய்
வசுந்தராதேவி • எஸ்.வி.சுப்பய்யா
எஸ்.வி.ரங்காராவ் • டி.பாலசுப்ரமணியம்
ஜாவர் சீதாராமன் • எஸ்.ஆர்.ஜானகி
கே.ஏ.தங்கவேலு • டி.எஸ்.துரைராஜ்
வனஜா நடித்தது
கூடிய சீக்கிரம் வெளிவருகிறது

# பிப்ரவரி வெளியீடு

அஞ்சலி பிக்சர்ஸ்
அடுத்த வீட்டுப் பெண்
(கருத்து நிறைந்த நகைச்சுவை விருந்து)
நடனங்கள் கேவா கலரில்
வசனம் - பாடல்கள்
தஞ்சை ராமய்யாதாஸ்
டைரக்ஷன்
வேதாந்தம் ராகவய்யா
FLOODLIGHT
தயாரிப்பு - சங்கீதம்: ஆதிநாராயணராவ்

நான்
விரும்பி வாங்குவது
உம்மிடியார்
ஸ்டெயின்லெஸ்
ஸ்டீல்
பாத்திரங்களே
VUMMIDIARS
Stainless Steel
வெள்ளி
ஸ்டெயின்
லெஸ் ஸ்டீல்
பாத்திரங்களை
ஸைஷனே
வினல்
துலக்குங்க்ள்
உம்மிடியாரின் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்களையே நான் பொறுக்கிஎடுப்பதற்கு பலகாரணங்கள் உண்டு. உம்மிடியார், உடையாத, நொறுங்காத துருஏருதமுதல் தரமான ஸ்டெயின்லெஸ் ஸ்டீலையே உபயோகிக்கிருர்கள். பெண்மணிகளால் பெரு மதிப்பைப் பெற்ற இந்த ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள் வெகு காலம் உழைக்கக் கூடியவை. ஆனலும் மிக மலிவானவை.
உம்மிடியார்ஸ்
(மான்யுபாக்சரர்ஸ்) லிமிடெட்.
சென்னை-2.
V.R.Z-32

அழியாப் புகழின் சின்னம்
அஜந்தா ஓவியங்கள்!
நேர்த்தியான
அகர்பத்தி
களில் முதன்மை
ஸ்தானம் வகிப்பவை
லலிதா
அகர்பத்திகளே!
பூஜைக்கு உகந்தது
கோகிலா தசாங்கம்.
என்.கெ. சுப்பய்யா செட்டி அண்டு சன்ஸ்
"கோகிலா பில்டிங்"..பெங்களூர்-2.
DASANGA
LALITA

சிறந்ததென சீர்தூக்க
சிட்டிகையே சான்று!

# T.A.S. ரத்தினம்
# பட்டணம் பொடி

தயாரிப்பாளர்:
T.A.S. ரத்தினம் பிரதர்ஸ்
தபால் பெட்டி 1151, மதராஸ்-21

S.R. ஞானம் பட்டணம் பொடியும் எமது தயாரிப்பே


---


காலத்திற்கேற்ற பானம்

# புருட்னிக்

புதுப் பழச்சத்து நிறைந்தது
ஆரஞ்சு – அன்னாசி – திராட்சை
வர்த்தக நிபந்தனைகளுக்கு விசாரிக்கவும்.

**புருட்னிக் பிராடக்ட்ஸ்,**
1, பூந்தமல்லி ஹைரோடு
மதராஸ்–29.

**fruitnik**
fp



# பொங்கலோ பொங்கல்



சகலரும்

சால

விரும்பும்

## கோ-ஆப்டெக்ஸ்
## கைத்தறி
## ஆடைகள்

உங்கள் ஆடைக்கும்
இதர பல
அலங்காரங்கட்கும்

சென்னை ராஜ்ய
கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு
சங்கம் லிமிடெட்
34/A-1, பாந்தியன் ரோடு
எழும்பூர், சென்னை-8.

SISTA'S

பொங்கலுக்கு கூடுதல் தள்ளுபடி ரூபாய்க்கு 4 நயா பைசா

Phone: 55096 Grams: PRINTMACHO

# தி ஸ்டாண்டர்ட் பிரிண்டிங் மிஷினரி கம்பெனி

(அச்சுத்தொழிலின் வழிகாட்டிகள்)

12/81, செம்புதாஸ் தெரு, மதராஸ்-1.

கீழ்க்கண்டவற்றின் உற்பத்தியாளர்கள் :

- சிங்கல் டெம்மி அளவில் ஸ்டாப்ஸிலிண்டர் பிரிண்டிங் பிரஸ்
- சாண்ட்லர் மாடல் ட்ரேடில் பிரஸ், கிரௌன் & புல்ஸ்கேப் போலியோ சைஸ்
- உயர்தரமான பேப்பர் கட்டிங் மிஷின் 36″–31″–26″–21″– அளவு கையாலும் மின்சார சக்தியாலும் இயக்கக் கூடியது.
- அட்டைப் பெட்டிகள் செய்யும் போர்ட் கிரீஸ்ஸிங் மிஷின்கள்
- அட்டை வெட்டும் ரோட்டரி கட்டிங் மிஷின் கையாலும் மின்சார சக்தியாலும் இயக்கக் கூடியது.
- டை ஸ்டாம்பிங் பிரஸ்கள்
- டிரடில் பெர்பரேடிங் மிஷின் முதலியன.

புதுமாதிரி மிஷின்களால் தொழிற்சாலை அமைக்கவும், ஓவர்ஹாயிலிங் செய்யவும், ரிப்பேர் பார்க்கவும், ரீபில்ட் செய்யவும், அச்சுத் தொழில் சம்பந்த உப கருவிகளும் இணைக்கப்பட்டுள்ளன.

எல்லா மிஷின்களும் உழைப்பிற்கு உத்தரவாதம் பெற்றவை.

மற்றும்

# தி ஸ்டாண்டர்ட் டைப் பவுண்டரி

கல்கத்தா, டெல்லி, பாம்பாய்.

தி ஸ்டாண்டர்ட் பிரிண்டர்ஸ் புரொவைடேர்ஸ்

ஹைதராபாத்.

N.V. ஷண்முகம்
பட்டணம் பொடி
தங்க மெடல் பரிசு பெற்றது
MADRAS SNUFF
போன்
4071
தந்தி:-
மூக்குத்
தூள
தினசரி மெயிலில் வருகிற
NVS
பட்டணம் பொடி
S.I.R
N.V. ஷண்முகம் கம்பெனியார்
தபால் பெட்டி 555, மதராஸ். 21

# ஒரு நல்ல செய்தி

OK ஒகே சந்தன சோப்

அறிமுகப் பரிசளிப்பு
**31-1-1960** வரை
நீடிக்கப்பட்டிருக்கிறது

*உங்கள் சருமத்திற்கு*

மிருதுத்தன்மை அளிக்க
**அதிக கிளிஸரின்**

பாதுகாப்பிற்கு
**லனேலின்**

கிருமிகளை அழிக்க
**ஆக்டமெர்**

## இனும்

3 கட்டி ஒ. கே. சந்தன சோப வாங்குங்கள். கவர்ச்சிகரமான தந்த முலாம் சோப்புப் பெட்டி ஒன்றை முற்றிலும் இலவசமாகப் பெறுங்கள்.

தி ஈஸ்ட் ஏஷியாடிக் கம்பெனி
(இந்தியா) பிரைவேட் லிமிடெட்,
மதராஸ் - 1.

EP


தொல்காப்பியம்
குறள்
எட்டுத்தொகை
பத்துப்பாட்டு
மணிமேகலை
வளையாபதி
சிலப்பதிகாரம்
ராதா

# உமா

பொங்கல் மலர் 1960


197659


ஆசிரியர்:
ஜி. உமாபதி

இணை ஆசிரியர்:
பூவை எஸ். ஆறுமுகம்

| செடி 7<br>மலர் 9 | ஜனவரி 1960 | விகாரி௵<br>தை மீ |
|---|---|---|


## மலர் மணம்:

தலைவர் ம. பொ. சி, ஜி. உமாபதி, கி. வா. ஜகந்நாதன், கவி கா. மு. ஷெரீப், டாக்டர் மு. வ., பம்மல் சம்பந்தனார், மயிலை சிவமுத்து, அகிலன், லா. ச. ராமாமிருதம், கு. அழகிரிசாமி, பரலி சு. நெல்லையப்பர். டாக்டர் மா. இராசமாணிக்கனார், கமலா விருத்தாசலம், எஸ். லட்சுமி சுப்பிரமணியம், அரு. இராமநாதன், ஜெகசிற்பியன், மாயாவி, வ. உ. சி. சுப்பிரமணியன், நா. பார்த்தசாரதி, கல்கி கி. ராஜேந்திரன், தமிழ்க்கோவன், பாரதிமோகன், பூவை எஸ். ஆறுமுகம்.

# இதயத்தைப் புனிதப் படுத்துவோம்!

ம.பொ.சி

தைத் திங்கள் முதல் நாள், தமிழ் இனத்தவருக்கு புதிய தினம் மட்டுமல்ல; புனித தினமுமாகும். அன்று உண்ணும் உணவு புதிது; உடுக்கும் உடை புதிது. ஆனால், வாழ்வில் புதுமை மணக்க அவை மட்டும் போதுமா? எண்ணத்திலும் புதுமை வேண்டுமே! மார்கழித் திங்கள் இறுதி நாளில் போகிப் பண்டிகை கொண்டாடுகிறோம். அதனை 'போக்கிப் பண்டிகை' எனக் கூறுவதே பொருத்தம். அந்த நாளில், அல்லது அதற்கு முந்திய நாட்களில் இல்லச் சுவர்களில் படிந்த அழுக்குகளை வெள்ளையடித்துப் போக்குகிறோம். ஆனால் இதயத்தினுள்ளே ஆண்டு முழுவதும் வளர்ந்துவிட்ட அழுக்குகளை எதைக் கொண்டு போக்குவது? ஆம்; 'இசை' கொண்டு போக்க வழிகாட்டினர் முன்னோர். மனையகத்தே படிந்த அழுக்குகளையெல்லாம் ஒரு நாளில் போக்கிவிடலாம். ஆனால் மனத்தகத்தே படிந்த அழுக்குகளை போக்க ஒரு மாதமே தேவைப்படுகிறது. அதனால் மார்கழித்திங்கள் முழுவதிலும் விடியற்காலை நேரங்களிலே இசை பாடினர்!

தமிழ் மக்களாகிய நாம், தொன்று தொட்டு இன்று வரை தெய்வத்தை நம்பி, அதனை வழிபட்டு, வாழ்ந்து வருகின்றோம். மனிதனுடைய மனத்தைத் தூய்மைப்படுத்துவது ஒன்றே உண்மையான தெய்வ வழிபாடு என்றனர் முன்னோர். பொறாமை, கோபம், பேராசை, காமம் போன்ற பீடைகளெல்லாம் நம் மனத்தில் குடி புகுந்து விடுகின்றன. அந்தத் தீமைகளை அகற்றி, அடக்கம் – அன்பு – அஹிம்சை என்ற பண்புகளை மனத்தில் குடி புகுத்த வேண்டும்.

இன்று எங்கும் 'தமிழ் வாழ்க' என்ற ஒலி கேட்கின்றது. வாயால் வாழ்த்தினால் மட்டும், தமிழ் வாழ்ந்து விடுமா?

தமிழ் என்பது, எழுத்துக்களின் எண்ணிக்கையல்ல; சொற்களின் ஜோடிப்புமல்ல; தூய எண்ணங்களின் தொகுப்பே 'தமிழ்.' அந்த எண்ணங்களெல்லாம் அச்சடித்த ஏடுகளிலே தான் இன்று இருக்கின்றன. ஏடுகளைப் படித்தும், அவை நம் இதயங்களிலே குடி புகவில்லையானால், தமிழ் வாழாது!

ஒரு தமிழன் வாழ, அது கண்டு இன்னொரு தமிழன் பொறுப்பதில்லை. இந்தப் பொறுமையைப் போக்கித் தீயிலே போட்டுப் பொசுக்குவோமாக! நமது கண்கள், பிறரிடமுள்ள குறைகளைக் காண்பதில் கூர்மை பெற்றிருக்கின்றன. ஆனால், நம் செயல்களிலுள்ள குறைகளைக் காண முடியாமல் குருடாகி விட்டன!

மற்றவர்களிடமுள்ள இழிவுகளை எடுத்துச் சொல்வதில், நமது வாய் தனித்திறமை பெற்றிருக்கின்றது. ஆனால், நம் குறையைக் கூற முடியாதபடி ஊமையாகி விட்டது. இந்த அறியாமைகளையும் அநீதிகளையும் போக்கித் தீயில் போட்டுச் சுட்டெரிப்போமாக! மற்றவர்களிடம் என்ன நற்குணங்களை நாம் எதிர்பார்க்கிறோமோ, அந்தக் குணங்கள் நம்மிடமும் இருக்கின்றனவா என்று ஆராய வேண்டும். இல்லையானால், அவற்றைப் பெறவேண்டி, தைத் திங்கள் முதல் நாளன்று கதிரவனைப் பிரார்த்திப்போமாக!

'பண்டிகை நாள்' என்பது உண்டு களிக்கும் நாளாகி விடக் கூடாது. நம் உடலை வளர்ப்பதை விட, உள்ளத்தை வளர்ப்பதே மனித குலத்திற்கு நாம் செய்யும் சேவை. ஏழை உழவன், தான் பாடுபட்டதால் கிடைத்த தானியத்தைப் பொங்கி முதலில் கதிரவனுக்குப் படைக்கின்றான். அதனால் தான், பொங்கல் விழா புனிதம் பெறுகிறது. இந்த நாகரிகத்தை உலகம் உழவனிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும்.

'என் உழைப்பால் கிடைப்பது எல்லாம், எனக்கே சொந்தம்' என்பது தமிழர் பண்பன்று.

'எனது நன்மைக்காகத் தான் இந்த உலகம் படைக்கப்பட்டிருக்கிறது' என்ற எண்ணம் தமிழர் நெறியன்று!

'உலகத்தை வாழவைத்துநானும் வாழ்வேன்; உலகத்திற்காக நான்; எனக்காகவும் உலகம்,' என்பதெல்லாம் தமிழர் பண்பாடுகளாகும்.

இந்த உயர்ந்த பண்பாடுகளை தமிழ் மக்களாகிய நாம் மறந்தே போய் விட்டோம். அவற்றைத் திரும்பவும் நினைவூட்டிக் கொள்ளவும், அந்த நெறிகளிலே நாமனை வரும் நிலைத்து வாழவும், அருள் புரியுமாறு தைத் திங்கள் முதல் நாளில் இறைவனைப் பிரார்த்திப்போமாக!



# பொங்கல் திருநாள்

கி. வா. ஜகந்நாதன்

நெல்லை விளைத்து நிமிர்கரும்பையும் விளைத்து
நல்ல விளைவுகண்டு நன்றியுடன்—வல்லவனைச்
செங்கதிரோன் தன்னைத் திகழ்மதியைப் போற்றுவதே
பொங்கல் திருநாளின் பொற்பு.

உழைப்பாளி கைவருந்த ஓங்கி வளர்ந்து
தழைப்பார்ந்த நற்பயனைத் தந்த—செழிப்பாலே
நெல்லைக் கரும்பை நிறமஞ்ச ளைவைத்தோம்
நல்ல இனிமைப்பொங்கல் நாள்.

நாடு செழிக்க நலம்செழிக்க வேளாண்மை
கூடும் படிசெய்த கோக்குலமாம்—மாடு
துளங்கலின்றி வாழும் துறைகண்டு போற்ற
விளங்குமிந்தப் பொங்கல் விழா.

அரிசி நிறையவெல்லம் ஆன்நெய் நிறைய
வரிசை நிறைவதனால் வைக்கும்—உருசியுள்ள
பொங்கல் இனிக்கும்நாள் போயிற் றினிவருமோ
மங்கலம் சேர் இன்பநல வாழ்வு.

பண்டம் கிடையாப் பரிபவமும் நற்செயற்குத்
தொண்டர் கிடையாத சூழ்நிலையும்—கண்டவர்க்குப்
பொங்கலுண்டோ? நெஞ்சப் பொருமல் துயர் கோபம்
பொங்கிவரும் நாளாகிப் போம்.

இந்தஇடர் நீங்க எழிலார் நிலவளமும்
சிந்தனையில் நல்லோர் செயல்வளமும்—முந்துவிறல்
வீர வளமும் விளங்குகஎன் றேஇறைவன்
ஏரடியைத் தாழ்குவமால் இன்று.

மனம்உயர்க! வாழ்வின் வளம்உயர்க! மக்கள்
இனம் உயர்க! அன்புயர்க! ஈசன்—கனஅருளே
நீளும் திறம்உயர்க! என்று நினைந்து பொங்கல்
நாளில் தொழு துயர்வோம் நாம்!



# தமிழகம் அன்றும் இன்றும்

ஜி. உமாபதி

தமிழகத்தின் பண்டைச் சரித்திரம் பெரும்புகழ் கொண்ட தென்பதையும், வாழ்வும் வளமும் பூண்டு விளங்கிய தென்பதையும் கடைச் சங்ககால இலக்கியத்தின் வாயிலாக நாம் அறிகின்றோம். பழங்காலத் தமிழகம் என்றால், ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முந்தையதைக் குறிக்கும். வில், புலி, கயல் பொறித்த கொடிகளைப் பறக்கச் செய்து அரசோச்சிய சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் சரித்திரம்தான் இன்றையத் தமிழகத்தின் மதிப்பையும் மரியாதையையும், அருமையையும் பெருமையையும் கட்டிக் காத்து வருகின்றது!

ஆம்; பழம் பெருமையில் வாழும் நாம் பழங்காலச் சரித்திரத்தை அடிக்கடி எண்ணிப் பூரித்துப் புளகிதம் அடைவதும் இயல்புதான்!

வடவெல்லை வேங்கடம்; தெற்கே குமரி. மேற்கிலும் கிழக்கிலும் கடல். இந்தப் பரப்பிற்குள்ளே தான் அன்றையத் தமிழர்களின் சிறப்பும் சீர்மையும் வான்புகழ் எய்தி வந்தன. தமிழை உயிர் போலக் காத்தனர் அந்நாளைய முடியுடை வேந்தர்கள்; அவர்கள் முத்தமிழைப் போற்றினர்; புகழ்ந்தனர்; வளர்த்தனர். குடிகளின் நல்வாழ்வு ஒன்றையே லட்சியமாகக் கொண்டிருந்தனர்; ஆகவே, தமிழர் தம் வாழ்க்கை அன்று எல்லாத் துறைகளிலும் நிகரற்று வளர்ந்து சிறந்திருந்தது. 'தன்னேரில்லாத தமிழ் மொழி' அரியாசனம் ஏறி, செங்கோல் ஏந்தி ஆண்டது! தமிழும் தமிழகமும் தமிழர்களும் பெருமையுற்றனர்; பெருமை கண்டனர்!

இத்தகைய சிறப்புக்களை, வித்துவான் திரு முத்துக் கண்ணனாரது பாடலும் விளக்கும்.

''பாரோங்கும் புகழ் படைத்த பைந்தமிழ் நன்னாடு;
பாக்குபலா மா வாழை பலசெழித்த நாடு;
ஏரோங்கு பூங்காக்கள் எழில் வனங்கள் மலைகள்
என்றும் வெள்ளம் பாய்நதிகள் எங்கு நிறை நாடு;
சீரோங்கு கம்பன் அவ்வை திருவள்ளுவர் இளங்கோ

தேசிய நற்கவி பாரதி திகழ்ந்ததெங்கள்
நாடு;
பாரோங்கு வள்ளல் மன்னர் பலர் வாழ்ந்த
நாடு;
பல்லாண்டு வாழ்க வெங்கள் பைந்தமிழ்
நாடே!"

தமிழகத்தின் அன்றைய நிலையைக் கண்டு எக்களிப்புறும் நாம், காலத்தின் பழம் பெரும் ஏடுகளின் பார்வையைவிட்டு நமது கண்ணையும் கருத்தையும் திசை திருப்பி, இன்றையத் தமிழகத்தை நோக்கும்போது, நாம் கவலை யடைகின்றோம். காரணம்: இன்று நம் அருமைத் தமிழகம் இருக்கும் அவல நிலைமைதான்!

மதுநிறைப் பனிமலர்

"உறுபசியு மோவாப் பிணியுஞ் செறு
பகையுஞ்
சேரா தியல்வது நாடு!"

இந்தத் தமிழ் மறையின் தெய்வ ஒலியை நாம் மீண்டும் மீண்டும் எண்ணிப் படிக்க வேண்டியவர்களாகின்றோம். நீடித்த உணவுப் பஞ்சமும், தொத்து வியாதிகளும், பகைவர்களின் படையெடுப்பும் வராதபடி நடத்தப் படுகின்ற நாடே நல்ல நாடு என்பது திருவள்ளுவரின் உட்கருத்தாகும். இப்போது, நம் பாரத நாட்டில் நிலவி வரும் உணவுப் பஞ்சம், உள்நாட்டுக் குழப்பம், அயலவர் போர்த் தொடுப்பு போன்ற சங்கடங்கள் நம் தமிழகத்தையும் பாதித்திருப்பது இயற்கையே யாயினும், இங்கே நம்மவர்களிடையே நிலவிவரும் ஒற்றுமையின்மைகாரணமாகவே இன்றைய தமிழகம் புகழ் மங்கிக் காணப் படுகிறது என்பதை ஒவ்வொரு தமிழரும் தனித்திருந்து சிந்தித்துப் பார்க்கவேண்டாமா? இவ்வுண்மைகளை மாற்றுக் கட்சியைச் சார்ந்த தலைவர்களும் தோழர்களும் எண்ணிப் பார்க்கவேண்டுமென்பதே என்னுடைய தனித்த ஆவலாகும்.

"தமிழன் என்ற பெருமையோடு
தலை நிமிர்ந்து நில்லடா!
தரணி யெங்கும் இணையிலா வுன்
சரிதை கொண்டு சொல்லடா!"

என்று நாமக்கல் கவிஞர் அவர்கள் பாடிய பாட்டினை நாள் தோறும் படித்துப் படித்து வீறு கொண்டு எழுந்து, தமிழகத்தின் வளர்ச்சிக்குப் பாடுபட்டு உழைப்பதே நம் தலையாய கடமையெனக் கருதி நடக்க வேண்டும்.

கணக்கு வழக்கற்ற முறையில் உயிர்த் தியாகங்களை செய்து நாம் பெற்ற ஆனந்த சுதந்தரத்தை கண்ணேபோல காப்பாற்றி வரும் இந்நாளிலே, அந்தத் தேசச்சுதந்திரத்தைப் பாழ் செய்ய பல சக்திகள் தமிழகத்தில் அங்கங்கே முளைத்துச் செயற்பட்டு வருவதை நினைக்கும் போது, பண்பாட்டுள்ளம் கொண்ட ஒவ்வொரு உண்மைத் தமிழனும் மனங் கலங்காமல் இருக்கவே இயலாது!

"தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்!'' என்று கனவு கண்டார் பாரதியார். அன்னாரது இன்பக் கனவு நனவாகிக் கொண்டிருக்கும் இன்றைய வேளையிலே, ஐக்கிய இந்தியாவுடன் இணைந்து, சுயாட்சித் தமிழகம் அமைந்து விட்டால், நம் லட்சியங்கள் பூர்த்தி பெற்று விடும். எல்லைகள் காத்தோம்; தொல்லைகள் தீர்ந்தன. தமிழ் ஆட்சி மொழியாகி விட்டது; அதன் பூரணமான பலனையும் நாம் பெறவேண்டும்.

'சுயாட்சி ஒன்றே பாதுகாப்புடன் கூடிய சுதந்திரம்!'' என்ற நம் அன்புத் தலைவர் அவர்களின் வழியை இன்றைய நிலையில் ஆதரித்து, அதன் பாதையில் நடக்கச் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள் ஒருசிலர். எந்தஒருசெய்தியையும் தீர ஆலோசித்துச் சீர்தூக்கிச் செயற்படும் நம் தலைவர் அவர்களது தீர்க்க தரிசனம் ஒரு நாளும் பொய்க்காது என்பதை நாம் நன்கு அறிவோம்; இம்மாதிரி எல்லாக் கட்சியினரும் அறிந்து ஒன்றுபட்டால், தமிழகத்தின் பெருமை வானுற ஓங்கி விளங்கும் என்பதில் துளியளவுகூட ஐயம் கிடையாது!

'புறம்' போற்றும் தமிழகத்தின் புகழ் வாய்ந்த மாண்பினை நாம் உயிரைப்போல காப்பாற்ற வேண்டும். இதனை நாம் ஒவ்வொருவரும் உய்த்துணர வேண்டும் என்பதே, இத் தமிழர் திருநாளிலே நான் விடுக்கும் பணிவன்பு கொண்ட வேண்டுகோளாகும்! ○

'ட்யூலிப்' வாசனை செண்டுகள்

தயாரிப்பாளர்கள்:

அரவிந்த் லாபரட்டரீஸ்

தபால் பெட்டி 1415, சென்னை-17.



## கலை அழகு மிகுந்து கவர்ச்சிகரமாகத் திகழ "பாக்கேஜிங்"

நீங்கள் தயாரிக்கும் சரக்குகளை விற்பனைக்கு அனுப்புவதற்கு முன்பாக, அழகுறச்செய்ய ஏன் ''பாக்கேஜிங்'' நிபுணர்களைக் கலந்து ஆலோசிக்கக்கூடாது?

உமா பிரிண்டர்ஸ் எந்தச் சரக்கிற்கும் ஏற்ற எழிலான தோற்றமும், பாதுகாப்புடன் கூடியதுமான, எல்லாவித அட்டைப் பெட்டிகள் தயார் செய்யத் தேவையான இயந்திர வசதி படைத்தவர்கள். நெடு நாளைய அனுபவம் உடையவர்கள். அவர்களைக் கலந்து ஆலோசியுங்கள். உங்கள் பணிபுரிய என்றும் உற்சாகத்துடன் இருப்பவர்கள்

# உமா பிரிண்டர்ஸ்

ஸ்தாபிதம்: 1945

உமா இல்லம், சென்னை-1, (தமிழ்நாடு).

தென்னிந்தியாவில், அச்சிட்ட கலர் 'கார்ட்டன்'கள், அட்டைப் பெட்டிகள் தயாரிப்பதில் முதன்மையானவர்கள்.

எங்களிடத்தில் ஓவியம், பிளாக்குகள் மற்றும் அச்சுவேலைகளுடன், ஆப்செட் பகுதியும் உள்ளது.



போன்: 31800. தபால்பெட்டி: 1377. தந்தி: ATTAPOTTY

## பத்மபூஷண். பம்மல். சம்பந்தனார்

# அறுபது ஆண்டுகளுக்கு முன்

# பொங்கல் விழா

ஒவ்வொரு ஆண்டிலும் கிறிஸ்தவர்களுக்கு 'கிருஸ்துமஸ்' பண்டிகை எப்படி முக்கியமோ, முகம்மதியர்களுக்கு 'ரம்ஜான்' 'ஈத்' எவ்வாறு அவசியமோ, வட இந்தியாவிலுள்ளவர்களுக்கு தீபாவளிப் பண்டிகை எப்படி முக்கியமோ, அப்படியே தமிழர்களுக்கு 'பொங்கல் பண்டிகை' இன்றியமையாததாகும்.

தமிழ் நாட்டில் தை மாதத்தில், முதல் இரண்டு மூன்று நாட்களில் இந்தப் பொங்கல் பண்டிகை கொண்டாடப் படுகிறது. பிராமணர்கள் இதை 'சங்கராந்தி' என்று கொண்டாடுகிறார்கள். மற்றவர்கள் இதைப் 'பெரும் பொங்கல்' என்று கொண்டாடுகின்றனர்.

எனது இளமையான வயதில்–அதாவது, அறுபது ஆண்டுகளுக்கு முன் எங்கள் வீட்டில் இப் பண்டிகை கொண்டாடப்பட்ட விதத்தை இனி கூறுகிறேன். அக்காலத்தில் கொண்டாடப்பட்ட விதத்திற்கும், தற்காலத்தில் எங்கள் வீட்டில் கொண்டாடப்படும் விதத்திற்கும் சில மாறுபாடுகள் இருக்கின்றன.

**தை**மாதம் முதல் தேதி பண்டிகை ஆரம்பமான போதிலும், சிறுவர்களாகிய எங்கள் மனதில் ஒரு மாதத்திற்கு முன்பாகவே மேற்படி பண்டிகையின் உற்சாகம் ஆரம்பமாகிவிடும். அதற்குக் காரணம் என்னவென்றால், மார்கழி மாதம் முதல்தேதி முதல் எங்கள் வீட்டில் காலையில் சாணத்தில் பூசணிப் பூவை வைத்துக் கும்பிட்டு வணங்குவது வழக்கமாகும்; சிறுவர்களாகிய நாங்கள் சாண உருண்டைகளை எல்லாம் மறுநாள் சிறிய வறட்டிகளாகத் தட்டி வைப்போம். இந்தச் சிறு வராட்டிகளை எல்லாம் சேர்த்து, வீட்டிலுள்ள பெரியவர்களெல்லாம் பெரும் பொங்கல் பானைகளுக்கு பெரிய வறட்டிகளை அடுக்கும் போது, எங்கள் சிறிய பொங்கல் பானைக்குச் சிறிய வறட்டிகளை அடுக்கி வைப்போம்.

சாதாரணமாக போகி அன்று, வீட்டில் பிறந்து கல்யாணம் ஆகி மாமியார் வீட்டுக்குப் போன பெண்களுக்கெல்லாம் பொங்கல் வரிசை வைப்பது ஒரு முக்கியமான வழக்கம். கல்யாணம் ஆன முதல் வருஷம், சாதாரணமாக, குறைந்த பட்சம் ஐந்து தட்டுகளாவது பொங்கல் வரிசை வைப்பது வழக்கம். பிறகு எல்லாம் வரிசைத் தட்டுகள் குறைந்து போகும்; சுமங்கலியாக இல்லாவிட்டால் கூட, வீட்டில் பிறந்த பெண்களுக்கு, அவர்களுக்கு என்ன வயதான போதிலும் இந்த வரிசை வைத்தாக வேண்டும்; சுமங்கலியாக இல்லாதவர்களுக்கு மஞ்சள் குங்குமம் புஷ்பம் முதலியன நீக்கப்

படும். இதை சிறுவர்களாகிய நாங்கள்தான் கொண்டு போய் வைப்போம். இவ்வாறு எழுபது வயது அடைந்த என் அத்தைக்கும் நான் வரிசை கொண்டுபோய் வைத்தது ஞாபகமிருக்கிறது. மேற்சொன்னபடி வரிசை வைப்பவர்களுக்கு முதல் வருஷம் விருந்து செய்வார்கள். பிறகெல்லாம் மிட்டாய் முதலிய தின்பண்டங்கள் கொடுத்து, ஏதாவது ரொக்கப் பணமும் அவரவர்கள் சக்திக்குத் தகுந்தபடி கொடுத்து அனுப்புவார்கள். இந்தப் பொங்கல் வரிசை வைக்கும் வழக்கம் வரவர குறைந்து கொண்டு வருகிறதென்று நான் வருத்தத்துடன் தெரிவிக்கிறேன்; இந்த வழக்கத்தைக் கைவிடக் கூடாது என்றும் நான் நம்மவரை வேண்டிக் கொள்ளுகின்றேன்.

மறுநாள் அதிகாலையில் எல்லோரும் எழுந்து ஸ்நானம் செய்து விடுவோம். எங்கள் தாயார் பிள்ளையார் பூஜையை முடித்து, பிள்ளையாரை மணையுடன் பூஜை அறையிலிருந்து கொண்டு வந்து, கோலமிட்ட வாசலின் வடமேற்கு மூலைச் சதுரத்தில் வைத்து, இரண்டு பக்கமும் இரண்டு பெரிய கரும்புகளை வளைவாகக் கட்டி இரண்டு பக்கமும் இலைகளையுடைய இரண்டு மஞ்சள் தார்களை வைத்து அலங்கரிப்பார்கள்; அன்றியும், எதிரில் ஒரு பெரிய வாழை இலையை வைத்து தை மாதத்தில் என்னென்ன காய்கறிகள் கிடைக்குமோ அவைகளில் தினுசுக்கு ஒன்றாக வைப்பார்கள். ஆனால் இதில் கீரை வகைகள் ஒன்றும் வைப்பதில்லை. அதற்குக் காரணம் எனக்குத் தெரியாது; அதைத் தெரிவிப்பாரும் கிடையாது. பிறகு, முந்திய நாளே குயவன் செய்து கடையிலிருந்து வாங்கி வரப்பட்ட ஒரு பெரிய பானையையும், இரண்டு பானைகளையும் நன்றாய்க் கழுவி அவைகளின் கழுத்தில் மஞ்சள் தேறுகளைக் கட்டி பானைகளுக்கு விபூதி, மஞ்சள், குங்குமம் அணிவித்து, ராகு காலம் முதலியன இல்லாத நல்ல சமயம் பார்த்துக் கொணர்ந்து, வாசலின் நடுச் சதுரத்தில் வறட்டிகளை முட்டுதலைகளாக அடுக்கி, தீமூட்டி யிருக்கும் இடங்களில் பெரிய பானையை நடுவிலும் மற்ற இரண்டு பானைகளை இரண்டு பக்கங்களிலும் வைப்பார்கள். பானைகளில் போட வேண்டிய அரிசிக்குத் தக்கபடி தண்ணீரை வார்த்து, சூடாகி வரும்போது அரிசியை களைந்து போடுவார்கள். ஏறக்குறைய ஒரு மணி நேரத்துக்குள்ளாக அரிசி கொதி வரும். வீட்டிலுள்ளவர்களை எல்லோரையும் பக்கலில் அழைத்துக் கொண்டு ஒவ்வொரு பானையிலும் தக்கபடி கொஞ்சம் பாலை விடுவார்கள். இதற்குள்ளாக வாசலின் ஒரு மூலையில் சிறுவர்களாகிய நாங்கள் முன்னே சொன்னபடி சேகரித்து வைத்திருந்த சிறிய வராட்டிகளை அடுக்கி அதில் ஒரு சிறு பானையை வைத்து, பெரியவர்கள் செய்கிறபடியே நாங்களும் பொங்கல் தயாரிப்போம். நடு வாசலில் வைக்கப்பட்ட மூன்று பானைகளில் ஏதாவது ஒன்றில் பால் பொங்கி வந்தவுடன் எங்கள் தாயார், "பொங்கலோ பொங்கல்!" என்று கூவுவார்கள்; உடனே பக்கத்திலிருக்கும் நாங்கள் எல்லோரும் ஒரே குரலில் "பொங்கலோ பொங்கல்!" என்று கூவுவோம்.

மேற்சொன்னபடி பால் பொங்கி வருவதைக் குறித்துத்தான், பொங்கலைப் பற்றி விசாரிக்கும் ஒவ்வொருவரும் "பால் பொங்கியதா?" என்று கேட்கும் வழக்கம் பிறந்தது!

சிறுவர்களாகிய நாங்கள் செய்த சர்க்கரைப் பொங்கலையும் வைத்து நாங்களும் பிள்ளையார் பூஜை செய்வோம். பிறகு சூரிய பகவான் பூஜை செய்வார்கள்.



## மலர் ஓவியர்கள்

**கே. மாதவன் :**

'உமா'வின் தொடக்க காலந் தொட்டு, உள்ளந் தொடும் சிறந்த மேலட்டை வண்ணச் சித்திரங்களை வரைந்து வரும் ஓவிய மன்னர். வளர்ந்த ஓவியர்கட்குத் தந்தை; வளருபவர்கட்கு வழிகாட்டி. இந்தப் 'பொங்கல் அறுவடைக் காட்சி'யில் காதலர்கள் உயிர் கொண்டு பேசுகின்றனரல்லவா?

**ரமணி :**

கலைமகளின் அன்பான அருளுக்குப் பாத்திரமானவர். இவரது சித்திரங்களுக்கும் பேசத் தெரியும்.

**உமாபதி :**

நகைச்சுவைச் சித்திரங்களையும் அரசியல் கேலிப் படங்களையும் வரைவதில் புகழ் கண்டவர். 'பொங்கு விரி காவிரி'யின் வளப்பம் கொண்டவர்.

**ஜம்பு :**

முன்னவரின் அடிச் சுவட்டில் நடை பழகும் இளைஞர்; கெட்டிக்காரர்.

**கோபண்ணு :**

சேலம் தந்த ஓவியர்; 'உமா' அறிமுகப் படுத்தி வைத்த சித்திரக்காரர்; திறமைசாலி.

**ராதா :**

உமா அச்சகப் பணியாளர்; தரமுள்ள படங்கள் எழுதுவதில் வல்லவர்.

**ஸுபா :**

'அமுதசுரபி'யின் கை வண்ணக் கலைஞர்; அனுபவம் மிக்கவர்.

**ஜெயராஜ் :**

பட்டப் படிப்புப் பெற்றவர். சித்திரத்தின் இளையனைத்திலும் பழகி வருபவர்.

எங்கள் வீட்டில் ஒரு விசேஷம் உண்டு; எங்கள் தகப்பனர், தாம் சாப்பிடுமுன், தம் இலையில் சாதத்துடன் எல்லாப் பதார்த்தங்களிலும் கொஞ்சம் கொஞ்சம் சேர்த்து நெய் வார்த்துப் பிசைந்து சிறுவர்களாகிய எங்களுக்கெல்லாம் ஒவ்வொரு உருண்டை கொடுத்துவிட்டுப் பிறகு தான், தாம் சாப்பிடுவார்! – இது எங்களுக்குத் தேவாமிர்தத்தைப் போலிருக்கும்; இதைச் சாப்பிடும் பாக்கியம் எனக்கு 1895ம் ஆண்டுடன் முடிந்து விட்டது.

ஹோட்டல்
பொங்கலை முன்னிட்டு புதுமண் பானையில் சர்க்கரைப் பொங்கல் கிடைக்கும்
மங்களா விலாஸ்
காபி சாப்பாடு ஹோட்டல்

தபால் பில்லே ஒட்டாமல் உங்களுக்கு வந்திருக்கிற இத்தனை பொங்கல் வாழ்த்து-களுக்கும் நீங்க ஒன்பது ரூபா தொண்ணூறு நயா பைசா பணம் கொடுக்கணும்

# பொங்கலோ பொங்கல்!

பொங்கல்லே சீனி போட்டு கட்டுபடி ஆகாது! இந்த சீசாவிலே இருக்கிற சீனியைத் தொட்டுகிட்டு சாப்பிடுங்க!

இந்தமாதிரி ஒரு போட்டோ புடிச்-சுகலாம்னு!

என்னாங்க செட்டியார்வாள்! மூன் மேலே உக்காந்துகிட்டு இருக்கிறமாதிரி முகத்தைச் சுளிச்சிகிட்டு இருக்கீங்க!
சீனி ஸ்டாக் இல்லை
சீனி
சீனி
இந்தப்பக்கமா ஒரு மாடு போச்சுதுங்களா?
ஓ! அது உன் மாடு தானா! அதுங் கொம்புலே என் சட்டையும், குடைத் துணியும் மாட்டி இருக்கும்! பாரு!
சர்க்கரை பொங்குக! புளியும் பொங்குக!!
இந்த வருஷம் பொங்கல் இனிக்கல்லே ஸார்!
இனிக்கிறது கிடக்கட்டும்! புளிக்கறதுக்கே வழியைக் காணோம்!
நண்பர்களும் வியாபாரிகளும் இவ்விளம்பரத்தையே எனது பொங்கல் வாழ்த்தாக ஏற்றுக் கொள்ள வேண்டு -கிறேன். வணக்கம்!
தாங்கள்
பே.பே.பெரியண்ணன் பிரபல பொங்கல் வாழ்த்து-தயாரிப்பாளர். கரந்தை

கோவலன் பிரிந்திருந்தபோது, கண்ணகி வருந்தினாள். அந்த வருத்தத்தின் அடிப்படைக் காரணமாக இருந்தது, தன்னைக் கைவிட்டுப் பிரிந்தானே என்பது அன்று. அவனுடைய பெற்றோர்கள் வருந்துமாறு, அவர்களின் விருப்பத்திற்கு மாறான வகையில் தன் கணவன் வாழ்கின்றானே என்ற உணர்ச்சிதான் அடிப்படைக் காரணமாக இருந்தது.

பெருமகள் தன்னொடும் பெருமுயர்த்
தலைத்தாள்
மன்பெருஞ் சிறப்பின் மாநிதிக் கிழவன்
...........உள்ளகம் வருந்தப்
போற்றா ஒழுக்கம் புரிந்தீர்

குடும்பத்துச் செல்வம் எல்லாவற்றையும் இழந்ததற்காகவும் அவள்

# பண்பாட்டின் ஓவியம்

வருந்தவில்லை. இளமையின் இன்ப வாழ்வை இழந்ததற்காகவும் வருந்தவில்லை; அணிகலன்களை அணிந்து மகிழும் வாய்ப்பை இழந்தது பற்றியும் வருந்தவில்லை. குடும்பக்கடமைகளைச் செய்து இல்லறம் நடத்தும் வாய்ப்பை இழந்ததற்காகவே வருந்தினாள். கண்ணகியின் சொற்களாலேயே அதை அறிகிறோம்.

அறவோர்க்கு அளித்தலும் அந்தண
ரோம்பலும்
துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர்
சிறப்பின்
விருந்துஎதிர் கோடலும் இழந்த என்னை

கோவலன் எங்கிருந்தாலும், எந்நிலையில் இருந்தாலும், அவன் வாழ்வே தன் இன்பமாகக் கொண்டு அவனை மகிழ்விக்க முயன்றாள் கண்ணகி. அதுவே முதல் கடமை என்று உணர்ந்தவள். ஆகையால், கோவலன் மாதவியை விட்டுப் பிரிந்து கலக்கத்தோடு வீட்டிற்குத் திரும்பி, 'பெருஞ் செல்வத்தை எல்லாம் தொலைத்து வறுமையுற்றதை நினைந்து நாணுகிறேன்' என்று கூறி வருந்திய போது, கண்ணகி அவன் உள்ளம் மேலும் வருந்தாதபடி மலர்ந்த முகத்தோடு 'சிலம்பு உள்ளன கொள்ளும்' என்றாள். கண்ணகி பண்படாத மனம் உடையவளாய் இருந்திருப்பின், செல்வத்தைத் தொலைத்துத் திரும்பிய அன்றே தன் வெறுப்பெல்லாம் தோன்றக் கடிந்து பேசியிருப்பாள். அவ்வாறு பேசியிருந்தால், கலங்கி வந்த கோவலனுடைய மனம், வெந்த புண்ணில் வேல் நுழைந்தாற் போல மேலும் நொந்து துன்புற்றிருக்கும். அவ்வாறு கணவனுடைய மனத்தை நோக வைப்பது குற்றம் என்று உணர்ந்தவள் கண்ணகி. ஒருவர் மனத்தைத் திருத்துவது வேறு; புண்படுத்துவது வேறு. எண்ணிப் பாராமல் உள்ளத்து உணர்ச்சி எல்லாம் கொட்டி ஒருவனுடைய உள்ளத்தைப் புண்படுத்துவது எல்லோரும் செய்யக்கூடிய எளிய செயல். திருத்துவது என்ற நல்ல எண்ணத்தோடு ஆத்திர வயப்பட்டு உணர்ச்சியைக் கொட்டி, திருத்துவதற்கு மாறாகத் தீமை செய்வோர் உண்டு. இடித்துரைத்துத் திருத்துவதற்கு வேண்டிய வாய்ப்புக் கிடைக்கும் வரையில் பொறுத்திருந்து, வாய்ப்பு கிடைத்த போது சில நல்ல சொற்களால் அன்பாக எடுத்துச் சொல்வதே சான்றோரின் இயல்பாகும். அத்தகைய நல்ல இயல்பையே கண்ணகியிடம் காண்கிறோம். கோவலன் மாதவியை வெறுத்துத் திரும்பி வந்ததும், கண்ணகி அவனுடைய தவறான போக்கை எடுத்துரைக்கவில்லை. காவிரிப் பூம்பட்டினத்தை விட்டு மதுரையை

நோக்கி நடந்து செல்லும் போது வழி யில் ஓரிடத்திலும் அதைப் பற்றிப் பேச்செடுக்கவில்லை. மதுரை எல் லையை அடைந்து அறவோர் பள்ளி யில் தங்கியிருந்த போதும் கண்ணகி அவன் குற்றத்தைப் பற்றிப் பேசவே யில்லை. குற்றம் செய்தவர் தாமே உணர்ந்து நாணித் திருந்தும் வகை யில் நடப்பது சான்றோர்களின் பெரு மையாகும். அத்தகைய பெரும் பண் போடு கண்ணகி நடந்த காரணத்தால் கோவலன் தானே உணர்ந்து திருந்தி விட்டான். கவுந்தியடிகளிடம் தான் தவறு செய்ததை நினைந்து வருந்திக் கூறும் சொற்கள் இதை உணர்த்து கின்றன. 'நல்ல நெறியை விட்டு நீங்கிய தீயவர்கள் போல் தவறி நடந்தேன். என் மனைவி துயரம் உறு மாறு, முன் அறியாத வழியெல்லாம் நடந்து துன்புறச் செய்தேன்' என்று வருந்தினான்.

> நெறியின் நீங்கியோர் நீர்மையேன் ஆகி
> நறுமலர் மேனி நடுங்குதுயர் எய்த
> அறியாத் தேத்து ஆரிடை உழந்து
> சிறுமை உற்றேன் செய்தவத் தீர்யான்

ஆகவே, கோவலனை இடித்துரைத்துத் திருத்த வேண்டிய வாய்ப்புத் தேவை யில்லாமலே போய்விட்டது. அவனே திருந்தி விட்டான். ஆயினும் அதைப் பற்றிப் பேசுமாறு கண்ணகிக்கு அவ னாகவே ஒருவாய்ப்பு ஏற்படுத்தினான். 'நான்தான் அவசரக்காரன்; எண் ணிப்பாராமல், மதுரைக்கு என்னோடு புறப்படு என்று சொன்னேன். நான் சொன்னதைக் கேட்டு நீ உடனே புறப்பட்டு விட்டாயே? என்ன செயல் செய்தாய்?' என்று அவன் கேட்டபோதுதான், கண்ணகி அவனு டைய தவறான போக்கை எடுத்துப் பேச நேர்ந்தது. அப்போதும் அவன் வாடிக் கலங்கி யிருந்திருப்பானே யானால், கண்ணகி அதைப் பற்றிப் பேசியிருக்கவே மாட்டாள். அன்று ஆயர்ப்பாடியில் மாதரி வீட்டில்தான் சமைத்து இட்ட உணவை உண்டு மகிழ்ச்சியோடு இருந்தான் அவன்.

> ஐயையும் தங்கையும் விம்மிதம் எய்திக்
> கண்கொளா நமக்கிவர் காட்சி ஈங்கென
> உண்டு இனிது இருந்த உயர்பே ராளன்

அவ்வாறு மகிழ்ச்சியோடு இருந்த தைக் கண்டதனால்தான், இப்போது

அதைப் பற்றிப் பேசினாலும் அவன் மனம் நோகாது என்று அறிந்த பிறகே, ! ! ;

நோயும் துன்பமும் நொடிவது போலும் என்
வாயல் முறுவற்கு அவர் உள்ளகம் வருந்தப்
போற்ரு ஒழுக்கம் புரிந்தீர் யாவதும்
மாற்ரு உள்ள வாழ்க்கையேன் ஆதலின்
ஏற்றெழுந் தனன் யான்

## உமா பிப்ரவரி இதழ்

உமா பிப்ரவரி இதழ் வழக்கம் போல பிப்ரவரி முதல் நாளன்றே எங்கும் விற்பனைக்குக் கிடைக்கும். பொங்கல் மலருக்கென வேண்டிப் பெற்ற கு. மா. பாவின் 'சிலப்பதிகார நாட்டிய நாடக'மும், ஜீவா நாரண துரைக்கண்ணன், சுந்தர ராமசாமி, இராஜ அரியரத்தினம், சுகி சுப்பிரமணியம் போன்ற இன்னும் சிலரது எழுத்துக்களும் இவ்விதழில் இடம் பெற்றுள்ளன. 'பாப்பா உமா பரிசுதரும் பொழுது போக்கு'ப் போட்டிக்கு வந்த 1276 தம்பி தங்கைமார்களில், பரிசு பெற்ற 356 பேர்களுக்கு உமா பொங்கல் மலர் அனுப்பப் பட்டுள்ளது.

ஆசிரியர்

## பரிசுதரும் பொழுதுபோக்கு : விடை

| இடமிருந்து வலம் : | | மேலிருந்து கீழ் : | |
|---|---|---|---|
| 1. | மாகதம் | 1. | மறதி |
| 3. | படகு | 2. | கழுவாய் |
| 5. | திருவாங்கூர் | 3. | பசு |
| 6. | சகுனி | 4. | குடகு |
| 7. | கரி | 6. | சரிகை |
| 8. | காசு | 7. | கரிசு |
| 10. | தங்கப்பூச்சு | 8. | காதவம் |
| 11. | வகுப்பு | 9. | சுங்கு |
| 13. | உப்பரிகை | 12. | கப்பி |
| 15. | இடிதாங்கி | 13. | உப்பு |
| 17. | வாது | 14. | பச்சடி |
| 18. | சுமை | 16. | பதுமை |
| | | 17. | வாசுகி |

என்று எடுத்துரைத்தாள். அந்நிலையில் அவனுடைய தவற்றை எடுத்துக் காட்டியது மட்டும் அல்லாமல், அவனுக்கென்றே அவன் விருப்பம்போல் ஒரு நிலையாக வாழும் தன் வாழ்வின் பெற்றியையும் எடுத்துக் காட்டினாள். தனக்கு என்று உரிமை வைத்துக் கொள்ளாமல், தன் வாழ்வுக்கென்று சிந்தித்து வழி வகுத்துக் கொள்ளும் உரிமையையும் தியாகம் செய்து, அவன் விரும்புவதைச் செய்து வாழும் வாழ்க்கையையே 'மாற்ரு உள்ள வாழ்க்கை' என்று அவள் குறிப்பிட்டாள். புறப்படு என்றதும் அதைப் பற்றிச் சிந்திக்காமல், ஆராயாது புறப்பட்டதற்குக் காரணம் அது தான் என்ருள்.

இது போன்ற மனநிலை, உரிமையைத் தியாகம் செய்யும் அளவிற்குப் பண்பட்டவர்களுக்கே இயல்பு. நூறுயிரத்தில் ஒருவரிடத்தில், அல்லது கோடியில் இது காணக் கூடியதாகும்.

காவியம் இயற்றும் ஆசிரியர் இயற்கை தரும் அழகான காட்சிகளைச் சொல்லோவியமாக்கிக் காட்டலாம். அன்ருட வாழ்க்கையில் உள்ள இன்ப துன்பங்களை கற்பனை செய்து காட்டலாம். நாடெங்கும் உள்ள போராட்டங்களைப் படைத்துக் காட்டலாம். அறிவும் ஆற்றலும் செல்வமும் செருக்கும் மிகுந்த ஆட்களையும் படைத்துக் காட்டலாம். ஆனால் பண்பாட்டின் எல்லையில் நிற்கும் உயர்ந்த மனங்களைப் படைத்துக் காட்டுவது அரும் பெருந் திறனாகும். 'பாம்பறியும் பாம்பின் கால்.' சான்ருேரைச் சான்ருேரே அறிவர். உயர்ந்த மனங்களை உயர் மனம் உடையவர்களே படைக்க முடியும். இளங்கோவடிகள் பண்பட்ட அறவோராகையால், மிக உயர்ந்த மனநிலையைத் தம் காவியத்தில் படைத்துக் காட்ட முடிந்தது. ஆகையால் தான் இது பண்பாட்டின் ஓவியமாக விளங்குகிறது. ○

# தமிழ்க் கற்பகத் தரு




'தொண்டர் நாதனைத் தூதனுப்பி'யும் 'முதலையுண்ட பாலனை அழைத்தும்' பெருமை கண்ட உயர்தனிச் செம்மொழியாம் தமிழ் மொழி வான் புகழ் கொண்டதாகும்; இதன் சிறப்புக்கு ஓர் அடித்தளம் பரப்பி, தமிழ்மணம் மாண்பு பெற்றுத் திகழவேண்டுமென்பதே நம் ஆர்வக் கனவாகும். கற்பகோடி காலம் வரை நிலைபெற்றிருக்கும் இந்தத் தமிழ்க்கற்பகத் தரு, தமிழ் மொழியின் அளப்பரிய சீர்மைக்கு ஓர் உதாரணமன்றோ?

ஆசிரியர்.

# பலூனும் பலாப்பழமும்

அகிலன்

ஒரே ஒரு ஊரில் ஒரே ஒரு பலூன் வியாபாரி இருந்தான். அவன் வீட்டுத் தோட்டத்தில் ஒரே ஒரு பலாமரம் நின்றது.

பலூன் வியாபாரி காலையிலும் மாலையிலும் ஊர் சுற்றி வருவான். விதம் விதமான பலூன்கள் அவனிடம் இருந்தன. புடலங்காய்க் காய்களைப் போன்ற நீண்ட பலூன்களும், பறங்கிக் காய்களைப் போன்ற உருண்டை பலூன்களும், பலாக்காய்களைப் போன்ற கோழி முட்டை வடிவமுள்ள பலூன்களும் அவனுடைய நீண்ட கழியில் தொங்கிக் கொண்டிருந்தன

பலூன்களின் நிறங்களோ குழந்தைகளின் கண்களைப் பறிக்கக் கூடியவை. ஏழு நிறவானவில்லைத் தோற்கடிக்கக் கூடிய அளவுக்கு வர்ணப் பூச்சுகள் அவற்றின்மேல் ஒட்டிக் கொண்டிருந்தன

வைத்து எவ்வளவோ பரிகாசம் செய்ததுண்டு அவர். அத்தனையும் அவருக்கு இப்போது மறந்து விட்டதா, என்ன? அவள் வாழ்வு தன் அத்தானின் கையில்தான் என்பதை அவள் சொல்லியா அவர் புரிந்து கொள்ள வேண்டும்? அவள்தான் எப்படிச் சொல்லுவாள்? மனத்தில் மறைந்து புதைந்து கிடந்த ஆசைக் கனவுகள் ஒன்ரு, இரண்டா? நினைக்கும்போதே, அவள் முகம் சிவந்தது. நாணம் சூழ்ந்து கொண்டது.

காலையிலேயே எழுந்து பொன்னனுடன் வண்டியில் கிளம்பி விட்டார் தணிகாசலம். எட்டு மணிக்கு ரயில். வீட்டுக்குவர எட்டரை மணி ஆகிவிடும். ஆனல் ஏழு மணியிலிருந்தே அவளுக்கு எந்த வேலையும் ஓடவில்லை. ஏற்கனவே வாரிப் பின்னி யிருந்த தலையைப் பிரித்து மறுபடியும் பின்னிக் கொண்டாள். ஒற்றைப் பின்னலாகத் தொங்க விட்டுக் கொண்டால் நன்ருக இருக்கிறதா, இரட்டையாகப் பிரித்துப் புறத்துக்கு ஒன்ருகப் போட்டுக் கொண்டால் அழகாக இருக்கிறதா, என்று மாற்றி மாற்றிப் பின்னிக் கண்ணடியில் பார்த்துக்கொண்டாள். காலையிலிருந்து



தூரத்தில் பலூன் வியாபாரி வருவதைப் பார்த்தால், அவன் ஒரு மலர்க் காட்டையே பெயர்த்துக் கொண்டு வருவதுபோல் தோன்றும். மலர்க் கூட்டமென்றால் அதில் மணம் இருக்கும். மதுவருந்த அதைச் சுற்றி வண்டுகள் மொய்க்கும்.

ஆனால் பலூன்களுக்குள் காற்று இருந்தது. அதற்கு வெளியே பகட்டான சாயப்பூச்சு இருந்தது.

குழந்தைகளுக்கும் குழந்தைகளைப் போன்றவர்களுக்கும் ஒரே கொண்டாட்டம். வியாபாரியைச் சூழ்ந்து கொள்வார்கள். அரையணா ஓரணாக் கொடுத்து வாங்கிக் கொண்டு போவார்கள்.



பலூன் வியாபாரி ஊதிப் பெரிதாக்குகிற அளவுக்கு, அதை வாங்குகிறவர்களால் ஊதிப் பெரிதாக்க முடிவதில்லை. அதனால் காற்றடைத்த பலூன்களுக்கே கிராக்கி அதிகம். ஊதாத பலூன்கள் துவண்டு சுருங்கிப் போய் ஒரு மூலையில் தொங்கும்.

யாராவது அவற்றையும் வாங்கிக் காற்றடைக்க முயற்சி செய்வார்கள். வியாபாரியின் திறமை அவர்களிடம் இருப்பதில்லை. பாதி அளவுக்கு ஊதினால் பலூன்கள் அவர்களுடையதாக இருக்கும். இன்னும் அதிகமாக ஊதினால் எல்லாம் 'படார்! படார்!' ஆகிவிடும்.

ஆகவே, ஊதப்பட்ட பலூன்கள் சுறுசுறுப்பாக விற்பனையாக, ஊதப்படாத பலூன்கள் சோம்பிக் கிடந்தன; துவண்டு போய்த் தொங்கின.

துவண்டு கிடந்த பலூன்களில் ஒன்று, வியாபாரியின் தோட்டத்தில் காய்த்திருந்த பலாக்காயை பார்த்து விட்டது. பக்கத்திலிருந்த மற்றப் பலூன்களுக்கு அதைச் சுட்டிக் காட்டிப் பரிகாசம் செய்தது.

"எவ்வளவு விகாரமாயிருக்கிறது பாருங்கள், அந்தப் பலாக்காய்! அதைச் சுற்றிலும் ஒரே முள்! நம்மைப்போல் அதற்கு அழகும் இல்லை; வழவழப்பும் இல்லை; நிறமும் இல்லை....!"

"ஆமாம்!" என்று ஒத்துப் பாடியது மற்றொரு துவண்ட பலூன். "நம்மை ஊதினால் ஒரே விநாடியில் உப்பி விடுவோம். அதை அப்படி யாராலும் உப்ப வைக்க முடியாது. நம்முடைய தகுதிக்கும் திறமைக்கும் முன்னால் அது எம்மாத்திரம்?"

பலாக்காய்க்கு பலூன்களின் பேச்சுப் புரியாமல் இல்லை. அதற்காக அது வருத்தப்படவும் இல்லை. 'உலகம் பலவிதம்' என்று நினைத்துத் தன்னைத் தானே தேற்றிக் கொண்டது.

பலாக்காயோ பிஞ்சாக இருந்து வளர்ந்து வந்த ஒன்று. பலூன்களைப் போல் அது இயந்திரத் தயாரிப்பில் உருவாகவில்லை. இயற்கையின் மலர்ச்சியால் தோன்றி, சிறுகச் சிறுக உள்ளும் புறமும் மாறுதலைப் பெற்று வந்தது.

அது இப்போது பழமாகிக் கொண்டிருந்தது.

பலாப் பழத்தின் மேல் புழுதிக் காற்று வீசியது; மழை பெய்தது; சூரியன் சுள்ளென்று உரைத்தது. இவற்றினாலெல்லாம் அதன் உட்புறம் மேலும் கனிந்து கொண்டிருந்ததே தவிர, அது ஒன்றும் கெட்டுப் போய் விடவில்லை.

முன்னொரு நாள் அதை ஏளனம் செய்த அந்தப் பலூன் தினமும் அதைப் பார்த்துச் சிரித்து வந்தது.

அதன் சிரிப்புக்கேற்றாற்போல் பறவைகள் வேறு பலாப்பழத்தின் மேல் எச்சமிட்டு, அதன் தோலை அசுத்தப் படுத்தியிருந்தன.

பரிகசித்தபலூன் விற்பனையாகும் நாள் வந்தது. இத்தனை நாட்களும் துவண்டு கிடந்த அதைத் தன் வாயால் ஊதி, அதன் வாயை நூலால் கட்டினான் வியாபாரி. வியாபாரியின் எச்சில் காற்று உள்ளே போனவுடன் பலூனுக்குத் தலை கால் தெரியவில்லை. தன்னையும் தன் அழகையும் உருவையும் நினைத்து அது பெருமை கொண்டது.

பெருமை கொண்டதோடு நிற்கவில்லை. தன் வலிமையைப் பலாப்பழத்திடமே காட்ட வேண்டுமென்ற ஆசையும் அதற்கு வந்து விட்டது.

வழக்கம் போல் வியாபாரி தோட்டத்தின் வழியாக வெளியே போன போது, அந்த பலூன் மட்டிலும் காற்றில் பிய்த்துக் கொண்டு வந்து பலா மரத்தின் சிறு கிளையில் தொத்திக் கொண்டது.

"ஏ, முட்டாள் பலாப்பழமே! என்னைப் பார், என் அழகைப் பார், எனக்குள்ளே புகுந்திருக்கும் புதுமையைப் பார்!" என்று சொல்லி அதை வம்புக்கிழுத்தது.

"உன்னைப் போல் நான் திடீரென்று உப்பவில்லை. உன்னுடைய கவர்ச்சியும், பளபளப்பும் என்னிடம் ஏது? ஆனால் எனக்குள்ளே சுவைக்கும் சுளைகள் இருப்பதாக மனிதர்கள் சொல்லிக் கொள்ளுகிறார்கள். பிஞ்சாகவும் சாப்பிடுவார்கள். கனிந்த பிறகும் அறுப்பார்கள். கொட்டைகளையும் தோலையும் கூட விடமாட்டார்கள்!" என்றது பலாப்பழம்.

"உன்னைவிட நான் தான் பெரியவன்! நீ அதைஒப்புக்கொள்கிறாயா?"

பலாப்பழத்திற்குத் தன்னையறியாது சிரிப்பு வந்தது.

"என்ன சிரிக்கிறாய்?"

"உனக்குள்ளே இருக்கும் எச்சில் காற்று உன் தலையை இப்படி வீங்கச் செய்திருக்கிறது....!"

கோபாவேசத்தோடு பலாப்பழத்தின் மேல் வேகமாக வந்து மோதியது பலூன். பலாப்பழம் அதற்காக அனுதாபப் பட்டது. என்றாலும், இயற்கையாக அதற்குக் கடவுள் கொடுத்த முட்களின் கூர்மையை அதனால் மழுங்க அடித்துக் கொள்ள முடியவில்லை!

பலூன் என்ன ஆகியிருக்கும்?—படார், படார்தான்....!


அன்பர்களுக்கு எமது
பொங்கல் வாழ்த்துக்கள்!

**அம்பீஸ் கபே**

**போர்டிங் & லாட்ஜிங்**

(புதுக்கட்டிடத்தில்)

**6 & 7, பிராட்வே, சென்னை-1.**

**சென்னை ஜார்ஜ் டவுன் வட்டாரத்தில் * ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட தங்கும் அறைகள் * ஏர் கண்டிஷன் செய்யப்பட்ட சாப்பிடும் அறைகள் * குளிப்பதற்கான வசதி இணைந்த அறைகள் மற்றும் எல்லா நவீன வசதிகளும் உள்ள ஒரே ஹோட்டல்.**

L. R. S. A. C-7.


பலாப்பழமும் சில நாட்களில் வெடித்து மணம் வீசத்தான் செய்தது!

வெடித்த அந்தப் பலாப் பழத்தைத் தன் இரண்டு கைககளாலும் தாங்கி எடுத்துச் சென்றான் வியாபாரி.

அவனுடைய குழந்தைகள் அதைச் சுற்றி எக்காளமிட்டுச் சத்தம் பரப்பத் தொடங்கி விட்டன.

**பலாவின் மேல் ஒட்டிக் கொண்டிருந்த கிழிந்த பலூன் துணுக்கை அவனுடைய குழந்தைகளில் ஒன்று கீழே தள்ளி விட்டது!**

சட்டை யைக் கழற்றி ஆணியில் இன்னும் மாட்டியாகவில்லை.

"இன்னிக்கு உங்கள் அருமந்தப் பிள்ளை என்ன பண்ணுன் கேளுங்கோ"—

ஸாரங்கன் ஒன்றும் கவலைப்படுகிற மாதிரி தெரியவில்லை. தன் விளையாட்டுச் சாமான் கூடையிலிருந்து ஒவ்வொரு சொப்பாயெடுத்து ஒன்

# நேரங்கள்

லா.ச. ராமாமிருதம்

றன்மேல் ஒன்ருய் அடுக்கிக் கொண் டிருந்தான்.

"வேறென்ன உனக்கு வேலை? அதைப் பண்ணுன் இதைப் பண் ணுன்னு எதையாவது சொல் லிண்டு!"

"தினம் போலில்லே இன்னிக்கு அவன் பண்ணது"

தினம் போல் எதுவும் தான் இல்லை இன்றைக்கு. மூணு நாளாவே இல்லை. என்றைக்குத்தான் ஒன்றே போலிருக்கிறது? ஒன்றுதான் ஒன்றே போல் இருக்கிறது. 'இன் றையப் போது இன்று நாளையப் போது நாளைக்கு'

ஆபீஸில் ஹெட் கிளார்க்கின் உத டுகள் எப்பவும் அசைந்து கொண்டே யிருக்கும். வந்த புதிதில் வியப்பாய் இருந்தது. ஏதாவது நரம்புக் கோளாறு?

அவன் கவனிப்பதை ஒருநாள் பார்த்து விட்டார்.

முகத்தில் வழிந்த அசடை கையால் மறைக்க முயன்ருன்.

"ஒண்ணுமில்லே ஸார். நீங்கள் ஏதோ சொன்ன மாதிரியிருந்தது என்னைக் கூப்பிட்டோளா என்று"–

"உம்மை ஏன் கூப்பிடுகிறேன்? ராமனைக் கூப்பிடுகிறேன்."

"ராமனு? மன்னிச்சுக்கோங்க– இப்பத்தான் ஒரு கப் காப்பிக்கு அனுப்பினேன் – தொண்டை வரண்டால் போலிருந்தது–"

"இந்த ராமனையில்லே. ஸ்ரீராமனைக் கூப்பிடுகிறேன். 'ஆபதாமப ஹத்தாரம்' சொல்கிறேன். இன்னிப் பொழுதுக்கு இவன் வாயில் புகுந்து புறப்படாமல் நல்ல பொழுதாப் போகணுமே! தினமே இப்படித் தான்."

'உங்க பிள்ளையை வெச்சிண்டு என்னுல் சமாளிக்க முடியவில்லே. இன்னிப் பொழுது போச்சா இன்னிக்கு, நாளைக்குப் போச்சா நாளைக் குன்னு இதென்ன பிழைப்பு இதன்ன துஷ்டத்தனம்?''

இதென்ன எங்கேயும் இப்படித் தானு? ஆபீஸ் காற்று இங்கேயும் அடித்து விட்டதா?

"என்ன நெற்றியை ஒத்தை விரலால் சுரண்டிண்டு நிக்கறேள்?''

ஏதோ ஒரு எண்ணம் திசை தப்பிய பட்சி போல் பிரஞை தவறி மண்டையோட்டிற்குள் கண்ணும் பூச்சி விளையாடுகிறது. இவள் என்ன சொல்கிருள்? நான் என்ன சொல்ல வந்தேன்?

"நான் சொன்னத்தை வாங்கிண்டேளோ?''

"வாங்கிக்கலாம். முன்னுல் குளிந்த தலே நிமிர். துணியைக் கீழே போட்டுவிட்டு காப்பி கொண்டு வா.''

"இருங்கோ வந்துட்டேன். இந்த இடம் தையல் நிரடல்.''

"நீ கீழே வைக்கிறையா! நான் பிடுங்கி எறியட்டுமா? ஒரு தரம் ரெண்டு தரம்—''

"இங்கே ஒண்ணும் ஏலம் விட வேண்டாம்—''

ப்ரேமை (frame) வீசி எறிந்து விட்டு கடுகடுத்த முகத்துடன் உள்ளே சென்ருள். கோபத்தின் குதிரை நடையில் இடுப்பு மிடுக்காய்த் திருகி ஒடிவதைப் பார்த்துக்கொண்டு நின்ருன். கண்ணெதிரில் புருவ மத்தியில் மின்னிட்டது. மூண்டெழுந்த கோபம் கண நேரத்தில் சிரிப்பாய் மாறுவது மாறும்போதே தெரிந்தது. அதன் ரஸாயனம் தான் தெரியவில்லே. சிரிப்பை அடக்கிக் கொண்டான். அவளிடம் காண்பித்துக் கொள்ள இஷ்டமில்லே; தன்னையே காட்டிக் கொடுத்துக் கொள்வது போல் வெட்கமாயிருந்தது. இருக்கிற சிரிப்பை இல்லாத கோபத்தால் மூடத்தான் தோன்றிற்று.

முதலில் வந்த கோபம் கூட வேஷந் தானே? சிரிப்பும் வேஷந் தானே? ஒரு ஒரு வேகமும் ஒரு ஒரு நிழல் ஒவ்வொரு நிழலும் ஒரு ஒரு வர்ணம் அவை ஆடுவதும் பூசுவதும் வருவதும் மறைவதும் சில சமயங்கள் தெரிவது கூட இல்லே.

இன்று அதுமாதிரி தான் ஆகி விட்டது. டிபன் பையை மேஜைக்கடியில் வைத்து இன்னும் தலே நிமிரக்கூட இல்லே.

"ஸார் உங்களே S. E. கூப்பிடுகிருர்.''

எதிரே பாப்பையா பின்னுல் கையைக் கட்டிக் கொண்டு நின்ருன்.

உதட்டோரங்களில் சிந்திய ஏள னத்தை மறைக்கக்கூட அவன் முயல வில்லை. இன்று வண்ணான் மடியில் இருந்து எடுத்த யூனிபாரத்தில் ரொம்பவும் துடியாயிருந்தான். உல கில் உள்ள துர்ப் பழக்கங்கள் அத் தனைக்கும் உறைவிடமாயிருந்தாலும் பாப்பய்யாவுக்கு நல்ல உடல் கட்டு. சிரிக்கையில் பல் வரிசை அணி வகுப் பாய் நின்றன. இப்பொழுது பளார் என்று பலம் கொண்ட மட்டும் வாய் மேலேயே ஒரு அறை அறைந்தால், ரெண்டு பல் உதிர்ந்தால் எப்படி இருக்கும்?

"ஏன் கூப்பிடுகிறீர் இதுக் குள்ளேயே?''

ஏதுமே அறியாதவன் போல் உதட் டைப் பிதுக்கிக் கைகளை அகல விரித் தான்.

"எனக்குத் தெரியும்.''

"பின்னே ஏன் கேக்கறீங்க?''

"உனக்குத் தெரியும்னு எனக் குத்தெரியும்.''

"எனக்கென்ன தெரியும்?''

"ரிஜிஸ்தரை இவ்வளவு அக்கு ஸாய் உள்ளே கொண்டுபோய் வெச் சது நீதானே?''

"மணியைப் பாருங்க ஸார் பத் துலே முள் ஒடிஞ்சு அஞ்சு நிமிஷ மாச்சு!''

"நீ ஏன் கொண்டு போய் வைத் தாய் என்றும் எனக்குத் தெரியும்.''

"நீங்க சொல்றது எனக்கொண் ணும் புரியல்லீங்களே!''

"அதனால் தான் புரியும்படி சொல்கிறேன்–'' கோபம் தன்னுள் முறுக்கேறுவது தெரிந்தது. "நேற்று அஞ்சு ரூபாய் கடன் கேட்டாய்; நான் கொடுக்கவில்லை என்று தானே? நான் பத்து ரூபாய் நோட்டை பர் ஸுள் சொருகுவதைப் பார்த்ததும் உனக்குப் பொறுக்கவில்லை தானே? ஆனால் அது நானே கடன் வாங் கினது என்று உனக்குத் தெரியுமோ? நான் எதற்கு வாங்கினேன் என்று தெரியுமோ?''

"அதெல்லாம் எனக்கென்னத் துக்கு?''

"வாஸ்தவந்தான். எவன் எக்கேடு கெட்டாலும் உனக்கு உன் காரியம் ஆகணும் அதானே!''

"நான் என் டூட்டி செய்யறேன். நீங்க உங்க 'டூட்டி' செய்யுங்க ஸார் இந்தக் கதையெல்லாம் ஏதுக்கு? துரை கூப்பிட்டார்; வந்து சொன் னேன். போறதூன்னா போங்க. இல்லாட்டி, உங்களுக்கு இஷ்டமில் லாட்டி உங்களுக்கு இஷ்டமில் லேன்னு போய்ச் சொல்லிடறேன். என்ன முளிச்சிப் பாக்கிறீங்க?–

ஐயையோ பெல் அடிச்சுட்டாரே? என்னை ஏன் ஸார் பேச்சிக்கிளுத்து நிறுத்தி வைச்சிட்டீங்க?'' – தலையி லடித்துக் கொண்டு ஓடினான்.

நெற்றியில் அரும்பிய வேர்வை யைத் துடைத்துக் கொண்டு அவன் பின்னால் சென்றான்.

S. E. எதிரில் கிடந்த ஆஜர்ப் பதி வுப் புத்தகத்திலிருந்து நிமிர்ந்தார். எப்படி இந்த மனுஷன் ஒரு நாளைப் போல் அலுக்காமல் தினம் முக க்ஷவ ரம் செய்து கொள்கிறான்? நமக்கு ஒரு நாள் விட்டு ஒருநாளே கை வர மாட்டேன் என்கிறது. கத்தியை வைத்தாலே பிராணன் போகி றது. ஒரு மாசு மறு இல்லாமல், கன்னமும் மோவாயும் நீலச்சலவைக் கல் மாதிரி வழவழென....ஒருநாளைப்

"—நீர்தானே ஸம்பத்?"

" ஆமாம் ஸார் "

" சேர்ந்தாற்போல் மூன்று நாட்கள் லேட்—"

" ஆமாம் ஸார்—"

போல் எப்படி இவ்வளவு உயர்ந்த துணி, உடை நலுங்காமல். புத்தம் புதிதாய்—ஸினிமாவில் விளம்பரம் பார்த்த ஞாபகம் வந்தது. பாரீஸ் பெப்பர் மிண்டு—கை படாது செய்யப்படுவது. பாகிலிருந்து பதமாகி, அச்சாகி, 'ட்ரேஸ்' காகிதத்தில் சுருட்டும் வரை—எந்த இயந்திரம் ஆபீஸர்களை உற்பத்தியாக்கி வெளியே தள்ளுகிறது?

"ரூல் பிரகாரம் இதே சாக்காய் நடவடிக்கை எடுத்து உம்மை வேலையிலிருந்துகூட நீக்கிவிட முடியும், தெரியுமா? உங்கள் 'யூனியன்' எல்லாம் சேர்ந்து என்ன சிப்பக் கட்டுக் கட்டினாலும் ஒண்ணும் பண்ண முடியாது, தெரியுமா?"

"யூனியனுக்கும் எனக்கும் எந்த ஸம்பந்தமுமில்லை ஸார்!"

"ஏன், உமக்கு இங்கேதானே வேலை?"

"ஆனால் நான் யூனியனில் மெம்பர் இல்லை ஸார்!"

"I don't care. ஏன் லேட்?"

"..........."

S. Eக்கு முகம் சிவந்தது. மத்யானம் தின்னும் ஆப்பிளும் ஆரஞ்சும் வீணாய்ப் போகுமா?



நல்ல பெரிய ஆப்பிள். ஸாரங்குக்கு வாங்கிப்போகலாம் என்று பழக்கடையில் விலை கேட்கப்போய் கடைக்காரன் 'பன்னிரண்டணா' என்றதும் 'கர்ரெண்டு' அடித்தாற்போல், கையிலெடுத்த பழத்தை அப்படியே கீழே போட்டு விட்டு—

"என்னய்யா சிரிக்கிறீர்?"

"சிரிக்கிறேனா என்ன?" அவனுக்கே ஆச்சரியமாயிருந்தது.

"என்ன விளையாடுகிறீர்? யாரோடு பேசுகிறீர் என்று நினைவிருக்கிறதா? ஹெட்க்ளார்க்! **ஹெட்கிளார்க்!**"

H. C. ஓடி வந்தார். அவர் அவசரமாய் எடுத்து வைத்துக் கொண்ட தலைப்பாகை முன்னும் பின்னுமாய்த் திரும்பி, ஒரு பக்கமாய்ச் சரிந்திருந்ததைப் பார்க்க இன்னும் சிரிப்பாய் வந்தது. கடவுளே என் சிரிப்பிலிருந்து என்னைக் காப்பாற்றேன்! ஆனால் புருவ மத்தியில், மூக்குத் தண்டில் விழியோரச் சதையில், கன்னத்தின் மேட்டில், மோவாய்க் குழிவில், உதட்டோரங்களில் குறு குறுப்புத் தாங்க முடியவில்லை.

"எக்ஸ்க்யூஸ் மி—"

வாயை ஒரு கையால் பொத்திக் கொண்டே வெளியே ஓடினான். படிக்கட்டில் தடதடவென இறங்கி, இடைவேளையில் சாப்பிடும் அறைக்குப் போய் விலாவைப் பிடித்துக்கொண்டு இடி இடி என்று சிரித்தான். கண்கள் வடிந்தன. ஏன் இந்த சிரிப்பு, இவ்வளவு சிரிப்புக்கு என்ன நடந்தது என்று தனக்கே விளங்கவில்லை. ஆனால் அந்தச் சிரிப்பைச் சிரித்துத் தீர்த்தபின்தான் இம்சை சற்று அடங்கிற்று. இடத்துக்குத் திரும்பி வந்த போது, சிரித்த அசதியில் மூச்சு லேசாய்த் திணறிற்று.

H. C. முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. "எங்கே போயிட்டிருங்காணும்? உம்முடைய சமாதானத்தை எழுதி வாங்கச் சொல்லியிருக்கார். ஏனய்யா காலங் காத்தாலே வந்ததும் வராததுமாய் அவனைச் சீண்டிவிட்டு அவன் குணத்தைக் கெடுத்து, எங்களை நாள் முழுவதும் கதிகலக்க அடிக்கிறீர்! நாங்கள் எல்லாம் சம்சாரிகளய்யா! எங்கள் பிண்டத்தைப் பெருங்காயமாக்கி விடாதேயும்!"

மறுபடியும் விழியோரங்கள் குறுகுறுத்தன. H. C க்கா பிண்டம் பெருங்காயம்? H. Cக்குப்பட்டணத்திலேயே நாலு வீடுகள் இருக்கின்றன. பொங்கலுக்கு சுண்ணம்புகூட அடித்துத் தரமாட்டார். வாடகையை மாத்திரம் கறுக்காய் மாதா மாதம் மூணாந் தேதியே வசூல் பண்ணி விடுவார். ரெண்டு பிள்ளைகள் வியாபாரத்தில் சக்கைபோடு போடுகிறார்கள். தவிர நிலபலம், மாமனார் வீட்டு சொத்து, ஸ்வீகார சொத்து எல்லாம் வரவிருக்கின்றன. வீட்டுக் கணக்குகளைக் கவனிக்க தனி ஆளே போட்டிருக்கிறார். S.E க்கே கடன் கொடுத்திருப்பதாக ஆபிஸில் சொல்லிக் கொள்கிறார்கள்.

இருந்தும் 'ஆபதாமபஹத்தாரம்' சொல்கிறார். தலைப்பாகையை முன்னும் பின்னுமாய் ஒரு பக்கமாய் சரிய மாட்டிக் கொண்டு அலறிப் புடைத்துக் கொண்டு ஓடி வருகிறார். 'டேப்பா! ஒவ்வொருத்தனும் என்னென்ன வேஷம் போடுகிறான்!'

நாற்காலியை முன்னுக் கிழுத்துக் கொண்டு உட்கார்ந்தான். என்னத்தை எழுத?

அவன் இடம் ஜன்னலுக்குப் பக்கத்தில். ஆபீஸின் நாலாவது மாடி உயரத்திலிருந்து, கீழே பஸ்களும் மோட்டார்களும் வண்டிகளும், மரவட்டைகளும், வண்டுகளும், பூச்சிகளுமாய் ஊர்ந்தன. ஆங்காங்கே, புடவைகளின் சிவப்புகளும், பச்சைகளும் சின்னஞ்சிறு வர்ணக் காயிதத் துண்டுகள் காற்றில் அலேவதுபோல் விட்டு விட்டு நெளிந்தன. இங்கிருந்து தற்செயலாயோ வேணுமென்றோ ஆள் விழுந்தால் ஒரு எலும்புகூட முழுசாகத் தேருது.

ஆயினும் மூன்று நாட்கள் – பதினஞ்சு, பன்னிரண்டு, அஞ்சு நிமிஷங்கள் நேரங்கழித்து வந்ததற்கு சமாதானம் எழுதியாகணும்.

என்னத்தை எழுத? உள்ளத்தை எழுதினுல் எடுபடுமோ? இவர்களுக்குப் புரியுமோ?

—"நேரம் கழித்து வந்ததற்கு
மிகவும் வருந்துகிறேன். இனி
இம்மாதிரி நேரிடாதபடி—"

## 2

உமா சமையலறையிலிருந்து வெளிப்பட்டாள். அவள் கைடம்ளரில் ஆவி பறந்தது.

"என்ன இப்படிக்கொதிக்கிறதே? அடுப்பில் சுடவைத்தாயா? இல்லே, வயிற்றிலேயே கொஞ்ச நாழி வைத்துக் கொண்டு வந்து விட்டாயா? பறக்கிறது அதன் ஆவியா? உன் ஆத்திரமா?"

உமாவின் முகம் இறுகியது. "நான் இப்போ சிரிக்கணுமா?"

ஸைகிள் டயரில் காற்றை வாங்கிவிட்டாற்போல் எதிர்ப் பேச்சில்லாமல் அடிப்பதில் உமாவை மிஞ்ச முடியாது. எந்தத் தர்க்கத்திலும் கடைசி வார்த்தை அவளுடையதுதான்.

"உமா உமா, கெஞ்சிக் கேட்கிறேன். நாலுபேர் வந்திருக்கிருர்கள். இந்த விஷயத்தில் என் வார்த்தையே ஓங்கி யிருக்கட்டும்; கொஞ்சம் விட்டுக் கொடு!" – என்று கேட்டுக் கொண்டாலும் "ஹூம்" என்று ஒரு உறுமலாவது உறுமி அவனுக்கு வெற்றி யில்லாமல் அடித்து விடுவாள்.

காப்பியை எடுத்துக் கொண்டு வாசலறைக்குச் சென்ருன். அதுவே அவன் கோட்டை, தனிவளை, பட்டறை, தர்பார் அறை எல்லாமே.

டம்ளரை வாய்க்கு எடுத்துச் செல்கையில்–இன்னும் தலே நிமிரவில்லே–அறையில் திடீரென புனுகு குபீரிட்டு, வயிறு குமட்டிற்று.

தெரு வழியே ஒரு ஆள் சென்ருன். கழுத்தில் மைனர் சங்கிலி, மஞ்சள் பட்டு ஜிப்பா. புரளப் புரள, நூலும் ரேயனும் கலந்த வேஷ்டி. ஏற்பாடாய்க் கலேக்கப்பட்ட முன்மயிர் நேற்றிமேல் திருகு சரங்களாய்த் தொங்கின. ஜன்னலுக் கெதிரில் கொத்துப் புகையிலேச் சாறை உமிழ்ந்து கொண்டே போய் விட்டான்.

மண்ணில் ரத்தம் போல்—
ரத்தம் போல்....
ரத்தம்—

கண்கள் திடீரென இருண்டன. கால் கட்டைவிரலிலிருந்து 'சுர்ர்' ரென ஆவியெழும்பி, போகும் வழியெல்லாம் தீய்த்துக் கொண்டே போய் மண்டையை அடைந்தது. தலேயை இரு கைகளிலும் தாங்கிக் கொண்டான். ரத்தக்குழம்பு தளேத்து சிவப்புச் சக்கிரம், இறுக மூடிய கண்களுள் இமைத்திரையை நார் நாராய்க் கிழித்துக் கொண்டு ஆடிற்று.

முந்தாநாள் புதன்கிழமை, காலே ஆபீஸுக்குப் போகும் வழியில், கட்டவிழ்ந்த பொட்டலம் போல் கலேந்து கொண்டே யிருக்கும் கூட்டத்தின் நடுவே நின்று கொண்டிருந்தான். பயங்கரத்தில் நிலே குத்தி விட்ட கண்கள் காலடியில் இன்னும் முற்றிலும் காயாத ஒரு பெரிய சிவப்புத் திட்டின்மேல் வெறித்து விட்டது. செவிகளில் சமுத்திரம் இரைந்தது. ஒன்றும் இரண்டும், நாலு அஞ்சுமாய் வார்த்தைகள் மீன் குட்டிகள் துள்ளி எழும்பி மேல் மோதி மூழ்கி அலே வேகத்தில் அடித்துக் கொண்டு போயின.

—"இப்போத்தானய்யா – பளாட்பாரத்துலே தேமேனு போய்க்கிட்டேயிருந்தானே திடீர்னு நிணச்சுக்

கிட்டு க்ராஸ் பண்ணுன்ய்யா! வரவன் புல் ஸ்பீடுலே வரான்! ஏன் வரக் கூடாது? இது கிராஸ் பண்ற இடமா? ஏனய்யா க்ராஸ் பண்ணணும்? ஆனால் அவன பண்ணுன்? வேளைதான் பின்னாலே நின்னுட்டு புடரியைப் பிடிச்சுத் தள்ளுதே! 'ப்ரேக்' 'டேர்ண்' எதுக்குமே டைம் இல்லே. நேரே வந்து இந்தா கொடுக்கறேன் வாங்கிக் கன்னு சக்ரத்தடீலே பூட்டான். ஐயோன்னு சத்தங்கூட இல்லே அதுக்குக்கூட டைம் இல்லேங்கறேன்ன. அந்த வண்டியிலேயே வாரியெடுத்துட்டு ஆஸ்பத்திரிக்குப் பூட்டானுங்க. ஆனால் அங்கே என்ன இருக்கும்? போன உசிரு வ்லாஸம் விட்டுட்டாப் போவும்?

"ஆமாய்யா இன்னிக்கி வீட்டை விட்டுக் கிளம்பறப்போ பூடப் போருன்னு தெரியுமா, என்னமோ நீ சொல்றத்தைப் பார்த்தா, விலாஸத்தை எளுதி ஜேபிலே வெச்சுக்க?

"ஆனால் அது அவஸ்யம்னு நான் சொல்வேன்."

"எது?"

"விலாஸம் எப்பவும் ஜேபிலே இருக்கணும். இந்தப் பட்டணத்துலே காலேலே 'டூட்டி' மேலே போனவன் மாலேலே உருவாத் திரும்பி வரான்னு என்ன நிச்சயம்?

"இன்னிப் பொழுது போச்சா இன்னிக்கு நாளைப் பொழுது நாளைக்கு"

"விலாஸம் தெரிஞ்சா வீட்டிலாவது கொண்டுபோய் சேர்க்கலாமில்லே—"

"இல்லாட்டி மூணுநாள்பொறுத்து போலிஸ்காரன் வந்து கதவைத் தட்டுவான்:

"இந்த வூட்டுலேதானே—"

காதைப் பொத்திக் கொண்டான். நினைத்துப் பார்க்கக் கூடத் தைரியமில்லை.

"–காலேலே கன்னத்தைக் கிள்ளிட்டுப்போன அப்பன் பிக்கேட்டு வாங்கி வருவான்னு குளந்தை நடைக்கும் வாசலுக்குமா நடக்கும்."

—"வேலைவிட்டதும் கையோடு வாங்கிவரும் கதம்பத்துக்கு ஜடை போட்டு கட்டினவ ஜன்னலண்டை காத்திட்டு நின்னுருப்பா – டிபனும் காபியும் சூடாறிப் போவுதேன்னு பெத்தவ அடுக்குள்ளே ஏத்தி இறக்கிட்டிருப்பா."

–"இது பாத்தியா, போனவன் என்னவோ ஒண்ணுதான் ஆனா ஒரே வீட்டிலேயே அவனுக்கு எத்தனை வேசம்? ஒண்ணுக்கு அப்பன், ஒண்ணுக்கு புருசன், ஒண்ணுக்குப் பிள்ளை, ஒண்ணுக்கு உடப் பிறந்தவன் இன்னுங்கூட என்னென்னவோ கட்டலாம்–"

"எல்லாம் நொடி நேரத்துலே கலேஞ்சுட்டுதே என்ன அக்ரம்பு!"

–"ஆனால் இந்த சிந்தின ரத்தத்தையும் அது காரணமா வித விதமாக் கண்ணீரையும் வாங்கிட்டுத் தானே இந்தப் பூமி வளர்ரது அது பாத்தியா?"

–அதுக்கு சுமக்கிற கூலி வேணுமா? உலகத்திலே எதுதான் சும்மா கிடைக்குது? சும்மா நினைச்சுக்கிட்டு வேணுமானா ஏமாறலாம் அத்தோடு சரி–"

"–இதுமாதிரி இன்னுன்னும் எங்கெங்கே இதைவிட என்னென்ன கொடுமையோ?–"

அப்பவே, அங்கேயே ஸாரங்கனின் நினைப்பு எழுந்தது. குழந்தையைப் பார்க்க வேணும் எனும் தாங்க முடியாத வேட்கை. குழந்தை வாசலில் விளையாடிக் கொண்டிருப்பான். தெருவில் வண்டி, காடி நினைப்பில்லாமலே உமா மூடாந்தகாரமாய் உள்ளே வேலையாயிருப்பாள். அம்மாவோ இல்லை. 'வீடா இது? காலை நீட்டி மடக்க இடமில்லை என்னத்தையோ மடக்கி மடக்கிக் கட்டிப்பிட்டு இது வாசல் இது அறை இது கூடங்கருன். ஐப்பசி மாதம் முடவனுக்கு மோக்ஷமு மதுவுமாய் காவேரி ஸ்னனத்தை விட முடியுமா? நான் இருக்கிறது இன்னும் எத்தனை நாளோ?–அம்மா ஊருக்கு மூணு வாரத்துக்கு முன்னாலேயே போயாச்சு.

"அ—பா!–" சிறகுகள் போல கைகளை விரித்தபடி சாரங்கன் சிரித்துக்

கொண்டு ஓடி வந்து தன் அணைப்புள் மோதுவான் பயலுக்கு ஏகமாய் மயிர் வளர்ந்து விட்டது அசல் பொட்டைக் குட்டியாயிருக்கான் போதும் போதாதற்கு அவன் அம்மா நடுவகிடு எடுத்து ரெண்டு பக்கமும் பின்னல் சும்மா சீவி விட்டிருக்கா கையில் வேல் ஒண்ணுதான் பாக்கி மொட்டையடித்து விபூதியையும் பட்டை பட்டையா இட்டு விட்டால் பழனி ஆண்டவனேதான் வைத்தீஸ்வரன் கோயில் முடியிருக்கிறது ஆனால் கையில் அம்பது ரூபாயில்லாமல் அதைப்பற்றி நினைப்பதற்குக் கூட இல்லை குடும்பம் இப்போ தத்தளிக்கிற நிலையைப் பார்த்தால் பயலுக்கு முடி பூணூல் கலியாணம் தனக்கு ஸஷ்டியப்த பூர்த்தி எல்லாமே ஒரே பந்தல்ல்தான் போல்-

## 3

வாசலில் நிழல் தட்டியது.

"கலியாணமா வாவா. இப்போ தான் வரையா?"

"இன்றைக் காலை வண்டியில் வந்தேன். உன்னை இன்று காலையிலேயே பார்த்து விட்டேன். வண்டியிலிருந்தே கத்தினேன். உனக்குக் காது கேட்கவில்லை. காலடியில் ஈயடிக்கிற ஜட்கா வண்டிக் குதிரை போல் ஒருகால் மாற்றி ஒருகால் தவித்துக் கொண்டிருந்தாய்."

"ஆமாம்பா; லெவல் கிராஸ்ஸிங்கில் மாட்டிக் கொண்டு விட்டேன். வரத்துக்குள் 'கேட்'டை மூடி விட்டான். இன்னிக்கு நான் லேட். எக்ஸ்ப்லனேஷன் பழங் குப்பை எல்லாம் ஏக கலாட்டா. அதெல்லாம் அப்படித்தான் இருக்கும். ஸர்விஸ்னு- முன்னலே கையைக் கொடு. குழந்தையைப் பார்த்தையா உன் தக்காளி மூக்கை அப்படியே உறிச்சி வச்சிருக்குடா-டேடேடே விடுடா, விடுடா- என் கை தானு, ஐயையோ மாவாப் போச்சே!-'

"ஸம்பத், லக்ஷ்மி எல்லாம் சொன்னுள் என் நன்றியை எப்படி நான் தெரிவிக்கப் போறேன்!"

"நீ ஒண்ணும் தெரிவிக்க வேண்டாம்; அதற்கெல்லாம் நமக்குப் போருது. நமக்கு ஒருத்தருக்கு ஒருத்தர் புரிஞ்சுக்கத் தான் முடியும். தெரிவிக்க, அறிவிக்க, அணு அணுவாய் அலுக்காமல் விஸ்தரிக்க அதெல்லாம் பொம்மனட்டிகள் டிபார்ட்மெண்ட். நான் இல்லாததை ஒண்ணும் செய்து விடவில்லை."

"எல்லாத்தையுமே பூப்பூன்னுட்டா, அப்புறம் என்னதான் இருக்கிறது?"

"நான் என்னதைச் செய்தாலும் அவள் குழந்தையை அவள் தானே பெறணும்? பார்க்கப் போனல் நானே லக்ஷிமிக்கு வந்தனம் செலுத்த வேண்டும்."

"—?"

"நீ காம்பில் கிளம்பின சமயத்தில் 'பார்த்துக் கொள், நிறை மாதம் உற்ற துணையில்லை. உன் வீட்டிலேயே இருக்கட்டும்' என்று என்னிடம் ஒப்படைத்து விட்டுப் போனதற்கு சிக்கல், கோளாறு, விபரீதமில்லாமல், என் மூக்கை யறுக்காமல் சுகப் பிரசவமாச்சே! கலியாணம், நான் ஒன்று சொல்கிறேன். ஏதாவது ஒண்ணுக்கொண்ணு ஆச்சு வெச்சுக்கோ நீ கூட சினேகிதத்தில் சும்மா இருந்து விடுவாய்; பெற்றவர்கள், மற்றவர்கள் சும்மாயிருக்க மாட்டார்கள். பழி யாரப்பா சுமப்பது? ஒருத்தரை சொல்லப் போவானேன்? உமாவே சும்மாயிருக்கமாட்டாள். இப்போ என்னவோ என் மனைவியும் உன் மனைவியும் அக்கா தங்கையா ஒழுகினலும், 'உங்களை யார் ஏத்துக்கச் சொன்னது?' என்று கேட்டால் எனக்குப் பேச வாய் எங்கே? நான் ஒருத்தரையும் குற்றம் சொல்லவில்லை. இது மனித இயல்பு.

"உலக வழக்கு என்னமோ அப்படித்தான்."

"நாமும் இவ்வுலகத்தைச் சேர்ந்தவர்கள் தான். தெய்வப் பிறவியில்லை. அதனல் எல்லாம் நல்லபடியாக முடிந்ததே என்று நாம் எல்லோரும் சேர்ந்து சந்தோஷப்படுவதைத் தவிர எனக்குத் தனியாக மாலை. சூட்டுவதில் அர்த்தமில்லை."

"இருந்தாலும்—"

"நாம் அதைப்பற்றி இனி பேச வேண்டாம்.''

"சரி பேசவில்லே.''

இருவரும் சற்று நேரம் சும்மா யிருந்தனர். ஆறி மேலே வெண்மை பூத்துவிட்ட காப்பி மேல் ஈ தைரிய மாய் உட்கார ஆரம்பித்தது.

"மாமியார் நாளை காலே வண்டிக்கு வருகிருள். கடிதம் வந்திருக்கிறது.''

"ஏனும் முன்னுல் வர முடியவில்லேயாம்?''

"இப்போத்தான் மூணும் பெண்ணுக்கு பிள்ளேப் பேறு செய்துவிட்டு, திரும்பி வந்தாளாம் தவிர அங்கங்கே ரயில் உடைப்பு வேறே. என்னப்பா என் மாமியார் என்னே விடப் பெரிய 'டூரர்'. மாற்றி மாற்றி ஏழு பெண்களுக்கு போய்ப் போய்ச் செய்யத்தான் போது இருக்கிறது.''

"சரி கவலே விட்டது. எங்கே அதுக்குள்ளேயும் கிளம்பிவிட்டாய்?''

"தலேக்கு மேல் வேலே கிடக்கிறது' காலேயிலே கலேத்த மூட்டையை போய் மறுபடியும் கட்டியாகணும். நாளே மத்யான வண்டிக்குக் கிளம்பறேன்.''

"எங்கே?''

"எங்கே? ட்யூடிதான்!—''

## 4

கலியாணம் போன சற்று நேரத்துக்கெல்லாம் தூறல் படபடத்து உடனே வலுத்து மழை கொட்ட ஆரம்பித்து விட்டது. பாவம், நடுவழியில் மாட்டிக் கொண்டிருப்பான். இதென்ன மழையோ, ஒரு ஒரு ஸீஸனுக்கும்தான் சொல்கிருேம் 'இப்பப் போல் எப்பவுமே பெய்ததில்லே!' என்று. அதென்னவோ வருஷம் முழுக்க வெயில் பிளந்தாலும் ஸஹித்துக் கொள்கிருேம். ஒருவார மழையில் நாறிப் போய் விடுகிருேம். அதுவும் முந்தாநாள் ராத்திரி கொட்டிற்றே அதற்கு மேலேயா?

முந்தாநாள் ராத்திரி ஓயாமல் பேயும் 'ஜோ'வின் தாலாட்டில் நன்ருய்த் தூங்கி விட்டான். ஆனந்த

கவியரங்கம் :

## உழவர் திருநாள்

**மு. வெங்கடேசபாரதி**

உழவுத் தொழிலின் உயர்வுதனே
ஓர்ந்தே உலகம் உய்ந்திடவே
உழவர் ஈட்டம் தமிழ்நாட்டில்
ஒருமை நிலேயிற் கொண்டாடும்
உழவர் தம்மின் உயர்திருநாள்;
உழைப்பின் ஒண்மை உணர்த்திடும்
நாள்;
உழவர்ப் பண்பை விளக்கிடும்நாள்;
ஓர்நாள்; தையின் பொங்கல்நாள்!

சங்கத் தமிழின் சுவையேபோல்
சர்க்கரைப் பொங்கல் செங்கன்னல்
தங்கத் தமிழ்ப்பெண் கற்புதனேத்
தனியே காட்டும் குலேமஞ்சள்
பங்க மின்றி வைத்திட்டேப்
பருதிச் செல்வன் புகழ்பாடும்
பொங்கல் திருநாள்; தமிழ்த்திருநாள்;
பொன்னுள்; நன்னுள்; நன்னுளே!

## பொங்கல்!

**திருச்சி வாசுதேவன்**

மங்கலஞ்சேர் பொங்லெனும்
மாண்பு நிறை இந்நாள்—எழும்
செங்கதிரைப் போற்றியுமே
சிந்தைமகிழ் நன்னுள்!
பொங்கு கடல் அலேகளேப் போல்
புத்துணர்ச்சி தோன்றும்—மனே
யெங்கு மன்பு வித்தை மக்கள்
இதய மண்ணில் ஊன்றும்!

உலகமுய்யக் கழனி சென்றே
உழைக்கு முழவர் உள்ளம்—தனில்
ஒலித்து நகை புரிந்து பாயும்
ஒப்பிலின்ப வெள்ளம்!
பலவகையில் தினமுதவும்
'பசுவினங்கள் வாழி'—எனத்
திலகமிட்டுப் பொங்கலூட்டிச்
சிறப்படைவார் வாழி!

மான கனு. S. E.க்கு மாற்றல். ஆபீஸில் டின்னர் பார்ட்டி. கிளாஸ் டம்ளரில் யாரோ பாதாம்கீரை ஊற்றுகிருர்கள். கொடி கொடியாய் குங்குமப் பூவும், முழி முழியாய்ச் சாரைப் பருப்பும் சுழன்று மிதக்க, ஸவரனை உருக்கி வார்த்தாற் போல்—டம்ளரை கையில் எடுத்து வாய்க்குக் கொண்டு போவதற்குள்—

My God! யாரோ தோளை இடித்து அத்தனையும் மேலேயே கொட்டி விட்டது.

"இன்னெரு டம்ளர் ப்ளீஸ்"

"டம்ளராவது அடுக்காவது! எழுந்திருங்கோன்னு!—"

தோளாப் பட்டையில் உமா ஓங்கி அறைந்த பிறகு தான் தூக்கம் கலேந்தது.

"என்ன?"

"லக்ஷ்மிக்கு உடம்பு சரியாயில்லே. சுருக்க ஒரு ரிக்ஷா பாருங்கோ."

இந்த மழையில் ரிக்ஷாவாவது? டாக்ஸியாவது? எதுவுமே கிடைக்க வில்லே. ஸ்டாண்டில் இருந்த ஒருத்தன் இருவரும் வர மறுத்து விட்டனர். தெருத் தெருவாய்ச் சுற்றிக் கடைசியாக ஒரு வீட்டோரமாய் ஒரு மாடும் வண்டியும் அவிழ்த்து விட்டிருந்தது. வண்டிக்காரன் குறுந் திண்ணையில் ஒடுங்கிக் கொண்டிருந்தான்.

'கொஞ்சம் ஆஸ்பத்திரி வரையில் வாப்பா, பிரஸவக் கேஸ்—' என்று ஆனமட்டும் சொல்லியும் வண்டிக்காரனுக்கு மனம் இரங்கவில்லே.

'இந்த மழையிலே மாட்டுக்கு ஜ்ுரம் வந்தூடும்' என்று விட்டான். கடைசியாக: 'நான் மாட்டை விட்டுட்டு வர முடியாது. என்னுல் முடிஞ்சு வண்டியை எடுத்துக்கிட்டுப் போய் திருப்பிக் கொணுந்திடுங்க. அதுவும் நீங்க நொம்பக் கேட்டுக்கறத்தாலே, பாவ தோஷத்துக்கு அஞ்சி, உங்களே நம்பி கொடுக்கறேன்.

உமா லக்ஷ்மியைத் தாங்கிக் கொண்டு வாசலில் காத்துக் கொண்டிருந்தாள். தெரு விளக்கு வெளிச்சம் நேரே லக்ஷிமி முகத்தில் அடித்தது. உமா கட்டை விரலால் ரக்ஷையாய் இட்டிருந்த உதிர்விபூதி லக்ஷிமி நெற்றியில் துலங்கிற்று.

அவன் வண்டியை இழுத்துக் கொண்டு வருவதைக் கண்டதும் அந்த நேரத்திலும் உமாவின் இடக்குப் போகவில்லே.

"இதென்ன கூத்து? எத்தனை நாளாய் இந்த 'பார்ட்டைம்' ஜாப்?

"ஏறு ஏறு—"

அவர்கள் கிளம்புவதற்கென்றே காத்திருந்தாற்போல் மழை வலுக்க ஆரம்பித்து விட்டது. ஜலம் முழங்கால் ஆழத்திற்கு ஓடிற்று. ஆகாயத்திலிருந்து பூமிமேல் எறிந்த ஈட்டிகள் போல், தெரு விளக்கில் தூறல்கள் பளபளத்தன. ஸூயர்கள் திறந்து கொண்ட இடத்தில் மழை வெள்ளம் சுழித்தது. பகவானே, எதிலாவது நான் காலே விடாமல் இருக்கணுமே! கைகள் சட்டங்களேப் பிடித்துக் கொண்டிருந்தமையால், முகத்தின் மேல் வழியும் ஜலத்தை வழித்தெறிய முடியவில்லே. உதட்டிலிருந்து நக்கிக் கொண்ட ஜலம் நாக்கில் இனித்தது. கண்களே அடைத்த ஜலத்தில் விழிகள் நீந்தின. அந்த ஜலத்திரையில் மங்கின திருஷ்டியில், பூமியும் வானமும் ஒன்று சேர்ந்து ஒரு பிரம்மாண்டமான புஷ்பமாய் மலர்ந்து மெதுவிட்டுத் தோன்றிற்று. ஈரம் தோலுள் இறங்கி, சதையை ஊடுருவி, எலும்பை நெருப்பாய்க் காய்ச்சிற்று.

வண்டியுள்ளிருந்து பின்னுல் வெகு தூரத்திலிருந்து உமாவின் குரல் அவசரமாய் மழைத் திரையைத் துளைத்துக் கொண்டு எட்டிற்று.

"வண்டியை நிறுத்துங்கோ—நிறுத்துங்கோ"

ஆண்டவன் அந்த க்ஷணமே அவர்களுக்கென்றே படைத்தாற் போன்று எதிரே ஒரு வீடு திண்ணையோடு எழும்பிற்று. திண்ணே மேல் வண்டியை முட்டுக் கொடுத்து விட்டு, குனிந்து வெளி வந்து முகத்தைக் கைகளில் புதைத்துக் கொண்டு திண்ணே

மேல் உட்கார்ந்துவிட்டான். ஒரு நிமிஷம் எங்கிருக்கிறோம், என்ன பண்ணுகிறோம், என்னத்துக்கு இங்கு வந்தோம்? எப்படி வந்தோம்? எதுவுமே நினைவில்லாமல் போய் விட்டது. மழையில் தான் எனும் தனிப் பிரக்ஞை கரைந்து, அழிந்து மழையோடு கலந்து விட்டாற் போலிருந்தது.

அந்தச் சமயம்—பூமியே திறந்து, அதனின்று அதன் இதயத் துடிப்பு விடுபட்டாற் போல் புத்த புதிதாய் ஒரு குரல் வண்டியின் உள் கும்மிருட்டிலிருந்து கிளம்பி அவனை இருகூறாய் பிளந்தது. வாஸ்தவமாய் அவரைத் தோல் போல் தான் இரண்டாய்ப் பிளந்தாற் போலேயே இருந்தது. அப்புறமே, அந்த வியப்பிலிருந்து அவன் முழுக்க மீளவில்லை.



ஆஸ்பத்திரியை அடைந்தது, புதுக் கேஸ் வந்திருக்கும் அறிகுறியாய் அடித்த ஆராய்ச்சி மணியோசை, திரும்ப வண்டியைக் கொண்டுபோய் சொந்தக்காரனிடம் ஒப்படைத்து விட்டு வீட்டுக்கு வந்து உடையைக் களைந்து படுக்கையில் விழுந்தது—எல்லாமே எங்கோ யாருக்கோ நடந்ததாய், கதை கேட்டாற் போல்—எல்லாமே, நாக்கில் எச்சிலைத் தொட்டு அழித்த கோடு போல் பளிச்சென்று ஞாபகத்தில் இல்லை. ஒன்று தான் நினைவிருந்தது.

ஸாரங் பூட்டிக் கொண்டு போன படியே நிம்மதியாய்த் தூங்கிக் கொண்டிருந்தான்.

தோளைக் குலுக்கி உமா காப்பி டம்ளரை வாயண்டை நீட்டிய போது தான் மூர்ச்சை தெளிந்தது.

"பரவாயில்லை; குடிச்சுட்டே பல் தேயுங்கோ"

"மணி என்ன ?"

"ஒன்பது"

"My God!—"

அன்று மாலை ஆபீஸ் விட்டதும் நேரே ஆஸ்பத்திரிக்குச் சென்றான். தாயின் கால்மாட்டில் கட்டிலோடு மாட்டிய தொட்டிலில் குழந்தை வளர்ந்திருந்தது. ஒரு கையை வாயில் அடைத்துக் கொண்டு, உடம்பையும் இன்னொரு கையையும் அவன் பக்கமாய் முறித்தது. 'டொமாட்டோ நோஸ்'. இதுதானா? இவ்வளவு ரகளையும் இதுதானா ?

தன்னையறியாது மனம் பொங்கிற்று. இதன் ஆக்கலில் இதன் தாய்க்கும் தகப்பனுக்கும் என்ன பங்குண்டோ அதுமாதிரி இதன் பிறப்பில்—இதன் பிறப்பித்தலில் (வார்த்தைகள் எப்படித் தாமே தம் மிடத்தில் விழுந்து அடுக்கித் தம்மை சரிப்படுத்திக் கொள்கின்றன!) எனக்கும் என் பங்கு உண்டல்லவா?

உயிர் தன் விடுதலைக்குத் தன்னைப் புரிந்து கொள்வதற்காக திரும்பத் திரும்பத் தன்னைப் பிறப்பித்துக் கொண்டு இயங்கி படும் விசுவகர்ப்ப வேதனையில் என் உதவியும் அதற்கு வேண்டியிருக்கிறதல்லவா? என்னைத் தனக்கு சாக்ஷியாக்கிக் கொண்டிருக்கிறதே அதுவே அதிலேயே அதற்கு நான் உதவி தானே! இப்படித் தானே எல்லோரும் ஒருத்தருக்கொருத்தர் சாக்ஷி? என்னையறியாமலே இவ்வுலகரங்கில் நடக்கும் எத்தனை நாடகங்களில் நான் பாத்திரமாய் இருக்கிறேன்! நான் அறிந்தவர் அறியாதவர் எல்லோருமே என்னை ஒவ்வொரு வகையில் பாதிக்கின்றனர். நேற்று விபத்தில் இறந்தவனின் ரத்தத்தில் அப்படித் துடித்தேன். இன்று இக்குழந்தையின் பிறப்பில் முக்கிய பாகம் தாங்கியிருக்கிறேன். நேற்று விடுதலையான ஜீவனே இக்குழந்தையின் பிறப்பில்

புகுந்து கொண்டில்லை என்று நிச்சயமாய்ச் சொல்ல முடியுமோ? இப்படி ஒன்றுக் கொன்று ஒருவர்க் கொருவர் சாட்சியான இவ்வுயிர்ப் பிணைப்பில், நான் ஏது தனி? இன்று நேற்று நாளை நேரங்கள் ஏது? நேற்று விபத்தில் இறந்தவனும் நானே. நான் இழுத்த வண்டிக்குள் பிறந்து இத்தொட்டிலில் இருப்பதும் நானே. இன்று நேற்று நாளை எனும் நேரங்களினூடே ஓடும் இந்த உண்மை எந்த மட்டுக்கு என்னுள் அழுந்திற்றோ அந்த அளவுக்கு நான் வளர்ந்தவன்தானே?

தொட்டிலின் மேல் தாழ்ந்த பார்வை உயர்ந்ததும் தாயின் முகத்தைத் தான் சந்தித்தது. லக்ஷிமியின் கண்கள் அவனைச் சிந்தித்துக் கொண்டிருந்தன. திடீரென அவன் காலடியில் பூமி விட்டது. அக் கண்களுள் புகுந்து அவைகளின் அகண்ட, நிர்ச்

வாழ்ந்தவர்கள் வாழ்கிறார்கள்:

**புதுமைப்பித்தன்**

**இலக்கியம்—வாழ்க்கையின் எதிரொலிகள்; சமூகத்தின் வளர்ச்சியைக் காட்டும் மைல்கள்; மனித லட்சியத்தின் உயிர் நாடி.**

சலமான ஆழத்திலிருந்து தப்ப முடியாமல் அதில் தான் மூழ்கி விட்டாற் போலிருந்தது. வார்டில் இருந்து வெளிவந்த பின்னரும் தன்னில் ஒரு பகுதியை அவள் கண்களின் ஆழத்துள் விட்டு வந்தாற் போல் தான் இருந்தது. நான் இங்குமிருக்கிறேன். அங்குமிருக்கிறேன்.

இதன் ரஸாயனம் என்ன?

அறைக்கு வெளியே ஆளரவம் கேட்டது. உள்ளே வந்து விளக்கைப் போட்டாள். கையில் பையனைப் பிடித்துக் கொண்டிருந்தாள். ஸாரங்கன் திமிர முயன்றான்.

"இதென்ன விளக்கைக் கூடப் போடாமல் எந்தப் பட்டணத்தைக் கட்டியாறது? இவன் பண்ற அக்ரமம் வரவர ஸஹிக்க முடியல்லே. என் மானம் போறது. இவனை நீங்கள் கண்டிக்கணும்."

"என்ன நடந்து விட்டது?"

"காலையில் என்ன பண்ணனோ அதேதான் இப்பவும். கையும் பிடியுமாய்ப் பிடிச்சு இழுத்துண்டு வந்தேன். எதிர் வீட்டு மாமா எச்சிலை தின்னுண்டிருக்கான். அவரும் வஞ்சனையில்லாமல் கலத்திலிருந்து குழம்புஞ் சாதத்தை உருட்டி உருட்டி கொடுக்கிறார். இவனும் குருவிக் குஞ்சு மாதிரி வாயைத் திறந்துக் காட்டிண்டிருக்கான்."

"உமா, நீ ஒன்றும் புதிதாய்க் கண்டுபிடித்து விடவில்லை. வீட்டுக்கு வீடு தலைமுறை தலைமுறையாய் நடக்கிறதைத்தான் சொல்கிறாய்."

"இதென்ன வியாக்யானம்?"

"இது உள்ளது. இவன் வயதில் நான் என் தாத்தாவின் இலைப் பாலுஞ் சாதத்திற்குக் காத்திருந்தது இன்னும் மறக்கவில்லை. தாத்தாவுக்கு எச்சில் கொடுக்கப் பிடிக்காது. அதற்காகவே சாப்பிடாமல், நான் தூங்குவதற்குக் காத்திருப்பார். ஆனால் நானா ஏமாறுபவன்? தூங்காமல் கண்ணைக் கசக்கிக் கொண்டு காத்திருப்பேன். வேண்டா வெறுப்பாய், அவர் சபித்துக் கொண்டே என் வாயில் மேலும் கீழும் வழிய ஒரு கவளமாவது ஊட்டி, சர்க்கரை விரலில் தொட்டு என் நாக்கில் இழுத்த பின் தான் அந்த இடத்தை விட்டு அகலுவேன்."

"அப்படியானால் இப்படியே எச்சிலைத் தின்னுண்டேயிருன்னு இன்னுங் கொஞ்சம் சொல்லிக் கொடுங்கோ."

ஆத்திரத்துடன் பையனை அவன் பக்கம் தள்ளினாள். குழந்தையை அப்படியே வாரியணைத்துக் கொண்டான்.

"மூஞ்சி குத்தறதப்பா. கறுப்பு கறுப்பாயிருக்கே எப்போப்பா வெள்ளை வெள்ளையாப் பண்ணிக்கப் போறே?"

ஸ்படிகத் தூய்மையில் சிரிப்பு, நெஞ்சில் நீர்வீழ்ச்சியாய்ப் பிடுங்கிக் கொண்டு தான் பாயுமிடமெல்லாம் சுத்தம் செய்து கொண்டு உடல் அகலத்துள் பரவுவது தெரிந்தது.

வாடிக்கைக்காரர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும்
எமது பொங்கல் வாழ்த்துக்கள்

# ஸிமெண்ட்

சென்னையில் கீழ்கண்ட இடங்களில் ரெடி ஸ்டாக்குகள் கிடைக்கும்.

1. 15, செம்புதாஸ் தெரு, சென்னை-1.
2. ஸிமெண்ட் கான்க்ரீட் ஒர்க்ஸ், 11-A, வெஸ்ட்காட் ரோட், சென்னை.14.
3. 283-A, திருவல்லிக்கேணி ஹைரோட், சென்னை-5.
4. 131, பைக்ராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி.
5. "ஜயாமான்ஷன்ஸ்" பூந்தமல்லி ஹைரோட், சென்னை.
6. 139/2, புரசைவாக்கம் ஹைரோட், சென்னை.
7. 139, சூளை ஹைரோட், சென்னை.
8. 105, திருவொற்றியூர் ஹைரோட், சென்னை.
9. 14, கச்சேரி ரோட், மயிலாப்பூர். சென்னை.
10. 3/95, பிராட்வே (பிராட்வே டாக்கீஸ் சமீபம்) சென்னை.

உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள் :

## M. குப்புசாமி நாய்க்கர்,

15, செம்புதாஸ் தெரு, மதராஸ்-1.

போன் : 21368, 21369

வெளியூர் டிபோ :

**90, ராஜா தெரு,**
காஞ்சீவரம்.

**A. C. C. ஸிமெண்டிற்கும் ஸ்டாக்கிஸ்டுகள்**
**கஸ்தூரி பஜார், ஆற்காடு,**
வட ஆற்காடு ஜில்லா.

# கருணை மறவன்

தேன் சிந்தும் சிலப்பதிகாரம் வான்புகழ் கொண்டது. காப்பியங்களில் சிறந்தது. அது தரும் செந்தமிழ் நடை மாந்த, மாந்த மாருத இன்பம் பயப்பது. இத்தகு நூலை வேறு எம்மொழியினரும் பெற்றிலர்.

கதையில் புதுமை! கருத்துக்களில் புதுமை! சொற்களில் புதுமை! சுவைகளில் புதுமை! ஆம்; புதுமைப் பெட்டகம் சிலப்பதிகாரம் என்னும் செந்தமிழ்க் காப்பியம்.

சிலம்புக் காவியத்தின் தலைவி கண்ணகி; அவளுக்கு இணை அவளேதான்!

சிலப்பதிகாரத்தில் வரும் கலையரசி மாதவி; அவளை நிகர்த்த பெண்ணை வேறு எந்தக் காப்பியத்திலும் காண இயலவே இயலாது.

உலகப் பேர் பெற்ற நாடகப் பேராசிரியர் ஷேக்ஸ்பியரும் படைத்தறியாத பாத்திரம் சிலப்பதிகாரத் தலைவன் கோவலன்.

கோவலனுக்கு இணையான தலைவனைப் பெற்ற காப்பியம் வேறுஒன்று இருப்பதாகவே தெரியவில்லை.

# இலக்கியச் சுவைப்பு

கவி கா. மு. ஷெரீப்

வெகு எளிதில் உணர்ச்சி வயப் பட்டு விடுபவனுகத் திகழ்கின்ருன் கோவலன். அது ஒன்றே அவனிடம் உள்ள குறைபாடு.

கோவலனை நமக்கு அறிமுகப்படுத் தும் இளங்கோவடிகள் அவனை 'மண் தேய்த்த புகழினுன்' என்கிருர். ஆம்; புகழால் உலகத்தை வென்றிருந் தான் கோவலன். அழகு நலத்தால் மங்கையரும் பாராட்டும் பேறு பெற் றிருந்தான் மாசாத் துவான் மைந்தன்.

மாசாத்துவான், வேந்துடன் சரியாசனத்திலிருந்து பேசும் தகுதி பெற்றவன். ஈட்டும் செல்வத்தைப் பிறர்க்கு ஈந்து வள்ளலாக வாழ்ந்து வருபவன். உலகறிந்த வணிகன். இவன் மைந்தனே கோவலன் என் றும் நமக்கு அறிமுகப்படுத்துகிருர் இளங்கோவடிகள்.

பதினுருண்டுப் பருவத்தினனுக சிலப்பதிகாரத்தில் கோவலனை முதன் முதல் நாம் சந்திக்கிருேம். இளமைக் கனவுகள் பூத்துக் குலுங்கும் பருவம் அது. எழில் நலம் தோய்ந்த அவனை முருகவேளுடன் ஒப்பிட்டுப் பாராட்டு கிருர்களாம் மெல்லியர்கள்.

'மதிமுக மடவார், வீணை ஒலியை யும் வென்ற தங்களது இன்குரலால் கோவலனை செவ்வேள் என்று சேர்ந்து நின்று பாராட்டுவர்' எனப் பாப் புனைந்துள்ளார் இளங்கோ வடிகள்.

"பெருநில முழுதாளும் பெருமகன் தலை
வைத்த
ஒருதனிக் குடிகளோ டுயர்ந்தோங்கு
செல்வத்தான்
வருநிதி பிறர்க்கார்த்து மாசாத்து
வானென்பான்
இருநிதிக் கிழவன்மகன் ஈரெட்டாண்
டகவையான்
அவனுந்தான்,
மண்தேய்த்த புகழினுன் மதிமுக
மடவார்தம்
பண்தேய்த்த மொழியினு ராயத்துப்
பாராட்டிக்
கண்டேத்தும் செவ்வேளென் றிசை
போக்கிக் காதலாற்

கொண்டேத்தும் கிழமையான் கோவல
னென் பான்மன்னோ !’

ஈடு இணையற்ற செந்தமிழ்ப் பாக்களால் இப்படிக் கோவலனை நமக்கு-நாட்டுக்கு அறிமுகப் படுத்தி வைக்கிறார் இளங்கோவடிகள்.

மண் தேய்த்த புகழினான் !

பதினாறு வயதில் மன்பதையின் புகழைத் தேய்த்துச் சிறுமைப்பட வைத்துத் தன் புகழை எப்படிப் பெருக்கிக் கொண்டானோ கோவலன்!

தீய செயல் புரிந்தால் புகழ் கிட்டுமா ?

ஒழுக்கக் குறைவிருந்தால் உலகம் வாழ்த்துமா ?

பெண் பித்தனானால் பாவையர் பாராட்டுவரா ?

பொருளைப் பொல்லா வழியில் செலவிட்டால் அகிலப் புகழை அடைய முடியுமா ?

சொல்லடுக்குத் தொல்லை கொடுத்தால் நாடு நல்லவன் என்குமா ?

வீரனை உலகம் வாழ்த்தும்—வீரத்தால் அழிவைச் செய்யா விட்டால் !

வித்தையை உலகம் கொண்டாடும்-அதனால் யாருக்கும் கெடுதல் இல்லை என்றால் !

செல்வந்தனை மக்கள் பாராட்டுவர், வாரி வழங்கினால் !

இன்னலைக் கண்டு இரங்குவோனை எவரே புகழாதிருப்பர் ?

கோவலனிடம் வீரம் செறிந்திருந்தது. அதைக் கொண்டு ஆபத்தில் சிக்கியோரைக் காப்பாற்றினான்.

நல்ல இசைக் கலைஞன், கவிஞன் கோவலன். கற்றிருந்த கலைக்காக அவன் பாராட்டப் பட்டான்.

கோவலனுக்குச் செல்வம் இருந்தது. அதை அவன் இல்லாதவருக்கும் இன்னலுற்றோர்க்கும் கொடுத்துப் புகழ் கொண்டான்.

கோவலனிடத்திலே இரங்கும் குணம் இருந்தது. துயருற்றோருக்கு அருள் புரிந்தான். அவன் செயல் புகழை உயர்த்தி, உலகத்தை அதனுள் அடங்கச் செய்தது.

கோவலனின் வீரத்தை, வள்ளல் தன்மையை, கருணை உள்ளத்தை மாடல மறையோன் என்னும் மாமுது அந்தணன் வாயிலாக நாம் அறியச் செய்கிறார் இளங்கோ வடிகள்.

இத்தகு செம்மலுக்கு எத்தகு இன்னல் சூழ்ந்தது என்று சொல்லத் தோன்றும் சிலம்பைப் பயின்றோருக்கு. மாடல மறையோனும் அப்படித்தான் அதிசயித்துக் கேட்கிறான் கோவலனிடத்திலே.

“கருணை மறவ ! சொல்லாச் செல்வ ! இல்லோர் செம்மல் ! நீயா உன் மனைவியுடன் இங்கு-மதுரைக்கு இத்தகு கோலத்தில் வந்தனை ?” என்று கனிந்த இதயத்தோடு கவலை தோய்ந்த குரலில் வியப்புக்குறி தொடுக்க வினவுகிறான் மாடல மறையோன், அடைக்கலக்காதையில்.

மங்கல வாழ்த்துப் பாடலால் கோவலனை மண் தோய்த்த புகழினனாக அறிகிறோம். கானல் வரியில் யாழ் மீட்டிக் கவி பாடி, கலைஞனாகக் காட்சியளிக்கிறான் கோவலன். மதுரைக் காண்டத்தில் உள்ள அடைக்கலக் காதையின் வாயிலாகக் கோவலனின் மாண்புகள் அனைத்தையுமே அறிய முடிகிறது. கோவலனின் மாண்புகளைப் பகரவே மாடல மறையோன் அங்கே வருகிறான் போலும்!

அவன் காட்டும் கோவலன் மண்ணுலகக் காவியங்களிலே இல்லாத சிறப்புடையவன்.

***

கோவலன் நன்மகள் மணிமேகலைக்குப் பெயர் சூட்டு விழா நடைபெற்றது. செல்விக்குப் பெயர் சூட்டி, இல்லாதாருக்கு செல்வத்தை அள்ளிக் கொடுத்துக் கொண்டிருந்தான் கோவலன். வறுமை வாய்ப்பட்ட முதியோன் ஒருவன், பொருள் பெறக் கோவலன் இருந்த இடம் நாடி வந்தான். அந்த வேளையில் மதம் பிடித்த யானையொன்று வெறி பிடித்து வீதி வழியே ஓடி வந்தது. கோலூன்றித் தளர் நடையில் வந்த மூதியோனை மதயானை தன் துதிக்கையால் சுழற்றிப் பற்றிக் கொண்டது. ‘ஓ’வெனக் கதறினான் முதிய

வன். யாரும் உதவிக்குச் செல்ல வில்லை. உயிர் மீது வைத்திருந்த பற்றினல். கோவலன் கண்டான். குதித்தெழுந்து ஓடினன். முதியோனை மீட்டு விட்டான். யானையின் துதிக்கையில் புகுந்து, கோடு பற்றி ஏறி, மத்தகத்து அமர்ந்து, மதத்தை அடக்கி, கொட்டிலில் சேர்த்தான். பேராபத்திலிருந்து புகார் மக்களைக் காத்தான். ஆட்சியில் இருந்த அரசனும் செய்யாத அருஞ்செயலைச் செய்த கோவலனை, "கருணை மறவ" என்று கனிவுடன் விருது சூடி மகிழ்கிருர் இளங்கோவடிகள்.

"தானங் கொள்ளும் தகைமையின் வருவோன்
தளர்ந்த நடையில் தண்டுகால் ஊன்றி
வளைந்த யாக்கை மறையோன் தன்னைப்
பாகுகழிந் தியாங்கணும் பறைபட வரூஉம்
வேக யானை வெம்மையிற் கைக்கொள
ஒய்யெனத்தெழித்தாங்குயர்பிறப்பாளனைக்
கையகத் தொழித்ததன் கையகம் புக்குப்
பொய்பொரு முடங்குகை வெண்கோட் டடங்கி
மையிருங் குன்றின் விஞ்சையன் ஏய்ப்பப்
பிடர்த்தலை இருந்து பெருஞ்சினம் பிறழாக்
கடக்களிற் றடக்கிய கருணை மறவ...."

அரசினரும் அவரது படையினரும் பாகரும் அடக்க முடியாது விட்டு விட்ட பெருவலிவு பெற்ற மதயானையை அடக்கும் வலிமை பெற்ற வீரனுகத் தோற்றமளிக்கிருன் கோவலன். மேலேயுள்ள பாட்டினைப் படிக்கும் நமக்குக் கோவலன் வீரத்தைத் தக்க முறையில் பயன்படுத்திய சரியான வீரன்—தமிழ் வீரன் கோவலன் என்று அறியும் போது மகிழ்வு பிறக்கிறது அல்லவா?

***

நூல் எழுதும் ஆற்றல் கொண்ட மறையோனெருவன். அவன் குடும்பமோ வறுமை வயப்பட்டது. பொருளற்றவன் மட்டுமல்ல; பிள்ளைப் பேறும் இல்லாதவன் அம்மறையவன். நெடு நாளைக்குப் பின் அவன் துணைவி சிசு ஒன்றுக்குத் தாயானுள். மறையவன் இல்லத்திலில்லா வேளை. குழந்தையை ஏணையில் கிடத்தி விட்டு நீரெடுத்து வர ஏகி விட்டாள் மறையவன் மனைவி. பாம்பு ஒன்று பிள்ளையின் தொட்டிலில்இறங்கிற்று. மறையவன் வளர்த்த கீரி அதனைக் கண்டது. கடித்துக் கொன்றது.

## கற்பு!

**மாயூரம் கீரன்**

*மலர் :* "பட்டிதழைச் சுவைக்குங்கால்
பசப்பும் வார்த்தை
பலகூறி எனைமயங்கச்
செய்தாய்; "அன்பால்
தொட்டுவிட்ட உள்ளத்தில்
பிரிவு ஏது?
துரோமுனக் கெண்ணேன் நான்"
என்ருய்; ஆனல்
விட்டுவிட்டு வேருெருத்தி
வலையில் வீழ்ந்து
வேதனையே பரிசாகத்
தந்து விட்டாய்!
கட்டியவள் நானிருக்க
மற்ருெருத்தி!
கடுகளவும் நியாயமிலை
வண்டு அத்தான்!"

*வண்டு :* "போடிமுழுப் பைத்தியமே!
புலம்பு கின்ருய்;
புதிதான எழிலுண்ணல்
புரட்சிக் கொள்கை;
ஆடிவரும் மனிதர்களின்
கண்கள் கூட
அப்படித்தான் இருக்கின்ருர்;
அதற்கு நாங்கள்
கோடிமுறை நன்றென்பேன்;
குவலயத்தில்
கூரறியும் ஆறறிவே
அவ்வா றென்ருல்
பாடிவரும் வண்டினத்தார்
எம்மினத்தார்
பல மலரைத் துய்த்திடுதல்
பாவ மாமோ?"

*மலர் :* செறிவறிவுப் பெட்டகத்தார்
செகத்தில் கண்கள்
செய்கின்ற செயல்மட்டும்
சிறந்த தாமோ?
தறிகெட்ட போக்கென்ற
போது மேன்மை
தரணிதனில் கண்மட்டும்
விதிவி லக்கா?
அறிவுலக ஆண்களுக்கும்
உனக்கும் சேர்த்தி
ஆருத உள்ளத்தால்
உரைப்பேன் ஒன்று
சிறியஇனம் பெரியஇனம்
எல்லாம் இங்கே
சிறப்பதற்கு இருபாற்கும்
பொதுவே கற்பு!"

# விந்தை உலகம்

வாழும் வாக்கு : 'மகனே கேள்!'

தொகையறு

மணவறையில் சேர்த்துவைக்கும் வாழ்த்துரைக்கும் ஓர்காலம் ;
மக்களைப்பெற்று மகிழவைக்கும் ஓர்காலம் ;
மனதிலே பாசங்கள் வளர்ந்து படர்ந்த பின்னே
கனவுகண்டு விழிப்பதுபோல் கலைத்துவிடும் ஓர்காலம் ;

பாட்டு

சூதாட்டம் ஆடும் காலம் – பல
மாருட்டம் செய்து போகும் ;
வாதாடி என்ன லாபம்? – துயர்
மலிந்தோர்க்கு ஏது ஞாயம்? (சூதாட்டம்)

பேராசை காட்டி மயக்கும் – இணை
பிரியாத அன்பைப் பிரிக்கும்!
மாருத இன்பம் போல வந்து
மறைந்தோடுமே மண்மேலே – இதில்
வாதாடி என்ன லாபம்? – துயர்
மலிந்தோர்க்கு ஏது ஞாயம்? (சூதாட்டம்)

வெயில்கண்டு பூத்த மலரும் – அந்த
வெயிலாலே காய்ந்து மாறும்
ஒருநாளிலே வாழ்ந்து மாறும்
மலர்போல வாடும் காயம் – இதில்
வாதாடி என்ன லாபம்? – துயர்
மலிந்தோர்க்கு ஏது ஞாயம்? (சூதாட்டம்)

மக்கள் வேண்டும் செல்வம் வேண்டும் - என
மறவாமல் உள்ளம் தூண்டும்!
மந்தையாக யாவும் கூடும் ;
சந்தைமாடு போல ஓடும் – இதில்
நீபேசி என்ன லாபம்? – உந்தன்
நிலைகாண ஏது நேரம்? (சூதாட்டம்)

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.

குருதி தோய்ந்த வாயுடன், தனது செய்கையைத் தெரிவித்துப்பாராட்டு தல் பெற, மறையவனின் மனைவியை நாடி ஓடிற்று. நீர் சுமந்து வந்த மறையோன் மனைவி, கீரியைக் கண்டாள். தனது பிள்ளையை அக் கீரி கொன்று விட்டதாகக் கருதினள். நீர்க் குடத்தைக் கீரியின் தலையிலே போட்டுக் கொன்ருள். வேகமாக வீட்டினுள்ளே சென்ருள். குழந்தை ஏணையிலே துயிலில் ஆழ்ந்து கிடந்தது. ஆபத்து இல்லை மகவிற்கு என்று அறிந்து ஆனந்தம் கொண்டாள். அடுத்த கணம் அநியாயமாகக் கீரியைக் கொன்று விட்டதற்காக வருத்தப் பட்டாள். அப்பொழுது அங்கே மறையோன் வந்தான். நிகழ்ச்சியை அறிந்து, துணைவியின் மூடச்செயலுக்கு வருந்தினன். நல்ல உயிரொன்றைப் போக்கி விட்டவளின் கரத்தால் உணவு கொள்ளுதல் தீதென்ற சாத்திர முடிவு அவன் சிந்தனைக்கு வந்தது. உடனே நாடு சுற்றி, புண்ணியத் துறை முழுகி, பாவத்தைப் போக்கப் பயணமானன். தன்னைத் தனித் துயரில் வருந்த விட்டு ஏக வேண்டாம்என்று மனையாள்கெஞ்சினள் "செய்த பாவத்தைப் போக்க புண்ணியத் துறை தோறும் சென்று மூழ்குதல் ஒன்று. மற்ருென்று, பெரும் பொருளை இல்லாதாருக்கு ஈவது ; பொருளில் லாதவன் நான். ஆதலால் புண்ணியத் துறை மூழ்கச் செல்கிறேன். நான் செல்லாதிருக்க விரும்புவாயானல், என்னிடம் நான் யாத்த நூல் ஒன்றுள்ளது. அதனை விற்றுப் பொருள் கொண்டுவா ; தருமம் செய்து பாவம் போக்கி இணைந்து வாழலாம்!" என்று கூறி, நகர் நீங்கி உறைந்தான் மறையோன்.

மறையோன் தந்த சுவடியுடன், வள்ளல்கள் வாழும் இடமெல்லாம் சென்று இறைஞ்சினள் அவ்வனிதை. 'கணவனுடன் இணைந்து வாழும் பேற்றை எனக்குத் தாருங்கள்' என்று இறைஞ்சி வணங்கி ஏட்டினை நீட்டினள். யாரும் ஏற்பாரில்லை. காரணம், அவள் கேட்கும் தொகை

கொஞ்ச நஞ்சமல்ல. லட்சக் கணக்கில்; வராகனை! சோர்ந்த நிலையில் துயர் சேர்ந்த வதனத்தினளாகச் செல்லும் அப்பெண்மணியைக் கோவலன் கண்டான்; கூவி அழைத்தான்; கதையினைக் கேட்டான்; கருணை மிகக் கொண்டான்; எட்டினைப் பெற்றான்; ஈந்தான் பெருநிதியை. எடுத்துச் சென்று கொண்டோனிடம் கொடுத்தாள். மறையோன் தருமம் செய்தான். மனைவியுடன் கலந்து வாழ்ந்தான். இத்தகைய அருஞ்செயல் புரிந்த கோவலனை 'செல்லாச் செல்வ' என்று செம்மையுடன் சொல்லிக் களிக்கிறார் இளங்கோவடிகள். ஆம்; தக்கவரால் தக்கவனுக்கு இடப்பட்ட தக்க பட்டம் அன்றோ அது!

'பிள்ளை நகுலம் பெரும்பிறி தாக
எள்ளிய மனையோள் இனைந்துபின் செல்ல
வடதிசைப் பெயரு மாமறை யாளன்
கடவ தன்றுநின் கைத்தூண் வாழ்க்கை
வடமொழி வாசகஞ் செய்தநல் லேடு
கடனறி மாந்தர் கைந்நீ கொடுக்கெனப்
பீடிகைத் தெருவிற் பெருங்குடி வாணிகர்
மாட மறுகின் மனைதொறு மறுகிக்
கருமக் கழிபலங் கொண்மி னோவெனும்
அருமறை யாட்டியை அணுகக் கூஉய்
யாதுநீ உற்ற இடர்ஈ தென்னன
மாதர்தா னுற்ற வான்துயர் செப்பி
இப்பொரு ளெழுதிய இதழிது வாங்கிக்
கைப்பொருள் தந்தென் கடுந்துயர் களைகென
அஞ்சல் உன்றன் அருந்துயர் களைகேன்
நெஞ்சுறு துயரம் நீங்குக என்றாங்கு
ஒத்துடை அந்தணர் உரைநூற் கிடக்கையில்
தீத்திறம் புரிந்தோள் செய்துயர் நீங்கத்
தானஞ் செய்தவள் தன்துயர் நீக்கிக்
கானம் போன கணவனைக் கூட்டி
ஒல்காச் செல்வத் துறுபொருள் கொடுத்து
நல்வழிப் படுத்த செல்லாச் செல்வ'

முன்பு கோவலனின் வீரத்தைக் கண்டோம். இங்கு அவனது கொடைத் திறமையைக் காண்கின்றோம். இப்பொழுது கோவலனது தியாக உள்ளத்தைக் காணப் போகிறோம்.

நல்லோரைத் தீயோர்என உரைக்கும் நாப்பறையாளன் ஒருவன். இளைஞன். பெற்றதாய்க்கு ஒரேமைந்தன். அவன் தனது சொல்லடுக்கும் சூரத்தனத்தால் பத்தினி ஒருத்தியை கற்பு நெறி தவறியவள் என்று கண்டோரிடமெல்லாம் சொல்லிவந்தான். பூம்புகார் நகரத்தில் 'பூதச்சதுக்கம்' ஒன்று இருந்தது. அந்தச் சதுக்கத்துப் பூதம், இத்தகைய இழியோரைப் புடைத்து உண்பதற்காகவே இருந்தது. அப்பூதம் அவனைத் தனது வலிய கரத்தால் பற்றி எலும்பொடிய நொறுக்கிற்று. கூக்குரலிட்டான் அக்கொடியோன். அவன் தாய் அங்கு ஓடிவந்தாள். 'என் ஒரே மைந்தனைக் காப்பாற்றுவோர் இல்லையா?' என்று ஓலமிட்டாள். வேடிக்கை பார்த்து நின்றது மக்கள் கூட்டம். கோவலன் வந்தான். அந்தத் தாயின் அழுகுரல் அவன் இதயத்தைக் கவ்விற்று. துணிந்து பீடத்தின் முன் சென்றான் கோவலன். "அவனை விட்டு என்னை ஏற்றுக் கொள்" என்று கெஞ்சினான்; இன்னொருவனுக்காகத் தன் நல்லுயிரை ஈந்து சாகத் துணிந்தான். பூதமோ, "நரகனைவிட்டு நல்லோனைக் கொல்லேன்; அது அல்ல என் தொழில்; அகலப் போ!" என்று உரைத்தது. பற்றியோனைக் கொன்று தீர்த்தது.

## கடமைப் பொங்கல்

**ர. தங்கவேலன்**

உழைப்புக்கு உயர்வளிப்போம் ஒன்று கூடி
உயர்சாதி மதப்பிணக்குப் போக்கி
நிற்போம்;
செழிப்புக்குப் பாடுபடும் உறுதி யாலே
செந்தமிழின் நாட்டில்திரு விளங்கக்
காண்போம்;

பிழைப்புக்கு உடல்வேண்டும் அறிவு
வேண்டும்;
பேதைகளாய் எத்தி வாழும் வாழ்வு
வேண்டாம்;
களைப்புக்குப் பின்வெற்றி நாட்டி வென்றும்
கடமைதனைச் செய்வோர்க்கு பொங்கல்
திருநாள்!

அழுது நின்ற தாயின் முன் கோவலன் சென்றான். "இன்று முதல் நான் உன் மைந்தன். மகனை இழந்த வருத்தம் விடுக. உன்னையும் உன் சுற்றத்தையும் காப்பேன். அவன் உனக்கு உதவிய எல்லா வழிகளிலும் அவனினும் மேலாக நான் உனக்கு உதவுவேன்,'' என்று நவின்று, அவளுடன் சென்று, பசிப்பிணி அறுத்து, பல்லாண்டு அவளையும், அவள் சுற்றத்தாரையும் காப்பாற்றினான்.

இத்தகு தியாகி கோவலனை 'இல்லோர் செம்மல்' என்று தனது இன் கவியால் பாடிக் கடமையை முடிக்கிறார் இளங்கோவடிகள். பாட்டினைப் பார்ப்போம்.

"பத்தினி யொருத்தி படிற்றுரை யெய்த
மற்றவள் கணவற்கு வறியோன் ஒருவன்
அறியாக் கரிபொய்த் தறைந்துணும்
பூதத்துக்
கறைகெழு பாசத்துக் கையகப் படலும்
பட்டோன் றவ்வை படுதுயர் கண்டு
கட்டிய பாசத்துக் கடிதுசென் றெய்தி
என்னுயிர் கொண்டிங் கிவனுயிர் தாவென
நன்னெடும் பூதம் நல்கா தாகி
நாக னுயிர்க்கு நல்லுயிர் கொண்டு
பரகதி இழக்கும் பண்பீங் கில்லை;
ஒழிகநின் கருத்தென உயிர்முன் புடைப்ப
அழிதரும் உள்ளத் தவளொடும் போந்தவன்
சுற்றத் தோர்க்கும் தொடர்புறு கிளைகட்கும்
பற்றிய கிளைஞரின் பசிப்பிணி யறுத்துப்
பல்லாண்டு புரந்த இல்லோர் செம்மல்...."

கோவலனை சந்தித்த மாடல மறையோன், 'இவைகள் நீ செய்த யான் அறி நல்வினை' என்று கூறுகிறான். அதன் மூலம், அவன் சொன்னவற்றினினும் மேலான பல நன்மைகளை கோவலன் செய்திருக்கிறான் என்ற கூறுகிறார் இளங்கோவடிகள்.

தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்று காட்டுகிறான் இராமன். மூத்தோன் இருக்க இளையோன் ஆளுதல் முறையல்லவென்று பேசி நெறியுடையவன் ஆனான் பரதன். தந்தையின் காம இச்சைக்காகத் தனது சுகத்தைப் பலியாக்கிக் கொண்டான் பீஷ்மன். இவர்களெல்லாம் உயர்ந்தவர்களே, தியாகிகளே! என்றாலும், இவர்களின் தியாகங்களெல்லாம் பெரும்பாலும் தங்கள் தங்கள் குடும்ப நலனைப் பொறுத்தது. கோவலனின் தியாகமும், கருணையும், வீரமும் பொது நலமும் கொண்டது. அது நமக்கு—நாட்டுக்குத் தேவை!

---


## அச்சகத்திற்கு தேவையான

ஹார்ட் பிரஸ், ப்ரூப் பிரஸ், லெட் & ரூல் கட்டர், பேப்பர் கட்டிங்மிஷன், பஞ்ச் கட்டிங் மிஷன், ரப்பர் ஸ்டாம்ப் மேக்கிங்மிஷன், போர்ட் கட்டர், காலண்டர் பிம்மிங்மிஷன், ட்ரடில் பெர்பரேட்டர் மற்றும் அச்சு எழுத்துகளுக்கு

# தி மதராஸ் டைப் பவுண்டரி

**38, ஜோன்ஸ் தெரு, சென்னை-1.**

# மின்சாரத் தந்தி விடுதூது

கு. அழகிரிசாமி

காதலனுக்குக் காதலியோ, காதலிக்குக் காதலனோ தூது விடுவது என்பது இலக்கிய மதிப்புப் பெற்றுள்ள ரசமான விஷயம். யாரைத் தூது விடுவது, எதைத் தூது விடுவது என்றெல்லாம் காதலர்கள் திகைக்க வேண்டியதே இல்லை. நம் நாட்டுப் புலவர்கள் உயர் திணையும் அஃறிணையும் கலந்த ஒரு ஜாபிதாவே கொடுத்திருக்கிறார்கள். அதிலிருந்து அவரவர்களுக்குப் பிரியமான ஆளையோ, பறவையையோ, பொருளையோ தேர்ந்தெடுத்துத் தூது அனுப்பலாம். பாணன், பாங்கன், பாங்கி முதலியவர்களையும், அன்னம், மயில், குயில், கிளி, மைனா, வண்டு ஆகியவற்றையும், மேகம், தென்றல், நெஞ்சம் என்பனவற்றையும் தூதுவிடலாம் என்று பாட்டியல் நூல்களும் ரத்தினச் சுருக்கமும் கூறுகின்றன. ஆனால், நம் புலவர்களின் கற்பனைக்கு இந்த ஆசாமிகளும், பறவைகளும் போதவில்லை. ஆகவே, பணம், பழஞ்சோறு, புகையிலை, புடவை முதலியவற்றையும் தூதனுப்பியிருக்கிறார்கள். ஒருவர் தமிழையே தூது விடுத்தார். விரோதிகளை இழிவு படுத்தும் நோக்கத்துடன் கழுதையையும் செருப்பையும் கூடத் தூதுவிடும் பிரபந்தங்களைப் புலவர்கள் பாடி அச்சிடாமல் வைத்திருந்ததாகக் கேள்விப்படுகிறோம்.

ஏகை - சிவசண்முகம் பிள்ளை என்ற புலவர் அறுபது ஆண்டுகளுக்கு முன் மின்சாரத் தந்தியை - 'டெலிகிராமைத்' - தூது விட்டிருக்கின்றார்.

மின்சாரத் தந்தி விடு தூது கி. பி. 1900-த்தில் அச்சிடப்பெற்றிருக்கிறது. இந்நூலை இயற்றிய சிவசண்முகப் பிள்ளை ஏகாட்டூரில் (செங்கற்பட்டு ஜில்லா) பிறந்தவர். ஸ்ரீமத் திருமூலர் ஆதீனம் ஈசான்ய

தேசிகர் மரபில் வந்த அருளானந்தரின் மாணுக்கர். திருப்போரூரிலும் இவர் சிறிது காலம் வாழ்ந்திருக்கக் கூடும் என்று தோன்றுகிறது. இவர் இயற்றிய இந்த நூலுக்கு அந்தக் காலத்தில் வாழ்ந்த புலவர்களான திருமயிலை சண்முகம் பிள்ளையின் மாணுக்கர் திருமலை இராமலிங்க முதலியாரும், திரிசிரபுரம் திரு சிவானந்த யோகிஸ்வரரும், அஷ்டாவதானம் பூவை-கலியாணசுந்தர முதலியாரும், திருமழிசை கந்தசாமி முதலியார் குமாரர் வடிவேலு முதலியாரும், திருமயிலை நமசிவாய முதலியாரும் சிறப்புப் பாயிரமும், சாத்து கவிகளும் கொடுத்திருக்கிருர்கள்.

நூலாசிரியரான சிவ சண்முகம் பிள்ளை, நாட்டுக் கோட்டைச் செட்டியார்களைப் பாட்டுடைத் தலைவர்களாக வைத்து, அவர்களுடைய குலப் பெருமையையும், கொடைச் சிறப்பையும் சிவ பக்தியையும் பற்றி நூலில் விஸ்தாரமாகக் கூறியிருப்பதால், இவர் செட்டியார்களின் அன்பும் ஆதரவும் பெற்றுத் திகழ்ந்திருக்க வேண்டும்.

இனி, நூலில் காணப்படும் செய்திகளையும், சுவைமிகுந்த சில பகுதிகளையும் பார்ப்போம்;

திருக்கழுக்குன்றத்துக்கு அருகில் உள்ள திருப்போரூர் வாசியான காங்கேயன் என்ற தமிழ்ப் புலவர், பெரிய அவதானியாகவும் விளங்கினுர். அவர், தம் மனைவியை விட்டுப் பிரிந்து, ஒரு நாட்டியப் பெண்ணுடன் சேர்ந்து கொண்டு ஊர் ஊராய்ப் போய் நாடகங்கள் நடத்தி, அதில் கைப்பொருள்களையெல்லாம் இழந்தபின் வெறுங்கையோடு மனைவியிடம் திரும்பப் பயப்படுகிருர். அதனல் முன்கூட்டிச் சென்று அவளைச் சமாதானப்படுத்துவதற்காக மின்சாரத் தந்தியைத் தூது விடுகிருர். அப்போது, தந்தியைப் பார்த்து அவர் கூறும் புகழுரை பின்வருமாறு:

"வந்துசமபா ஷித்தென்றும்
வாழ்வோங்கும் மின்சாரத்
தந்தியெனும் நாமம்
தரித்தோனே!–விந்தையெலாம்
பெற்றஅம ரிக்காவில்
பென்லேப்ரீஸ் மார்ஸ்எனும்பேர்
உற்ற கலாநிபுணன்
உத்தியால்–நற்றவத்தால்
ஆயிரத்தெண் ணூற்றுமுப்பத்
தைந்தாம்இங் க்லீஷ் ஆண்டில்
சேய்எனவந் துற்பவித்த
செல்வனே!–ஏயுமெட்டுத்
திக்கில்நிகழ் செய்தி
தெரிந்(து)அவா வர்க்குரைக்கும்
தக்கதபா லுக்குத்
தமயனே!–பக்குவமாய்
ஆர்ந்தவர்கள் தம்காதில்
அந்தரங்க மாய்ப்பேசச்
சார்ந்தடெலி போனுக்குத்
தந்தையே!–கூர்ந்தன்பின்
எய்திய மாந்தர்க்(கு)
இனிதாய்ச் செவிவாய்க்குச்
செய்திஅமு தூட்டும்
திருத்தாயே!–ஐயமின்றிப்
போகவர யார்க்கும்உயர்
புட்பகம்போல் மேவும்கால்
வேகப் புகைரதத்து
மித்திரனே!–ஓகை
நிலமிசையோர் நெஞ்சில்
நினைத்த துரைக்கும்
டெலிகிராம் என்னும்
சீராளா!

(பென்லே ப்ரீஸ் மார்ஸ்–**Finlay Breis Mors**: இவர் தந்தியைக் கண்டு பிடித்தவர். புட்பகம்-புஷ்பகவிமானம்; கால்வேக-வாயு வேக; புகைரதம்–ரயில் வண்டி; ஓகை–மகிழ்ச்சி)

தந்தியை இவ்வாறு புகழ்ந்தபின் அது சிவன், திருமால், பிரமன், முருகன், சூரியன், சந்திரன், அனுமான் ஆகியவர்களுக்குச் சமானமாக இருக்கிறது என்றும் போற்றுகிருர். மேலும் ரயில்வே இலாகா, பாராளுமன்றம், ஆஸ்பத்திரிகள், நீதிஸ்தலங்கள் முதலியவற்றில் கொலு வீற்றிருக்கும் தந்தியினுல் தான் விக்டோரியா மகாராணியின் செங்கோல் வளர்கிறது என்றும், வர்த்தகர்கள் செல்வத்தை விருத்தி செய்கிருர்கள் என்றும், வர்த்தமானப் பத்திரிகைகள் நடந்து வருகின்றன என்றும் காங்கேயன் கூறுகிருர்.

இப்படியெல்லாம் வேண்டிய மட்டும் அவர் தந்தியைப் புகழ்ந்தபின், தம் வரலாற்றையும் அதனிடம் எடுத்துரைத்தார்.

**காங்கேயன் திருப்போரூரில் பிராமண குலத்தில் பிறந்தவர். சதா**

னந்த ஐயர் என்பவரிடம் கல்வி கற்றுப் பெரும் புலவரானவர். அவர் அவதானமும் செய்யத் தொடங்கவே அவரை எல்லோரும் அவதானி என்றும் சோடசவதானி என்றும் அழைத்தார்கள். அவருடைய புகழ் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டிருந்தது. அந்தச் சமயத்தில், சென்னைக்குச் சென்று, அங்குள்ள தமிழ்ப்புலவர்களைக் கண்டு உரையாட வேண்டுமென்று அவருக்கு விருப்பம் ஏற்படவே, ஒரு நல்ல நாள் பார்த்து, ஆடையாபரண அலங்காரங்களோடும், குடையோடும், பிரம்போடும், கையில் பொன்முடிப்போடும் புறப்பட்டுச் சென்னைக்கு வந்து சேர்ந்தார். ஓர் இருக்கையையும் தேடி அமர்த்திக் கொண்டார். பிறகு வித்வான்களின் சபைக்குச் சென்று தமது தமிழ்ப் புலமையைக் காட்டினர். எல்லோரும் மெச்சி அவருக்குப் பரிசுகள் வழங்கினர்கள். சிவராமையர் என்பவரின் தலைப் புதல்வியை அவருக்கு மணம் முடித்தும் வைத்தார்கள். அவதானியாகிய காங்கேயன் தம் மனைவியோடு ஆனந்தமாகக் காலங்கழித்துக் கொண்டிருக்கும்போது, ஒரு நாள் நண்பன் ஒருவனை அழைத்துக் கொண்டு, 'பீப்பில்ஸ் பார்க்கு'க்குப் போனர். அந்தப் பார்க்கில் உலாவி வந்தால் தடியூன்றி நடக்கும் கிழவர்களும்கூட, தண்டாயுதத்தை எடுத்து விடக் கூடிய அளவுக்குப் புது வலிமையைப் பெற்று விடுவார்களாம்!

தண்டெடுக்கும் மூப்பினர்க்கும்
  தண்டெடுக்கும் தன்மைதரும்
பண்டெடுக்கும் பீப்பில்ஸ்
  பார்க் என்னும்—விண்தவழும்
சிங்காரத் தோட்டத்துள்
  சென்று டவுனலின்
மங்கா விசித்ரம்
  மனதின் உவந்து....

மிருகக்காட்சிசாலையையும் போய்ப் பார்த்தார், அவதானி. அங்கே,

உள்ளபல மிருகத்
  தோடுபல பட்சிகளும்
தள்ளரிய நீரில் வாழ்
  சாதிகளும்—மெள்ள
நகர்வனவும் ஆகியஎங்
  நாட்டினும் வாழ்சீவ
வகைகளையும் கண்ட
  மகிழ்வால்—நகமுகமும்
ஓடி நீ ரோடைதனில்
  ஓடம் விடுத்துவிளை
யாடித் திரும்பி
  அதிசயித்து—நாடியே
மாலைப் பொழுதில்
  வருவார் மனம்களிக்கச்
சோலை நடுவில்
  சொகுசார்ந்த—வேலைசேர்
பாண்டுஸ்டாண் டுக்குள்
  பயிலும்சங் கீதம்அதை
வேண்டுமட்டும் கேட்டு
  விருப்பமாய்—மீண்டுமிக

❋

படித்ததைப் படியுங்கள் :

**'கல்கி'**

"....சிவகாமி, இந்தச் சாம்ராஜ்யத்தைப் பெரும் விபத்திலிருந்து காப்பாற்றும் சக்தி இப்போது உன் கையில் இருக்கிறது. என்னுடைய அருமை மகனை நீ விடுதலை செய்வதாக எழுதவேண்டும். உன்னை மறந்துவிடும்படி மாமல்லனுக்கு ஓலை எழுதித் தர வேண்டும்!"

"....பிரபு! இந்த ஏழைப் பெண்ணை ஏன் இப்படிச் சோதனை செய்கிறீர்கள்? மாமல்லரையாவது நான் விடுதலைசெய்வதாவது? என்னை மறக்கும்படி அவருக்கு நான் எப்படி எழுதுவேன்? நான் சம்மதித்தாலும் இந்தக் கை சம்மதிக்காதே, சுவாமி!"

—'சிவகாமியின் சபதம்'

❋

உல்லாசத் தோடும்
  ஒயிலாய் உலாவி வந்து
சல்லாபம் செய்வார்கள்
  தாம் இருக்கப்—புல்ஆர்ந்த
வட்டரவுண் டைச்சுற்றி
  வைத்தநாற் காலிகளின்
திட்டமும் மற் றும்சேர்
  சிறப்பும்கண்டு,

கூட வந்த சிநேகிதிகளை அவதானி அனுப்பிவிட்டு, தாம் மட்டும் வீட்டுக்குப் போகாமல், சிந்தாதிரிப்பேட்டை

யில் உள்ள நெடு வழியாக நடந்து சென்றார். அப்போது ஒரு வீட்டில் சங்கீத ஒலி கேட்கவே உள்ளே போனார். அங்கே நாடகம் கற்பிக்கப்பட்டு வந்ததைப் பார்த்தார். நாடகம் முழுவதையும் பார்த்த பிறகு, அதில் உள்ள குற்றங் குறைகளைச் சுட்டிக் காட்டி நாடக இலக்கணத்தையும் எடுத்துச் சொன்னார். அவர்கள் அவருடைய மகிமையை பெருமளவு

இப்போது மின்னாளைக் கைப்பிடித்து....

பாராட்டியதோடு, அவரையே அந்த நாடகக் குழுவிற்கு ஆசிரியராக இருக்கும்படியும் கேட்டுக் கொண்டார்கள். அவதானியும் இசைந்தார். அன்று முதல் அவர்களுக்குப் பாத்திரங்களுக்கு ஏற்ற படிவம், சாரீர நேர்த்தி, பாவ வித நேர்மை, ராக தாளங்கள் முதலியவற்றைக் கற்பித்தார். பாகவதம், கந்த புராணம், ராமாயணம் முதலிய நூல்களின் சரிதங்களை நாடகங்களாக இயற்றிக் கொடுத்துப் பயிற்சி யளித்தார். நாடகக் குழுவில் ஒரு நடி (நாட்டியப் பெண்) இருந்தால் அற்புதமாக இருக்கும் என்று அவருக்குத் தோன்றியது. அதனால் கெட்டிக்காரியான ஒரு நடியைத் தேடி யலைந்தார். திருவாரூர் தாசியான மோகனாள் என்பவளுக்கு அழகான மகள் ஒருத்தி இருக்கும் விவரம் தெரிய வந்தது. மோகனாள் இந்த அவதானியின் தாய் மாமனுக்கு ஆசை நாயகியாகவும் இருந்தவள். அவருடைய புதல்வி என்று சொல்ல வேண்டிய அந்த இளம் பெண் பரத நாட்டிய இலக்கணத்தில் கூறப்பட்டிருப்பது போன்ற உடல் அமைப்பும் இனிய குரலும் நிகரற்ற அழகும் உடையவளாக இருப்பதைக் கண்டு, அவளுடைய தாயை அணுகி "உன் மகளை நாடகத்திற்கு எப்போது அனுப்ப மனம்?" என்று கேட்டார். அவள்,

"உனக்கில்லாச் சொந்தம் மற்று
இன்னொருவர்க் குண்டோ?
எனக்கேட்க வேண்டுமோ?
எல்லா—மனக்களிப்பும்
உன்னாலே யாங்கள்பெற
உள்ளத்தில் எண்ணியுளோம்;
என்னால் தடையில்லை;
இப்பொழுதே—மின்னாளைக்
கைப்பிடித்துன் வித்தையெலாம்
கற்பிப்பாய்........"

என்று சொல்லவே, அவதானி புதையல் எடுத்தவர் போல் பெரு மகிழ்ச்சி கொண்டார். அவளுக்கு முறைப்படி பரத நாட்டியம் கற்பித்தார். எத்தனையோ ராகங்களையும் அவற்றைப் பாடும் முறைகளையும், தாள வகைகளையும் சொல்லிக் கொடுத்து நாடக சரித்திரங்களையும் போதித்தார். பின்பு, அவளுடைய நடனத்தையும், நாடகத்தையும் அரங்கேற்றுவதற்காக திரை, உடை நகை, காட்சிப் பொருள் போன்றவற்றைத் தயாரிப்பதற்காகக் கணக்கு வழக்கில்லாமல் பணத்தைச் செலவு செய்தார். ரொக்கம் கரைந்த பிறகு கடனும் வாங்கினார். கடைசியில் டவுன் ஹாலில் நாடக அரங்கேற்றம் என்று நோட்டீஸ்கள் அச்சடித்து வினியோகித்தார்.

அகங்கேற்ற நாளன்று அவதானி அந்த நாட்டியப் பெண்ணை பிரமாத

'இல்லையென்றால், கைநீட்டுவோம்!'

மாக அலங்கரித்தார். நல்ல நடனங்கள் கல்லாதவர்களை 'கல் கல்' (கற்றுக் கொள், கற்றுக் கொள்) என்று சொல்லுவது போன்ற பொற் சதங்கைகளை அவளது காலில் கட்டுவித்தார்.

நல்லநடம் கல்லாரை
நட்பொடு 'கல், கல்' எனல்போல்
கல் கல் எனும் பொற்கெச்சை
கட்டுவித்தே,

அவதானி சூத்ரதாரனாக முதலில் வந்து சபை முன் தோன்றி வணக்கம் செய்த பின், முத்தமிழின் பெருமையையும், நாடகத்தின் பயனையும் கதையையும் எல்லோரும் பிரமிக்கும் வண்ணம் எடுத்துரைத்தார். அப்புறம் இடியோடு மின்னல் எழுந்தது போல், வெடியோடு மத்தாப்பின் ஒளி வீச்சில், முந்தானையைக் கையில் பற்றிக் கொண்டு ஒரு மயிலைப் போல் மேடைக்கு நடந்து வந்தாள் நாட்டியப் பெண். வந்து, சபை வணக்கம் செய்தாள்; அவதானியை காலில் விழுந்து கும்பிட்டாள். அவளுக்கு மாலை சூட்டி வாழ்த்தினார் அவதானி. வாத்தியக்காரர்கள் பலவகை வாத்தியங்களை மீட்ட, அவள் கல்யாணி, மோகனம், பைரவி, தோடி முதலான ராகங்களைப் பாடி வரும் போது, அவதானி அவளிடத்தில் தம் உள்ளத்தைப் பறி கொடுத்து, அப்படியே மோகக் கடலுக்குள் ஆழ்ந்து விட்டார்.

மோகனம் செய்யவல்ல
மோகினியாள் இன்பரச
மோகனரா கம்பாட
மோகமுற்றேன்....
கோடிகொடுத் தாலும்
குவலயத்தில் பாடரிதாம்
தோடிரா கம்பாடச்
சொக்கினேன்....

பிறகு அந்தப் பெண் அபிநயம் பிடித்து நடனமாடி அனைவரையும் மகிழ்வித்தாள். சபையோர் அவளுடைய ஆட்டத்தைக் கண்டு வியந்து பரிசளித்ததோடு, அவளுக்கு 'அரங்க நாயகி' என்ற சிறப்புப் பெயரையும் கொடுத்தார்கள். நாடகம் இனிதே நடந்து முடிந்தது. அவதானி வீட்டுக்கு வந்தார். இரவெல்லாம் அவருக்கு அரங்க நாயகியைப் பற்றிய நினைப்புத்தான். விரக நோயைப் பொறுக்க முடியவில்லை. தூக்கமே இல்லாமல் இரவைக் கழித்தார். மறுநாள் அவர் ஏக்கத்துடன் இருந்ததைப் பார்த்தான் விதூஷகன். (இவன் நாடகத்தில் வரும் கோமாளி. இவனை ஆசியன்–ஹாஸ்யன் என்றும், விகடன் என்றும் மாடவியன் என்றும் இந்நூலாசிரியர் குறிப்பிடுகிறார்.) அவதானியின் அந்தரங்கத்தை முகக் குறிப்பால் அறிந்து கொண்ட விதூஷகன், "பெண்ணாசையை முனிவர்கள் கூட விட்டதில்லையே? இந்தக் கலி காலத்தில் கிழவர்களே அதற்கு அடிமையாகும் போது, வாலிபர்கள்



மனைவியைத் தாங்கி....

எம்மாத்திரம்? அரங்க நாயகியை நீர் அடையாமல் இருப்பது ஏன்? சொல்லப் போனால், அவள் உம்முடைய மாமன்மகள் தானே....? நான் போய் அவளை அழைத்துக் கொண்டு வருகிறேன்,'' என்று சொல்லி, டிக்கெட் விற்ற பணத்தை யெல்லாம் அவதானியிடமிருந்து வாங்கிக் கொண்டு நேரே அரங்க நாயகியின் இருப்பிடத்திற்குச் சென்றான். அவளைப் பற்பல விதங்களில் முகஸ்துதி செய்து, அவதானியிடம் அழைத்துக் கொண்டு வந்து சேர்ந்தான். அவரும் அவளும் ஒன்றாக இருந்து உல்லாசமாக காலம் கழித்தார்கள். அவதானி நாடக வருமானத்தை யெல்லாம் அவளுக்குக் கொடுப்பதும், நாடகச் செலவுக்கு மனைவியின் நகைகளை விற்பதும் கடன் வாங்குவதுமாக இருந்தார்.

விதூஷகன் ஒருநாள் அவதானியின் மனைவியிடம் சென்று, ஒன்றும் தெரியாதவன் போல், "அவதானி ஐயர் எங்கே?'' என்று கேட்டான். அவள், "அவர் இன்னும் வரக் காணேம். நாடகத்தில் சேர்ந்ததில் இருந்து அவர் இப்படித்தான் வீட்டை எட்டிப் பார்க்காமல் அலைகிறார். வேளா வேளைக்குச் சாப்பாடுவது கூட இல்லை. தூண் போல் இருந்த ஐயர் துரும்பு போல் இளைத்து விட்டார்,'' என்று துயரத்தோடு சொல்லவே, விதூஷகன், "அம்மா, உன்னைப் போல் ஏமாந்த பேர்வழிகள் இந்த உலகத்தில் கிடையாது. நீ கள்ளங் கபடம் அறியாதவள். ஐயரின் வெளி வேஷத்தை மெய்யென்று நம்பி விட்டாய். அவர், அந்த நாட்டியக்காரியே தஞ்சமென்று கிடக்கிறார். அவருக்கு நீ பண்ணி வைக்கும் பலகாரங்கள் எங்கே ருசிக்க போகிறது? பாவம், நீ பெண்ணாகப் பிறந்து பெற்ற பாக்கியம் இதுதானா? உன்னைக் கிளி போல் வளர்த்து இந்தப் பூனைக்கு இரையாகக் கொடுத்து விட்டார்களே! நன்றாக உண்டு உடுத்திக் கணவனோடு உல்லாசமாய் இருக்க வேண்டிய வயதில், வண்டும் எறும்பும் மொய்க்கும் மூலையில்மொட்டைத் தலை விதவைகளோடு பேசிக்கொண்டு படுத்திருப்பதற்கா நீ பெண்ணாகப் பிறந்தாய்? பாவம், உன் நகைகளையெல்லாம் அவள் போட்டுக் குலுக்குகிறாள். நீ பட்டமரம் போல் மூளியாய் நிற்கிறாய்....? நீ எனக்குத் தங்கை முறையாக இருக்கிறாயே என்பதனால் இவ்வளவும் சொன்னேன். ஐயர் வரும் போது உன் கோபப் படபடப்பில் என் பெயரைச் சொல்லி விடாதே!'' என்று தூபம் போட்டு விட்டுப் போய் விட்டான்.

அவதானிக்கு இந்தச் செய்தியெல்லாம் தெரியாது. வழக்கம் போல் வீட்டுக்கு வந்து மனைவியைச் சாதம் படைக்கச் சொல்லவே, அவள் ஒரே ஆவேசத்துடன் சீறி எழுந்து, "இங்கே எதற்காக வந்தீர்? என் நகைகளை எல்லாம் இழந்ததைத் தவிர உம்மால் நான் அடைந்த லாபம் என்ன? புத்தி கெட்டுப் போனவருக்குப் பெண்டாட்டி ஒரு கேடா? அவளிடமே போம்!'' என்று கூச்சல் போடவே, 'சட்டி சுட்டது, கை விட்டது' என்று அவதானி மூச்சுக் காட்டாமல் வெளியே வந்து விட்டார்.

மனைவியிடம் போய்க் கலகம் மூட்டிய விதூஷகன் இந்தச் சமயத்தில் அவதானியிடமும் வந்தான். அவன் 'கலகத்துக்கு நாற்றங்கால்' என்பதை அறியாத அவதானி, நடந்த செய்தியனைத்தையும் அழாத குறையாக அவனிடம் சொன்னார். அதைக் கேட்ட விதூஷகன் அவருக்குப் புத்தி மதி சொல்லத் தொடங்கி விட்டான்:

"புண்ணியரே! ஏன் இப்படி ஓலமிடுகிறீர்? உமக்குக் கோபம் வந்தாலும் வரட்டும், நான் உண்மையைச் சொல்லத் தான் போகிறேன். உலகத்தில் மெத்தப் படித்தவர்கள் தான் பெண்டாட்டிமாரை வைத்து நிர்வாவாகம் பண்ணத் தெரியாமல், அவர்களுடைய கால்மாட்டில் கை கட்டி வாய் புதைத்துக் கொண்டு, குருவுக்கு முன்னால் சீடர்கள் இருப்பதைப் போல் உட்கார்ந்திருக்கிறார்கள். அது மட்டுமா? சம்பாதித்த பொருளையெல்லாம் பெண்டாட்டிமாரிடம் கொடுத்து விட்டு, அவர்கள் போட்டதைத் தின்று கொண்டு தவிக்கிறார்கள். நீரும் எதற்காக அந்த மாதிரி மனைவியைத் தாங்கித் தவிக்கிறீர்? பேய்க்கு இடம் கொடுத்தாலும் பெண்

னுக்கு இடம் கொடுக்கலாமா? உச்சியில் ஏறிக் கொண்ட பேய் அப்புறம் கீழே இறங்குமா? நாலு திசைகளிலும் சுற்றி யலைந்து இலை பறித்துத் தைத்தோ, காட்டுக்குப் போய் விறகு ஒடித்துக் கொண்டு வந்தோ, சாணம் பொறுக்கி எருத் தட்டியோ பிழைக்காமல், சவடால் அடித்துக் கொண்டு நெய்யும் பருப்புமாகத் தின்று வலு வேறிய வாய் சும்மா இருக்குமா? அவள் உம்மைக் கன்னத்தில் எட்டி அறையாமல் விட்டதே உமது புண்ணியந்தான். மனைவிமாருக்கு மாதம் ஒரு பூசை கொடுக்க வேண்டும். (அடிக்க வேண்டும்) என்ற வழக்கம் உலகமெல்லாம் இருக்க, உம் வீட்டில் மட்டும் இல்லாமல் போய் விட்டதே? உம்முடைய பிழைப்பு வெளியில் தெரிந்தால், அப்புறம் உம்மை யார் மதிப்பார்கள்? பர்த்தாவுக்கேற்ற பதிவிரதையாக இல்லாவிட்டால், கூறுமல் சந்நியாசம் கொள் என்று முன்னேர் சொன்ன படி, நீர் இப்பொழுதே ஊரை விட்டுப் போனல் தான் அவளுடைய கொட்டம் அடங்கும்.''

விதூஷகன் இவ்வாறு செய்த போதனையைக் கேட்ட அவதானி, அதன்படியே நடக்கத் தலைப்பட்டு, தம் நாடகக்குழுவுடன் சென்னை நகரினின்றும் கிளம்பிப் போய் தேசமெல்லாம் சுற்றினர். நாளுக்கு நாள் நாடகத்தில் வருமானம் குறைந்து கொண்டு வரவே, அவதானி சோற்றுக்கே திண்டாடினர். இந்த அழகில் நாடகக் குழுவினருக்குச் சம்பளம் கொடுப்பது எங்கே? ஐந்து மாதச் சம்பளம் வாங்காத குழுவினர், ஒரு நாள் அவதானியைச் சுற்றி வளைத்துக் கொண்டு, ''சம்பளத்தைக் கீழே வையும். இல்லையென்றல் கை நீட்டி விடுவோம்,'' என்று சொல்லி, வளர்த்த கடா மார்பில் பாய்ந்தது போல், குடிவெறியோடு அவர் மீது பாய்ந்தார்கள். மத்தளக்காரன், தையற்காரன், சுதி போடுகிறவன், பிடில்காரன், பெண் வேஷக்காரன், ராஜா வேஷக்காரன், சில்லறை வேஷக்காரன், சமையற்காரன், துணி வெளுத்துக் கொடுத்தவள், கடனுக்குப் பலகாரங்கள் விற்ற குப்பிப் பாட்டி ஆகியவர்களெல்லாம் ஒன்று சேர்ந்து கொண்டு, அவதானியை ஆளுக்கு ஒரு பக்கமாக இழுத்தார்கள். இதைப் பார்த்த விதூஷகன் கெக்கலி கொட்டிச் சிரித்துச் சண்டையை விலக்கினன். சுற்றி நின்றவர்களோ, '' நாங்கள் எத்தனையோ

## எங்கெங்கும் பொங்கல்!

### இளம்பாரதி

பொங்கலடி பொங்கல்; பொழுது
விடிந்ததனல்
எங்கும் கதிரொளி பாய்ந்ததனல்
பொங்கல்!
கழனிக் கதிர்கள் நிறைவாகி வீட்டில்
அழகைத் தெளித்துநல் ஆர்வம்
பெருக்குவதால்
பொங்கலடி பொங்கல்; புதுமைக்குப்
பூவேற்றி
மங்கலப்பண் பாடிடுவார் மங்கையரின்
சிந்தைவழி
எங்கெங்கும் பொங்கல்; எழுச்சியுறும்
பொங்கல்!
செங்கரும்பின் பக்கத்தே சேரும்
புதுப்பானை
பாடுமொலி புதுக்கவிதை;
பால்பொங்கும் பாட்டொலியில்
நாடெல்லாம் இன்ப நடனமிடும்;
பானையிலே
சேர்ந்த அரிசியைப்போல் சிந்தை
அனுபவத்தால்
சீர்மை பெருகிச் செழித்திடுவோம் நாம்!

"அவளிடம் போம்!"

நாடகங்களைப் பார்த்திருக்கிறோம். ஆனால், இந்தப் பகல் நாடகத்தைப் போல் எங்குமே பார்த்ததில்லை!'' என்று சொல்லிச் சிரித்தார்கள். அவதானிக்குக் கோபமும் ஆத்திரமும் பொங்க, "பாவிகளே! அதிகப் பற்றாக என்னிடம் பணம் வாங்கிக் கொண்ட நீங்கள் பழைய நிலையை மறந்து இப்படி என்னைத் துன்பப்

பழனியாண்டவரிடம் போய்....

படுத்துகிறீர்கள். அதற்கென்றும் இதற்கென்றும் நீங்கள் கேட்டபோதெல்லாம் நான் கொடுத்துத் தொலைத்தது கொஞ்சமா? ஏன் இப்படிப்பேசுகிறீர்கள்?'' என்றெல்லாம் இரைந்து தம் ஆத்திரத்தை தீர்த்துக் கொண்டார். பிறகு, நாடகச்சாமான்களையெல்லாம் குறைந்த விலைக்கு விற்று விட்டுச் சென்னைக்குத் திரும்பினார். உடனே அரங்கநாயகியையும் போய்ப் பார்த்தார். இவரிடத்தில் உண்மையாகவே அன்பு கொண்டிருந்த அவள், "எல்லாம் விதியின் செயல். உம்முடைய மனைவியின் வயிற்றெரிச்சல் தான் நம்மைக் கூடி வாழ விடாமல் செய்து விட்டது. பேசாமல் வீட்டுக்குப் போய், மனைவியுடன் வாழ்க்கை நடத்துங்கள்,'' என்று சொல்லி அவரை அனுப்பினாள். ஆனால், அவதானி வெறுங் கையோடு எப்படி வீடு திரும்புவார்? ரசவாதம் செய்யலாமா? புதையல் எடுக்கலாமா? இப்படியெல்லாம் யோசித்து, அவை நடவாத காரியங்கள் என்று கைவிட்டு, நாடகங்களுக்குக் கூலிக்குப் பாட்டெழுதிக் கொடுத்து வந்தார். என்ன செய்தும், வருமானத்துக்கு வழி இல்லாமல் போய் விட்டது.

பஞ்சத்தில் பிள்ளை விற்கும்
பாவிகள் போல் பாட்டுவிற்றும்
கிஞ்சிற்றும் பொன்கையில்
கிட்டலையே!

அப்புறம் என்ன செய்வது? கடவுளின் உதவியை நாடி, திருவொற்றியூர், திருக்கழுக்குன்றம், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, சிதம்பரம் மதுரை முதலிய ஸ்தலங்களுக்கெல்லாம் சென்று அங்கங்கே கோயில் கொண்டுள்ள மூர்த்திகளிடம் முறையிட்டார். அத்தனை சாமிகளும், "எங்களால் என்ன செய்ய முடியும்? எங்கள் பாடே பெரும் பாடாக இருக்கிறது,'' என்று சொல்லி கை விரித்து விட்டார்கள். கடைசியில், அவதானி பழனிக்குப் போய்ச் சேர்ந்தார். அங்கே உள்ள தண்டபாணிக் கடவுள் தாம் உதவி செய்யாவிட்டாலும், உதவி செய்ய கூடியவர்களான நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் இருக்கும் இடத்தையாவது சொல்லி உதவினார். அதற்குமேல், அங்கே

நிற்பானேன்? அவதானி உடனே செட்டிமார் நாட்டை நோக்கிச் சென்ருர். நகரத்தார்களிடம் தம் கதையைச் சொன்ருர். அவர்கள், "புலவரே, பயப்பட வேண்டாம்," என்று அபயம் கொடுதார்கள். அவதானியின் கடனுக்கு ஆருயிரமும், கைவிட்டுப் போன உடைமைக்கு எண்ணுயிரமும், வீடு கட்ட ஏழாயிரமும், பால் மாடுகள் வாங்க இரண்டாயிரமும், பட்டு தினுசுகள் வாங்க ஆயிரமும், வாகனங்களுக்கு இரண்டாயிரமும், வழிச் செலவுக்கு ஆயிரமும் கையேடு வாசிக்கும் தம்பிரானுக்கு ஐயாயிரமும், பழனி முருகனுக்குக் காவடி எடுக்கப் பத்தாயிரமும், மனைவியோடு யாத்திரை போய் வர ஐம்பது ஆயிரமுமாகப் பொன் கொடுத்து, மதிப்பு வாய்ந்த பரிசுகளும் வழங்கி, அவரை வழி அனுப்பினுர்கள்.

மேற்கண்ட வரலாறு முழுவதையும் அவதானி மின்சாரத் தந்தியிடம் சொன்ருர். "நீ என் மனைவியிடம் தூது சென்று, என் கதையைக் கூறி, அவளுடைய கோபத்தை மாற்றி, நான் வருகிறேன் என்பதையும் தெரிவிப்பாயாக....!" என்று கூறிதந்தியை அனுப்பி வைத்தார்

இன்றுமுதல் தோழனே!
எம்மான் கருணையினுல்
நன்றுற்றேன்; சென்னை
நகரதனில்—நின்ற
மனையாளைக் கண்டென்
வரலாறனைத்தும்
நினைவாய் உரைத்(து)அவள்தன்
நெஞ்சில்—சினம்ஆற்றி
என்வருகை கூறின், நினை
யான்மறவேன். ஆதலால்,
மன்னவனே! தூது போய்
வா....!"

சொல் நயமும், நகைச்சுவையும் மிகுந்த சுவாரஸ்யமான நூலாகிய "மின்சாரத் தந்தி விடு தூது" இங்கே முற்றுப் பெறுகிறது.

# நிகரற்ற பாரதி

**பரலி சு. நெல்லையப்பர்**

பாட்டினுல் உலகத்தை வாழ வைத்தாய்
பாரதியே நின்பேரை மறவோம் என்றும்;
நாட்டிலே கல்விமுதற் கலைகளெல்லாம்
நாள்தோறும் ஓங்கியே வளரச் செய்வோம்;
ஓட்டியே வறுமைமுதல் தீமையெல்லாம்
உலகத்தில் புதுவாழ்வு நிலவச் செய்வோம்;
காட்டியநின் வழியில் சென்று நாங்கள்
காசினியில் கலிஒழித்து வாழ்வோம் நன்றே!

கொலைகளவு புலைகளெல்லாம் ஒழியச் செய்வோம்;
குவலயத்தில் புதியயுகம் நிலவச் செய்வோம்;
தலையான தமிழ்மொழியை ஓங்கச் செய்வோம்;
தரணியிலே தருமமெலாம் தழைக்கச் செய்வோம்;
பலஜாதி வகுப்புநிறப் போர் ஒழிப்போம்;
பாரெலாம் ஒன்ருக வாழச் செய்வோம்;
நிலவியசீர்க் கவியரசே, நின்பேரோ ங்கி
நிகரற்ற பாரதியே, வாழி வாழி!

# நவீன பொங்கல்

சூரிய அடுப்பில் பொங்கல் சமைத்து ....
பறக்கும் தட்டில் பொங்கல் வைத்து பூஜை செய்து ...
ஜெய்பு
ராக்கெட்டில் ஏறி சூரியனுக்கு நேரடியாகவே பொங்கல்
கொடுத்துவிட்டு நேரடியாகவே, சென்றுவரலாம்!

# கரும்பு வில்லெடுத்த காளை...!



# தமிழர் வீரம்

டாக்டர். மா. இராசமாணிக்கனார்

### வீரம்

ஒரு நாடு உரிமைபெற்ற நாடாக இருந்தாற்றான், அந்நாட்டு மக்களது வாழ்க்கை இன்ப வாழ்க்கையாக விளங்க முடியும். அந்நாடு உரிமை பெற்றதாக இருக்க வேண்டுமாயின், அந்நாட்டு ஆடவருள் பலர் போரில் வல்லவராக இருத்தல் வேண்டும். தேவை ஏற்பட்டால், வீட்டிற்கு ஒரு வீரனை போருக்கு அனுப்பும் நாடாக அது இருத்தல் வேண்டும். இவ்வுண்மையைப் பழந்தமிழர் நன்கு அறிந்திருந்தனர்; அதன் பயனைப் போரை ஒரு கலையாகப் போற்றி வளர்த்தனர்; ஒவ்வொரு முறைப் போருக்கும் ஒரு பெயரிட்டனர். அப்பெயர் ஒரு பூவின் பெயராகும்; அப்பூவை அணிந்து கொண்டு அப்போர் புரிந்தனர்; ஒவ்வொரு போரிலும் பல படிகளை வகுத்தனர். ஒவ்வொரு படியும் ஒரு துறை எனப்பட்டது. ஒவ்வொரு வகைப் போரும் ஒரு திணை எனப் பெயர் பெற்றது.

### போரிலும் அறநெறி

ஒரு நாட்டின் மீது படையெடுக்க விரும்பும் அரசன் பகைவர் நாட்டார் கேட்கும்படி, "உங்கள் நாட்டின் மீது படையெடுக்கப் போகின்றோம். ஆதலால் உங்கள் கால் நடைகளையும் குற்றமற்ற பெரியோரையும், மாதரையும், நோயாளிகளையும், பிள்ளை பெறாதோரையும் அப்புறப் படுத்துங்கள்," என்ற அறிவிப்பைக் கேட்கும்படி செய்தவர், பின்பு அந் நாட்டின் கால் நடைகளைக் கைப்பற்றச் செய்வர். இது 'மாடுபிடிச் சண்டை' எனப்படும். இது இலக்கணத்தில் **வெட்சித்திணை** எனப் பெறும். இப்போரில் ஈடுபடுபவர் வெட்சிப் பூவைச் சூடுதல் மரபு. இவர்களை எதிர்த்துப் போரிடுதல் **கரந்தைத் திணை** எனப்படும். அவர்கள் கரந்தைப் பூவைச் சூடுவர்.

ஒருநாட்டின்மேல் படையெடுத்துப் போர் புரிதல் **வஞ்சித் திணை** எனப்படும். இம் முயற்சியில் ஈடுபடுபவர் வஞ்சிப் பூவைச் சூடுவர். இவ்வாறு படையெடுப்போரை எதிர்த்துப் போரிடுதல் **காஞ்சித் திணை** எனப்படும். இப்போர் புரிபவர் காஞ்சிப் பூவைச் சூடுவர். ஒரு கோட்டையை முற்றுகையிடுதல் **உழிஞைத் திணை** எனப்படும். அவர்கள் உழிஞைப் பூவைச் சூடுவர். கோட்டையுள் இருந்து பகைவரைத் தாக்குதல் **நொச்சித் திணை** எனப்படும். இப்போர் புரிபவர் நொச்சிப் பூவைச் சூடுவர். வெட்ட வெளியில் கடும் போர் புரிதல் **தும்பைத் திணை** எனப்

என்னென்று பாராட்டுவது !

### வீரப் பெண்மணிகள்

மறம்–வீரம் ; மறவர்–வீரர் ; தமிழ் நாட்டு வீரர் **மறவர்** எனப்பட்டனர். மறவரே போர்க் கலையில் வல்லுநர். மறவர் குடிப் பெண்கள் ஆடவரைப் போலவே வீரத்தில்சிறந்தவர் ; தம் ஆடவரை போருக்கு அனுப்பி வீர முழக்கம் செய்பவர்.

வயது முதிர்ந்த தாய் ஒருத்தி தனக்குப் பாதுகாவலாக இருந்த தன் ஒரே மகனைப் போருக்கு அனுப்பினாள். அம் மகன் தன்னால் இயன்ற வரையில் போரிட்டு மார்பில் வேல்பாய்ந்து இறந்தான். தன் மகன் முதுகில்காயம்பட்டு இறந்தான் என்று கிழவி கேள்விப் பட்டாள் ; கடுங்கோபம் கொண்டாள் ; "என் மகன் முதுகில் காயம்பட்டு இறந்திருந்தால், அவனுக்குப் பாலூட்டிய மார்பகத்தை அறுப்பேன்,'' என்று சூள் உரைத்து வாள் ஏந்திப் போர்க்களம் சென்றாள். தன் மகன் மார்பில் காயம் பட்டு இறந்து கிடந்ததைக் கண்டாள். அவனைப்பெற்றபொழுது அடைந்த மகிழ்ச்சியைவிட அப்பொழுது மிக்க மகிழ்ச்சி அடைந்தாள்.

மற்றொரு தாயின் கணவன் முன்னம் நடந்த போரில் இறந்துவிட்டான். அடுத்து நடைபெற்ற போருக்குத் தன் ஒரே மகனை–வயதில் சிறிய மகனைச் சீவிசிங்காரித்துப்போருக்கு அனுப்பினாள். அவன் தெருவில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் ;

படும். இது இரு திறத்தார்க்கும் பொது. போரில் வெற்றி பெறுதல் **வாகைத் திணை** எனப்படும். வெற்றி பெற்றவர் வாகைப் பூவைச் சூடுவர்.

இவ்வாறு ஒவ்வொரு வகைப் போருக்கும் **பல துறைகளை** அமைத்து நம் முன்னோர் போர் முறைகளை நெறிப் படுத்தினர். இவை பற்றிய விவரங்களை 2300 ஆண்டுகட்கு முற்பட்ட **தொல்காப்பியத்தில்** காணலாம். பின் வந்த 'புறப் பொருள் வெண் பாமாலை' என்னும் நூலில் விரிவாகக் காணலாம். இங்ஙனம் போருக்கு இலக்கணம் வகுத்த அப் பெருமக்களின் நுண்ணறிவையும் போர்த்திறமையையும்

போர்ப் பயிற்சி இல்லாதவன். ஆயினும், அவன்தான் அந்த வீட்டுக்கு ஆண் பிள்ளை. ஆதலால் அக் குடும்பத்தின் சார்பில் அச்சிறுவன் போர்க்களம் சென்றான்; தன்னால் இயன்ற அளவு போர் செய்து மாண்டான். அவனது தாய் மகிழ்ச்சிக் கண்ணீர் பெருக்கினாள்.

ஒரு பெண்ணின் தந்தை ஒரு போரில் இறந்தான். அவனுக்காக **கல்** நடப்பட்டது. அடுத்த போரில் அவள் தமையன்மார் இறந்தனர்; அதற்கு அடுத்த போரில் அவளது ஆருயிர்க் கணவன் ஆவி துறந்தான். பிறகு நடைபெற்ற போரில் அவளது ஒப்பற்ற மகன் கலந்துகொண்டான். அவன் உடம்பு முழுமையும் பகைவர் எய்த அம்புகள் தைத்திருந்தன. அவனைக் கண்டு மகிழ்ச்சிக் கண்ணீர் விட்ட தாய்,

''கல் நின்றான் எந்தை; கணவன் களப் பட்டான்;
முன்னின்று மொய்யவிந்தார் என்னையர்;—பின்னின்று
கை போய்க் கணை உதைப்பக் காவலன் பின்னோடி
எய்போல் கிடந்தானென் ஏறு.''

என்று பாடினாள். இத்தகைய வீரப் பெண்மணிகள் அக்காலத்தில் மறக்குடி மகளிராக இருந்தனர்.

### வீர மன்னர்

தமிழரசர் தாங்கள் போருக்குப் புறப்படும் முன் சினந்து சூளுரைத்தல் மரபு. **பூதப் பாண்டியன்**, ''இந்நாட்டின் மீது படையெடுத்து வந்த பகைவரை நான் வெல்லேனாயின், என் மனைவியைப் பிரிந்தவனாகுக; தென்னாட்டைக் காக்கும் பாண்டியர் மரபிலிருந்து யான் மாறிப் பிறப்பேனாகுக,'' என்று சூளுரைத்தான்.

தலையாலங்கானத்து செருவென்ற பாண்டியன் **நெடுஞ்செழியன்**, ''என்மீது படையெடுத்து வந்துள்ள சேர சோழரையும் ஐம்பெரு வேளிரையும் யான் வெல்லேனாயின், என்னைக் கொடுங்கோலன் என்று என் குடிமக்கள் தூற்றுவாராக; மாங்குடி மருதன் போன்ற புலவர் பெருமக்கள் எனது நாட்டைப் பாடாது ஒழிவாராக,'' என்று சபதம் செய்தான்.

**சோழன் நலங்கிள்ளி**, ''யான் எனது பகைவரை வெல்லேனாயின், பொதுமகளிர் மார்பில் எனது மாலை துவள்வதாக!'' என்று சூள் உரைத்தான். இங்ஙனம் சூளுரைத்த மூவரும் அவரவர் செய்த போரில் பாராட்டத்தக்க முறையில் வெற்றி பெற்றனர். இத்தகைய வீர அரசரைப் பெற்ற போர்வீரர்களது வீரத்தைக் கேட்கவும் வேண்டுமோ?

போருக்குப் புறப்படுமுன் அரசன் தன் வீரர்களுக்குப் **பெருஞ்சோறு** வழங்குவான்; நல்ல நேரத்தில் குடையையும் வாளையும் தான் படையெடுத்துச் செல்லும் திசை நோக்கி அனுப்புவான்; பிறகு கடவுளை வணங்கித் தன் வீரருடன் போருக்குப் புறப்படுவான். குடிமக்கள் பாதையின் இரு மருங்கிலும் இருந்து அவனுக்கு வெற்றி உண்டாக வாழ்த்துவர். ஐம்பெருங் குழுவும் எண் பேராயமும் நகரத்து எல்லை வரையில் அரசனுடன் சென்று மீள்வர். இவை பற்றிய விவரங்களையெல்லாம் செங்குட்டுவனது வடநாட்டுச் செலவு பற்றிய செய்திகளிலிருந்து நன்கறியலாம்.

### முடிவுரை

மனிதன் வாழப் பிறந்தவன்; ஒருத்தியை மணந்து இல்வாழ்க்கை வாழக் கடமைப் பட்டவன். வாழ்வு இன்பமாக இருக்க வேண்டுமாயின், இல்வாழ்க்கை நல்வாழ்க்கையாக இலங்குதல் வேண்டும். கருத்து ஒருமித்த ஒருத்தியோடு வாழ்ந்தால்தான் இல்வாழ்க்கை சிறப்படையும். அச்சிறப்புக்குக் **காதல்** அடிப்படையாகும். எனவே, நம் முன்னோர் காதல் திருமணத்தையே விரும்பினர். காதல் வாழ்க்கை சிறக்க வேண்டுமாயின், நாடு தன் ஆட்சி பெற்றதாக இருத்தல் வேண்டும். அடிமைப்பட்ட நாட்டில் காதல் வாழ்க்கை முற்றிலும் சிறப்படையாது. எனவே, காதல் வாழ்க்கைக்கு நாட்டு உரிமை இன்றியமையாதது. இதனால்தான் பழந்தமிழர் **போரை ஒரு கலையாகவே** வளர்த்தனர்; அக் கலையில் சிறந்து விளங்கினர். போருக்கு இலக்கணம் செய்த பெருமை உலகத்தில் தமிழர்க்கே உரியதாகும். வையத்து வாழ்வாங்கு வாழ்ந்தவர் தமிழர். தமிழினம் வாழ்க!

கௌரி
சுருட்டுகள்
கௌரி ப்ராடக்ட்ஸ்
19, பிடாரியார் கோவில் சந்து
மதராஸ் - 1.


EPHOMAC
A DEPENDABLE ORAL ANTI-ASTHMATIC
FOR PROMPT RELIEF OF ASTHMA
(Bronchial & Cardiac)
TABLETS
Contains:- Ephedrine Hcl., Aminopylline, Caffeine Citras, Phenobarbitone, Sod. Arsenate, Belladonna & Calcium Gluconate
ELIXIR
Contains:- Ephedrine Hcl, Aminophylline, Sod. Iodide, Sod. Benzoas, Caffeine Citras, Sod. Arsenate, Belladonna, Lobelia, Adatoda, Glycyrrhiza, Senega, etc.
DATA TEMPORE
MPL
PROSUNT
MacMargarets Pharma - Lab.
40, SANTHOME HIGH ROAD, MADRAS-28.
Telegrams: MACMARS
Telephone: 71886.

# வாழ்வித்தாய் ஏர்வாழி!



பூஜை - என் - ஆராதனம் -

சூரியன்

உதயத்தின் பொற்சுடரே,
    உலகத்தின் உட்பொருளே,
இதயத்தின் தீப மதை
    இலங்கவைக்கும் நீவாழி!

பூமி

தான்நிறைந்து விளையவருள்
    தாயும்நீ; பொற்புநிறை
உன்சிறந்த உரத்தாலே
    உலகம்நிறை தேவியும்நீ!

ஏர்

பிடித்தகை துவளாமல்,
    பிழைத்தபயிர் வாடாமல்,
வடித்தநீர் வளம்காட்டி
    வாழ்வித்தாய் ஏர்வாழி!

உழவர்

உழைத்திட்டீர் நீங்கள்எலாம்;
    உண்ணக் கொடுத்திட்டீர்;
பிழைத்திட்ட எமதின்பம்
    பேசிடும்உம் கருணையினை!

தமிழ்ப்பொங்கல்

வாழ்த்துகிறோம் உன்கருணை,
    வளர்ந்துயரும் எம்வாழ்வு;
வாழ்த்திநீ எங்களையும்
    வாழியநீ பல்லூழி!

# வாழியநீ பல்லூழி...!

# "என் வாழ்வு உன் கையில்"

எஸ். லட்சுமி சுப்பிரமணியம்

புதிய
தொ
ட
ர்
மா
லை

அரும்பு—ஒன்று : "அத்தான் வரக் காணேனே...?"

இந்தப் புதுத் தொடரில் பங்கு கொள்ளும் ஆசிரியைகள் :

ஸி. ஆர். ராஜம்மா, ருக்மிணி பார்த்தசாரதி, எஸ். ரங்கநாயகி, கோமகள் ராஜலக்ஷ்மி ராமமூர்த்தி.

கீழ் வானம் வெளுத்தது. காலைப் பிறை, ஒளி இழந்து மங்கிற்று. பகலவனின் ஒளி வெள்ளம் படர்ந்து வரப் போவதன் அறிகுறியாக, குவியல் குவியலாக நின்ற முகிற் கூட்டங்கள் பொன்னிறம் பெற்றன ; பட்டுக் கோட்டை அழகு பெற்றது !

கோழி கூவிற்று ; குருவி சிலும்பிற்று : காகம் கரைந்தது ; விடியத் தொடங்கி விட்டது. நானாவிதமான புள்ளினங்கள் பற்பல குரல்களில் இசைத்தபடி கூட்டை விட்டு வெளியே வானோக்கிப் பறந்தன. மரங்களிலும் செடி கொடிகளிலும் பூத்த புது மலர்கள் அந்த ஒலி கேட்டுச் சிலிர்த்துக் குலுங்கின.

விலகத் தொடங்கி விட்ட பனியின் தண்மையும், சற்றே விரிந்த அரும்புகளின் மீது தவழ்ந்த மணமும், குளிர்ந்த அதிகாலை நேரத்தில் வீசிய இனிய காற்றில் மிதந்து வந்தன.

குளித்துவிட்டு, உலர்ந்தும் உலராத கூந்தலை ஆற்றியபடி வந்த செந்திரு தோட்டத்து மலர்ச் செடிகளைக் கண்டதும் ஒரு கணம் நின்றாள். பருவத்தின் செழுமை நிறைந்து இளமையின் கவர்ச்சி முழுமையடைந்து குலுங்கி நின்ற அவளைப் போல, மலர்கள் விரிந்து நறுமணம் பரப்பி, அசைந்து அசைந்து அவளை வரவேற்றன. கல்லில் கால் பதியாமல் துள்ளியபடி, மலருக்கு மலர் தாவிய வண்ணாத்திப் பூச்சியைப் போல, அவள் கண்ணில் பட்ட மலர்களை எல்லாம் பறித்து மடியில் சேர்த்தபடி விரைந்தாள். பசுவின் மடியிலிருந்து பிரிந்து, வாயில் பாலின் நுரையும் மணமும் மாறாமல் ஒதுங்கி நின்ற கன்றுக்குட்டி அவளைக் கண்டதும், சிறிது நேரம் வெறித்துப் பார்த்தது. பிறகு கழுத்தில் மணிகள் குலுங்கத் தாவிக் குதித்து ஓடி விட்டது. அதைப் பார்த்ததும் அவளுக்குத் தானும் துள்ளிக் குதித்து ஓடவேண்டுமென்று தோன்றியது. சிறகுவிரித்துப் பறந்த வண்ணாத்திப் பூச்சிகளைத் துரத்தியபடி ஓடியவள், செம்பு நிறைய பாலுடன் வந்து நின்ற பொன்னனைக் கண்டதும் வெட்கப்பட்டவளாய் நின்றாள். அவனது முகத்தில் தோன்றிய வியப்பு மறைவதற்குள் ஒரே தாவலில் பாய்ந்து உள்ளே ஓடி விட்டாள். அவள் அப்படி ஓடியபோது, அவள் பறித்த மலர்கள் மடியினின்றும் வழி நெடுகிலும் சிந்தின. அவளது மனத்தில் பொங்கிச் சிதறி மகிழ்வினால் நனைந்த உணர்ச்சிகளைப் போல, அந்த மலர்களும் அவளைப் பார்த்துச் சிரித்தன.

அறைக்குள் போய்க் கண்ணாடியின் முன் அமர்ந்தவள் அதில் தெரிந்த நாணம் படர்ந்த தன் முகத்தைப் பார்த்துக் குனிந்தவாறு சிந்தனையின் இதழ்களைக் குவித்துத் தளிர் விரல்களை அதில் பதித்தபடி அவள் அப்படி உட்கார்ந்திருந்தது, தன்னுடைய நிழலையே பார்த்து அவள், 'ஆமாம். திடீரென்று என்ன இத்தனை உற்சாகமாம்?'' என்று கேட்பது போல் இருந்தது.

அவளுடைய மகிழ்ச்சிக்குக் காரணம் இல்லாமல் இல்லைதான். சென்னையிலிருந்து மாணிக்கம் மறுநாள் வரப் போவதாகக் கடிதம் வந்திருந்தது. பொங்கலுக்கு இன்னும் இரண்டும் நாட்கள்கூட இல்லை. திருநாளின் கொண்டாட்ட நினைவுகளோடு, அத்தான் வரப் போகும் நினைவு சேர்ந்த போது, கனியின் சுவை நீரில் தேனைக் கலந்தது போலத்தான் இருந்தது.

இந்த ஓர் ஆண்டுக்குள் அவளது உள்ளத்தில்தான் எவ்வளவு மாறுதல்கள்? பருவத்தின் மலர்ச்சியோடு அவள் உருவத்தில் மெருகேறி நின்ற எழில் போன்றே, அவள் மனத்திலும் வண்ண வண்ணமான உணர்ச்சிகள் நிறைந்து மணம் வீசத் தொடங்கின. பிள்ளைப் பருவ முதல் விளையாட்டுத் தோழனாய், குறும்பிலும் சண்டையிலும் போட்டியாய், தான் கண்ணீரின் கறை படிய நிற்கும் போது உறுதுணையாய்ப் பழகி வந்த அத்தானின் நினைவு மனத்தில் தோன்றும் போதே அவள் உள்ளம் ஏன் அப்படிச் சிலிர்க்கிறது? மனத்தில் விவரிக்க இயலாத மகிழ்வு பொங்கி அவளை ஏன் ஆட்டுவிக்கின்றது? முகத்தில் நாணம் சூழ்ந்து அவளை ஏன் பேச விடாமல் தடுமாறச் செய்து விடுகிறது? புதிதாக அவள் உள்ளத்தில் மலர்ந்து நின்ற இந்த உணர்ச்சிக்கு என்ன பெயர்?

அவளுக்கு நன்றாக நினைவிருக்கிறது. மாணிக்கம் அவ் வீட்டுக்கு வந்தபோது, அவள் நான்கு வயதுக் குழந்தை. தாயின் அன்பும் பரிவும் காணாமல் தந்தையையே நம்பி நின்ற அவளுக்குத் துணையாக வந்து சேர்ந்தான் அவன். அவனுக்கு ஆறுதலாய் ஒன்றி நிற்கும் ஆவல் ஒன்றே நிறைந்து அவளை ஆட்டுவித்து வந்தது!

அவன் அவளோடு சண்டை போட்டதுண்டு. குறும்புகள் செய்து விளையாடியது உண்டு. தலையில் வலி எடுக்கக் குட்டியும் இருக்கின்றான். பின்னலைப் பிடித்து இழுத்துத் துன்புறுத்தி இருக்கிறான். அந்த நேரத்தில் அவளுக்கு என்ன வலிதோன்றி இருக்குமோ, என்னவோ? ஆனால் இப்போது அந்த நினைவில் இன்பம் மட்டுமே நிறைந்து நின்றது. சண்டையிட்டதற்காக அவனுடன் அவள் பேசாமல் இருந்து விடுவாள். அவளும் பேசமாட்டாள். அவளால் பொறுத்திருக்க முடியாது. அவளே வலியப் போய் அவனிடம் பேசுவாள். இழுத்து வைத்துப் பேசி அவனை வம்புக்கு இழுத்த வாய் ஏன் இப்போது திடீரென்று மூடி விட்டது? அவன் கூப்பிட்டாலும் பேச மறுத்த இதழ்கள் ஏன் இப்படித் துடிக்கின்றன? அவன் நோக்குங்கால் எதிர் நோக்காது, அவன் திரும்பியதும் கண்கள் ஏன் அவனையே வட்டமிட்டு அலைகின்றன? பட்டுப்போன்ற மென்மையான அவளது இதயத்தில் அவள் தன் அத்தானுக்கு என்ன இடம் கொடுத்திருந்தாள்?

அன்று முழுவதும் அவளுக்கு சரியான வேலை. ஒவ்வொன்றையும் கவனித்துச் செய்தாலும் மனத்தில் திருப்தி ஏற்படவில்லை. அன்று காலை நேரம் முழுவதும் அவள் வீட்டின் மூலை முடுக்குகளையெல்லாம் சுத்தம் செய்வதிலும், அழகு படுத்துவதிலும் ஈடுபட்டிருந்தாள். சுவரில் மாட்டியிருந்த படங்களைத் துணியினால் துடைத்து இங்கிருந்து அங்கும், அங்கிருந்து இங்குமாக மாற்றிக் கொண்டிருந்தாள். உள்ளே மூலைக்கொன்றாக இருந்த நாற்காலிகளையும் குட்டையான வட்டமேஜையையும், முன்புறம் அலங்காரமாகக் கொண்டு வந்து போட்டு அழகு பார்த்தாள். நிலைக் கண்ணாடி, புத்தகங்கள், திரைச்சீலைகள் – இவைகளெல்லாம் எங்கெங்கே இருந்தால் நன்றாக இருக்

கவியரங்கம் :

## தை இன்பம்

**இரா. பரமசிவம்**

கதிர் முளைத்தது;
கதிர் விளைந்தது;
கரிப்பு எல்லாம் தீர – புதுக்
களிப்பு எங்கும் சேர!

தமிழ் ஒலித்தது;
தை ஒளிர்ந்தது;
தாய்மை யோடு சேர்ந்து – செந்
தமிழர் பண்பு ஆர்ந்து!

நகை அவிழ்ந்தது;
நகை தவழ்ந்தது;
நலிவு வீழ்ந்து மாய – மகிழ்
நலமே நெஞ்சில் பாய!

கழை இனித்தது;
கழல் தொனித்தது;
கன்னிப் பெண்கள் களிக்க – இளங்
காளையர்கள் மலைக்க!

பூ மலர்ந்தது;
பூ செழித்தது;
பொங்கல் வழிந்து ஓட – இன்பம்
பொங்கி வாழ்வில் கூட!

வீடு மகிழ்ந்தது;
நாடு மகிழ்ந்தது;
விளைந்த பரிதி வாழ்த்தி – உழவு
விளைத்த நன்னாள் போற்றி!



கும் என்று கற்பனை செய்து பார்த்து ஒழுங்கு படுத்தினாள். பகல் நேரம் கழியக் கழிய அவள் செய்கையிலும் பரபரப்பு மிகுந்து கொண்டே வந்தது. "ஆயிற்று. இரவு கழிந்து

நாளை விடிந்தால் அத்தான் வந்துவிட போகிறுரே!'' என்ற துடிப்பு அவளை செயலற்று நிற்க வைத்தது. "எல்லாவற்றையும் முடித்துவிட வேண்டும்!'' என்ற ஆவல் அவளை ஓடியாடி வேலை செய்யத் தூண்டியது. இரு உணர்ச்சிகளுக்கும் இடையே தடுமாறியவளாய் அவள் திகைத்து நின்றதையும் பார்த்தபோது, அவளுக்கே அவளைப் பரிகாசம் செய்து கொள்ளத் தோன்றியது.

"என்னம்மா, இவ்வளவு ஆர்ப்பாட்டம்? யாருக்காக இத்தனை ஏற்பாடுகள்?'' என்று அவள் தந்தை அவளைக் கேட்கவில்லை. மனதுக்குள்ளேயே உணர்ந்து சிரித்துக் கொண்டார். தணிகாசலத்துக்குத் தெரியும், அவள்யாரைஎதிர்பார்த்து நிற்கிருள் என்று. அந்த எண்ணம் தோன்றியபோது அவருக்கு மனதில் மகிழ்ச்சி நிறைந்து பொங்கியது. கற்பனையில் செந்திருவையும் மாணிக்கத்தையும் இணைத்துப் பார்த்து உள்ளம் பூரித்துப் போனுர்.

"நாளைக்காலை டவுனுக்கு வண்டி கொண்டு போக வேண்டாமா அப்பா? பொன்னனிடம் சொன்னீர்களா?'' என்று கேட்டாள் செந்திரு.

"நன்ருக நினைவு இருக்கிறது, அம்மா. பொன்னனிடம் சொல்லி அனுப்பப்போவதில்லை. நானேதான் போய்வரச் போகிறேன். எனக்கும் கொஞ்சம் வேலை இருக்கிறது. அத்துடன் மாணிக்கத்தையும் கைப்பிடியாக அழைத்துக் கொண்டு வரப் போகிறேன். நீ மட்டும் தயாராக இரு அம்மா!'' என்று அவர் குறும்பாகப் பார்த்தபோது, அவள் முகம் கவிழ்ந்தது. அங்கே நிற்காமல் ஓடி விட்டாள்.

"இந்தப் பெண்ணுக்குத்தான் எவ்வளவு ஆவல்? இவளுடைய கனவுகள் நிறைவேறி இவள் வாழ்க்கை இன்பமாக அமையவேண்டுமே!'' என்று எண்ணியபோது அவரிடமிருந்து பெருமூச்சு வெளிப்பட்டது.

செந்திரு தன்னுடைய தாயை இழந்த நாளிலிருந்து அவளை கண்மணியைக் காக்கும் இமையைப் போலக்காத்துவந்தார் அவர். அவள் கண் கலங்கினுல் தன் கண்ணில் தூசி விழுந்ததைப்போல அவதிப்படுவார். அவள் குழந்தைப் பருவத்தில் தாயின் அன்பும், உடன்பிறந்தோர் பரிவும் இல்லாமல் ஏங்கி நின்றபோது அவளுக்குத் துணையாக மாணிக்கம் அந்த வீட்டுக்கு வந்தது அவள் நெஞ்சுக்கு எவ்வளவோ இதமாயிருந்தது. சிறு பையனுக இருந்தவன் எவ்வளவு அழகான வாலிபனுக வளர்ந்து விட்டான்? இளமையின் வேகமும் துடிப்பும் அவன் பேச்சிலும் செயலிலும் சட்டென்று நிறைந்து விட்டன. ஆனுல் அந்த வளர்ச்சியில் இன்னும் முழுமை இல்லை. செங்காய்ப் பருவம் தான் அது. ஒரு பெண்ணின் இதயத்தை உணரக்கூடிய விழிப்பு இன்னும் அவனுக்குத் தேவையாகத்தான் இருக்கும். கண்ணெதிரே தோன்றி மின்னலென மறைந்து போகும் செந்திருவின் கண்களிலே நிழலாடுவது அவன் உருவம்தானு என்பதை அவன் கவனித்திருப்பானு? அவள் இதயத்திலே மலர்ந்தும் மலராமலும் அரும்பி நிற்கும் காதலின் தோற்றுவாய் அவனிடம் தான் இருந்தது என்பதை அவன் அறிவானு? அந்தக் கன்னியின் நெஞ்சப்பேழையிலே அவள் போற்றி மகிழ்ந்து எதிர் பார்த்து நிற்பது அவன் அவளுக்குத் திருப்பி அளிக்கக்கூடிய காதல்தான் என்பதை அவன் உணர்ந்திருப்பானு?

அவளைக் கேட்க அவர் விரும்பவில்லை. "இத்தனை நாளும் மாமன் ஆதரவாய் வளர்த்தது இந்தப் பயனை நினைத்துத் தான்!'' என்று அவள் எண்ண விடக்கூடாது; "மனதைப் புரிந்து கொள்ளாமல், என்னிடம் பெண்ணைக் கட்டாயமாகக் கட்டி விடப் பார்க்கிருர்,'' என்று அவன் சொல்லி விடக் கூடாது. அவனே உவந்து ஏற்றுக்கொள்ளா விட்டால், அந்தப் பெண்ணின் வாழ்வில்தான் எப்படி இயற்கையான மலர்ச்சி ஏற்படக் கூடும்? அதுதானு அவர் எதிர் பார்த்தது? அவனே வந்து செந்திருவைக் கேட்க வேண்டுமென்பது மட்டுந்தானு அவர் வேண்டியது? ஆம்: ஒரு வேளை அவர் துணிந்து கேட்டு, அவன் அவளை நேசிக்கவில்லையென்று சொல்லி விட்டால் என்ன செய்வார்?

அவர் ஒன்றும் சொல்வதற்கில்லை. அந்தப் பதிலை அவர் ஏற்றுக் கொள்ள வேண்டியது தான். ஆனால் அந்தப்பேதைப்பெண் செந்திருவுக்கு அது எவ்வளவு ஏமாற்றத்தை அளிக்கும்? அது எத்தகைய அதிர்ச்சியாக இருக்கக் கூடும்?

மாலை மயங்கும் நேரம். அவர் அறையில் உட்கார்ந்திருந்தார். திறந்த சாளரத்துக் கப்பால் வெளிப் புறத்துக் காட்சி மங்கலாகத் தெரிந்தது. தொடுவானம் வரை நீண்டு கிடந்தது சாலை. சாலையின் அக்கரை முழுவதும் மண்டி இருண்டு கிடந்த மூங்கிற் கொல்லைகள், மாலையின் அமைதியை முள்ளால் கிறிப் பிளந்து கொண்டிருந்தன. அடிவானத்துக்கு மேலே அலுங்காமல் ஊர்ந்து சென்றன மேகங்கள்.

அந்தி வானத்துச் செம்மையேறிய மேகங்களைப் போல அவர் நெஞ்சிலும் துயரக் கறை படிந்த பழைய நினைவுகள். ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகை. கமலத்தைக் கை பிடித்தது, செந்திரு பிறந்தது, அவளையும் அவரையும் கைவிட்டு விட்டு கமலம் கண்ணை மூடியது, பையனைக் கைப் பிடித்துக் கொடுத்து விட்டு தங்கை மறைந்து போனது—யாவும் அவரால் மறக்க முடியாத நிகழ்ச்சிகள். மாலை வண்ணத்தைப் போல் அந் நினைவின் ஒளிச் சிதறல்கள் ஒவ்வொன்றும் ஆழப்பதிந்து அழித்து விட முடியாமல் அவர் உள்ளத்தில் உறைந்திருந்தன. ஆனால் அவைகளில் சேர்க்க முடியாமல் அவர் உள் மனத்தில் ஒரு புறமாய் ஒதுங்கி நின்ற அந்த நிகழ்ச்சியை எப்படி மறப்பார்? ஊராரிடம் சொல்லி, உற்றாரிடம் பகிர்ந்து, ஆறுதல் காண முடியாத அந்த சம்பவத்தின் உயிர்ப் பொருள் தான் என்ன? அதை யாரிடமும் அவர் சொன்னதில்லை. நெஞ்சிலேயே வைத்து மூடி மூடி மறுகியே இருபது ஆண்டுகளை ஓட்டியாகி விட்டது. கமலத்தின் கழுத்தில் தாலியை முடிந்த நாளிலிருந்து அவர் நெஞ்சில் சிறைப்பட்ட இரகசியம் அது. அவருடன்தான் மடியும் அது! அப்போதும் அவர் நெஞ்சு வேகாது. அது நீங்காத குறை. அவர் வாழ்வில் அழிக்க முடியாத கறை. நெஞ்சில் விளையாடிய நினைவல்ல; எடுத்தெறிய முடியாமல் தைத்துவிட்ட முள்.

"விளக்கைக்கூடப் போட்டுக் கொள்ளாமல் இருட்டில் என்ன அப்பா அப்படி யோசனை?" என்றபடி உள்ளே நுழைந்து விளக்கைப் போட்டாள் செந்திரு. 'குப்'பென்று மின் ஒளி அறை முழுவதும்பரவியது. அந்த வெளிசத்தில் ஓடி விலகிய இருள் அத்தனையும் அவர் நெஞ்சில் புகுந்து கொண்டது போல அவளுக்கு இருந்தது.

---

பொங்கலில் சிரிப்பு:

**கோனார்:** பொங்கலோ!....பொங்கல்! பால் பொங்கல்!

**பையன்:** இல்லை!....இது பவுடர்ப் பால் பொங்கல்!

---

"ஒன்றுமில்லை அம்மா, சோம்பல் தான். பொழுது போகாமல் உட்கார்ந்து கொண்டிருக்கிறேன்."

"இல்லை. உங்கள் முகத்தைப் பார்த்ததுமே எனக்குத் தெரிந்து விட்டது. நீங்கள் மறைக்கிறீர்கள்....!"

"ஒன்றுமில்லை, செந்திரு. என் நிலையில் எல்லாருக்கும் இருக்கக் கூடிய கவலைதான்."

"என்னவாம் அது?"

"உன்னை வைத்துப் போற்றக் கூடிய கணவனிடம் உன்னை ஒப்புவிக்க வேண்டுமே என்ற கவலைதான் அது. அதுவரைக்கும் எனக்கு நிம்மதி ஏது அம்மா....?"

"எப்போது பார்த்தாலும் என்னை வெளியே விரட்டுகிற பேச்சுத்தானா அப்பா உங்களுக்கு?'' என்று கேட்டபடி, அவள் வெளியே போய் விட்டாள்.

தந்தையின் கவலையை நினைத்த அவளுக்குச் சிரிப்புத்தான்வந்தது. கையில்வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அழுகிறாரா அவர்? அல்லது, வேண்டுமென்றே தூண்டிபார்க்கிறாரா? அத்தானின் அன்பு தோய்ந்த இதயம் அவளுக்குத்தான் என்பது அவருக்கு தெரியாதா, என்ன? குழந்தையாகஇருந்ததுமுதல் அவளையும் அவனையும் சேர்த்து

இரண்டு தடவைகள் கழுவிக்கொண்ட முகத்தை மறுபடியும் கழுவிக் கொண்டாள். பாவாடையைக் களைந்து புடவையை உடுத்துக் கொண்டவள், பிறகு அதையும் மாற்றிவிட்டு மறுபடியும் பாவாடையும் தாவணியும் அணிந்து கொண்டாள். இன்னும் என்ன செய்து கொண்டால் தன்னுடைய கவர்ச்சியில் அத்தான் அப்படியே மலைத்து நின்று போவான் என்று நினைத்துப்பார்த்துப் பார்த்து ஒவ்வொன்றாக செய்து கொண்டாள். அப்படியும் அவளுக்குத் திருப்தி இல்லை. 'இந்தப் பெண் யார்? இத்தனை நாளாய் இவ்வளவு அழகாய் ஒரு பெண் இந்த வீட்டில் இருப்பது நமக்குத் தெரியாமல் போய் விட்டதே?' – அப்படியென்று நின்றுவிட வேண்டும் என்ற ஆசை அவளுக்கு முளைத்தது. ஆனால் அந்தக் காட்சியை நினைத்ததுமே அவளையறியாமல் வெட்கம் சூழ்ந்து கொண்டு அவள் உள்ளத்தைச் சிலிர்க்க வைத்தது.

"கரும்பு என்பதைப் பற்றி இதுவரை பேசியவர், பிரபல கரும்பு வியாபாரி கரும்பாயிரம்....!"

பட்டணத்தில் படிக்கப் போன அத்தான் அங்கே எத்தனையோ நாகரிகங்களைப் பார்த்திருக்கக் கூடும். அதற்குத் தான் எந்த விதத்திலும் சளைத்துவிடக் கூடாது என்ற ஆர்வம் அவளுக்கு. தபாலில் வரும் புத்தகங்களில் கதைகளுக்காகப் போட்டிருந்த படங்களில் இருப்பது போலத் தன்னையும் அலங்கரித்துப் பார்த்துக் கொள்ளுவாள். தந்தை நகரத்துக்குப் போகும்போது அவரிடம் சொல்லித் தனக்குத்தேவையானதை ஞாபகமாக வாங்கிவரச் சொல்வாள். தான் அவைகளை அணிந்து கொண்டால் பொருத்தமாக இருக்குமா, இல்லையா என்ற ஐயம் ஏற்படும் போது, யாரிடம் அதைக் கேட்பது என்று எண்ணிக் குழம்புவாள். அந்தச் சமயத்தில் அவளுக்கு ஒரு தாயோ தங்கையோ இல்லாமல் போய்விட்ட குறை, அவள் மனத்தில் நிறைந்து ஏக்கத்தைத் தூண்டிவிடும்.

அவர்கள் வருகிற வேளை ஆகிவிட்டது. வாசலுக்கும் உள்ளுக்குமாக நடந்து கொண்டிருந்தாள் செந்திரு. பொங்கல் வந்துவிட்டது. தெருவெல்லாம் களைகட்டி விட்டது. புதிதாக வெள்ளையடித்த வீடுகள் 'பளீ'ரென்று தூய்மையோடு விளங்கின. செம்பட்டை தீட்டிய சுவர்களும் திண்ணையும் பளிச் சென்று விளங்கின. புதிதாகச் சாயம் பூசியிருந்த பசுக்கள் கன்றுகளோடு கொம்பை ஆட்டிக் கொண்டு கழுத்து மணிகள் அசைய போய்க் கொண்டிருந்தன. இஞ்சிக் கொத்தும், மஞ்சள் கொத்தும், குலைவாழையும், கரும்புக்கழியுமாகப் பெரியவர்களும் குழந்தைகளும் சந்தையிலிருந்து திரும்பிய வண்ணமாக இருந்தார்கள்.

அந்தப் பொங்கல் அவளுக்கும் இன்பந்தரும் பொங்கல். அவள் மனம் மகிழ்ச்சி நிறைந்து பொங்கிய பொங்கல். புதுப்பாலின் மணத்தைப் போல உள்ளத்தின் புதுமையான விழிப்பில் மணம் பரப்பி நின்ற பொங்கல். கரும்பின் இனிமையைப் போல் நெஞ்சில் இனித்த சுவை தோய்ந்த நினைவுகளைத் தூண்டிய பொங்கல். அவைகளுக்கெல்லாம் காரணமாய் இருந்தவன் இதோ, இப்போது வரப்போகிறான்!

வாசற்படி இறங்கிப் பார்த்த போது தெருமூலையில் வண்டி திரும்பி வந்தது தெரிந்தது. சட்டென்று உள்ளே ஓடிப்போய் எல்லாம் சரியாக இருக்கிறதா என்று ஒருமுறை பார்த்துவிட்டுத் திரும்பி வந்தாள். அதற்குள் வண்டி தெருவில் பாதி தூரம் வந்து விட்டது. உள்ளே அமர்ந்திருந்தது யாரென்று புலப்

படவில்லை. கூர்ந்து பார்க்க நெஞ்சில் துணிவில்லை. கதவைப் பிடித்த கைகள் நடுங்கின. வண்டியிலிருந்து அத்தான் இறங்கியதும் ஒருமுறை பார்த்துவிட்டு ஒரே ஓட்டமாக ஓடிப்போய்விட வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டாள். ஆனால் அந்தக் கணநேரத்தில் அத்தானின் முழுப்பார்வையில் அவள் விழுந்து விடவேண்டுமென்ற ஆவலும் தலை தூக்கி நின்றது!

வண்டி அடுத்த வீட்டுக்கு வந்து விட்டது. மாட்டின் கழுத்து மணி ஓசை அவள் காதில் விழுந்தது. தெருவில் இருந்த மற்றக்காட்சிகள் யாவும் அவள் பார்வையிலிருந்து மறைந்து போயின. வாசலுக்கு நேரே வந்து நின்ற வண்டிமட்டுமே தெரிந்தது. அவள் மனம் அசையாமல் ஆடாமல் துடித்து நின்றது. அத்தான் இறங்கியதும் உள்ளே ஓடி மறையக் கால்கள் துடித்தன.

வண்டி நின்றது. முன்புறமிருந்து குதித்த பொன்னன் வண்டியைப் பிடித்தபடி நின்றான். பின்னாலிருந்து தணிகாசலம் இறங்கினார். அவள் விழிகள் அசையாமல் கூர்ந்து நோக்கின. வேறு யாரும் இறங்கவில்லை. வண்டி ஒரு வட்டம் அடித்தபடி திரும்பியது. ஆவலாக எதிர்பார்த்தஅத்தான் வரவில்லை....!

கதாசிரியை

வண்டியிலிருந்து இறங்கிய தந்தை உள்ளே வந்தார். கூடத்துச் சாய்வு நாற்காலியில் களைப்போடு சாய்ந்து கொண்டார். நிழல் போல அவரைத் தொடர்ந்து வந்த செந்திரு தூணைப் பிடித்தபடி அவரது முகத்தை பார்த்த வண்ணம்நின்றாள். அவளின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தவர் அதில் படர்ந்து நின்ற ஏமாற்றத்தை உணர்ந்தும், தன்னுடைய உணர்ச்சிகளை மறைத்தபடி "மாணிக்கம் வரவில்லையாம் அம்மா! ஏதோ நாடகமாம்; ஒத்திகையாம்; வரமுடியவில்லை என்று தந்தி கொடுத்திருக்கிறான். டவுன் தபால் நிலையத்தில் கிடைத்தது!" என்று பையிலிருந்த சிவப்புக் காகிதத்தை நீட்டியபடி தலையைக் குனிந்து கொண்டார்.

அதை வாங்கிக் கொண்டு, அவர் கையிலிருந்த பையையும் எடுத்துக் கொண்டு அறைக்குள் போனாள் செந்திரு. அந்த அறையிலிருந்த ஒவ்வொரு பொருளும் அவளைப்பார்த்து வேடிக்கை செய்தது போல அவள் உணரலானாள். நிலைக்கண்ணாடியில் தெரிந்த அவள் உருவம் அவளை ஏளனம் செய்வது போல நின்றது. பார்வையிலிருந்து அதை ஒதுக்கத் துடித்தவளாய் பீரோவைத் திறந்து பையை வைக்க விரைந்தாள் அவள். அப்போது, லேசாக ஆடிக்கொண்டேயிருந்த பீரோவின்மேல் தட்டிலிருந்து 'பொத்'தென்று கீழே விழுந்தது உருண்டது ஒரு பொருள்!

அதையே வெறித்துப் பார்த்தபடி செந்திரு நின்றாள். அத்தானுக்குப் பிடிக்குமென்று ஆசையாய் அவள் இரகசியமாக மறைத்து வைத்திருந்த தோட்டத்துமாங்காய் அது. பாதிக்கு மேல் அதை எலி கடித்துவிழுங்கி விட்டிருந்தது! செந்திருவிற்கு அதைப் பார்க்கப் பார்க்க அழுகை வெடித்துப் புறப்பட்டது. 'அத்தான் வருவதற்குள் இது பயனிழந்து போய் விடும் போலிருக்கிறதே?'

மீண்டும் சுயநினைவு வந்தபோது, அவளது பாதங்களுக்கு அருகிலே கசங்கிய கடிதமொன்று கிடந்தது. 'ஆ!........ யாருடைய எழுத்துக்கள் இவை? அத்தானுடையதா? அப்படித்தெரியவில்லையே? என்ன, ஒரே குழப்பமாகப் போய் விட்டதே?....' உன்னிப்பாகக் கவனித்தாள்; அந்தக் கடிதத்தில் ரத்தக்கறை படிந்து விட்டிருந்தது. எம்பித் தணிந்த நெஞ்சில் மறுபடியும் ஒரு சத்தம் எழுந்தது. கைத்துப்பாக்கி ஒன்றும் வந்து வீழ்ந்தது. அவள் பயந்து திரும்பியபோது, எதிரில் முகமூடி அணிந்த ஓர் உருவம் நின்று கொண்டிருந்தது!

**(கதை இன்னும் வளரும்)** ○

# என் தந்தை வ. உ. சி.

# சில நினைவுகள்

இன்று நடந்தாற் போல இருக்கிறது; ஆனால் அதற்குள் ஏறக்குறைய கால் நூற்றாண்டு உருண்டோடிவிட்டது. ஆம்; எனது தந்தையார் வ. உ. சி. அவர்கள் மறைவு பற்றியே நான் குறிப்பிடுகிறேன். 1936 நவம்பர் 19-ந்தேதி அவர்கள் எங்களைவிட்டுப் பிரிந்தார்கள். அப்போது எனக்கு வயது பதினொன்று.

எனக்கு 'அறிவு தெரிந்த பின்' நடந்த நிகழ்ச்சிகள் என் மனத்தில் பசுமையாக இருக்கின்றன; நினைத்துப் பார்க்கும் போது, திரைப்படக் காட்சி போல ஒவ்வொன்றாக உள்ளத் திரையில் பளிச்சிடுகிறது. இன்பமும் துன்பமும் கலந்து ஒரு புதிய உணர்ச்சி பிறக்கிறது.

**கரும்பு தின்னக் கூலி!**

எனது தந்தையவர்கள் ஒரு சிறந்த நூலாசிரியர் என்பது சிலருக்கே தெரியும். 'கப்பலோட்டிய தமிழன்', 'கல்லுடைத்த கல்விமான்', 'செக்கிழுத்த செம்மல்' என்ற சிறப்புப் பெயர்கள் இன்றுபள்ளிச் சிறுவர்களுக்கும் மனப்பாடம். 'செந்தமிழ் வேந்தன்,' 'குறளுக்கு விருத்தியுரை கண்ட வித்தகன்', 'இளம்பூரணத்தை ஏடு பெயர்த்தெழுதிய இலக்கண ஆசிரியன்' என்பதறிந்தவர்களை எண்ணிச் சொல்லி விடலாம்!

நூல்கள் பல எழுதி வெளியிட்ட போதிலும், என் தந்தை அவர்கள் அதனை ஒரு வாணிபமாகக் கருதியதில்லை. தமிழன்னையின் தொண்டாகவே கருதி வந்தார்கள். பதிப்பித்த நூல்களில் பாதி பள்ளி நூலகங்களுக்குப் பரிசுகளாகப் போய்ச் சேரும். நண்பர்களுக்கு அன்பளிப்பாக அனுப்பப் பெறும் அநேகம். எஞ்சியவை தம்மை முந்தியவையின் வழியிற் சென்று கொண்டிருக்கும். எனவே, நூல் வெளியீடு ஓர் அறப் பணியாகவே எங்கள் வீட்டில் நடந்ததென்றால், இது அதிகம் பிழையல்ல.

வ. உ. சி. சுப்பிரமணியம்

திருக்குறள் அறத்துப் பாலுக்கு எனது தந்தையவர்கள் விருத்தியுரை எழுதி வெளியிட்டார்கள். முன்னூறு பக்கங்கள் கொண்ட அப்பெரும் புத்தகத்துக்கு விலை முக்கால் ரூபாய்! வியாபாரிகளுக்கு கழிவு வேறு உண்டு! பள்ளிப் பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் ஒரு பிரதி பரிசு.

கப்பலோட்டிய தமிழரும் அவரது துணைவியாரும்.

காலையிலும் மாலையிலும் அவர்கள் வந்து உரையுடன் குறள் ஒப்பித்துவிட்டுப் போகலாம்; அதற்குச் சன்மானம் உண்டு. தவறின்றி உரையும் குறளும் சொன்னால், குறள் ஒன்றிற்குக் காலணா கை மேல் கிடைக்கும். விடியும் முன்பு, சிட்டுக் குருவி போலச் சிறுவர்கள் 'கசமுச'வென்று உரக்கவும் மெல்லவும் குறள் சொல்லிக் கொண்டு வருவார்கள். அவர்கள் சொல்லும் குறளையும் உரையையும் புத்தகத்தைக் கையில் வைத்துக் கொண்டு சரி பார்ப்பது என் வேலை. நாள்தோறும் காலையிலும் மாலையிலுமாக ஏறக்குறைய ஐம்பது மாணவர்கள் வாயில் வள்ளுவம் மணக்க வருவார்கள்; கையில் காலணா கனக்கப் போவார்கள்! சில சிறுவர்கள் ஒரு

நாளில் நாலணு, ஐந்தணுக்கூடத் தட்டிக் கொண்டு போவார்கள். காசு கிடைக்குமென்ற ஆசை எனக்கும் உண்டு. ஆனல் அன்றும் சரி, இன்றும் சரி, மனப்பாடத்துக்கும் எனக்கும் 'தோட்டந் தொலைவு'. எனவே தான் பிறர் குறள் ஒப்புவிப்பதைக் கேட்கும் சட்டாம்பிள்ளை வேலை. காசு கிடையாது; 'கவுரவம்'தான்!

### துயில் மிசை ஏகுதல்!

நாள் தோறும் இரவில் உறங்கு முன்பு குறள் சொல்ல வேண்டும். நாளொன்றுக்கு ஒரு குறள் ஒப்புவிக்க நான் படும்பாடு எனக்குத் தெரியும்; என் அப்பாவுக்கும் தெரியும்! எனவே முதலில் குறளை அவர்களே சொல்லிப் பின்பு என்னைச் சொல்லச் சொல்லுவார்கள். தூங்கும் முன்பு குறள் சொன்னல் துர்ச்சொப்பனங்கள் வராது என்று சொல்லுவார்கள். 'சிவ சிவ' என்று நூறு முறை சொல்லுமாறும் கூறுவார்கள். முதலில் குறள், பின்பு சிவன் நாமம். ஆனல், என் தந்தையவர்களிடம் ஒரு பழக்கமுண்டு; படுத்துச் சில நிமிடங்களில் தூங்கி விடுவார்கள். (இந்த நல்ல பழக்கம் அவர்களது வாரிசு என்று சொல்லிக் கொள்ள எனக்குள்ள ஒரு தனிப் பெருந்தகுதி!) எனவே, நான் 'அகர முதல' எழுத்தில் தொடங்கி 'மலர் மிசை' ஏகு முன்பு, அவர்கள் துயில் மிசைச் சென்று விடுவார்கள். சில சமயம் நான் அவர்களை முந்திக் கொண்டு விடுவேன்; 'வாத்தியார் பிள்ளைக்கு படிப்பு வராது' என்பது எனக்குத் தெரியாது!

### கண் தப்பியது

தன் மகன் தமிழோடு ஆங்கிலமும் தகவொடு ஹிந்தியும் கற்க வேண்டுமென்பது எந்தையவர்கள் விருப்பம். அந்நாளில் 'மொழி ஒழிப்பு' இயக்கம் ஏதும் பிறக்கவில்லை; அவர்கள் செய்த புண்ணியம். தமிழும் சமஸ்கிருதமும், ஆங்கிலமும், மலையாளமும் எந்தையவர்களின் கைப்பாவைகள்: அவை அவர்களிடம் தவழ்ந்து விளையாடின. வேறு சில மொழிகளும் அவர்களுக்குத் தெரியும். எனவே, தன் மகனும் பன்மொழிப் புலவனுக வேண்டுமென நினைத்து, எனக்கு எண்ணும் எழுத்தும் இனிய பல மொழிகளும் கற்பிக்க ஓர் ஆசானை நியமித்தார்கள். (அவர் பெயரும் சிதம்பரம் பிள்ளை; இன்றும் வாழ்கிருர்.) அப்போது எனக்கு ஏழெட்டு வயதிருக்கும். 'பச்சோன்–கி–கிதாப்' அன்று படிக்கத் தொடங்கியவன், இன்னும் படித்து முடிக்கவில்லை! ஆம்; ஹிந்தி வந்தால் தமிழ் அழிந்து விடும் என்று அன்றே எனக்குத் தெரிந்திருக்க வேண்டும்! நல்ல வேளை, தன் மகன் குருடனுகி விடக்கூடாதே என்ற நல்லெண்ணத்தினுல் ஹிந்தியை விட்டு விட்டு, எண்ணும் எழுத்தும் கற்பித்தால் போதும் என்று என் தந்தையவர்கள் என் ஆசானுக்குக் கட்டளை யிட்டார்களோ, ஹிந்தி பிழைத்தது!

### இன்பக் கண்ணீர்

நாள் தோறும் இரவில் எங்கள் வீட்டில் ஏதாவது அறிவு விளக்கம் ஏற்றிய வண்ணமிருக்கும்; குறள் விளக்கம் நடக்கும்; சித்தாந்தச் சிந்தனைகள் அலை மோதும்; கந்த புராணம் கமழும்; அல்லது கம்ப ராமாயணம் மணக்கும். தொடர்ந்து ஓராண்டாகக் கம்ப ராமாயணம் நடந்தது. இராதா கிருஷ்ணய்யர் என்பவர் கம்பனது பாடல்களை முதலில் பண்ணுடன் பாடுவார்; தொடர்ந்து, பிரசங்க ரத்தினம் பொன்னம்பலம் பிள்ளை வெண்கலக் குரலில் உரை சொல்வார்; இருவரும் இடையிடையே பனங் கற்கண்டும் பாலும் பருகுவது குறித்து எனக்குப் பொருமை! என் கவனம் எல்லாம் பால் செம்பு மீதும், கற்கண்டுத் தட்டின் மீதும்தான்! ஆனல் அவர்கள் இருவரும் கம்பனைப் பாதியில் நிறுத்தினுலும் நிறுத்துவார்கள்; பால்–கற்கண்டு நிற்கமாட்டா என்று தான் நான் நினைத்தேன்.

ஒரு நாள் இரவு எங்கள் இல்லத்து முன்றில் மலர்களாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. நடுவில் மேடை; மணமேடை போல. ஊதுவத்தி நறுமணத்துடன் புகைந்து கொண்டிருந்தது; 'காஸ்' விளக்குகள் கண்ணைக் குருடாக்கும் ஒளி கக்கிக் கொண்டிருந்தன. ஏதோ 'கல்

யாணம் நடக்கப் போகிறதாக்கும்' என நினைத்துக் கொண்டேன். ஒரு பெருங் கூட்டம் வந்திருந்தது. வழக்கம் போல கம்ப ராமாயண விளக்கந்தான் நடைபெற்றது. பின் ஏன் இந்தத் தடபுடல் என்று எனக்குப் புரியவில்லை. பாட்டாளரும் – அதாவது பாடியவரும், பேச்சாளரும் வழக்கம் போலத் தம் கடமையைச் செய்து முடித்ததும், ஒவ்வொருவராகப் பலர் அவர்களுக்கு மலர் மாலை அணிவித்தார்கள்; எந்தையார் வ. உ. சி அவ்விருவருக்கும் இரு தாம்பாளங்களில் என்னென்னவெல்லாமோ வைத்துக் கொடுத்தார்கள்; எல்லோரும் கை தட்டினார்கள். எங்கள் அப்பா மேடையின் முன் வந்து நின்று பேச முயன்றார்கள். ஆச்சரியம்! பேச்சு வரவில்லை; இடி முழக்கம் செய்யும் நா அன்று தமு தழுத்துக் கண்கள் நீர் சொரிந்தன. ஆம்; அழுதார்கள்; நானும் அழுது விட்டேன்!

"இன்று பட்டாபிஷேகம்; ஓராண்டாக நாள் தோறும் நடைபெற்று வந்த இராமகாதை இன்று முடிகிறது. நீங்களெல்லோரும் வந்து கேட்டு மகிழ்ந்தீர்கள்; நானும் மகிழ்ந்தேன். சிறப்பாக இந்த இலக்கிய விருந்தை நடத்திக் கொடுத்ததற்காக உங்களுக்கும் எல்லாம் வல்ல இறைவனுக்கும் கடமைப் பட்டிருக்கிறேன்,'' என்று ஒருவாறாகப் பேசி முடித்தார்கள். மலை கலங்கினும் நிலை கலங்காத நெஞ்சினரான எந்தை அன்று நெஞ்சு நெகிழ்ந்திருந்ததை இன்பப் பெருக்கு என்று சிலர் சொன்னார்கள்; 'ஆனந்த பாஷ்பம்' என்று சிலர் வருணித்தார்கள். ஆனால் அப்பா அழுததென்னமோ, உண்மை என்பது தான் அன்று என் மனசில் பட்டது.

**சைவனுக்கு அழகு**

மார்கழித் திங்கள். விடியற்காலை. பனி பெய்கிறது. அப்போதுதான் விழுந்தெழுந்த நான் வெளித் திண்ணையில் வந்து உட்கார்ந்தேன். தலையில் சிவப்புக் கம்பளியுடனும் கையில் தடியுடனும் தோட்டப் பக்கத்திலிருந்து அப்பா முன்புறம் வந்தார்கள். என் தமக்கைமார்கள் வாசலில் கோல மிட்டு, சாணிப் பிள்ளையார் மீது பூசணிப்பூ குத்திக்கொண்டிருப்பதை நான் பார்த்துக் கொண்டிருந்தேன்.

"அடே, பயலே! சைவனுக்கு என்னடா அடையாளம்?''–அப்பா.

எனக்கு இது பெரிய கேள்வி; அன்றும் தான்; இன்றும் தான்!

பதில் பேசாமலிருந்தேன்.

"சொல்லுடா, யோசித்துப் பார்த்துப் பதிலைச் சொல்....!'' என்றார்கள் அப்பா அவர்கள்.

பொங்கலில் சிரிப்பு:

"என்ன ஸாமி!....ஒட்டடைக் குச்சி வேணுங்களா?"

அவர்கள் நெற்றியில் வெண்ணீறு ஒளியிட்டது, என் கண்ணில் பட்டது.

"நெற்றியிலே நீறு பூசுதல்!'' என்றேன்.

"அது மட்டுமல்ல; புலால் உண்ணாமையும் கூட. 'கொல்லான் புலாலை மறுத்தானை கைகூப்பி எல்லாவுயிருந் தொழும்!'' என்று கணீரென்று கூறிவிட்டு, அவர்கள் அவர்களது வழியே சென்றார்கள். இந் நிகழ்ச்சி இன்று நடந்தாற் போல என்னகத்தே ஒளி வீசுகின்றது. இந்தக் கேள்வி-பதில் நிகழ்ச்சிக்குப் பின் அவர்கள் நெடுங்காலம் வாழவில்லை. ஆனால் அவர்கள் சொல் என்னுள்ளே வாழ்கின்றது; தமிழ்த் திருநாளான பொங்கல் நன்னாளில் அனைவர் உள்ளத்திலும் அது வாழவேண்டும். ❁

தயாரிப்பாளர்கள் : போன் நம்பர் : 55065

**P. R. வடிவேலு முதலியார் & சன்**

28, முல்லா சாகிப் தெரு, சென்னை-1.

# வலைஞன் மகளின் வலை

அரு. ராமநாதன்

அவள் செம்படவனின் ஆருயிர் மகள். வனப்பு வாய்ந்த வலைச்சி.

நெய்தல் நிலத்துக் கடற்கரையில் அவள் குடிசை இருந்தது. அவளுடைய காதலனின் குடிசையும் ஒரு பெரிய கடற்கரையில் தான் இருந்தது. ஆனால், இரண்டு ஊருக்கும் நடுவில் வெகு தூரம்.

அன்று குடிசையில் அவள் தனியாகத் தன் தோழியோடு சிரித்துப் பேசிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். ஆனால் அவள் நினைவெல்லாம் எங்கோ நெடுந் தொலைவில் உள்ள கடற்கரைத் தலைவனான காதலனை நோக்கியே குவிந்திருந்தது.

அவளைச் சந்திப்பதற்காக அவன் எத்தனை தடவை தன் ஊரை விட்டு நெடுவழி நடந்து வந்திருப்பான்? எவ்வளவு நேரம் அவள் குடிசையின் ஓரம் மறைந்து நின்றிருப்பான்? அவளோடு தனித்து உள்ளம் உற வாடிப் பேசி மகிழ்ந்து உணர்வு பரிமாறிக் கொள்ள எவ்வளவு ஆவலோடு காத்திருந்திருப்பான்? அவள் குடிசையில் கிழச் செம்படவனும் தாயும் இருப்பதைக் கண்டு எவ்வளவு ஏக்கத்தோடு தன் ஊர் திரும்பிப் போயிருப்பான்? தன் ஊரில் பெரிய கடலின் குளிர்ச்சி தாங்காமல், குமரியிடம் இனிமை பேண வந்தவன், எவ்வளவு முறை தான் ஏமாற்றத்தோடு திரும்பிப் போவான்?

இத்தனை நாட்களாக ஒரு முரட்டுக் கடல் சுரு மீனால் அடிபட்டுச் செம்படவன் குடிசைக்குள்ளே அடைபட்டுக் கிடந்தான். அவனுக்குப் பணிவிடை செய்வதற்காக அவளுடைய தாயும் குடிசையை விட்டு எந்நேரமும் அகலாதிருந்தாள். அதனால் காதலர்கள் தனித்துச் சந்திக்க முடியவில்லை. நெடுவழி நடந்து வந்த தலைவன், தலைவியின் குடிசையோரமுள்ள மறைவிடத்தில் நெடு நேரம் காத்திருந்து திரும்பிப் போவதைத் தவிர வேறு வழியில்லை!

அன்றோ அவள் மட்டும் குடிசையில் தன் தோழியோடு, தனியாக இருந்தாள். தந்தை வலிய சுருமீன் வீசியதால் உண்டான புண் ஆறி, மறுபடி மீன் பிடிக்கப் படகேறி நீல நிறப் பெருங்கடல் மீது போய் விட்டான். தாயும் உப்பை விற்று வெண்ணெல் வாங்கி வருவதற்காக உப்பு விளையும் கழனிக்குப் போய் விட்டாள். அருகில் தோழியைத் தவிர குடிசையில் வேறு யாருமில்லை. அப்போது மறைவிடத்தில் தன் காதலன் வந்து நிற்பதைத் தலைவி தன் கடைக் கண்ணால் பார்த்து விட்டாள். ஓடிச் சென்று அவனைத் தன் குடிசைக்குள் அழைத்து வரவேண்டுமென அவள் மனம் விழைந்தது. ஆனால், அருகில் தோழியிருக்கிறாளே என்ற நாணம் அவளைத் தடுத்தது. தன்னைக் காண வந்த காதலன், குடிசையில் தந்தையும் தாயும் இருப்பரே என்றஞ்சி, எங்கே பேசாமல் திரும்பிப் போய்விடுவானோ என்ற பயமும் அவளுள் எழுந்தது.

மறுகணம் அவளுக்கு ஒரு யுக்தி தோன்றியது. மறைவிடத்திலிருக்

கும் தன் காதலனின் காதில் விழும் படி மெல்ல தன் தோழியிடம் கூற லானுள்:

"அடியே, தந்தை சுருமீனுல் அடிபட்ட காயம் ஆறி மீன் பிடிக்கக் கடலுக்குப் போய் விட்டார். தாயும் உப்பை விற்று வெண்ணெல் வாங்கி வர உப்பு விளையும் கழனிக்குப் போய் விட்டாள். என்னுடைய காதலர் இப்பொழுது இங்கே வந்தால் என்னை எளிதில் அடையலாம். இந்தச் செய்தியை அவருக்கு யார் சொல்வது? சிரமத்தைப் பாராமல், நெடுந் தூரத்திலுள்ள அவருடைய ஊருக்கு விரைந்து போய் யாராவது தூது சொன்னுல் நலமாயிருக்குமடி! இது என் விருப்பம்....!"

தோழி சிரித்துக் கொண்டே குடிசையை விட்டு எழுந்து போய் விட்டாள்.

காதலர்கள் சந்தித்தார்கள்.

இந்தக் காதல்காட்சி பண்டைத் தமிழகத்தில் நெய்தல் நிலத்துக் கடற்கரையில் நிகழ்ந்ததாக ஒரு கற்பனை. சங்க இலக்கியங்களில் ஒன்ருன ஒப்புயர்வற்ற 'குறுந்தொகை'யில் இக் கற்பனை அழகான சிறு கவிதை வடிவில் காணப்படுகின்றது. தமிழ் நாட்டுப் பெண்மை, மென்மையான உள்ளப் போக்கு, நாணம், மனத் தவிப்பு, சாதுரியம் முதலானவற்றை சிறு பாட்டினுள் அற்புதமாக உருவாக்கியுள்ளார் புலவர்.

சேயாறு சென்று துணைபரி அசாவா(து)
உசாவுநர்ப் பெறினே நன்று மற்றில்ல
வயச் சுறு வெறிந்த புண்தணிந் தெந்தையும்
நீனிறப் பெருங்கடல் புக்கனன் யாயும்
உப்பைமாறி வெண்ணெல் தரீஇய
உப்புவிளை கழனிச் சென்றனள் அதனுற்
பனியிரும் பரப்பிற் சேர்ப்பதற்கு
இனிவரின் எளியல் என்னுந் தூதே!

[வயச்சுரு – வலிமையுடைய சுருமீன்; வெண்ணல் தரீஇய – வெண்ணெல்லை வாங்கி வருவதற்காக: பனியிரும் பரப்பிற் சேர்ப்பதற்கு–குளிர்ச்சியுடைய பெரிய பரப்பாகிய கடற்கரைத் தலைவனுக்கு; சேய்ஆறு–நெடுவழி; துணைபரி அசாவாது–வேகமான நடையினுல் வருந்தாது.]

***


தரத்திலும் குணத்திலும் சிறந்தது

M. M

கூட்டுப் பெருங்காயம்

நீங்கள் உபயோகித்தீர்களா?

M. M. சாம்பார் பவுடர்

M. M. சீயக்காய் தூள்

விவரங்களுக்கு:

மயில் மார்க் நிலையம்

45, திருவொற்றியூர் ஹைரோடு, சென்னை-21.

TGN

* வைரங்கள்

* பொன் நகைகள்

* வெள்ளி சாமான்களுக்கு

ஸ்தாபகர்

M/s T. கோவிந்தராஜுலு நாயுடு

28, நேதாஜி ரோட், மதராஸ்-1

*

பிராஞ்ச்:

95, கச்சேரி ரோட், மைலாப்பூர்.

# நரிக்குறத்தி

கல்யாணப் பெண் தனியே உட்கார்ந்து, தானே செய்த மான் கொம்புச் சிப்பால் தலை வாரிக் கொண்டிருந்தாள். மடிந்து கிடந்த அவளது இடது தொடையின்மீது பாதரசம் உதிர்ந்த முகம் பார்க்கும் கண்ணடித் துண்டு ஒன்று இருந்தது. அதில் அவள் தன் பெரிய முகத்தைச் சாய்ந்தும் குனிந்தும் பார்த்தவாறு தலைவாரிக் கொண்டிருந்தாள்.

அவளுக்குச் சற்று அப்பால் மூன்று பெண்கள் அமர்ந்து பவழமணி மாலை தொடுத்துக் கொண்டிருந்தனர். அவர்கள் ஒவ்வொருவர் கையிலும் இருந்த ஒரு சிறு குறடு, மெல்லிய கம்பியில் மணிகளைக் கோர்த்து லாகவமாக முடுக்கி வேகமாக நறுக்

ஜெகசிற்பியன்

கிக் கொண்டிருந்தது. அந்தப் பெண்களின் எதிரே மற்றொரு பெண் உட்கார்ந்திருந்தாள். அவள் கொஞ்சம் வயது முதிர்ந்தவள். எலிக் கண்கள் போன்ற கறுப்பு மணிகளை மஞ்சள் நிற நூலில் கோத்து இரட்டை வடமாகப் பின்னிக் கொண்டிருந்தாள்.

ஒரு கிழவன் காலை நீட்டிப் போட்டுக் கொண்டு, அணில் பிடிக்கும் அறுந்தவலை ஒன்றைச் செப்பனிட்டுக் கொண்டிருந்தான். அவனுக்குப் பக்கத்தில் ஒரு கிழவி, கொண்டை ஊசி செய்யக் கம்பிகள் நறுக்கிக் கொண்டிருந்தாள். அவள் அருகில் இரண்டு குரங்குகள் உட்கார்ந்துபேன்பார்த்துக் கொண்டிருந்தன.

மற்றும், இரு பெண்கள் கல் அடுப்பு மூட்டிப் பெரிய பானை ஒன்றில் ஏதோ பொங்கிக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒருத்தியின் முதுகில், பை போல் தொங்கிய முந்தானை – ஏணையில், எட்டு மாதக் குழந்தை ஒன்று முடங்



கிச் சாய்ந்து கொண்டிருந்தது. அடிக்கொரு தரம் அந்தக் குழந்தை தாயின் விலாப் பக்கம் தாவிச் சரிந்து, பால் குடிக்க முயன்று கொண்டிருந்தது; மெலிந்த கிழவனொருவன், புழுதியேறிய கூடாரத் துணியை விரித்துப் போட்டு அதிலுள்ள பொத்தல்களை ஒட்டு வைத்துத் தைத்துக் கொண்டிருந்தான். மூட்டை முடிச்சுகள் நிறைந்த நான்கு சிறு கூடாரங்களில் நாய்களும் பூனைகளும் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தன. கூண்டிலிருந்து வெளியே விடப்பட்ட ஒரு காடையும், இரண்டு கவுதாரிகளும் மணலைச் சீய்த்து மண் புழுக்களைப் பொறுக்கிக் கொண்டிருந்தன. தேவாங்குக் குட்டிகள் போன்ற சில சிறுவர்கள் ஆற்று மணலில் காட்டுக் கூச்சலிட்டு விளையாடிக் கொண்டிருந்தனர்.

தூரத்தில், ஆற்றின் கரை மேட்டுச் சரிவில், காடாக மண்டி வளர்ந்திருந்த தாழம் புதரைச் சுற்றி முளையடித்து வலை வீசிவிட்டு, 'உஸ், உஸ், ச்சூ!' என்ற உசுப்பு ஒலி எழுப்பியவாறே, ஈட்டி போன்ற நீண்ட கழிகளால் புதரின் நாலா புறத்தையும் குடைந்து கொண்டிருந்தனர், கட்டமைந்த இரு வாலிபர்கள்! முயலோ, காட்டுக் கோழியோ பிடிக்கும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் போலும்!

நெருப்பு நிறம் பெற்ற மாலைச் சூரியன், மேற்கு வாசலில் மெள்ள மெள்ளச் சரிந்து கொண்டிருந்தான்.

எலிக்கண் மணிச்சரம் பின்னிக் கொண்டிருந்த முதியவள் வானத்தை அண்ணாந்து பார்த்து விட்டு, தாழங் காட்டில் முயல் வேட்டையில் ஈடுபட்டிருந்த வாலிபர்களை நோக்கி, உரத்த குரலில், "ஏ....ஹே!....பாடிகோடா இத்ரே லபோ!'' என்று கத்தினாள். அந்த வாலிபர்கள் அவளைத் திரும்பிப் பார்த்து, "லபாயி! லபாயி!'' என்று பதில் குரல் கொடுத்து விட்டு, மீண்டும் தாழம் புதரை உளைய ஆரம்பித்தனர்.

தலைவாரி முடித்து விட்டுக் கண்களைச் சுற்றி மை பூசிக்கொண்டிருந்த கல்யாணப் பெண், தன் வாய்க்குள்ளாகவே, 'பாடிகோடா....பாடிகோடா' என மெல்ல முனகிக் கொண்டாள். அவளின் தடித்த உதடுகளில் ஓர் இளநகை நெளிந்து மறைந்தது.

எலிக்கண் மணிச்சரம் பின்னிக் கொண்டிருந்த முதியவள், அந்த வாலிபர்களைப் பார்த்து என்ன கேட்டாள்? "அடே, தம்பிகளா! பாடிகோடா இன்னும் வரவில்லையா?'' என்று தான் கேட்டாள். அதற்கு அவர்கள், "வருவான், வருவான்!'' என்று பதில் சொன்னார்கள். 'பாடிகோடா' என்பது, வெளியே போயிருக்கும் ஒருவனின் பெயர். 'கோடா' என்றால் 'பையன்' என்று அர்த்தம். பாடி என்றால் 'தரங்கம்பாடி' என்று பொருள்! தரங்கம்பாடியில் அந்தக் குறவர்க்கூட்டம் தங்கியிருந்தபோது, அங்கே பிறந்த பையன் அவன். எந்த ஊரில் குழந்தை பிறக்கிறதோ அந்த ஊரின் பெயரையே அக்குழந்தையின் பெயராக வைப்பது அந்த இன மக்களின் மரபு!

அலங்காரத்தில் ஈடுபட்டிருக்கும் கல்யாணப் பெண்ணின் பெயர் ஆடிகோடி! அவள் தில்லையாடி ஊரில் பிறந்தவள்; 'கோடி' என்றால் 'பெண்' என்று பொருள்.

இந்தக் குறவர் குடும்பம், சென்ற இரண்டு வருஷமாக தென்னார்க்காடு ஜில்லாவில் சுற்றி அலைந்து விட்டு, நேற்று இந்த மாயவரம் காவேரிக் கரைக்கு வந்து டேரா போட்டிருக்கிறது. இங்கே ஓரிரு வாரங்கள் தங்கி விட்டு, குத்தாலம் புறப்படுவதாகத் திட்டம். இது நிச்சயத் திட்டமல்ல; திடீரென திசை மாறியும் போகலாம்!

இன்று மாலை இந்த நரிக் குறவர் குடும்பத்தில் ஒரு விசேஷ நிகழ்ச்சி நடைபெற இருக்கிறது.

ஆமாம்; பாடிகோடாவுக்கும், ஆடிகோடிக்கும் இன்று கல்யாணம்! இதற்காகத் தான் பாடிகோடா நரி வேட்டைக்குப் போயிருக்கிறான்....!

குறவர் இனத்தில் ஒருவன் ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்றால், அவன்

தன் கையாலேயே ஒரு நரியைக் கொன்று, அதன் பல்லை எடுத்து வந்து தாலியாகக் கட்டவேண்டும்; இது அவர்களின் பழக்கம்; கண்டிப்பான சட்டம்.

பாடிகோடா இன்று எப்படியும் ஒரு நரியை அடித்துக் கொண்டு வந்து விடுவான் என்று எல்லாரும் நம்பினர். அதனால் தான் மணப் பெண்ணின் சார்பில் அன்றைய விருந்துக்கெனத் தரவேண்டிய முயலைப் பிடிக்க, அவ்விரு வாலிபர்களும் தாழம்புதரைக் களைந்து கொண்டிருக்கின்றனர்!

எலிக்கண் மணிச்சரம் பின்னிக் கொண்டிருப்பவள்தான் பாடிகோடாவின் தாய். அந்த மணிச்சரம் விற்பனைக்கு அல்ல; அதுதான் ஆடிகோடிக்குக் கட்டப் போகும் தாலி! அந்தத் தாலிச் சரத்தை, மாப்பிள்ளையின் தாயார்தான் பின்னிக் கொடுக்க வேண்டும். இதுவும் அவர்கள் சம்பிரதாயம்; மாப்பிள்ளை கொண்டு வரும் நரிப்பல்லை அந்தக் கருமணிச் சரத்தில் கோத்ததும், அது தாலியாகி விடும்!

கூடாரத் துணியை ஒட்டு போட்டுத் தைத்துக் கொண்டிருக்கும் கிழவன்தான் மணப் பெண் ஆடிகோடியின் தந்தை. தாழம் புதரில் முயல் வேட்டையில் ஈடுபட்டிருக்கும் வாலிபர்கள் அவனுடைய பிள்ளைகள்.

'ஏ....ஹே....!....பாடிகோடா, லபியோ!....லபியோ!'' என்று உற்சாகமாகக் கூவினாள் முதியவள். எல்லோரும் திரும்பிப் பார்த்தனர்.

தொலை தூரத்தில், பாடிகோடா வெகு வேகமாக வந்து கொண்டிருந்தான். அவன் தோள்மீது, செத்தநரி ஒன்று தலைகுப்புறத் தொங்கிக் கொண்டிருந்தது! வலது கையில் பழைய 'மாடல் துப்பாக்கி' ஒன்றும், இடது கையில், கருவேலமரக் கழி ஒன்றும் இருந்தன. மடக்கு வலையொன்றை முதுகுப்புறம் கட்டித் தொங்க விட்டுக் கொண்டிருந்தான். ஒற்றைக் கோவணமும் பெரிய முண்டாசும் கட்டிக் கொண்டிருந்த அவன், ஐந்தாறு வடம் பாசி மணி மாலைகள் கழுத்தில் புரள, வெகு வேகமாக வந்து கொண்டிருந்தான்!

டேரா துணி தைத்துக் கொண்டிருந்த கிழவன் பரபரப்புடன் எழுந்து போய் ஒரு சூரிக் கத்தியை எடுத்து வந்து, அதை வேகமாகத் தீட்ட ஆரம்பித்தான். பவழமணி மாலைகள் பின்னிக் கொண்டிருந்த பெண்களும், கொண்டை ஊசிக் கம்பி நறுக்கிக்

கவியரங்கம்:

# பொங்கல் பெண்

**தமிழ்க்கோவன்**

காலைப்பொன் பரிதியிலும், கலப்பைத் தூக்கும்
கவினுழவர் தோள்களிலும், மலர்சிரிக்கும்
சோலையெழில் நிறத்தினிலும், அடடா எங்கும்
தோகைமயில் போல்நடக்கும் பெண்கள் காட்டும்
சேல்விழியின் சிரிப்பினிலும், புட்கள் பாடும்
தேனிசையின் இனிப்பினிலும், தோன்றிப் பின்னர்
ஞாலத்தில் புதுநடையைக் காட்டி வாழ்வில்
நடக்கின்றாள் பாரடா பொங்கல் பெண்ணாள்!

அந்தஎழில் தைப்பெண்ணை தென்னாட்டார்கள்
அன்புடனே வரவேற்றார்; வணக்கம் சொன்னார்;
சந்தமுடன் கவிஞர்கள் அவளைப் பற்றித்
தனித்தனியாய் கவிதைகளில் வாழ்த்துகின்றார்;
சிந்தித்து நான்மட்டும் அவளிடம்போய்,
தினம்பசியை சந்திக்கும் ஏழைகட்குச்
சொந்தத்தில் பொங்கலுண்டா என்று கேட்டேன்!
சிரித்தபடி எனைப் பார்த்தாள்; எங்கோ சென்றாள்!



கொண்டிருந்தவர்களும் அவரவர்கள் அப்படி அப்படியே போட்டு விட்டு எழுந்து வந்து, கல்யாணப் பெண்ணை சூழ்ந்து உட்கார்ந்து கொண்டனர்.

ஆடிகோடி நாணத்துடன் முகத்தை கோணிக் கொண்டு, தன் அருகே வந்து உட்கார்ந்திருந்த பெண்களைச் செல்லமாகப் பிடித்து மணலில் தள்ளினாள். அந்தப் பெண்கள் கேலியாக ஏதோ சொல்லி சிரித்தபடி தங்கள் கழுத்தில் கிடந்த ஏராளமான மணிகளில் ஒவ்வொன்றைக் கழற்றி ஆடிகோடியின் கழுத்தில் போட முயன்றனர். அவற்றை அவள் போட்டுக் கொள்ளப் பிரியப்படாதவள்போல் பாசாங்கு காட்டி சிலும்பினாள்; கழுத்தைத் தொடாமல் இப்படியும் அப்படியும் குனிந்து சாய்ந்து திமிறினாள்; கடைசியில், அந்த நான்கு பெண்களின் முயற்சியே பலித்தது. ஆடிகோடியின் கழுத்து நிறைய பலவர்ண மணிச் சரங்கள் புரண்டன. உண்மையில் அந்த நரிக்குறவப் பெண் இப்போது மிகவும் அழகாகவே இருந்தாள்!

தாழம்புதர் பக்கமிருந்து திடீரென அவ் வாலிபர்கள் 'ஹாய்....ஹுய்' என்று கோஷமிடும் சப்தம் கேட்டது. அவர்கள் முயற்சியும் அங்கே பலித்து விட்டது போலும்....!

பாடிகோடா வந்து சேர்ந்தான். தன் தோள் மீது கிடந்த நரியை அலட்சியமாக இழுத்து, ஆடிகோடியின் மடியில் தொபீரெனப் போட்டான். பெண்கள் 'கொல்'லென்று சிரித்தார்கள்.

சூரியன் மறைந்து இளங்காற்று தவழ ஆரம்பித்தது. நரியின் தோலை உரித்து முடித்து விட்டு நிமிர்ந்தான் கிழவன். அவன் பிள்ளைகளில் ஒருவன், நரியின் வாயைப் பிளந்து, அதன் பக்க வாட்டுகளில் ஆழமாக வேர் விட்டிருந்த இரு பற்களைப் பக்குவமாகப் பிடுங்கி, பாடிகோடாவின் தாயிடம் கொடுத்தான். அவற்றை அவள் அந்தக் கருகமணிச் சரத்தின் மத்தியில் பொருத்தி உறுதியாகக் கட்டினாள்.

"ஏ, பாடிகோடா!....ஏ, பாடிகோடா!" என்று கத்தினாள் முதியவள். பாடிகோடா சற்றுத் தொலைவில் உட்கார்ந்து கொண்டிருந்தான். ஒரு கிழவி அவனுடைய இடது மணிக்கட்டுக்கு மேலே பச்சை குத்திக் கொண்டிருந்தாள். பாம்பு உருவில் இருந்தது அந்தப் பச்சைக் குறி! இன்னொரு பெண், ஆடிகோடிக்கும் அதே மாதிரி பாம்புக்குறிப் பச்சை குத்திக் கொண்டிருந்தாள். ஆனால், அதை அவள் கையில் குத்தவில்லை; நெற்றிப் பொட்டின் வலப்பக்கச் சரிவில் குத்தினாள்.

பச்சை குத்தி முடிந்தது. கிழவன் அண்ணாந்து சுற்று முற்றும் பார்த்து விட்டு, எழுந்து நின்று ஒரு பிடி மணலை அள்ளித் தூற்றினான். மணல்

கிழக்குத் திசைப் பக்கம் பறந்தது. காற்று வீசும் திசையைத் தெரிந்து கொள்ளவே அவன் அப்படிச் செய்தான்!

காற்றடிக்கும் எதிர்த் திசையில் மேற்கு முகமாக வந்து உட்கார்ந்தாள் பாடிகோடாவின் தாய். பாடிகோடா மிடுக்காக போய், ஆடிகோடியைக் குண்டு கட்டாகத் தூக்கி வந்து தன் தாயின் மடியில் 'தொப்'பெனப் போட்டான். இதற்குள் கிழவன் கிழவியின் பக்கவாட்டில் வந்து அமர்ந்தான். ஆடிகோடி பாடிகோடாவைக் கிழவன் மடியில் தள்ளினாள்! எல்லாரும் கெக்கொலி கொட்டிச்சிரித்தனர். இப்படி உட்காருவதும் அவர்கள் கல்யாணச் சடங்குகளில் ஒன்றுதான்!

பாடிகோடாவின் தாய் மடியில் ஆடிகோடி உட்கார்ந்திருந்தாள். ஆடி

கோடியின் தந்தை மடியில் பாடி கோடா உட்கார்ந்திருந்தான். மற்ற ஆண்களும் பெண்களும் எதிரே கும்பலாக உட்கார்ந்து தகரக் குவளை களைத் தட்டித் தாளமிட்டவாறு அவர்கள் பாஷையில் பாட ஆரம்பித்தனர்.

அன்று பௌர்ணமி. வட்ட வடிவமான சந்தனச் சந்திரன் கீழ்த்திசை வானின் கர்ப்பக் கிருகத்திலிருந்து மெள்ள மெள்ள மேலேறிக் கொண்டிருந்தான். அந்தக் காவேரி ஆற்றின் பரந்த மணல் வெளியெங்கும் ஒளி வெள்ளம் பெருகிற்று.

காட்டுக் கூச்சலுக்கும் பாட்டுகளுக்கும் இடையே பாடுகோடா, ஆடி கோடியின் கழுத்தில் நரிப்பல் கோத்த

இசை ஒன்றிலேயே இன்பம் கண்டனர்.

ஆடிகோடியின் கிழத்தந்தை, தான் தைத்த கூடாரத் துணியை எடுத்துக் கொண்டு போய், தனியே ஒரு கூடாரம் அடிப்பதில் ஈடுபட்டான்.

சந்தன நிறமாயிருந்த நிலவு வெள்ளித் தட்டாக மாறி, நடு வான் சரிவில் தொற்றி வந்து விட்டிருந்தது. நீலவான் திரையில் நட்சத்திரப் பூக்கள் குலுங்கிக் கொண்டிருந்தன. அங்கொன்றும் இங்கொன்றுமாக சில அழுக்கு மேகத் துணுக்குகள் மந்த கதியில் மிதந்து கொண்டிருந்தன.

ஆடியும் பாடியும் களைத்துப்

அந்த எலிக்கண் மணிச் சரத் தாலியைக் கட்டினன்! ஒரே ஆரவாரம்!

எல்லோரும் எழுந்து போய் சாப்பிட ஆரம்பித்தார்கள். ஆடிகோடியும் பாடிகோடாவும் உணவு பரிமாறினர்கள். நாயும் பூனையும்கூட அவர்கள் மத்தியில் சமமாக உட்கார்ந்து கல்யாண விருந்தை சுவைத்து உண்டன.

விருந்து முடிந்தது. பாடிகோடாவும் ஆடிகோடியும் அருகருகே உட்கார்ந்து கொண்டு தகரக் குவளையில் தாள மிட்டபடி பாட ஆரம்பித்தனர். மற்ற ஆண்களும் பெண்களும் — கிழவர் கிழவிகள், சிறுவர் சிறுமியர் உள்பட—கூத்தாடத் தொடங்கினர்!

"ஐயா சிறுபெண் ஏழை என்மேல்
மனம் இரங்காதா?
ஐயா வயிறு வாடுதினி
சாவு வராதா—சாமி
சாவு வராதா....!"

பாட்டின் பொருளைப் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை. சுலபமான

போனவர்கள், அப்படி அப்படியே மணலில் சாய்ந்து விட்டனர். கூடாரம் அடித்து விட்டுத் திரும்பி வந்தான் கிழவன். பாடிகோடாவின் தாய் ஆடிகோடியிடம் ஏதோ சொன்னள். ஆடிகோடி எழுந்து அந்தக் கூடாரத்தை நோக்கி நடந்தாள். அவனுக்குப் பின்னே பாடிகோடாவும் சென்றான்.

கூண்டில் அடைபட்டிருந்த இரண்டு கௌதாரிகள், 'க்ளக், கிளக், கிளக்' என்று கொக்கரித்து விட்டு ஓய்ந்தன.

பொழுது புலர்ந்தது.

மண்ணும் புழுதியும் மண்டிய உடம்போடு எல்லோரும் எழுந்தார்கள். உடம்புக்குச் சுறுசுறுப்பு தர ஆண்கள் பீடியும் சுருட்டும் குடித்தார்கள். பெண்கள், வெற்றிலை பாக்கு, காசிக்கட்டி போட்டுக் குதப்பினர்கள். அவர்களிடையே பேச்சு குறைவாய் இருந்தது. அன்றைய தொழிலுக்கான காரியாதிகளில் ஒவ்வொருவர்

கவனமும் கவிந்திருந்தது. பாடிகோடா தன் துப்பாக்கியைச் சுத்தப் படுத்திக் கொண்டிருந்தான். கிழவன் முன்தினம் மாலை உரித்த நரித்தோலைப் பதனிடுவதில் ஈடுபட்டிருந்தான். மற்ற ஆண்கள், கோரோசனை மாத்திரைகள் உருட்டிக்கொண்டிருந்தனர். பெண்கள், பின்னி முடித்த மணிச் சரங்களை ஒரு சிறு கோலில் கட்டித் தொங்க விட்டுக் கொண்டிருந்தனர். ஆடிகோடியும் அதே வேலையில் முனைந்திருந்தாள். அவள் பார்வை அடிக்கொரு தரம் பாடிகோடாவின் பக்கம் திரும்பித் திரும்பி வந்து கொண்டிருந்தது.

நேற்றெல்லாம் வறண்டு காய்ந்து கிடந்த காவேரியின் நடுப் பகுதியில் மணலை அரித்துக் கொண்டு கொஞ்சமாகத் தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது. தண்ணீர் ஓடும் வாய்க்காலின் அகலம் ஓரடிகூட இருக்காது. வாலாகக் கிழித்து விடப்பட்ட நீலத் துணி போல பள்ளமான பக்கமெல்லாம் மெலிவுடன் நெளிந்து வளைந்து நீர் ஓடிக் கொண்டிருந்தது. அதன் இரு பக்கமும் இரண்டு மூன்று கஜ தூரத்திற்கு மணல் நனைந்து ஈரமாகி 'சொத சொதத்து' விட்டிருந்தது.

இளஞ் சூரியனின் கதிர்களில் கொஞ்சங் கொஞ்சமாக உஷ்ணம் ஏறியது. ஆற்றின் இரு கரைகளிலுமிருந்த நாவல் மரங்களும், மூங்கில் போத்துகளும் அவற்றைச் சிறுகச் சிறுகக் குறுக்கிக் கொண்டிருந்தன.

வாலிபப் பெண்களும் ஆண்களும் அவரவரின் விற்பனைப் பொருள்களை எடுத்துக் கொண்டு ஒவ்வொரு திசையை நோக்கி நடையைக் கட்டினர். பாடிகோடா தன் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு கூறை நாட்டுப் பக்கம் கிளம்பினான். போவதற்கு முன்னால் ஆடிகோடியிடம் கொஞ்சம் வெற்றிலை பாக்கு வாங்கிப்போட்டுக் கொண்டு சென்றான். நேற்றைய கல்யாண நிகழ்ச்சியை இன்று எல்லோருமே துப்புரவாக மறந்து விட்டது போல் தோன்றியது. அதைப் பற்றி யாருமே எதுவுமே பேசவில்லை. மாப்பிள்ளை பாடிகோடா கூட எவ்விதச் சலனமுமின்றி எப்போதும் போல் எழுந்து வழக்கம் போல் தன் வேலைகளைக் கவனித்துக் கொண்டுபோய் விட்டான். ஆனால் ஆடிகோடி....? அவளிடம் மட்டும் நேற்றைய நிகழ்ச்சி ஏதோ ஒரு மாற்றத்தை உண்டு பண்ணியிருந்தது.

அந்த மாற்றம், இன்னதென இனம் கண்டு கூற முடியாது. எனினும் மாறுதல் மட்டும் இருப்பதாகத் தோன்றியது.

ஆடிகோடியும் வியாபாரத்திற்குக் கிளம்பினாள். வித விதமான மணிச் சரங்களும், தையல் ஊசியும் கொண்டை ஊசியும் அவளிடம் இருந்தன. இவை தவிர வேறு பல சில்லரைச் சாமான்களையும் ஒரு 'ஜோல்னா' பையில் நிறைத்துத் தோளில் மாட்டிக்கொண்டான். இன்னொரு தோளில் ஒரு தகரக் குவளை தொங்கியது. அதில் கொஞ்சம் வறுத்த ஈசலை வாரிப் போட்டுக் கொண்டாள். வழி நடைக்குச் சிறு தீனி வேண்டுமல்லவா?

சிலுசிலுத்து ஓடும் வாய்க்காலில் ஒரு கை நீர் அள்ளிக் குடித்து விட்டுப்

**படித்ததைப் படியுங்கள்:**

பாரதிதாசன்

காலையிளம் பரிதியிலே அவளைக் கண்டேன்;
கடற்பரப்பில் ஒளிப்புனலில்கண்டேன்; அந்தச்
சோலையிலே, மலர்களிலே, தளிர்கள் தம்மில்
தொட்டஇடம் எலாம் கண்ணில் தட்டுப்பட்டாள்;
மாலையிலே மேற்றிசையில் இலகுகின்ற
மாணிக்கச்சுடரிலவள் இருந்தாள்; ஆலஞ்
சாலையிலே கிளைதோறும் கிளியின் கூட்டந்
தனிலந்த 'அழகெ'ன்பாள் கவிதை தந்தாள்!

—அழகின் சிரிப்பு

புறப்பட்டாள் ஆடிகோடி. கிழவனும் கிழவியும் இன்று வெளியே போக வில்லை. பவழமணி மாலை பின்னிக் கொண்டிருந்த கிழவி தன் மருமகளைப் பார்த்து ஏதோ கூவிச் சொன்னாள். அதே வார்த்தையைக் கிழவனும் சொன்னான். ஆடிகோடி தலையாட்டிக் கொண்டே நடந்தாள். அவளுடன் ஒரு நாய் கொஞ்ச தூரம் ஓடி, பிறகு திரும்பி வந்து விட்டது.

காசிக்கட்டி போட்டுப் போட்டுக் கரகரத்துப் போன தடித்த குரலால் "ஏ....பாசிமணி, பச்சைமணி, ஊசி மணி, கடுகுமணி வாங்கலியோ ஆயோ!" என்று ஓசையாகக் கூவிய படி நடந்தாள் ஆடிகோடி.

மாயவரம் ஜங்ஷனை அவள் அடையும்போது மணி பதினொன்றாகி விட்டது. வெய்யில் வறுத்துக் கொட்டித் தீய்த்துக் கொண்டிருந்தது. அதையெல்லாம் அவள் சட்டை செய்யவே இல்லை. ஈசல் வறுவலைத் தின்று கொண்டே வியாபாரத்தில் கவனமாயிருந்தாள்.

ஸ்டேஷனை ஒரு சுற்றுச் சுற்றியாகி விட்டது. காலணுவுக்கு ஆறு ஊசிகள் விலையாயின. குறுங் கோலில் தொங்கிய மணிச் சரங்கள் அப்படியே இருந்தன.

ஸ்டேஷனுக்குத் தென்மேற்கே சித்தக் காட்டில் அன்று சந்தை கூடும் தினம். ஆடிகோடி சந்தை மைதானத்தை நோக்கி நடந்தாள்.

அங்கு ஏற்கெனவே வேறு ஒரு நரிக்குறவர் கூட்டம் வந்து டேரா போட்டுக் கொண்டிருந்தது. சந்தையில் அவர்கள் மூலைக்கு மூலை உட்கார்ந்து மும்முரமாக வியாபாரம் செய்து கொண்டிருந்

தனர். அவர்களிடம் சில புதிய பொருட்களும் இருந்தன. பலவகையான பட்சிகளைக் கொன்று அவற்றின் இறகுகள் நீக்கிய உடல்களை ஒரு பெரிய டபராவில், ஏதோ ஒரு வகை எண்ணெயில் போட்டு ஊற வைத்திருந்தார்கள். கருஞ் சிவப்பு நிறமாயிருந்த அந்த எண்ணெயைச் சிறு சிறு பாட்டில்களில் ஊற்றி அடைத்து 'சர்வரோக நிவாரணத் தைலமாக' விற்றுக் கொண்டிருந்தார்கள்.

அதெல்லாம் வெறும் புரளி என்று ஆனால், ஆடி கோடிக்குத் தெரியும்! அந்தத் 'தைலம்' நன்றாக விற்பனையாகிக் கொண்டிருந்தது. வேறு சிலர், ஏதேதோ காட்டு வேர்களையும் இலைகளையும் பரப்பி 'தாதுபுஷ்டி மூலிகை'களாக விற்றுக் கொண்டிருந்தார்கள். அவையும் நன்கு செலவாயின!

ஆடிகோடி சந்தையைச் சுற்றிச் சுற்றி வந்தாள். ஒன்றரையணாவுக்கு ஒரு மணிச்சரம்; அரையணாவுக்கு இரண்டு கொண்டை ஊசிகள் விலையாயின. அதற்குமேல் ஒன்றும் செலவாகவில்லை. காலணாவுக்கு வேர்க்கடலை வாங்கிப் பையில் போட்டுக் கொண்டு மீண்டும் ஸ்டேஷனை நோக்கிப் புறப்பட்டாள். சந்தை நடைபாதையில், கழித்துப் போட்ட இரண்டொரு கருப்பங் கழிகள் கிடந்தன. அவற்றை எடுத்துக் கடித்துக் கொண்டே நடந்தாள்.

மாலை மணி நான்கும் ஆகிவிட்டது. இதற்கு மேலும் இங்கே இருந்தால் பயனில்லை என்று எண்ணி, கூறை நாட்டை நோக்கிப் புறப்பட்டாள். என்றுமே அவள் இன்றுபோல் இவ்வளவு தூரம் அலைந்தது கிடையாது. எங்காவது ஒரு மரத்தடியில், அல்லது தெருவோரம் உட்கார்ந்து, விற்றவரையில் முடித்துக் கொண்டு பொழுதோடு எழுந்து போய் விடுவாள்.

ஆனால், இன்று அப்படிப் போய் விட அவள் மனம் இடந்தரவில்லை. அதற்குக் காரணம், அவளுடைய புதுக் கணவன் பாடிகோடாதான்! பாடிகோடாவுக்கு இன்று தன் கையால் ஏதாவது ஹோட்டல் பொட்டலம், அல்லது மிட்டாய்க் கடை பட்சணம் வாங்கிக் கொண்டு போய்க் கொடுக்க வேண்டுமென்று அவளுக்குக் கொள்ளை ஆசையா யிருந்தது; அதனால்தான் ஆடிகோடி இந்த அலைச்சல் அலைந்து கொண்டிருந்தாள்!

அவள் காசுக்கடை தெருப் பக்கம் நடந்து கொண்டிருந்தபோது, ஒருவன் தமுக்கு அடித்தபடி எதிரே வந்து கொண்டிருந்தான்.

"டும்....!....டும்!....டும்! வரவாரம்' முளுக்குத் திருவிளாவுக்காவ, இன்னியிலே யிருந்து காவேரிலே தண்ணி விடப்படுது!....டும்! டும்!....டும்!...."

ஆடிகோடியை நிறுத்தி, ஒரு கிராமப் பெண், பாசிமணிச் சரமொன்றை விலை கேட்டு, வாங்காமலே போய் விட்டாள். எரிச்சலுடன்

Branches:
17, South Mada Street, Mylapore.
133, Arcot Road, Vadapalani.

வேகமாக நடந்தாள் ஆடிகோடி. தமுக்குச் சத்தம் தொலை தூரத்தில் சென்றும் கேட்டது. ஆனால் அவன் கத்தியது ஒன்றும் கேட்கவில்லை!

கூறைநாடு பஸ் ஸ்டாண்டை அவள் நெருங்கும்போது மணி ஆறு. இருள் இன்னும் முகம் காட்டவில்லை. ஆனால் தெரு விளக்குகளும், கடை விளக்குகளும் ஏற்றப்பட்டு விட்டன.

பொறையார் மார்க்கமாகத் தரங்கம்பாடிக்குச் செல்லவிருந்த இரண்டு 'டீஸெல்' பஸ்கள் தயாராக நின்று கொண்டிருந்தன. அந்தப் பஸ்களில் பெரும்பாலும் கிராம ஜனங்களே சந்தையில் வாங்கிய சாமான்களுடன் நிறைந்திருந்தனர்.

"ஏ....பச்சைமணி, பாசிமணி, கருகமணி, ராஜாத்திமணி வாங்கலியோ ஆயே!" என்று உற்சாகமாகக் கூவிக் கொண்டே ஒவ்வொரு பஸ்ஸையும் சுற்றிச் சுற்றி வந்தாள் ஆடிகோடி. அங்கேயும் அவள் அதிர்ஷ்டம் முகம் மறைத்துக் கொண்டு விட்டது. குரல் கம்மிப் போனதால், மேலும் கத்த முடியாமல், தெருவின் ஓர் ஓரமாக வந்து நின்று விட்டாள். வருத்தம் அவள் பசியைக் கிளறியது. சந்தையில் வாங்கிப் போட்ட வேர்க்கடலையை எடுத்து வைத்துக்கொண்டு கொறிக்க ஆரம்பித்தாள்.

இந்தச் சமயத்தில்:

ஓர் அழகிய வாலிபன் அவள் அருகில் வந்து நின்றான். அவன் அவளை ரொம்ப நேரமாகக் கவனித்துக் கொண்டிருக்கிறான் என்று அவனுடைய முகத்தோற்றம் அறிவித்தது. சற்று நெட்டையாகவும், ஒடிசலாகவும் இருந்தான். துல்யமான வேஷ்டியும், சில்க் ஜிப்பாவும் அணிந்திருந்தான். படித்தவர்களுக்கு உரிய மென்மை அவன் முகத்தில் தவழ்ந்தது. தோளில் ஒரு போட்டோ காமிரா தொங்கிக் கொண்டிருந்தது.

பச்சை வேர்க்கடலையை 'நசக், நசக்'கென மென்று கடைவாயில் பால்வழியத் தின்று கொண்டிருந்தாள் ஆடிகோடி. அந்த வாலிபன் அவளை மாசற்ற விதமாக ஒருமுறை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, "ஏ ஆயி!....உன்னிடம் ஊசி இருக்கா.... ஊசி?" என்று கேட்டான்.

ஆடிகோடி சட்டென அந்த வாலிபன் பக்கம் திரும்பினாள். அவனைப் பார்த்ததும் அவள் முகம் வியப்புக் குறி காட்டியது. அவனா அந்த நரிக்குறத்தியிடம் ஊசி வாங்கப் போகிறான்?

"இருக்கு சாமி! வேணுங்களா?" அவள் குரலில் அவநம்பிக்கை தொனித்தது.

"டஜன் என்ன விலை?"

"நாலு பைசா ஸாமி!"

"ஓரணாதானா?" அவன் மெல்ல முறுவலித்தான்.

ஆடிகோடியின் முகம் சுருங்கியது.

"என்ன ஆயி, பேசாம நிக்கறே? ஊசி இல்லையா?" என்று மீண்டும் அந்த வாலிபன் கேட்டான். அவனுடைய கண்கள் ஆடிகோடியின் தோற்றத்தை அளந்து கொண்டிருந்தன.

"என்னிடம் ஷாப்பு ஊசி இல்லே ஸாமி!'' என்று சொல்லிக் கொண்டே அங்கிருந்து போக எத்தனித்தாள் ஆடிகோடி.

"இந்தா, இங்கே பாரு!''

அவள் நின்று திரும்பினுள்.

"நீ ஒரு உதவி செய்வியா?''

வியப்புடன் அவனை ஏறிட்டுப் பார்த்தாள் ஆடிகோடி.

"உன்னை ஒரு போட்டோ எடுத்துக்கிறேன்!....அதுக்கு அஞ்சு ரூபா தர்றேன், அஞ்சு ரூபா!''

அவளுக்கு அவன் சொன்னது ஒன்றும் புரியவில்லை.

"என்ன முழிக்கிறே? பயப்படறியா?....இதோ பாரு! உன் ஜாதிக்காரன் ஒருவனை போட்டோ எடுத்திருக்கிறேன்; அவனுக்கு மூணு ரூபாதான் கொடுத்தேன்!'' என்று சொல்லிக் கொண்டே, தன் ஜேபியிலிருந்து ஒரு போட்டோ படத்தை எடுத்து அவளிடம் காட்டினுன் அந்த வாலிபன்.

ஆடிகோடி அந்தப் படத்தைப் பார்த்ததும் ஆச்சரியப்பட்டுப் போனுள். அவளுடைய வாய், 'பாடிகோடா!' என முனகியது. ஆம்; பாடிகோடாதான் அந்தப் படத்தில், மிரண்டு போய் நின்று கொண்டிருந்தான்! அந்த உருவத்தைப் பார்த்ததும் அவளுக்குக் குபீரெனச் சிரிப்பு வந்து விட்டது.

"இதை எங்கே புடிச்சே ஸாமி?' என்று குழந்தைபோல் சிரித்துக் கேட்டாள் ஆடிகோடி.

"இங்கேதான்; இன்னிக்குக் காலம்பற!'' என்று நகைத்தான் வாலிபன்.

"அது ஒண்ணும் பயப்படலீயா?''

"ஏன் பயப்படணும்?''

அவள் என்னென்னவோ நினைத்தாள். ஆனுல், அதையெல்லாம் சொல்ல அவளுக்குத் தெரியவில்லை.

"எதுக்கு ஸாமி இந்தப் பொம்மை?''

"சும்மாதான்! என் கடையில் அழகா மாட்டி வைக்க!''

அவளுக்கு ஒரே பெருமை: 'நானும் என் பாடிகோடாவும் அவ்வளவு அழகா யிருக்கிருேமா!'

"சரி நேரமாகிறது!....'' என்ருன் வாலிபன்.

"ஐஞ்சு ரூவாவா கொடுப்பீங்க?''

"ஆமாம். வா, போகலாம்.''

"எங்கே?''

"அதோ, எதிரில் இருக்கும் என் கடைக்கு!''

"இங்கேயே எடுக்க முடியாதா?''

"இருட்டிப் போச்சு, விளக்கு வெளிச்சம் வேணும்!''

ஆடிகோடிக்கு உள்ளூர சற்றுக் கலவரமாக இருந்தது. ஆனுல், தன் பாடிகோடாவுக்கு நிறைய பொட்டலம் வாங்கிப் போகலாம் என்ற ஆசை அவளை உந்தித் தள்ளியது. இயற்கையிலேயே பயமின்றி வளர்ந்து வாழ்ந்து வரும் அந்த நாடோடிக் குறப் பெண் தைரியமாக அவனுடன் சென்ருள்.

ஆடிகோடி போட்டோ ஸ்டுடியோவிலிருந்து வெளியே வரும்போது இரவு மணி எட்டரையாகி விட்டது. வியாபாரிகளெல்லாம் கடைகளை ஏறக் கட்டிக் கொண்டிருந்தார்கள்.

"இந்தா, ஐஞ்சு ரூபா!''

"வெத்திலே சருவுக்குப் பைஸா கொடு ஸாமி!

அந்தப் போட்டோக்கலைஞன் சிரித்துக் கொண்டே மீண்டும் இரண்டணு கொடுத்தான். ஐந்து ரூபாயைவிட இந்த இரண்டணு அவளுக்குப் பெரிதாகத் தோன்றியது!

ஆடிகோடி பரபரப்புடன் பஸ் ஸ்டாண்டுக்கு ஓடிப்போய் ஒரு டீ கடையில் இரண்டு பகோடா பொட்டலங்களை வாங்கித் தன் பையில் போட்டுக் கொண்டாள். ஐந்து ரூபாயை மாற்ற அவளுக்குத் தெரியாது. எனவே, அதை வெளியே எடுக்கவில்லை.

இப்போது எந்தப் பக்கம் போனுல் காவேரிக் கரையை அடையலாம் என்று நிதானித்துப் பார்த்தாள்.

அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. வந்த வழியே திரும்பி வேகமாக நடந்தாள்.

தபாலாபீஸ் பக்கம் வந்தபோது, இடம் புறம் ஒரு சந்து தெரிந்தது. அந்தச் சந்தில் திரும்பி வடக்கு நோக்கி நடந்தாள்.

ஆடிகோடியின் மனத்தில் வேறெந்தப் பயமும் இல்லை. ஆனால் அந்த ஒரு விஷயத்தை எண்ணிய போதுதான் அவள் நெஞ்சு நடுங்கியது.

ஆம்; நரிக்குறவர் இனத்தில் ஒரு கடுமையான வழக்கம் உண்டு. கல்யாணமான பெண்கள் வெளியே போனால், எங்கே வேண்டுமானாலும் சுற்றி விட்டு, இரவு பன்னிரண்டு மணிக்கெல்லாம் தங்கள் கூட்டத்தோடு வந்து சேர்ந்துவிட வேண்டும். இதிலிருந்து ஒரு பெண் தவறினால், அந்தப் பெண்ணின் கணவன் அவளை மனைவியாக ஏற்றுக் கொள்ள மாட்டான்! இன்று காலை அவள் புறப்பட்டபோது அந்தக் கிழவனும் கிழவியும் இதைத்தான் தங்கள் பாஷையில் சொல்லி அவளை எச்சரித்து அனுப்பினார்கள்....!

சுதந்திரப் பூங்காவில், முனிசிபாலிடியார் பொருத்தியிருக்கும் மின்சாரச் சங்கு, மணி ஒன்பது என்பதை நீட்டி முழக்கி விட்டு ஓய்ந்தது.

ஆடிகோடியின் நடையில் இப்போது அசுர வேகம் ஏறி இருந்தது. ஓட்டமும் நடையுமாக அவள் விரைந்து கொண்டிருந்தாள். அந்தப் பகுதியில் ஜனங்கள் நடமாட்டம் அடங்கி விட்டது. சில வீடுகளில் விளக்குகளும் அணைந்து விட்டன. ஆனால், நிலவின் ஒளி பாலாகப் பொழிந்து கொண்டிருந்தது. அந்தச் சிறிய சந்தில் படிந்திருந்த நிழலையும் வெளிச்சத்தையும் மிதித்துக் கடந்து ஓடிக்கொண்டிருந்தாள் ஆடிகோடி. அவளுக்குப் பூரண நம்பிக்கை இருந்தது, நடு ஜாமத்திற்குள் தன் கூட்டத்தோடு போய்ச் சேர்ந்து விடலாம் என்று. ஆனால், அந்தப் பாழாய்ப் போன ஆற்றோரம் இன்னும் நெருங்கவில்லையே....?

எங்கோ தொலைதூரத்தில், அந்தப்

HEWLETT'S
MIXTURE

ஹியூலெட்ஸ்
மிக்ஸர்

60 ஆண்டுகளுக்கு மேலாக இந்த ஔஷதம் அஜீர்ணம், வயிற்றுக் கோளாறுகள், நெஞ்செரிச்சல், வாயு பொருமல் புளிப்பு, குடல் வியாதிகள் இவற்றிற்கு முக்கிய பரிகாரமாக உலக முற்றிலும் பெயர் பெற்று விளங்கி ல்ருகிறது. அபினி சேர்த்தும், அல்லாமலும் 4 அவுன்ஸ், 10 அவுன்ஸ் அளவுகளில் எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

C. J. HEWLETT & SON
(INDIA) PRIVATE LTD.,
MADRAS-3.

தமுக்கு அடிப்பவனின் தமுக்குச் சப்தம் லேசாகக் கேட்டது....!

ஆடிகோடி காவேரிக் கரையை எட்டி விட்டாள். அவள் நெஞ்சம் மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தது. உயரமான கரை மேட்டின் மேல் விழுந்தடித்துக் கொண்டு ஏறி நின்றுள்.

இது என்ன ஆச்சரியம்! எந்த ஆற்றங்கரைக்கு அவள் வந்து விட்டாள்? இது காவேரிக் கரையா? அல்லது வேறு ஏதேனும் ஆற்றங் கரையா?

திகைத்து நின்று விட்டாள் ஆடிகோடி. ஆற்றின் இரு பக்கங்களையும் அணைத்து அலைமோதி கொண்டு ஓடியது தண்ணீர். வெள்ளம் போல் புரண்டு சென்ற புதுஜலத்தை வெள்ளிக் குழம்பாக்கிக் கொண்டிருந்தாள் சந்திரிகை.

மரமாக நின்றிருந்த ஆடிகோடியின் நெஞ்சில் ஒரு பெரிய காட்டாறே உடைப்பெடுத்து விட்டது. கரைமேல் இப்படியும் அப்படியுமாக ஓடி ஓடித் திரும்பி வந்தாள். ஓர் இடத்தில் நிதானமாக நின்று எதிர்க் கரையை ஊடுருவிப் பார்த்தாள். சந்தேகம் இல்லை; அவள் நின்றிருக்கும் நேர் எதிர்க் கரையில்தான் அவர்கள் கூட்டம் கூடாரம் அடித்திருந்தது. அதன் அருகே இருக்கும் அந்தத் தாழம் புதரில்தான், நேற்று மாலை அவள் அண்ணன்மார்கள், கல்யாண விருந்துக்கென முயல் வேட்டை ஆடியது. ஆனல்....ஆனல்....அந்த இடம் இப்போது ஜலக் காடாகி விட்டிருக்கிறதே? அவர்கள் கூடாரங்கள் எங்கே? அந்த நரிக்குறவர் குடும்பம் எங்கே?

"ஏ....பாடிகோடா!...."

ஆடிகோடி தன் தொண்டையிலிருந்த சக்தி எல்லாவற்றையும் கூட்டிச் சேர்த்துக் கத்தினள்.

இச் சமயத்தில், அவளுக்கு ஒரு விஷயம் நினைவுக்கு வந்தது. இப்படி யாரேனும் ஒரு பெண் வெளியே போய்த் திரும்பி வருவதற்குள், திடீரென எங்கேனும் வெள்ளம் குறுக்கிட்டால், அவள் அந்தக் கரையிலிருந்து அடிக்கொருதரம் குரல் கொடுத்துக் கொண்டிருப்பாள்! இப்படி இருவரும் மாறி மாறி அன்று இரவெல்லாம் கூவிக் கொண்டிருக்க வேண்டும். பொழுது புலர்ந்ததும் எப்படியோ அவள் அவனுடன் போய்ச் சேர்ந்து விடுவாள். அப்படிச் செய்து சேர்ந்தவள் தன் கற்பை இழந்தவளாக மாட்டாள்; அவளை அன்புடன் வரவேற்றுக் கொள்வார்கள்! இதை எண்ணித்தான் ஆடிகோடி இப்படிக் கூவினள்.

"எ....பாடிகோடா!...."

எதிர்த் திசையிலிருந்து ஒரு பதிலும் வரவில்லை. ஆற்றின் ஜலப் பெருக்கின் இரைச்சல்தான் அந்தப் பிரதேசத்தில் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

மணி பதினென்று. உச்சி வானில் ஏறி விட்டது நிலவு. இன்னும் ஒரு மணி நேரத்திற்குள், ஆடிகோடி தன் கூட்டத்தாரிடம் சேர்ந்திருக்க வேண்டும்! இல்லையானல்?....

அவள் உடல் நடுங்கியது. இருதயம் நெஞ்சுக் கூட்டில் வேகமாக மோதியது. மரப் புதர்களில் மண்டிக் கிடந்த இருள் அவளை மேலும் பயமுறுத்தியது. ஜாமக் காக்கைகள் செட்டையைச் சிலுப்பி உதறிப் பயங்கரமாகக் கரைந்து ஓய்ந்தன. தாழங் காட்டில் மடல் விரியும் பூவின் மணம் காற்றில் கலவை யிட்டு வந்தது.

ஆடிகோடி மீண்டும் கத்தினள்:

"ஏ, பாடிகோடா!....ஹே....பாடிகோடா!...." பதிலே இல்லை.

எங்கோ ஒரு கோயிலிலிருந்து ஜாம கால பூஜை மணியோசை கேட்டது. அதைத் தொடர்ந்து ஒரு நாயின் குரைப்பொலியும் மெல்லென இழைந்து வந்தது.

அந்த நாய்க் குரைப்புச் சத்தத்தை உற்றுக் கேட்டாள் ஆடிகோடி. மீண்டும் அதே நாய் குலைத்தது. அவள் முகம் கொஞ்சம் கொஞ்சமாக மலர்ந்தது. நெஞ்சின் துடிப்பு சற்றே அடங்கியது.

சந்தேகமில்லை. அது அவளுடைய நாயின் குரல் தான்!

அவள் கும்பலும் பத்திரமாக இருக்கிறது. ஆற்றில் ஜலம் வந்து விட்ட

தால், அவள் கூட்டத்தார் சற்று தள்ளிப் போய்க் கூடாரம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள் போலும்!

ஆனால், ஆடிகோடி அவர்களிடம் எப்படிப் போய்ச் சேருவது? அவள் இத்தனை முறை கத்திக் கூப்பிட்டும் அது அவர்கள் காதில் விழவில்லையே? விழுந்திருந்தால், பாடிகோடா பதில் கொடுத்திருப்பானே?........மீண்டும் அவள் பயந்து நடுங்கினாள். நடு ஜாமம் நகரப் போகும் நேரமும் நெருங்கி விட்டது....!

ஆடிகோடி துணிந்து விட்டாள். ஆற்றில் இறங்கி, அந்தக் கரையை அடைந்து தன் கூடாரத்தை நோக்கி ஓடி விடுவது என்று தீர்மானித்து விட்டாள். அதே வேகத்தில் மளமள வெனக் கரையை விட்டுக் கீழே இறங்கி, நீரில் காலையும் வைத்து விட்டாள்.

அப்பப்பா! அசுர பலத்துடன் அல்லவா தண்ணீர் பிய்த்துக் கொண்டு ஓடுகிறது?....ஆனால், ஆடிகோடி இப்போது பயப்படவில்லை. ஏதோ ஓர் ஆவேசம் வந்தவள் போல் நீரில் இறங்கி எதிர் நோக்கி நடக்க ஆரம்பித்து விட்டாள்.

இடுப்பளவு நீரை எட்டி விட்டாள் ஆடிகோடி. அதற்குமேல் முன்னேறு வது சிரமமாகி விட்டது. வேகத்தோடு ஓடிய நீர் அவளையும் சேர்த்து இழுத்துத் தள்ளிக் கொண்டு போக முயன்றது. அவள் தன் பலத்தை எல்லாம் ஒன்று சேர்த்து மணலில் ஊன்றி நின்று கொண்டு முன்னே நகர முயற்சி செய்தாள். முடிய வில்லை! காலடியிலிருந்த மணல் பறி யுண்டு அவளை உள்ளே அழுத்தியது.

“ஓ....பாடிகோடா!'' என்று அல றிக் கூவினாள் ஆடிகோடி.

என்ன ஆச்சரியம்! பாடிகோடா வின் பதில் எங்கோ இருந்து மிக லேசாகக் கேட்டது.

“ஏ....ஆடிகோடி....!''

ஆடிகோடி எல்லையற்ற மகிழ்ச்சி யால், நீரில் இருந்தபடியே ஓர் எம்பு எம்பிக் குதித்தாள். அடுத்த கணம் தடுமாறித் தண்ணீரின் வேகத்தோடு தள்ளிக் கொண்டு போனாள்; உதறித் திரும்பினாள்; முடியவில்லை! இறங் கிய கரைக்கே ஏறிப் போய்விடத் தாவினாள். கால்கள் இழுபறிப்பட்டு பின்னுக்குப் போயின! முன்னே வளைத்து எதிர்க் கரையை நோக்கித் திமிறிப் பாய்ந்தாள். ஆழம் அவளைக் கீழே அழுத்த, நீரின் வேகம் சுழற்றி இழுத்தது!

“ஏ, பாடிகோடா....!'' அலறினாள் அவள்.

“ஓ........ஆடிகோடி!''—ஆற்றின் எதிர்க் கரையிலிருந்து பாடிகோடா வின் குரல் தெளிவாகக் கேட்டது.

கழுத்தளவு தண்ணீரில் சிக்கி அழுந்தி இழுப்பறி பட்டுக் கொண்டி ருந்த ஆடிகோடி, கொஞ்சமாகத் தலை யைத் தூக்கிப் பார்த்தாள்: “பாடி கோடா....!''




கோனார்: எனது மாட்டுப் பண்ணையே! பால்தரும் கற்பக விருக்ஷமே!! பால் பவுடரே! நீ, பிரதி தினமும் எப்பொழு தும்போல் பால் தந்து காத்து வரணும் அப்பனே!!!

அவளை நோக்கி ஓர் உருவம் நீரைக் கிழித்து நீந்தி வருவது நிலவொளியில் நன்றாகத் தெரிந்தது.

“ஆடிகோடி!....''

“பாடிகோடா!....''

திடீரென நீரில் ஒரு வெட்டுச்சுழல். அடுத்த கணம், நீந்தி வந்த அந்த உரு வைக் காணோம்!....தலை மட்டுமே தெரிந்த ஆடிகோடியையும் இப்போது காணோம்!....

தொலை தூரத்தில், ஆற்றுப் பெருக் கின் சுழல் வீச்சிலே, இரு கரிய நிழல் கள் ஒன்றாக மிதந்து செல்வது, நில வின் தூய ஒளியில் இலேசாகத் தெரிந்தது!

1910லிருந்து பிரசித்தம்.

அமர்கோஸ். ஜாமா ஆயில். ஜாமா ரப். ஜாமா இன்ஹேலர்.

# ஜாமா

உயர்ந்த தன்மைக்கும் உடனடியான குணத்திற்கும் பிரபலமானது.

ஜாமா இருமல் சர்ப்பத், ஜாமா லிக்விட், ஜாமா மாத்திரை, ஜாமா லினிமென்ட், ஜாமா பேஸ்டில்ஸ்

## அமர்சந்த் சோபாசந்த்

மருந்து தயாரிப்பாளர்கள்

த. பெ. எண் 518, சென்னை-3.

ரூ. 88.75 க்கு ரூ. 100/-

மதிப்புள்ள ஒரு

3

வருஷ காஷ் சர்டிபிகேட்

நீங்கள் பெறலாம்.

# தி
# இந்தியன் பாங்க்
# லிமிடெட்

தலைமை ஆபீஸிலும்
அதன் 23 உள்ளூர் ஆபீஸ்களிலும்,
115 கிளைகளிலும் இந்த சர்டிபிகேட்டுகள்
கிடைக்கும்.

முக்கிய அறிவிப்பு:

இந்த முதலீட்டிற்கு 4.06%
தொடர் வட்டி கிடைக்கிறது.

புதுமைப் பித்தன் அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்து பதினேரு ஆண்டுகள் மறைந்து விட்டன. அவர் குடும்ப வாழ்க்கை எந்தெந்த ரீதியில் சென்றது என்பதை அறிவிக்க வேண்டுமென பலர் என்னிடம் கேட்கின்ருர்கள்.

"சம்சார பந்தத்தில் மனிதன் எப்படி நடந்து கொள்கிருன் என்பதைப் பரிபூர்ணமாகத் தெரிந்து கொள்வதற்கு ஒருவருக்குத்தான் முடியும். அம்மி மிதித்து அருந்ததி பார்த்து ஊறிய ஒரே தலையணையில் தலை சாய்க்க சம்மதித்துக் கொண்ட ஜீவனுக்குத்தான் அன்று தொடங்கிய ஒழுங்கு எந்தக் கதியில்—ஏந்த நியதியில் செல்லுகிறது என்பதைப் பரிபூரணமாகத்தெரிந்துகொள்ளச் செளகரியம் உண்டு,'' என்று புதுமைப் பித்தன் 'சித்தி' என்ற சிறுகதையில் சொல்கிருர். ஆகவேதான் பலரும் அவரது குடும்ப வாழ்க்கையை நான் அறிவிக்கவேண்டுமென எதிர்பார்க்கின்ருர்கள்.

நிறைந்த, வசிதி குறைந்த இல்லற வாழ்க்கை. விவாகமான ஒன்று இரண்டு ஆண்டுகளுக்குள் வீட்டை விட்டுத் துரத்தப்பட்ட நாங்கள் வாழ்

திருமதி புதுமைப்பித்தன்

வின் வழிதேடி பல இடங்கள் அலைந்து விட்டுச் சென்னையில் குடி புகுந்தோம். சிறுபிராயத்தில்

# என் துணைவர் புதுமைப்பித்தன் நினைவுகள்

கமலா விருத்தாசலம்

அன்று 1932 ஜூலை பதினலாம் தேதி அவர் கைத்தலம் பற்றியதிலிருந்து 1948 ஜூன் முப்பதாம் தேதி இரவு அவர் கடைசி மூச்சு அடங்கும் வரை, அவரைப் பற்றி— அவர் குடும்ப வாழ்க்கையைப் பற்றி எத்தனையோ நிகழ்ச்சிகள். ஆனல் அவற்றில் பெரும் பகுதியும் துன்பம்

தாயை இழந்த அவர் யாருடைய அன்பிலும் அரவணைப்பிலும் இல்லாமல் 'எப்படியோ யார் யாரோ வளர்த்தார்கள்' என்று புதுமைப்பித்தனே சொல்வார். அன்பு என்ற அந்தப் புனிதமான வார்த்தையே கேட்காத படி வளர்ந்த அவர் கலியாணத்திற்கு பிறகு, அதை மிகவும் சந்தோஷமாக

அனுபவித்தார் என்றே சொல்வேன். ஆகையினால்தான் அவர் என்னிடம் அளவற்ற ஆசையும் அன்பும் வைத்திருந்தார். சில சந்தர்ப்பங்களில் தாங்க முடியாத வறுமை, கஷ்டம் ஏற்படும்போது, நாளாவது சிறிது சௌகரியமாக இருக்கட்டும் என்று என்னை என் வீட்டிற்கு அனுப்பிவிடுவார். அவருடைய பிடிவாதமான வேண்டுதலை மீற முடியாமல் நானும் அநேக நாட்கள் பிறந்த வீட்டிலேயே இருக்க நேர்ந்து விடும். இதற்கு அவர் சொல்லும் காரணம், "என்னை சுற்றி வளைக்கும் தீ நாக்குகள் உன்னையும் பொசுக்கி விடக்கூடாதே என்ற பயம்தான் எனக்கு," என்பார். பிறர் துன்பப்பட காணச் சகியாத உள்ளம் படைத்தவர். தனிமையில் இருக்க விரும்பமாட்டார். என்றாலும் விதி எங்கள் இருவரையும் சேர்ந்து வாழவிடாது. நான் ஊரில் இருக்கும்போது, எனக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டால்கூட என் கடிதமில்லாமலே எப்படியோ அவர் அதை அறிந்துவிடுவார். உடனே

அமரர் புதுமைப்பித்தன்

அந்தத் தேதியை குறிப்பிட்டு என்னை எழுதிக் கேட்பார். அது சரியாகவே இருக்கும். இதை எப்படி அறிந்து கொள்ள முடிகிறது? என்பது தான் எனக்குப் புரிவதில்லை. இந்த மாதிரி சந்தர்ப்பத்தை ஒரு சமயம் அவர் எனக்கு எழுதின கடிதத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

செல்வி தினகரி

"இன்று பகல் முழுவதும் மனச் சோர்வும், சுழற்சியும் சொல்லி முடியாது; நீ மனக் கவலையாய் புத்தி பேதலித்துப் போய் என்னைத் தேடிக் கொண்டு சென்னையின் தெருக்கள் வழியாகத் தன்நினைவு இல்லாமல் நடந்து கொண்டிருப்பது போல ஒரு நினைப்பு, என்னை இன்று பல முறை அடிக்கடி வாட்ட, என்னை அறியாமலே ஆபீஸில் பலமுறை வாசலுக்கு வந்து நிற்பதும் தெருக்களை ஆராய்ந்துப் பார்ப்பதுமாக இருந்தேன். இன்று சாயங்காலம் வரை அதே ரீதியில் மனம் சுழன்றது. இந்த மாதிரி எனக்கு ஏதேனும் புரியாத விபரீதங்கள் ஓடினால், எனக்கு அங்குள்ள நிலைமை சம்பந்தமாகத்தான் பயம் ஏற்படுகிறது. இன்று உனக்கு எப்படி இருந்தது? ஏதாவது தேகத்திற்குச் சுகக் கேடோ, மனத்திற்குக் கவலை தரத்தக்க சம்பவமோ ஏற்பட்டதா? நான் இன்று எனக் குறிப்பிடுவது 4-ம் தேதி; இந்தக் கடிதாசி ஐந்தாம் தேதியன்று தேதி இடப்பட்

டாலும், நான்காம் தேதி இரவில் தான் எழுதப்படுகிறது. இந்தத்தேதியில் அங்கு உனக்கு என்ன நேர்ந்தது என்பதை உடனே எழுது. இனி நீ இங்கு என்னுடன் வந்து வாழும் பொழுது எப்படியெல்லாமோ வைத்திருக்க வேண்டும் என ஆசைப்படுகிறேன்.

'களங்கமற்ற பாசத்தின் நிலைக்களமான ஒரு ஜீவன் (குழந்தையின் மறைவு) எனக்குச் சொப்பனம் போலத்தோன்றி மறைந்துவிட்டது. அந்தச்சொப்பனுவஸ்தையின் மகிழ்ச்சியை இனியும் நீடிக்க முயலுவது உன்னைக் கொண்டுதான்! என் சொல்லாலும் செயலாலும், என்னுல் கட்டுப்படுத்த முடியாத விதியின் போக்காலும் உனக்கு இம்மியளவு சந்தோஷத்தைக் கூடக் கொடுத்ததில்லை. அதற்குப் பதிலாக நான் உன்னைத் தள்ளிய துன்பக் கேணியின் ஆழம் எட்டிப் பார்ப்பதற்கு எனக்கே பயமாக இருக்கிறது. அப்படி இருந்தும், நீ என்மீது காட்டும் வாத்சல்யம் எனக்கு இன்னும் அதிக பயத்தையே ஊட்டுகிறது. பக்கத்திலிருந்து பேசி பரஸ்பரம் துன்பத்தை ஆற்றிக் கொள்ள சீக்கிரம் வசதி செய்ய முடியாத பாவி நான். சில சமயம் என் மீது ஏற்படும் 'தன்–வெறுப்பு' நானே பயப்படும்படியாகவும், எனது உறுதியைக் குலைத்து விடும்படியாகவும் இருக்கிறது; நான் ஏதும் அசட்டுத்தனமான முடிவை ஏற்படுத்திக் கொள்ளுவேனே என்ற பயத்திலேயே, இப்பொழுது வேலை கொடுக்கும் சித்தாந்த அரசியல் சிக்கல்களில் மூளையைச் சிக்க விட்டுப் பார்க்கிறேன்.

'ஆனால், புத்தி மறுபடியும், மறுபடியும் பின் பாய்ச்சலில் அபாயகரமான எல்லையில் தாவுகிறது. காலம் என்ற வைத்தியனின் சிகிச்சையும் உன் வரவு என்ற 'நர்ஸ் வேலையுமே' என்னைக் குணப்படுத்த வேண்டும். நீ இங்கு வந்த பின்பே, எனக்கு மனத்தெளிவும் நாளா விருத்தி காரியங்களில் லயிப்பும் ஏற்பட வேண்டும்!''–இப்படியே நான் பக்கத்தில் இருந்தால்தான், அவருக்கு வேலைகள் சரியாக ஓடும் என்றே அடிக்கடிச் சொல்லுவார். தாம்பத்திய வாழ்க்கையில் சாதாரண நிலையை விட்டு ஓர் இலட்சியக் கணவராகவே திகழ்ந்தார். மனைவிக்கு ஓர் அளவுக்கு மேல் சுதந்தரம் கொடுக்கக் கூடாது; எப்போதும் அவள் கணவனுக்குத் தொண்டு செய்யும் அடிமையாகத் தான் வாழ வேண்டுமென்ற மனப்பான்மையைச் சிறிதளவுகூட அவரிடம் காண முடியாது.

வாழ்வில் தனக்கு ஒரு நியதி, மனைவிக்கு ஒரு நியதி என்ற வித்தியாசம் அவரிடம் கிடையாது. தாராளமாகச் செலவு செய்ய கையில் பணமில்லையே; அவர் ஆசைப்பட்ட பொருள்களை வாங்கி எனக்குக் கொடுக்க முடியவில்லையே என்று தான் கவலைப்படுவார். அவர் நோக்கமறிந்து நான் எதையும் கேட்டுத் தொந்தரவு கொடுக்க மாட்டேன். அவராகவே ஏதாவது வாங்க நினைத்தாலும் 'வேண்டாம்; பிறகு பார்த்துக் கொள்வோம்' என்றே சொல்வேன். சில சமயங்களில் என்னைக் கேட்காமலே எனக்கு தேவைப்படும் சில பொருள்களை வாங்கி வந்து விடுவார். 'ஏன் இப்படி நிலைமை தெரியாமல் நடந்து கொள்கிறீர்கள்? எதற்காக இவைகளை வாங்கி வந்தீர்கள்?' என்ருல்தான் அவருக்குக் கோபம் வந்துவிடும். தான் ஆசையோடு வாங்கிவரும் எந்தப் பொருளானுலும் அதைச் சந்தோஷமாகப் பெற்றுக்கொள்ளவேண்டும். ஆனுல் வீட்டுக் குடித்தனத்தில் அவர் ஒரு பச்சைக் குழந்தைக்குச் சமம். வாக்கு வழியாக ஒரு காய்கறி சாமான்கூட வாங்கிவரத் தெரியாது. ஏதோ சில சமயங்களில் அவரே வாங்கிவர நேர்ந்துவிட்டால், எந்த எந்தக் காய்கள் என்ன என்ன அளவு என்பதைச் சீட்டில் எழுதிக்கொடுத்தால், அதன்படி வாங்கி வருவார்.

சதா புத்தகங்கள் படிப்பதும் எழுதிக் கொண்டிருப்பதும்தான் அவர் வேலை. பேச்சென்ருல் அவருக்கு ரொம்பவும் பிடிக்கும். ஓரிரு சமயங்களில் இரவு இரண்டு மூன்று மணி வரைக்கூட நாங்கள் பேசிக்கொண்டிருப்போம். அவரோடு பேசிக் கொண்டிருந்தால் பொழுது போவதே தெரியாது. குடும்ப விஷயத்திலிருந்து புத்தகங்கள், எழுத்தாளர்கள், அவர்

களுடைய இலக்கியங்கள், கவிதைகள், கதைகள் என்ற பல விவரங்களும் பேச்சில் வந்து போகும். எதைப் பற்றிப் பேசினாலும் சுவைப்படப் பேசுவார். கதை எழுத உட்கார்ந்தால் ஒரே மூச்சில் அதை எழுதி முடித்த பிறகே மற்ற வேலை எதுவானாலும் அவர் கவனம் செலுத்துவார். என்னைக்கூட எப்போதும் ஏதாவது கதை எழுது என்று சொல்லிக் கொண்டே இருப்பார். வீண் வம்புப் பேச்சுகள் பேசி பொழுதைப் போக்கடிப்பதை அவர் விரும்பமாட்டார், நான் ஊரில் இருக்கும் போதுகூட எனக்கு இதைத்தான் எழுதுவார். அவர் கடிதத்தில், 'மனசை குமைய விட்டுக் கொண்டிருக்கக் கூடாது; உன் மனதைக் கவரும்படி வேறு ஏதாவது புத்தகங்கள் எடுத்து அனுப்பவா? நீ படிக்காத புத்தகங்கள் இங்கே நிறையக் கிடக்கின்றனவே? அல்லது வேறு என்ன வேண்டும்? நீ எழுதிக் கொண்டிருந்தால் நலம். அதில்தான் மனசுக்கு ஆறுதல்!' என்று எழுதுவார்.

'நாம் இரண்டு பேரும் ரொம்பக் கஷ்டப்பட்டு விட்டோம். ஆனால் கஷ்டம் மனதில் வடு ஏற்படுத்தலாம்; ஆறாத புண்ணாகி விடக்கூடாது; வடு மாறாமல் செய்ய நமது மனசு மிகவும் பண்பட வேண்டும். அப்படிப் பண்பட்டு விட்டால், நாம் இரண்டு பேரும் ஞானிகளாகி விடுவோம். ஆனால், அந்த நிலை ஒன்றும் நமக்கு வேண்டாம். சாதாரண மனிதர்களாகவே இருப்போம். வாழ்வோம்; நடப்போம்; இப்படிப்பட்டவர்களுக்கு எழுதும் திறமை இருந்தால், இந்த வடுக்கள் பெருத்த உபயோகமாகின்றன. மனத் தெளிவுடன் உலகத்தை ஒரு திடமான அபிப்பிராய அடிப்படையில் பார்க்கும்படி செய்கின்றன. அப்படிப் பார்ப்பதால் நல்ல






197659

நல்ல நிஜமான—சாகாத கதைகள் எழுத முடியும்! நீயும் இந்த விஷயத்தில் என் கூடத் தொடர்ந்து வர வேண்டும்; என்னுடன் சரி சமானமாக இருக்க வேண்டும் என்று தான் ஆசை. அதனுல்தான் உன்னை எழுது, எழுது என்று தொந்தரவு செய்கிறேன். உன் புத்தியில் எனக்கு ரொம்ப நம்பிக்கை. நீ மனசு வைத்தால் நடக்காத காரியம் கிடையாது. இப்படி இருக்கையில், ஆறுதலுக்கும் வழியுள்ள இந்த வழியை என் வார்த்தைக்காக மட்டுமல்லாமல் மேற்கொள்.

'நான் என்னதான் எழுதிக் குவித்தாலும், நீயும் ஒத்தாசை செய்தால் தானே எனக்குத் திருப்தி, மகிழ்ச்சி! நம்மைப் போல அமைந்த ஜதை இங்கோ அங்கோ யார் இருக்கிருர்கள்? நீயும் என்னைப்போல நிறைய கதைகள் எழுத வேண்டும். நிற்க, உனக்குப் பாராட்டு அளிக்க வேண்டிய விஷயம் ஒன்று. அதாவது, எதிர்பாராத இடத்திலிருந்து உன் கதைகளுக்குப் பாராட்டு வந்திருக்கிறது. முதலில் எஸ். பி. ராஜா எனக்கு வந்து சொன்னுர். இன்னும் ஒருவர், அவரை உனக்குத்தெரியாது; அவரும் உன் கதைகளுக்கு முதன்மை ஸ்தானம் அளித்தார்.'

இப்படியே அவர் பல தடவைகள் எனக்குக் கொடுத்த உற்சாகத்தாலேயே நானும் ஏதோ ஒரு சாதாரண எழுத்தாளராக இருக்க முடிந்தது.

இல்லறவாழ்க்கையில் பணவசதிக் குறைவைத் தவிர, அவர் மிகவும் திருப்தியாகவும் சந்தோஷமாகவுமே வாழ்ந்தார். பிறர் முன்னிலையில்கூட என்னிடம் அன்பாகபேசி பழகுவார். அவர் என்னேடு தாராளமாகபேசிப் பழகுவது அவர் உறவினர்களுக்குப் பிடிக்கவில்லை. 'இவ்வளவுக்கு அவன் அவளிடம் என்ன விசேஷத்தைக் கண்டான்?' என்று சொல்லிக்கொள்வார்கள். இவைகளைக் கொஞ்சங்கூட புதுமைப்பித்தன் பொருட்படுத்தமட்டார். 'நீங்கள் ஏன் அவர்கள் முன்னிலையில் என்னிடம் பேசிப்பழக வேண்டும்' என்று கேட்டால், "அது என் இஷ்டம்; என் விருப்பம். மனைவி என்ருல் அவர்கள் வீட்டுப்புழக்கடையில் கிடக்கும் கிள்ளுக்கீரை என்று நினைத்துக் கொள்வார்கள். தன் உடம்பின் நேர்பாதி என்பதை உணரவில்லை!" என பதில் செல்வார். இதற்குமேல் அவரிடம் எதை பேசுவது? அவர் சொல்வதெல்லாம் சரி என்று ஒப்புக்கொள்வதை விட வேறு வழி இல்லை. இம்மாதிரி காரணங்களாலேயே அவர் பெற்றோரிடமிருந்து எனக்குக் கிடைத்தது வெறுப்புத்தான். ஆனல் புதுமைப் பித்தன் அவர்களே எதிர்பாராத விதமாக சில சமயங்களில் என் மீது வீண்பழி விழும்படியும் செய்துவிடுவார். நாங்கள் அவர் தந்தை வீடு சென்றிருந்தோம். அப்பாவும், பிள்ளையும் பேசிக்கொண்டிருக்கும்போது "டே, நீ சென்னை திரும்பும் போது உனது சகோதரர்களில் ஒருவனை அழைத்துச் செல். அவனை படிக்க வைத்து நல்ல நிலைக்கு கொண்டு வர வேண்டிய பெறுப்பு உன்னைச் சேர்ந்தது," என்ருர். என்ன நினைப்பிலோ, ஏனே புதுமைப்பித்தன் பதில் செல்லவில்லை. மறுநாள் காலையில் இதே கேள்வியை அவர் தந்தை மறுபடியும் கேட்டார். உடனே புதுமைப்பித்தன் "பையனை அழைத்துச் செல்வதில் ஆட்சேபணை இல்லை. ஆனல் ஒவ்வொரு மாதமும் மூன்றும் தேதிக்குள் ரூபாய் நூறு அனுப்பி வைத்துவிடுங்கள்," என்ருர்.

"ஏது, நேற்று கேட்டதற்கு பேசாதிருந்தாய்; இன்று இப்படிப் பதில் சொல்லுகிருய்; தலைகாணி மந்திரமா?" என்ருர் தந்தை. நேற்றே இதே பதிலைச் சொல்லி இருக்கக் கூடாதோ? இந்தமாதிரி பல சந்தர்ப்பங்களை அவரே ஏற்படுத்தி விடுவதுடன், எனக்கும் கெட்ட பெயரும் கிடைத்துவிடும். அதே சமயம் தந்தையும், மகனும் பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்தால், அவர்களுக்குள் சிறிதளவேனும் மனக்கசப்பு இருப்பதாகவே பிறருக்குத் தெரியாது. ஆனல் தந்தையானுல் கூட தனக்கு நியாயமில்லை, சரி இல்லை என்று தோன்றுகிற விஷயம் எதுவானுலும் யாரானுலும் எடுத்தெறிந்து பேசுவதுபோல பதில் சொல்லி விடுவார்.

விவாகமாகி ஆறு ஆண்டுகளுக்கு பிறகுதான் எங்களுக்கு மக்கள்பேறு கிடைத்தது. முதல் குழந்தை பிறந்து உடனே இறந்து விட்டது. பின்பு இரண்டாண்டுகள் சென்று ஒரு பெண் குழந்தை மூன்று மாதங்கள் இருந்து இறந்து விட்டது. சகிக்க முடியாத வேதனையடைந்தோம். உடல் நலமில்லாதிருந்த குழந்தைக்கு மருந்து வாங்கிக் கொடுப்பதற்குகூட கையில் காசில்லாது திண்டாடினேம். அவர் சென்னையில் இருந்தார். இறந்த குழந்தையை அடக்கம் செய்யவும் பணமில்லை. இவைகளை நினைத்த புதுமைப்பித்தன் உள்ளம் எப்படி வாடிவதங்கித் தவித்தது என்பதை அவர் சென்னையிலிருந்து எனக்கு எழுதின கடிதத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம். சுமார் இருபத்தெட்டுப் பக்கங்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் குழந்தையின்சாவைவிட, அவர் கடிதமே என்னைக் கலக்கி மறித்தது என்றே சொல்லவேண்டும். மறுபடி ஆறுஆண்டுகள் சென்றபின், புதுமைப் பித்தன் விட்டுச் சென்ற ஒரே வாரிசு தினகரி. குழந்தை பிறந்திருக்கிறது என்ற தந்தி கிடைத்ததும், மறுநாளே புறப்பட்டு வந்து விட்டார். அவருக்குக் குழந்தைகள் என்ருல் மிகுந்த பிரியம். அதிலும் பெண் குழந்தை என்ருல் மிக மிக ஆசை, வித விதமாக அலங்கரித்துப் பார்க்கலாம் என்பார்.

தினகரியின் மீது அவருக்கிருந்த ஆசை அளவிட முடியாது. அவளோடு கொஞ்சிக் குலவக் கொடுத்து வைக்கவில்லை. குழந்தை பிறந்த நாலாவது மாதம் பூனு சென்றவர், அவளுடைய இரண்டாவது வயதில் பயங்கர நோயோடு திரும்பினுர். தகப்பன் இல்லாமல் குழந்தை வளர முடியும்; தாயில்லாவிட்டால்குழந்தைசீரழிந்து போகும் என்று அடிக்கடி சொல்லுவார். தினகரி பிறந்த வேளையோ, விதி கொடுத்த பாதையோ, அவர் சொல்லிக் கொண்டிருந்த படியே அவள் பொறுப்பை என்வசம் விட்டுச் சென்று விட்டார், அந்த எழுத்துலக மேதை திரு புதுமைப் பித்தன் அவர்கள். ❁

---


நம்பிக்கை! நாணயம்!! உத்திரவாதம்!!!

❋ சிறந்த பவுன் தங்கநகைகள்

❋ நேர்த்தியான சுத்த வெள்ளிப் பாத்திரங்கள்

❋ கைக் கடியாரங்களுக்கு

❋ இதர நூதன சாமான்களுக்கு

**ஜைன் ஜுவல்லரி கம்பெனி**

1, நாகேஸ்வரராவ் ரோடு,

தியாகராயநகர், சென்னை-17.

வார விடுமுறை வெள்ளிக்கிழமை.

வழக்கம் போல் ராஜி இன்னும் தன் வீட்டு மொட்டைமாடியில்தான் நின்று கொண்டிருந்தாள். வழக்கம் போல் வெளியே வானம் நிர்மல மாகவே இருந்தது; தெருவில் மக்கள் நடந்து கொண்டிருந்தனர். ஜீலம் நதியில் படகுகள் மிதந்து சென்று கொண்டிருந்தன.

ஆனால் ராஜி வழக்கம்போல் நின்று இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தாலும், மன நிம்மதி யற்றவளாகவே இருந்தாள். தினந் தோறும் கண்டு இன்பமுறும் இந்த அழகிய காஷ்மீரக் காட்சிகள் இன்று அவளுக்குக் கசந்தன. அவள் கண்கள் அக்காட்சிகளின் மீது இருந்த போதிலும், மனம் அவற்றில் இல்லை. அது இனமறியாமல் துடித்துக் கொண்டிருந்தது. ஒரு சிறு வார்த்தை அவள் உள்ளத்தை அப்படித் துடிக்கச் செய்து விட்டது. ஆம்; அவள் தன்னைப்பற்றி, தன் தந்தையைப்பற்றி, பெருமைமிக்க தன் குடும்பத்தைப்பற்றிப் பிரமாதமாக எண்ணியிருக்க, அவையெல்லாம் வெறும் துரும்புக்குச் சமம் என்றல்லவா பேசிவிட்டான் ஒருவன்?

அவள்—கிருஷ்ம தேவ் ஸிங்கின் ஒரே மகளான இந்த ராஜியா துரும்பு? அல்லது அந்தக் கிருஷ்ம தேவ் ஸிங்தான் துரும்பா? அல்லது அவர்களுடைய மாண்பு மிக்க குடும்பந்தான் துரும்பா?....ராஜிக்கு சட்டெனத் தன் தந்தை அடிக்கடி கூறும் சொற்கள் நினைவுக்கு வந்தன. அவர் சொல்வார்: "என் பாட்டனார் யார் தெரியுமா அம்மா, ராஜி? மகாராஜா ரம்பேர் ஸிங்கின் மைத்துனியின் மருமானின் சிறந்த நண்பராக்கும்!" ஒரு மகாராஜாவின் குடும்பத்துடன் நெருங்கிய நட்புக் கொண்ட தங்கள் குடும்பமும், அதன் வழித்தோன்றலாகிய தானும் தன் தந்தையும் துரும்பென்றால், அந்தத் துரும்பு நிச்சயமாக ஒரு பனைப் பரிமாணமாவது இருந்துதான் ஆக வேண்டும்!

***

பாவம் ராஜி! அவள் உலகம் தெரியாமல் வளர்க்கப்பட்ட பெண். அவளைச் சொல்ல என்ன குற்றம் இருக்கிறது? ராஜியின் மதலைப் பிராயம், குழந்தைப் பிராயம், இப்பொழுது கன்னிப்பிராயம் எல்லாம்

'மாயாவி'

"நான் உலகத்தைத் தெரிந்து கொண்டேன், பூஷண்!"

**உலகம் வேறு! உண்மை வேறு! ராஜிக்கும் பூஷணுக்கும் இடையில் இவ்விரு புள்ளிகளும் அமைக்கும் கதையின் முடிவு... அதோ, எதிர்ப் பக்கத்தில்...!**

ஸ்ரீநகரிலுள்ள அவளுடைய இந்தப் பாரம்பரிய வீட்டின் நான்கு சுவர்களுக்குள்ளே தான் கழிந்தது; கழிந்து வருகிறது. ஐந்து மாடிகளுள்ள கட்டடம் அது. அந்தக் கட்டடத்தின் மொட்டை மாடி மீது ராஜிக்கென்று அவள் தந்தை ஒரு நிலா மண்டபம்வேறு கட்டி கொடுத்திருந்தார். ஆனால் அது பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்னையக் கதை! இப்பொழுது அவர் 'நம் முன்னோர் இப்படி மாடிமேல் மாடி வைத்து ஏன் ஒரே கட்டடத்தைக் கட்டினார்கள்? இதையே ஒரு மாடியுள்ள பல கட்டடங்களாகக் கட்டியிருந்தால், ஒன்றிரண்டையேனும் விற்கலாமே?' என்று நினைக்கும் நிலையில் இருந்தார். இன்று அவர் வாழ்வது மகனின் வருவாயில். அவருக்கென்று இருந்ததெல்லாம் இந்த ஐந்து மாடி வீடும், அவருடைய அருமை மகள் ராஜியும், தம்மையும் தம் குடும்பத்தையும் பற்றிய பழம் பெருமையுந்தாம்!

தமது ஐந்து மாடி வீட்டின் நான்கு சுவர்களுக்குள்ளே அடங்கியிருந்த பெருமையைப்பற்றி அவர் ராஜிக்குக் கதை கதையாகச் சொல்லுவார்! தமது வீட்டுக்கு வெளியே இருக்கும் உலகம் மிகச் சிறியது; பெருமையற்றது; கீழ்த்தரமானது என்றெல்லாம் போதிப்பார். தங்கள் குடும்பத்துப் பெண்களுக்குத் திருமணச் சீதனமாகப்போடப்பட்ட நகைகளின் பட்டியலை மிக விரிவாக விளக்குவார். இவற்றைக் கேட்கும்போது ராஜிக்கு, தான் மிக மிக உயரே, இந்த ஐந்து மாடிக் கட்டடத்துக்கும் வெகுதூரம் உயரே, கிட்டத்தட்ட வானத்தையே எட்டிப் பிடித்துக் கொண்டிருப்பது போல் தோன்றும். இதனால் அவளுக்குத் தன் வாழ்க்கை மற்றவர் வாழ்க்கையைவிட மிக உயர்ந்த வாழ்க்கை, மனம் நிறைந்த வாழ்க்கை என்ற உறுதி ஏற்பட்டிருந்தது. அந்த நிறைந்த வாழ்க்கையில் குறையாக நிற்பது தனது திருமணம் ஒன்றுதான்; அதையும் ஏராளமான நகைகளை சீதனமாகத் தந்து, தந்தை ஈடு செய்து விடப்போகின்றார் என்றே அவள் கருதியிருந்தாள்.

அவள் இப்படிப்பட்ட எண்ணத்துடன் இருந்து கொண்டிருந்த போதுதான், அந்த எண்ணத்தில் துளையிட வந்து முளைத்தான் பூஷண்.

பூஷண் ஒரு விநோதமான இளைஞன். அப்படித்தான் தோன்றிற்று ராஜிக்கு. அவனுடைய கருத்துக்களும் விநோதமானவை. மற்றவர்கள் தன் கருத்தை ஒப்புக் கொண்டாலும் ஒப்புக் கொள்ளா விட்டாலும், அவன் அவற்றை வெளியிடாதிருக்கமாட்டான்.

அப்படித்தான் அவன் தனது விநோதமான கருத்துக்களை ராஜியிடமும் பரப்ப ஆரம்பித்தான். அவளைச் சில தடவைகள் சந்தித்துப் பழக்கமேற்பட்ட பின் ஒரு நாள் அவளிடம் சிரித்துக் கொண்டே கேட்டான்: "ராஜி! உன் முழுப் பெயர் என்ன? ராஜ்குமாரியா? ராஜ்துலாரியா? ராஜ்ராணியா? அல்லது....?"

ராஜிக்கு இந்த வேடிக்கை பிடிக்கவில்லை. அவள் நெற்றியைச் சுழித்துக் கொண்டே, "உங்களுக்கு எதற்கு இந்த விவரமெல்லாம்?" என்று கேட்டாள்.

"எதற்கென்றால், இந்தப் பெயர்களை எனக்குப் பிடிக்காது, அதற்காகத்தான்....!" என்று சிரித்தான்.

ராஜிக்குக் கோபம் கோபமாக வந்தது. இருந்தாலும், அவள் தன்னை அடக்கிக் கொண்டாள்.

மற்றொரு சமயம் ராஜி காய்கறி விற்பவளோடு வாதாடிக் கொண்டிருந்தாள். காய்கறி விற்பவள் பெருங் குரலில் ஏதோ கூறவே, "ஏம்மா சத்தம் போடுகிறாய்?" என்று கடிந்து கொண்டாள் ராஜி.

அப்பொழுது பூஷண் அங்கே வந்தான். அவன் அவர்கள் பேச்சில் புகுந்து சொன்னான்: "இரைவதற்கும் அமைதியாக இருப்பதற்கும் அதிக வித்தியாசமில்லை, ராஜி. இதுவே நேர் மாருக, நீ காய்கறி விற்பவளாகவும், இவள் வாங்குபவளாகவும் இருந்தால், நீ இரைந்து கொண்டுதான் இருப்பாய்!"

***

இம்மாதிரி அவன் பல தடவைகள் பேசிக் கேட்டிருக்கிருள் ராஜி. ஒவ்வொரு தடவையும் அவனுடைய பேச்சு அவளுக்கு விநோதமாகவே பட்டது.

ஒரு நாள் அவள் பொறுக்க முடியாமல் பூஷணிடம், "நீங்கள் பேசுவதெல்லாம் புதுமையாகவே இருக்கின்றன. எனக்கு அவற்றில் ஒன்றுகூட விளங்கவில்லை," என்ருள்.

"அவை உனக்கு விளங்கவில்லையென்றல் அது உன் தவறில்லை, ராஜி; நீ வாழ்கிருயே அந்த ஐந்தடுக்கு மாளிகையின் தவறு. ஆனல் கவலைப் படாதே. எங்கள் பேச்சு உனக்குப் புரியும் காலம் விரைவில் வரும்."

ராஜிக்கு இந்தப் பேச்சும் விளங்கவில்லை. பூஷணின் பேச்சுத் தனக்குப் பிடித்திருக்கிறதா, இல்லையா என்பதும் அவளுக்கு விளங்கவில்லை. அந்த விளங்காத விஷயத்தைப்பற்றி மண்டையை உடைத்துக் கொண்டிருக்க அவள் விரும்பவில்லை. இதை விட முக்கியமான காரியங்கள் அவளுடைய ஐந்தடுக்கு வீட்டின் நான்கு சுவர்களுக்குள்ளே நடந்து கொண்டிருந்தன. ஆம்; அவளுடைய கலியாணப் பேச்சுத்தான் அது.





எனவே ராஜி, பூஷணையும் அவனுடைய புரியாத பேச்சையும் அப்பொழுதே மறந்து விட்டுத் தனது கலியாண விஷயத்தில் மனத்தைச் செலுத்தலானுள். தன் தந்தை தனக்கு திருமண சீதனமாக அளிக்கப் போகும் நகைகளைப்பற்றி எண்ணி எண்ணி அவள் பெருமைப் பட்டுக் கொண்டாள். என்ன என்ன வெல்லாம் இருக்கும் என்று தோராயமாகக் கணக்கிட்டாள். விலையுயர்ந்த வைர வளையல்கள், கம்மல்கள், நெக்லேஸ்கள், மோதிரங்கள் இன்னும் எத்தனை எத்தனையோ? அச்சமயம் அவளுக்குத் தன் உலகம், தன் வீடு, தான் எல்லாமே தங்கமயமாகத் தோன்றின.

ஆனல் அதே, சமயம் அவளிடம் விநோதமான மாறுதலும் ஏற்பட்டது. ஒரு புதிய பருவத்திற்குள் தான் அடியெடுத்து வைத்திருப்பது போன்ற தோற்றம் ஏற்பட்டது. விவரமற்ற உணர்ச்சிகள், விவரமற்ற விழைவுகள் அவள் உள்ளத்திலே சட்டுச் சட்டென்று தோன்றின. அவள் விழிகள் நிலைத்து நிற்க மறுத்தன. அவள் மனம் அமைதியோடிருக்க மறுத்தது. வான வெளியில் பறக்க வேண்டுமென்றும், மலர்களோடு விளையாட வேண்டுமென்றும், தென்றலை உணவாகப் பருக வேண்டுமென்றும், நிலவிலே குளிக்க வேண்டுமென்றும் அவளுக்குத் தோன்றிற்று.

நினைத்து பார்க்கும் போது இத் தோற்றங்கள் எல்லாம் அவளுக்கே



விநோதமாகத் தான் பட்டன. ஒரு கால், பூஷணோடு பழகிய குற்றமோ அது? அவனுடைய விநோதப் போக்குகள் தன்னையும் பற்றிக் கொண்டு விட்டனவோ?

அது என்னவோ, இப்பொழுது பூஷணைப் பற்றிய நினைவு எழுந்தால் அவள் உள்ளம் குளிர்ந்து நிறைந்தது. உடலெல்லாம் ஒருவிதப் பூரிப்பு ஏற்பட்டது. யாரோ தன்னை மென் கரங்களால் அணைத்திருப்பது போலவும், அந்த அணைப்பு தனக்கு இன்பம் தருவது போலவும் தோன்றியது. இந்தத் தோற்றம் ஏற்படும் போது அவள் வெட்கத்துடன் 'பர்தா'வால் தனது முகத்தை மூடிக் கொள்ளுவாள்.

அத்தோடு அவன் உள்ளத்தின் ஒரு மூலையிலிருந்து வேறொரு கோபக் குரலும் ஒலிக்கும். "சீ! என்னவெல்லாம் நினைக்கிறாய்? உன் போன்ற ஐந்தடுக்கு மாளிகையில் வசிக்கும் பெருங்குலப் பெண் நினைக்கும் நினைப்பா இது? அந்தப் பூஷண் எங்கே? நீ எங்கே? மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசமாயிற்றே உங்களுக்கிடையில்....?"

***

நாட்கள் சென்றன. ராஜி பூஷணைப் பலமுறை சந்தித்தாள். ஒவ்வொரு தடவையும் அவன் முதத்தில் தவழும் புன்னகையைக்கவனித்தாள். அவன் தன்னை எப்போதும் உற்று நோக்கிக் கொண்டிருப்பது போல் உணர்ந்தாள். அது அவளுக்குச் சிறிது வெட்கமாக இருந்தது. ஆயினும், அதிலே ஒருகுளுமை இருப்பதுபோலவும் இருந்தது.

ஒரு நாள் பூஷண் அவளுடைய மனத்தில் மூண்டிருந்த இந்தத் தீக்குக் காற்று ஊதினான். "நான் ஏன் எப்போதும் உன்னைப் பார்க்கிறேன், தெரியுமா?" என்று அவன் கேட்டான்.

"எதற்கு?" என்றாள் ராஜி சிரித்துக் கொண்டே.

"உன்னைச் சீண்டுவதற்காகத் தான்!"

"ஆனால் நீங்கள் ஏன் புன்முறுவல் பூக்கிறீர்கள்?"

"உனக்கு உல்லாசமூட்டுவதற்காக!"

"எனக்கு உல்லாசமூட்டவா?"

"ஆமாம்; நீ இன்னும் குழந்தை தானே?"

ராஜி மற்றொரு விசித்திரப் பேச்சைச் செவிமடுத்தாள். பிறகு தனக்குள்ளே சிரித்துக் கொண்டு, "அப்படியானால் நான் பெரியவளாக என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டாள். "கணவன் வீட்டுக்குப் போவதன் மூலம் நீ பெரியவளாவாய்," என்று பூஷண் சொல்வானென அவள் எதிர்பார்த்தாள்.

ஆனால் அவன், "உன்னையே நீ உணருவதன் மூலம் பெரியவளாவாய்!" என்றான்.

"எப்படி நான் என்னையே உணருவது?"

"உலகத்தைத் திறனாய்வதன்மூலம் உலகச் சூழலின் ஆழத்தை அறிவதன் மூலம் நீ பெரியவள் ஆவாய்....!"

ராஜிக்கு இன்னுங்கூட அவன் பேச்சுப் புரியவில்லை. இருந்தாலும், அவளால் அவன் பேச்சை உதறித் தள்ளவும் முடியவில்லை. ஏனென்றால், காரணம்தெரியாமலே அன்று தொட்டு அவன் முன் தன்னை ஒரு குழந்தையாகவே உணர்ந்து கொண்டிருந்தாள் அவள்.

***

சொன்னவர்கள் வாழ்கிறார்கள்:

**ராஜாஜி**

**அரும் பெரும் மனிதர்கள் திடீரென்று தோன்றி விடுவதில்லை; அந்தந்தப் பருவங்கள் அந்தந்தக் காலத்துக்குத் தகுதியான பிரத்தியேகமான மலர்களை உண்டாக்குவது போல, சமுதாயத்தின் மாறிவரும் தேவைகளுக்கேற்ப மகா புருஷர்கள் உருவாக்கப்படுகிறார்கள்.**

இந்நிலையில் ஒருநாள், அவள் தன் வீட்டு மொட்டை மாடியிலிருந்து குதித்துக் கொண்டே இறங்கி வந்தாள். கிருஷ்ம தேவஸிங், இவ்வாறு குதித்துக் கொண்டு இறங்கக்கூடாது என்று அறிவுரை கூறினார். "நீ இப்பொழுது குழந்தையில்லை ராஜி. நாளைக்கு இன்னொருவர் வீட்டில் அடக்க ஒடுக்கமாக வாழ வேண்டியவள் என்பது நினைவிருக்கட்டும். வயது வந்த பெண்கள் இப்படியெல்லாம் செய்யலாமா?'' என்றார் அவர்.

ராஜி ஒன்றும் பேசாமல் நின்றாள். அவள் உள்ளத்தில் பல நினைவுகள் புரண்டன. 'ஆமாம், நான் இன்னொருவர் வீட்டில் அடக்க ஒடுக்கமாக வாழ வேண்டியவள். ஆனால் அந்தத் தகுதியை அடைவதற்கு நான் என்னை நானே உணர வேண்டும். நான் பெரியவளாகி விட்டேன் என்கிறார் அப்பா. பூஷணோ என்னைக் குழந்தை என்கிறார்! இவர்கள் சொல்லுவதில் எது உண்மை?'

அவள் ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தாள். அப்பா எவ்வளவு பெரிய மனிதர்! மகாராஜா ராம்பேர் ஸிங்கின் மைத்துனியின் மருமானின் தோழரின் வழித் தோன்றலான அப்பா பொய் சொல்லுவாரா? மாட்டார்; ஒருபோதும் மாட்டார். பூஷண்தான் ஏதோ உளறுகின்றார்!

***

மறுநாள் பூஷண் அவளைச் சந்தித்ததும் வழக்கம்போல் புன்னகை செய்தான். "ஓ! நான் குழந்தைஎன்றுநினைத்துத்தானே சிரிக்கிறீர்கள்?'' என்று அவள் வெடுக்கென்று கேட்டாள்.

பூஷண் இன்னும் பெரிதாகச் சிரித்து விட்டு, "ஏன்? நீ பெரியவளாகி விட்டாய் என்று அப்பா சொன்னாரா?'' என்று வினவினான் அவன்.

ராஜி வியப்படைந்தாள். "உங்களுக்கு எப்படித் தெரிந்தது?''

"இதையெல்லாம் சொல்லியா தெரிந்து கொள்ள வேண்டும்? உன் வீடு பெரியதுதான். ஆனால் அந்த வீட்டுக்கு வெளியே இருக்கும் உலகம் அதைவிட மிகப் பெரியது. உன் வீட்டில் நடக்கும் விஷயங்களும் முற்றிலும் மாறுபட்டவை. அது தெரியுமா உனக்கு?''

ராஜி 'தெரியாது' என்பதற்கு அடையாளமாகத் தலையாட்டினாள்.

"அதனால்தான் உன்னை குழந்தை என்கிறேன்!'' என்று சிரித்தவாறு சொன்னான் பூஷண்.

ராஜியால் இப்பொழுது அவனைத் தட்டிப் பேசாமல் இருக்க முடிய முடியவில்லை. "இல்லை, நீங்கள் நினைப்பது தவறு. நான் நிச்சயமாகப் பெரியவளாகி விட்டேன். விரைவில் எனக்குத் திரு....''

மேலே சொல்ல முடியாதபடி அவளை நாணம் கவிழ்த்தது.

பூஷண் சிரித்துக்கொண்டே, "ஓ! அப்படியா? அப்படியானால் நீ விரைவில் உன்னை உணர்ந்து கொண்டு விடுவாய்!'' என்றான்.

***

ராஜி இப்பொழுது முன்னிலும் அதிக ஆவலுடன் தன் திருமணத்தை எதிர்பார்த்தாள். அதற்காகத் தன் தந்தை தனக்கு வாங்கித் தரப்போகும் நகைகளைப்பற்றி மீண்டும் கனவு கண்டாள். அத்தனையும் தங்கமும், வைரமும் இழைத்த நகைகள். வளையல்கள், கம்மல்கள், நெக்லேஸ்கள், மோதிரங்கள், இன்னும் எத்தனை எத்தனையோ? பின் என்ன? அவள் சாதாரண வீட்டுப் பெண்ணா, என்ன? ஐந்தடுக்கு மாடி

வாழ்ந்தவர்கள், வாழ்கிறார்கள் :

**டாக்டர் ஆர். கே. சண்முகம்**

**எதற்கெடுத்தாலும் பரம்பரை பரம்பரை என்ற ஒன்றை நாம் கூறிக் கொண்டேயிருக்கிறோம். பரம்பரையும் பழமையும் ஓரளவு வேண்டியது தான். அடிப்படையில் கெடுதல் இல்லாது, பழமையை அஸ்திவாரமாகக் கொண்டு, புதுமையைக் காட்ட வேண்டும். அதை வளர்க்க வேண்டும்; வாழ்த்துதலும் வேண்டும்.**

வீட்டுப் பெண் அல்லவா? மகாராஜா ராம்பேர் ஸிங்கின் மைத்துனியின், மருமானின் சிநேகிதரின் கொள்ளுப் பேத்தியல்லவா?

மறுநாள் பூஷண் வந்தபோது' அவன் விரலில் புதிதாக மோதிரம் ஒன்று அணிந்திருப்பதை ராஜி கண்ணுற்ருள். "ஏது இது?'' என்று அவள் கேட்டாள்.

"வாங்கினேன். நன்ருயிருக்கிறதா?''

பார்வைக்கு அது என்னவோ நன்ருகத்தான் இருந்தது. ஆனுல்....? அவள் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக, "என்ன விலே?'' என்று கேட்டு வைத்தாள்.

"நூறு ரூபாய்!''

"நூறு ரூபாயா?'' ராஜியால் அதை நம்பவே முடியவில்லே. பூஷண் அழகானவர்தான்; இளேஞர்தான்; பண்பாடு உடையவர்தான். ஆனுல் ஐந்து மாடி வீட்டில் வசிப்பவர் இல்லேயே, மகாராஜா ராம்பேர் ஸிங்கின் மைத்துனியின் மருமானின் நண்பரின் வழித் தோன்றல் இல்லேயே, நூறு ரூபாய்க்கு மோதிரம் வாங்கி அணிந்து கொள்ள....!

பூஷண் பொய் சொல்லுகிருர் என்றுதான் அவள் நினேத்தாள். ஆனுல் அதை அவனிடம் கூற விரும்பவில்லே. பேச்சை மாற்றுவதற்காக, அன்று காலேயில் மற்ற வீடுகளேவிட உயரமான தனது ஐந்தடுக்கு வீட்டின் மொட்டை மாடியிலிருந்து கண்ட சில விஷயங்களேச் சொல்ல ஆரம்பித்தாள்.

அவள் சொன்னதையெல்லாம் பூஷண் பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்தான். பிறகு கேட்டான்: "நல்லது ராஜி, அவ்வளவு உயரத்திலிருந்து நீ கீழே தள்ளப்பட்டால் என்ன ஆகும்?''

"என்ன ஆகுமா? என் கால்கள் ஒடியும். நான் நொண்டியாகிச் செத்துப் போவேன்!''

"சரி, அப்பொழுது யாராவது கீழே நின்று உன்னேத் தள்ளிக் கைகளில் தாங்கிக் கொண்டால்....?''

பூஷணின் இந்தக் கேள்வியினுல் வெட்கமடைந்த ராஜி முகத்தைக் கைகளில் புதைத்துக் கொண்டாள்.

பூஷண் தொடர்ந்து சொன்னுன்: "தவிர, இந்தப் பெருஞ் சுவர்கள் பெரும்பாலும் உள்ளே குழி உடையவைகளாக இருக்கும். அடிக்கடி இடிந்து விழுந்து விடும்!''

ராஜிக்கு அவனுடைய பேச்சுப் பிடிக்கவில்லே. "விழுந்தால் விழுந்து விட்டுப் போகட்டுமே?'' என்ருள்.

"ஆனுல், மேலே நிற்கும் நீயும் கீழே விழுந்து அவற்றுக்கடியில் அகப்பட்டு நசுங்கி விடுவாயே?''

"அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?''

"எப்பொழுதும் மேலேயே நின்று கொண்டிருக்கக் கூடாது. கீழே இறங்கி வரவேண்டும். கீழே இறங்கி வந்து இந்தப் பெருஞ் சுவர்களுக்கு அப்பாலுள்ள உலகத்தை....!''

"போதும்!'' என்ருள் ராஜி. இது என்ன விசித்திரப் பேச்சு? அவள்—மகாராஜா ராம்பேர் ஸிங்கின் மைத்துனியின் மருமானின் தோழரின் வழித்தோன்றலான அவள், தன் ஐந்தடுக்கு மாடி வீட்டிலிருந்து கீழே இறங்கி வருவதா? பூஷணுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா, என்ன?

***

அன்று பூஷண் திரும்பிச் சென்ற பிறகு ராஜி அவனுடைய அசட்டுத்தனமான பிதற்றல்களே அறவே மறந்து விட விரும்பினுள். ஆனுல் ஏனே அவை அவள் செவிகளில் திரும்பித் திரும்பி ஒலித்துக் கொண்டே இருந்தன. 'அவ்வளவு உயரத்திலிருந்து நீ கீழே தள்ளப்பட்டால்....?'

அவளால் இந்த இரண்டு கூற்றையுங்கூட மறந்து விட முடியும் போல் இருந்தது. ஆனுல் அவளேக் கீழே இறங்கி வர வேண்டுமென்று பூஷண் சொன்னுனே, அதைத்தான் அவளால் மறக்க முடியவில்லே. அவளே, அவள் தந்தையை, மகாராஜா ராம்

பேர் ஸிங்கின் வழித் தோன்றலான அவர்கள் குடும்பத்தைத் துரும்பாக மதித்தல்லவா பேசி விட்டான் பூஷண்?

இதை நினைத்து நினைத்துத்தான் ராஜி அப்பொழுது பொருமிக் கொண்டிருந்தாள். தினமும் பார்த்து அநுபவிக்கும் இன்பக் காட்சிகளை இன்று அவளால் ரசிக்க முடியாமற் போனதும் இதனால்தான்!

***

ராஜி இவ்வாறு எதிலும் சுவையற்றவளாக நின்று கொண்டிருந்த போது கீழ்த் தளத்திலிருந்து அவள் தந்தை விளிப்பது கேட்டது. "ராஜி, இங்கே ஓடிவா! உனக்கு திருமணச் சீதனங்கள் வாங்கி வந்திருக்கிறேன், பார்!"

ராஜி ஒரே தாவாகக் கீழ்த்தளத்துக்கு ஓடினாள். அங்கே அவள் கண்ட பொருள்கள் அவளுடைய மனச் சஞ்சலத்தையெல்லாம் அக்கணத்திலே போக்கி விட்டன. அடேயப்பா! எத்தனை நகைகள்! எல்லாம் வைரம்! எல்லாம் தங்கங்கள்! கண்களைப் பறிக்கின்றனவே!

ராஜி ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்தாள். அணிந்து கொண்டு நிலைக்கண்ணாடியின் முன் நின்று அழகு பார்த்தாள். ஏராளமான நகைகள்! எல்லாம் அவளுக்குப் பிடித்திருக்கின்றன! இவற்றை அணிந்து கொண்டு அவள் மணப் பந்தலில் உட்காரும்போது அவளை இந்த ஐந்தடுக்கு மாடி வீட்டுப் பெண் என்று மட்டுமா பிறர் கருதுவார்கள்? ஏன், அந்த மகாராஜாராம் பேர் ஸிங்கின் வழித் தோன்றல் என்று கருதினால் கூட அவள் வியப்படைய மாட்டாள். இப்படிப்பட்டவளை அல்லவா சற்று முன் துரும்பாக மதித்துப் பேசி விட்டான் பூஷண்!

மறுநாள் காலையில் பூஷண் வந்ததும், அவள் அவனை உள்ளே அழைத்துச் சென்று, தன் சீதன நகைகளை எல்லாம் எடுத்துக் காட்டினாள்.

'பார்: நன்றாகப் பார்; பார்த்துப் பொறாமைப் படு! நேற்று என்னை மேலேயிருந்து கீழே வர வேண்டும் என்றாயே? இப்பொழுது சொல், நான் கீழே வரவேண்டுமா, இன்னும் மேலே போகவேண்டுமா என்பதை?' என்றெல்லாம் மனத்துக்குள் கூறிக் கொண்டாள் ராஜி.

"நன்றாக இருக்கின்றனவா?" என்று ராஜி கேட்டாள்.

"நன்றாக இருக்கின்றன; ஆனால்....?"

"ஆனால் என்ன, ஆனால் இன்னும்....?"

"ஆனால், நீ இன்னுங் கூட உலகத்தைத் தெரிந்து கொள்ளவில்லை, ராஜி!" என்று கூறிவிட்டுப் போய் விட்டான் பூஷண்.

'எனக்கா உலகம் தெரியவில்லை? இவனுக்குத் தான் தெரியவில்லை! கண் முன் கண்ட பின்பும் ஒப்புக் கொள்ளத் தயங்குகிறான் பேடி!' என்று எண்ணிக் கொண்டாள் ராஜி.

***

ராஜியின் தந்தை மகாராஜாவாக இல்லாவிட்டாலும், ஊரில் எல்லாரும் அவருடைய தகுதியை அறிந்து "மகாராஜா!" என்று தான் அழைப்பார்கள். ராஜி உடன் எழுந்து தன் தந்தையை விளிப்பது யார் என்று பார்க்கச் சென்றாள். ஏனென்றால் கிருஷ்ம தேவ் ஸிங் அப்பொழுது வீட்டில் இல்லை. அவர் இப்பொழுது நாள் பூராவுமே வீட்டில் இருப்பதில்லை. மகளுக்கு வரன் தேடும் வேலையில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்.

வெளியே நகைக் கடைக்கணக்கர் நின்று கொண்டிருந்தார். "வணக்கம் சின்ன ராணி. மகாராஜ் இல்லையா?" என்று அவர் கேட்டார்.

"உங்களுக்காக நகைகள் வாங்கி வந்தாரல்லவா? 'பில்' கொண்டு வந்திருக்கிறேன். இதைத் தயவு செய்து மகாராஜாவிடம் கொடுத்து விடுகிறீர்களா? வசதிப்படும்போது 'செக்' அனுப்பச் சொல்லுங்கள்," என்று பணிவுடன் 'பில்'லை அவள் முன்னால் வைத்துப் போய்விட்டார் நகைக் கடைக் கணக்கர்.

ராஜிக்குத் தன் நகைகளுக்கெல்லாம் எவ்வளவு பணம் ஆகியிருக்கும் என்பதை அறிய ஆவல். குறைந்தது இரண்டு லட்சமாவது இருக்கும் என்பது அவள் எண்ணம். ஆம், ஆத்தனையும் வைரமும் வைடூரியமுமல்லவா?

ஆனால் விலைப் பட்டியலை எடுத்துப் பார்த்தபோது ராஜி திடுக்கிட்டாள். என்ன இது? மொத்தம் முன்னூற்றுப் பதினேரு ரூபாய் எழுபத்தைந்து நயே பைஸே தானு? இதில் ஏதோ தவறு இருக்கிறது. ராஜி ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே போடப்பட்டிருந்த விலையைப் பார்த்தாள். என்ன இது? வளையல் ஜோடி மூன்றுக்கு ரூபாய் இருபத்து நாலு தானு? கம்மல் ஜோடிக்கு அறுபத்து மூன்று ரூபாய் எண்பது நயே பைஸே. இன்னும் நெக்லேஸ், அட்டிகை, ஒட்டியாணம் இவற்றுக்கும் இப்படியே விலை போடப் பட்டிருந்த தன் மர்மம் ராஜிக்கு விளங்கவில்லை. கடைசியில் பட்டியலின் பின்புறம் அச்சடிக்கப்பட்டிருந்த அவர்களது வர்த்தக நிபந்தனைகளைப் படித்து வந்த போது ஓரிடத்தில் ராஜியின் மூச்சே நின்று விட்டது! அது தனியாகப் பென்சிலால் எழுதப் பட்டிருந்த வாக்கியம்–'இந்த நகைகளின் **'கில்ட்'** ஓராண்டு உத்திரவாதம். கற்களுக்கு எவ்வித உத்திரவாதமும் கிடையாது!''

"அவ்வளவும் 'கில்ட்' நகைகளா?'' ராஜி வாய் விட்டு அலறியே விட்டாள்.

"சத்தமிடாதே அம்மா! பெரிய இடத்து விஷயங்கள் வெளியே தெரியக் கூடாது!''

ராஜி திரும்பிப் பார்த்தாள். அவள் தந்தை நின்று கொண்டிருந்தார்.

"அப்பா!'' என்று கதறி விட்டாள் ராஜி. "அத்தனையும் 'கில்ட்' நகைகளாக வாங்கித் தந்து என்னை ஏமாற்றி விடப் பார்த்தீர்களே, அப்பா?''

கிருஷ்ம தேவ் ஸிங், மகளை அருகில் இழுத்து அணைத்துக் கொண்டு, அவளுடைய கண்ணீரைத் துடைத்தார். "ஏமாற்றம் ஒன்றும் இல்லை, அம்மா! இதுதான் நம் குடும்பத்தில் வழக்கம்!''

"பொய்; பொய்! நீங்கள் பொய் சொல்லுகிறீர்கள்! 'கில்ட்' நகைகளைப் போட்டுக் கொண்டா அம்மாவும், அத்தையும், பாட்டியும் பெரிய வீட்டுப் பெண்கள் என்று பெயர் எடுத்தார்கள்?''

"ஆமாம், ராஜி; ஆமாம். நீ வேண்டுமானால் இந்த நகைகளை வேறு யாரிடமாவது காட்டி, 'இவை கில்ட் நகைகள், என் தந்தை எனக்குச் சீதனமாக வாங்கித் தந்திருப்பவை' என்று சொல்லிப் பாரேன். ஒருவரும் அதை நம்ப மாட்டார்கள். இந்த உலகம் அப்படிப் பட்டது, அம்மா! பணக்காரப் பெண்களின் உடலில் பித்தளை நகைகளே இருந்தால் கூட, 'அது பசும் தங்கம்; மெருகு போயிருக்கிறது' என்று தான் நினைப்பார்கள். நேர்மாறி, ஓர் ஏழைப் பெண் அசல் பொன் நகையைப் போட்டுக் கொண்டிருந்தால் கூட, 'கில்ட் நகை' என்று தான் நினைப்பார்கள். ஆகையால் நீ கலங்காதே அம்மா. இவை உன் வரையில் கில்ட் நகைகளாக இருந்தாலும், உலகத்துக்குப் பொன் நகைகள்தாம். நம் உலகம் நம்மை மதிப்பதற்காகத் தானே நகைகள் அணிந்து கொள்ளுகிறோம்....?''

ராஜி திகைத்துப் போய் நின்றாள். அவளால் பேசவே முடியவில்லை.

***

மறுநாள் வழக்கம் போல் பூஷண் வந்தான். ராஜி வழக்கத்து மாருக, மாடியில் இல்லாமல் கீழ் அறையில், கன்னத்தில் கையை வைத்துக் கொண்டு துயரின் வடிவாக அமர்ந்திருந்தாள்.

"என்ன ராஜி? ஏன் இப்படி இருக்கிருய்?'' என்று வழக்கமான முறுவலுடன் கேட்டான் பூஷண்.

"நான் உலகத்தைத் தெரிந்து கொண்டு விட்டேன், பூஷண்....!'' என்று விம்மினாள் ராஜி.

சிலம்புப்பரல்: **இருபத்திரண்டு**

**தூணில் சாய்ந்தவாறு மயக்க நிலையில் நின்ற கரிகாலனை தோள்களைப் பற்றி, அருகில் இருந்த மெத்தைச் சாய்மானத்தில் உட்கார வைத்தாள் பூங்குழலி.**

மனத்துக்கு ஆயிரம் கண்கள் உண்டு. ஆயிரம் சம்பவங்கள் நெளிந் தோடின. கரிகாலனால் அழாமல் இருக்க முடியவில்லை. கண்ணகியை மன அரங்கிற்கு வரச் சொன்னான். அவள் வந்தாள். அதே சமயத்தில் பூங்குழலியும் வந்து விட்டாள். அகல் விளக்கும் மின்சார தீபமும் சந்தித்தன. அவனது கண் பார்வைக்கு அகல்விளக்கு தான் ஒளிப் பிழம்பாகத் தோன்றியது. 'இருக்கும் இடத்தை ஒளி பெறச் செய்யும் அகல் விளக்குத் தான் எனக்கு வேண்டும்; நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும் என்பார்கள். ஆனால் அன்றிலிருந்து இன்று வரை என் உள்ளம் கண்ணகியையே எண்ணிக்கொண்டிருக்கிறது. நான் நினைத்தேன்; அதையே தெய்வமும் நினைத்தது. இதை நேற்றைக் கதையாக ஆக்கி விட்டார் மாமா. கடைசிவரை இது உண்மையாகவே இருந்து விடுமோ?.... ஐயோ!....'

தன் ஜாதகம் கண்ணகியின் ஜாதகத்துடன் இணைந்திருப்பதாகத் தன்னுடைய மாமா நல்ல செய்தி சொன்ன அத்தகைய இன்பவேளைக்கு வாழ்த்துதல் தெரிவித்து மகிழ்ந்த சில நாட்கள் அவனது நினைவுத் தடத்தில் பதிந்தன.

தம் மனைவியிடம் செந்தில் வேலன் செட்டியார் கூறிய தீர்ப்பும் ஓடி வந்தது. 'பூங்குழலியுடன் நான் வாழ்க்கை நடத்த வேண்டுமா?' என்று கரிகாலன் ஆண்டவனைக் கேட்டான்; தீர்ப்பை வரைந்த சோதிடத்தை வினவினான்; விதியின் விதியை அறைகூவி அழைத்தான்.

பிறை நிலவின் மடியில் அமர்ந்து ரதியும் மன்மதனுமாக கரிகாலனும் கண்ணகியும் பவனி வந்த இன்பநாட்கள் எங்கே ஓடிப் போய் விட்டன?.... ஒரே பாயில் படுத்து உறங்கிய அந்தப் பிஞ்சு நெஞ்சங்களின் துல்லியமான அன்பைச் சுற்றி ஓடிய இளம் பிராய நினைவுகள் மெய்யாகவே சுந்தரக் கனவுகள் தாம்!

விதிபடித்த 'திருத்தப்பட்ட அந்தத் தீர்ப்பை'க் கேட்ட தற்குப் பின் அன்று தான் கரிகாலன் கண்ணகியைக் காண முடிந்தது. யதேச்சையாக அமைந்த சந்திப்பு அது. ரெயில்வே ஸ்டேஷனுக்குப் போகும் வழியில் பூங்குழலி இல்லத்தைக் கடந்து செல்ல வேண்டிய வாய்ப்பு தன்னாலே ஏற்பட்டது. 'சல்யூட்' அடித்த 'கூர்க்கா'வைக் கண்டதும்தான் அவனுக்குப் புரிந்தது. அப்போது கண்ணகி உள்ளேயிருந்து வந்தாள். அவளை தலை நிமிர்த்திப் பார்ப்பதற்குள் அவனுக்குப் புல்லரித்தது.

"கண்ணகி....!"

மௌனம் சுட்டெரித்தது.

"க....ண்....ண....கி!"

பையப் பைய முகத்தை நிமிர்த்தி ஏறிட்டு நோக்கினாள் கண்ணகி. முத்துச் சரம் பிரிந்து உதிர்ந்து கொண்டிருந்தது. இதயம் உருகும் போது கண்ணீர் பெருகும்.

"அத்தான்!"

தொண்டை அடைத்தது. அவள் கண் விளிம்புகளைத் துடைத்தாள்; கைகள் நடுங்கின.

கரிகாலன் அவளை நெருங்க நெருங்க, அவள் எட்டி எட்டிச் சென்றாள்.

"கண்ணகி!"

"அ....த்....தான்! இனிமேல் நான் உங்களோடு பேசுவதுகூடச் சரியில்லை!" — கண்ணகியேதான் பேசினாள்; குரல் நடுங்கியது. அந்தி வெயிலின் தங்க நிறத்தில் அவளது பட்டுக் கன்னங்கள் பச்சை நரம்புகளைப் பகுதிப் படுத்திக் காண்பித்தன. அவளுடைய எழிலைப் பருகுவானா அவன்? இல்லை, அவள் பேசிய புதிய வேதாந்தத்தை மென்று விழுங்குவானா?

கண்ணகி சொல்லாமல் சொன்ன எச்சரிக்கையில் புதைந்திருந்த தாத்பர்யம் அவனுக்கா விளங்காது?

"கண்ணகி!'' என்று விளித்து 'ரகசியத்தை' விளக்க எண்ணி உதடுகளின் உறவைக் கலைத்து விட்டான் கரிகாலன். அதற்குள், "கண்ணகி,'' என்று அலட்டிய செட்டியாரின் குரல் அவனை அங்கிருந்து விரட்டியது; வெருண்டு ஓடினான் அவன். 'தாம் சொல்வதற்கு முன் நான் யாரிடமும் ஜாதகப் பொருத்தம் பற்றிக் கூறலாகாது என்றாரே மாமா? பிறகு, அவரே தம் மனைவியிடம் சொன்னாரே?.... சொன்னது தான் சொன்னாரே, பொய்யை ஏன் சொல்ல வேணும்?'

சிக்கலை நாளது தேதி வரை செந்தில்வேலன் விடுவிக்கப் பிரயத்தனம் செய்யக் காணோம்! – இதுவும் கரிகாலனின் மனக்குறைகளுள் ஒன்று.

தன் மாமா சொன்ன விவரத்தைக் கண்ணகியிடம் கூறிவிட வேண்டுமென்று நித்தமும் தவம் கிடந்தான் கரிகாலன். ஆனால் அதற்கு நந்தியாக நின்ற செட்டியாரையும் அவரது மூத்த பெண்ணையும் நினைத்த போது, அவன் தன்னுடைய யோசனையைக் கைகழுவி விடுவதைத் தவிர வேறு உசிதமான உபாயம் எதுவும் அவனுக்கு உதிக்கவில்லை.

"மிஸ்டர் கரிகாலன்!'' என்றார் ஆசிரியர் அம்பலவாணன்; "என்ன, ஒரு மாதிரி உட்கார்ந்திருக்கிறீர்கள்?'' என்று விசாரித்தார்.

கரிகாலன் சிரித்து மழுப்பினான்.

"இந்தப் பையனைப் பார்த்தீர்களா? மிகவும் கெட்டிக்காரப் பையன். தன்னை 'மேக்கப்' செய்து கொள்ளத் தெரியாது போனாலும், ஓடவேண்டிய பாரத்துக்கு வேண்டிய பக்கங்களை அழகாக 'மேக்கப்' செய்திருக்கிறான்!'' என்று சிரித்து, மேஜை விழுந்து விடாமல் தாங்கி நின்ற பையனைக் காட்டினார் அவர்.

கரிகாலனால் உணர்ந்து நகை புரிய இயலவில்லை. முதல் அமைச்சரின் 'புதுக் கல்வித் திட்ட'த்தைப் பற்றி எழுதப்பட்டிருந்த பழைய பத்திரிகை ஒன்றைப் புரட்டிக் கொண்டிருந்தன அவன் விரல்கள்.

மதுரையிலிருந்து 'தமிழ் அன்னை' விற்பனையாளர் வந்தார். கரிகாலன் நிர்வாகியாக மாறவேண்டிய கட்டம் வந்தது. பத்திரிகை விற்பனை நிலவரத்தைச் சொன்னார் விற்பனையாளர். பிரதிகள் அதிகப்படியாகச் செலவழியத்தக்க வழி வகைகளை உரைத்தான் கரிகாலன்; விளம்பரத்தாள்கள் புதுமுறையில் அச்சாகிக் கொண்டிருப்பதாகவும் சினிமாத் தியேட்டர்களிலே காட்ட 'ஸ்லைட்' தினுசுகள் தயாராகின்றனவென்றும் கூறினான். 'கோலா' அருந்தி கோல நகை மிளர விடைபெற்றுச் சென்றார் விற்பனையாளர்.

பொருளாளர் ஏதோ சந்தேகம் கேட்டார். கரிகாலன் செட்டியாரின் மேஜைக்குச் சென்றான்; தாள்களைப் புரட்டினான்; பள்ளிக் கணக்கின் உதவியால் சில புள்ளிவிவரங்களைச் சேகரம் செய்து அவருக்குச் சொன்னான். திரும்பி வந்து ஆசனத்தில் அமர்ந்தான்; 'தொலைபேசி அழைப்பு' வந்தது. மாலை அலுவலகம் முடிந்ததும் வீட்டுக்கு வருமாறு கரிகாலனைக் கேட்டுக் கொண்டார் அவனுடைய அதிபர்–செட்டியார்.

தொழிற்சாலைச் சட்டத்துக்குப் பணியும் பண்பு கொண்ட அச்சக மணி மத்தியான்னச் சாப்பாட்டுக்கு அடையாளம் காட்டி 'கண கண' வென்று ஒலித்தது.

மேற்கு மலைத் தொடரிலே ஓய்வு கொள்ள விரைந்த ஆதவனின் பணியை மெச்சிய வண்ணம் பூங் குழலி இல்லத்தில் அடியெடுத்து வைத்தான் கரிகாலன். சுற்று மதி லின் உள்ளும் புறமும் சிங்காரமாக இருந்த மலர்கள் பகலெல்லாம் 'கொட்டக் கொட்ட' விழித்திருந்த அசதியில் கண் உறங்கக் காத்திருந் தன. மலர் மணம் உண்டு திரிந்து, பூக்களுக்குப் பெருமை தேடித் தந்த இளந்தென்றல் 'சாய்ந்தாடம்மா, சாய்ந்தாடு!' என்ற பழைய பாடலை மனனம் செய்து கொண்டிருந்தது.

கொலுவில் வைக்கப்பட்டிருக்கும் ராதை பொம்மை மாதிரி கண்ணகி நாற்காலியில் அமர்ந்திருந்தாள். செருப்புச் சத்தம் காதில் விழுந்த தும் கண்களை உயர்த்தினள்; கையி லிருந்த புத்தகம் நழுவியது. கரிகால னைக் கண்டவுடன் எழுந்து நின்று ஒதுங்கினுள். கரிகாலனுக்கு அன்று ஒரு நாள் கண்ணகி விடுத்த சொற் கள் நினைவுக்கு வந்தன. அன்றுதான் அவன் சமாதானம் சொல்ல முடியா மல் போயிற்று; அந்த உண்மையை வெளியிடவும் கூடவில்லை. இன்ரு வது அவளுக்கு ஆறுதல் சொல்ல வேண்டுமென்று கோட்டைகட்டினன். "கண்ணகி!'' என்று அன்பாகக் கூப்பிட்டான். அதே சமயம், அன்று போலவே இன்றும் செந்தில் வேலன் தம் புதல்வியைப் பெயரிட்டு அழைத் தார். கரிகாலனுக்குச் சப்த நாடி களும் ஒடுங்கின.

'அத்தான், அத்தான் என்று நூரு யிரம் தடவை வாய் வலிக்க அழைத்து அன்பு காட்டி, நேசம் சொரிந்து, பாசம் பிணைத்து விளையாடி வந்த என் மாமன் மகள் கண்ணகிதானு இப்படி மாறி விட்டாள்? அவள் மாறவில்லை; மாற்றப்பட்டிருக் கிருள்!.... அவள் தன்னைத்தானே மாற்-றிக் கொண்டிருக்கிருள்!.... விரக்தி அவளுடைய ரத்தத்தில் இரண்டறக் கலந்து விட்டதோ?....'

தூசு பட்டுக் கண் கலங்கித் தண் ணீர் வந்தால்கூடப் பொறுக்கமாட் டாள் கண்ணகி. அவளுக்குக் கரி காலன் பேரில் அவ்வளவு பிராணன். அவள் அவனிடம் கண்ணீருக்குக் கார ணம் கேட்பாள்; ஆனல் அவன் கொடுக்கும் பதில் அவளுக்கு திருப்தி தராது. கடைசியில் 'ஆனந்தக் கண் ணீர், கண்ணகி!' என்று ஒரு போடு போட்டு விடுவான். அவளா ஒப்பு வாள்?.... ஆனல் அவன் அவளைச் சிரிக்க வைத்துச் சமாதானப் படுத் திய பிறகுதான் நல்ல மூச்சு விடு வான். தன்மீது அவ்வளவு அக்கறை கொண்டிருந்த கண்ணகியா இவ்வாறு பேசாத சிலையாகிப் போய் விட்டிருக்கின்ருள் என்று எண்ணி எண்ணி மனத்தைப் புண் ணுக்கிக் கொண்டான். இப்போது தன்னுடைய உண்மையான கண்ணீ ரைத் துடைக்க நாதி கிடையாதோ வென நினைத்து அவன் வருந்தினன். அவனுக்கு அவன் மேலேயே ஆத் திரம் ஆத்திரமாக வந்தது. கைகளை நெரித்துக் கொண்டான். 'ஆமாம், கண்ணகியைத் தனியாகச் சந்தித்து உண்மையைச் சொல்லாமல் இருந் தது தப்புதான்; ஆனல் அந்த உண் மையை உண்மையென்று எப்படித் தீர்மானிப்பது?.... மாமாவிடம் இரண் டில் ஒன்று கேட்டு விட்டுப் பிறகு தான் ஒரு முடிவுக்கு வர வேண்டும். அதற்குள் கண்ணகி விபரீத முடிவுக்கு வந்து விட்டால்....? ஒன்று கிடக்க ஒன்று நடந்து விட்டால்....? அவள் வேதனையும் விரக்தியும் அவளது உயி ரைக் குடிக்க நேர்ந்தால்....?' – மெய் விதிர்த்துப்போன அவன் 'ஐயோ!' என்று ஓலம் பரப்பினன்.

"அத்தான்!''

ஓடி வந்தவள் கண்ணகியா?– அல்ல! பூங்குழலி....!

தூணில் சாய்ந்தவாறு மயக்க நிலை யில் நின்ற கரிகாலனைத் தோள் களைப் பற்றி, அருகில் இருந்த மெத்தைச் சாய்மானத்தில் உட்கார வைத்தாள் பூங்குழலி. ரங்கூன் விசிறி கிடந்தது; எடுத்து வீசிக் காற்றை வரவழைத்தாள். குனிந்து கொண் டிருந்ததால், முதுகு வலித்தது. அதைப் பொருட் படுத்தவில்லை.

சரிந்து விழுந்து கொண்டிருந்த மேலாக்கை அடிக்கடி சீர்படுத்திக் கொண்டிருந்தாள். கரிகாலனின் முகத்திலும் நெற்றியிலும் படிந்திருந்த வியர்வையைத் தன்னுடைய பட்டுப் புடவையின் முக தலைவைக் கொய்து கொண்டு துடைத்தாள். சிந்தித்து, எதையோ ஞாபகப் படுத்திக் கொண்டாள் பூங்குழலி. உடனே, மறைத்து வைத்திருந்த கடிதம் ஒன்றை வெளியில் எடுத்தாள்; அது அவளிடமிருந்து அவனுடைய சட்டைப் பைக்கு மாறியது. பயம் அடங்கின அமைதியோடு மெதுவாகத் தலை நிமிர்ந்தாள். மாடியில் நின்ற கண்ணகியின் கண்கள் கூடத்தில் நிலைத்து விட்டிருந்த விந்தையை அறிந்தாள்.

அப்போது, விளக்குகள் மின்னொளி சிந்தின.

செந்தில்வேலன் செட்டியார் நின்றார்.

"பூங்குழலி, நீ உள்ளே போ அம்மா!....கரிகாலனை நான் கவனித்துக்கொள்ள மாட்டேனா?...."

வார்த்தைகளில் தெளிக்கப்பட்டிருந்த அமைதி அவருடைய முகத்தில் இல்லை; ஆத்திரம் இருந்தது.

தன் தகப்பனாரையும் அத்தானையும் மாறி மாறிப் பார்த்த வண்ணம் சென்றாள் பூங்குழலி.

கரிகாலன் லேசாகக் கண்களைத் திறந்தான்.

"மாமா!"

அவன் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்த அவசரத்தில், சட்டைப் பையில் ஊசலாடிய வாறிருந்த அக் கடிதம் தரையில் விழுந்தது. கரிகாலன் அதை எடுக்கப் பிரயத்தனப் பட்டான். அதற்குள் கடிதம் செட்டியாரின் உள்ளங்கைக்குள் பதுங்கியது.

**"உயிருக்குயிரான அத்தான்!**

என் கனவு பலித்து விட்டது. உங்களை தனிமையில் காணவே முடியவில்லை. விரைவிலேயே நாம் இருவரும் மணவறையில் சந்திக்க வேண்டும். அப்பாவிடம் சொல்லி ஏற்பாடு செய்யுங்கள். அப்போதுதான் அம்மாவும் புனர்ஜன்மம் எடுத்துப் பிழைத்து எழுவாள். ஆம்; என்னைப்போல பாக்யவதி உலகிலே யாருமே இருக்க முடியாது!

தங்கள்,
பூங்குழலி."

கடிதத்தை கரிகாலனிடம் திரும்ப ஒப்படைத்தார் செட்டியார்.

"கரிகாலா, உடம்புக்கு ஒன்றும் இல்லையே?"

"இல்லைங்க; சற்று நேரம் மயக்கமாகஇருந்தது; தலை சுற்றியது; நினைவிழந்து போய் விட்டேன் போலிருக்குது....!"

கரிகாலனின் பார்வை கடிதத்தில் பதிந்தது. மாமாவைப் பார்க்கத் தெம்பின்றி, குனிந்த தலை குனிந்தபடியே அமர்ந்திருந்தான்.

ஆழி சூழ் உலகம் அவனது பாதத்துக்குக் கீழே நழுவிக் கொண்டிருப்பதை உணரலானான்; திக்குமுக்காடினான் கரிகாலன்.

"கரிகாலா, என்னுடன் வா. உன்னிடம் பேசவேணும்!"

"ஏங்க!" என்று மெல்லிய குரலில் அழைத்தாள்; தன் பக்கம் வரும்படி அடையாளம் காட்டினாள் சாரதாம்பாள். கைகளில் அணிந்திருந்த பொன் வளையல்கள்பெரிதாகி விடவில்லை; அவளுடைய கைகள்தாம் சிறுத்து விட்டன.

சிலம்புப்பரல்: இருபத்து மூன்று

**தாயுள்ளத்தின் புனிதச் சக்திக்கு ஈடு எடுப்புக் கிடையாது. பெற்ற குழந்தைக்கு நோய் நொடி என்றால், 'பத்தியம்' இருக்கும் பொறுமை இந்தத் தாய்க்குலம் ஒன்றுக்கே சொந்தம்: இதுவே பெண் குலத்திற்குப் பெருமை.**

"என்ன, சாரதம்!" என்று அன்பு சொட்டச் சொட்டக் கேட்டுக் கொண்டே அவளை நாடி வந்தார் செந்தில் வேலன். அவரது அடி நெஞ்சில் அடித்துக் கொண்டிருந்த புயல் என்றைக்குத்தான் அடங்குமோ? துயரம் மண்டியிருக்கையில் மனிதர்கள் தெய்வங்களின் முன் மண்டியிட்டு அழுது புலம்புவது இயல்பு. செட்டியார் இயற்கையிலேயே தெய்வபக்தி உடையவர். இப்போதும் அவர் மனம் 'முருகா, முருகா!' என்றுதான் ஜபம் செய்துகொண்டிருந்தது, அல்லும் பகலும் அறுபது நாழிகையாக!

உலர்ந்து சுருங்கிய சாரதாம்பாளின் நெற்றியில் 'டபிள் நிமோனியா' என்ற வியாதியின் பெயர் எழுதப்பட்டிருந்தது. பணம் தண்ணீராகக் கரைந்தது. அவள் தொண்டை வளையைப் பிடித்தவாறு இருமினாள். என்னவோ பேச எத்தனம் செய்தாள்; கபம் பேசியது. வேர்வை ஊற்றுப் புனலானது.

"சாரதம்!"

செந்தில் வேலன் அவளது தலைமாட்டில் அமர்ந்து தடவிக் கொடுத்தார். மணிக்கட்டில் கண்ணீர் சிதறியது.

"அழுதியா, சாரதம்?" என்று பதட்டத்துடன் கேட்டார் அவர்.

"நான் அழவேண்டியவதானுங்களே?....இவ்வளவு உசிராக இருக்கிற உங்களை விட்டுப் போயிடப் போற நான் அழாமல் என்ன செய்கிறது?....ஒரு வகையிலே நான் கொடுத்து வச்சவள்தான்....பூவும் மஞ்சளுமாப் போகப் போறேன்; அதுவும் நாடியம்மன் கடாட்சந்தான்....!"

"சாரதம், பட்டுக்கோட்டை நாடியம்பாள் கட்டாயம் உன்னைக் காப்பாத்தும்; கெட்ட வார்த்தையெல்லாம் சொல்லாதே....!"

"ம்!....அது கிடக்குது; கொஞ்ச நேரம் என்னைப் பேசவிடுங்க!"

"நாளைக்குப் பேசிக்கிடலாம், சாரதம்!"

அவள் உதிர்த்த சிரிப்பில் விரக்தி உரு புரியாமல் மயங்கிக் கிடந்தது.

"ஏங்க!"

"சாரதம்! சரி, பேசு!"

"ஒரு நாளைக்கு நீங்க யாரோ ஒரு பொண்ணோடே பேசினதைக் காணவே மனசு பொறுக்காம நான் உங்க கிட்டே வந்து வருத்தப்பட்டேன்; எனக்கு மட்டுந்தான் நீங்க சொந்தம்னு ஆகாசக் கோட்டை கட்டினேன். ஆனா, அது என்னைக்கோ இடிஞ்சு போச்சுது, எனக்குக்கூடத் தெரியாமல்! பதினேழு–பதினெட்டு வருஷத்திய ரகசிய நாடகம் இப்பதான் எனக்குத் தெரிஞ்சுது!...."

"சாரதம், உடம்பு நல்லாயில்லாமல் இருக்கிறபோது, நடந்ததையெல்லாம் நினைச்சு ஏன் அலட்டிக்கணும்?"

"வாஸ்தவந்தான்; நடந்ததைப் பத்தி இனி நினைக்கலே. இனிமேல் நடக்க வேண்டியதைப் பத்தித்தான் யோசிக்கணும். ஆமா, குழந்தைங்க ரெண்டும் எங்கே போயிட்டுதுங்க?"

"அல்லி ஸ்கூலுக்குப் போயிருக்கு; பூங்குழலி உள்ளே இருக்கும்!"

"ஏங்க!....இப்ப நான் என்னைப் பத்தி துளிகூடக் கவலைப்படல்லே. ஆனா, பூங்குழலி–அல்லி ரெண்டையும் நினைக்கிறப்பதான், இப்பவே மூச்சு நின்னிடும் போலேயிருக்கு!"

தாயுள்ளத்தின் புனிதச் சக்திக்கு ஈடு எடுப்புக் கிடையாது. பெற்ற குழந்தைக்கு நோய்-நொடி என்ருல், 'பத்தியம்' இருக்கும் பொறுமை இந்தத் தாய்க்குலம் ஒன்றுக்குத்தான் சொந்தம்; இதுவே பெண் குலத்திற்குப் பெருமை.

"சாரதம், அல்லி-பூங்குழலியைப் பற்றி நீ கவலைப்படாதே. அவங்க ரெண்டு பேருக்கும் எந்தக் குறையும் வராது; என்னுடைய உயிரே என் பெண்கள்தான்!...."

பூங்குழலி-அல்லியுடன் கண்ணகியும் தோன்றினுள்.

உருமப் பொழுது.

கொல்லன் உலேக் களத்தில் செருகப்பட்ட இரும்புத் தகடு போல மின்னிய வானம் கை நொடிப் போதில் கறுத்தது, தீப்பிழம்பெனச் சிவந்திருந்த தகட்டில் தண்ணீர் பட்டவுடன் கறுப்பு வண்ணம் காட்டுமே, அதுமாதிரி.

செந்தில் வேலன் செட்டியார் மின்சார விளக்குக்குரிய பொத்தானே அழுத்தினர்.

சாரதாம்பாளின் உடல் நடுங்கிற்று.

மழை பொழிந்தது. கோடை மழை அல்ல. ஐப்பசி-கார்த்திகை அடைமழைக்கு ஒத்திகை போலத் தோன்றியது; ஒருவேளே, மழை காலம் நெருங்குகிறதென்று முன்னறிவிப்புக் கொடுத்ததுபோலும்!

ஜன்னல் கதவுகளேச் சாத்தினுர் செட்டியார். காஷ்மீர்க் கம்பளியைத் தம்முடைய உயிர்த் துணைவியின் உடல்மீது போர்த்தினுர் அவர். நடுக்கம் வரவர அதிகரித்தது; அவளுடைய பற்கள் ஒன்ருேடொன்று உராய்ந்து சத்தமிட்டன.

"சாரதம்....சாரதம்!" என்று அலட்டினுர். பதில் இல்லே. பிறகு, இருந்திருந்தாற்போல சாரதாம்பாளின் விழிகள் இரண்டும் அகலத் திறந்தன. மூக்கின் நுனிக்குச்சென்று திரும்பியது அவரது வலதுகை. கால்களேயும் பாதங்களேயும் தொட்டுப் பார்த்தார். இப்போது அவர் கைகள் நடுங்கத் தொடங்கின. காரணம், அவளது கால்களும் பாதங்களும் குளிர்ந்திருந்தன. கைகளிலும் நெஞ்சிலும் லேசான வெதுவெதுப்பு இருந்தது. கொஞ்சத்திற்குக் கொஞ்சம் நம்பிக்கை அவரிடம் இன்முகம் காட்டியது.

மழை வலுத்தது. மழையினே வாயாரப் புகழ, நெஞ்சார வாழ்த்த அவர் பாரதியல்லவே!

குளிர்ந்த காற்று வீசியது. சாரதாம்பாளின் விரல்கள் 'சமிக்ஞை' செய்தன. செந்தில் வேலன் தம் மனேவியின் முகத்துக்கு நேராகக் குனிந்தபோது, அவளுடைய மெலிந்த கரங்கள் அவரது கழுத்தில் இழைந்தன-அன்பின் வெறியோடு. இரு




வகை மூச்சுக்களும் ஒன்ருேடு ஒன்று அந்தரங்கம் பேசிக் கொண்டிருக்க வேண்டும்.

செந்தில் வேலன் நிமிர்ந்து உட்கார்ந்தார்; கண்களேத் துடைத்து விட்டார். மனேவியைப் பார்த்தார்; இமைகள் சுருங்கி விரிந்து கொண்டிருந்தன – அவளுடைய இமைகள். தாலிச் சரட்டின் முனேயில் கண்ணீர் இருந்தது.

வதுவை விழா ஊர்ஜிதப்படுத்திய அறிமுகத்தில் பிறந்த அந்த முதல் இரவில் அவர் கண்ட சாரதாம்பாள் எண்ணத்தில் வந்து நின்ருள். உடல்

இரண்டும் ஒன்றி ஓர் உயிருக்குள் முடங்கிக் கிடந்த அத்தியாயங்கள் ஒவ்வொன்றாகப் பிரிந்து கொண்டிருந்தன.

அணிமையில் ஒரு நாள். கார்த்திகை.

செந்தில் வேலன் செட்டியார் இரவு பலகாரத்தை முடித்துப் படுக்கையில் சாய்ந்திருந்தார். சாரதாம்பாள் வந்தாள். நெற்றியில் குங்குமம்; கொண்டையில் மல்லிகைப்பூ. அவளை ஓரக்கண்ணால் பார்த்து அவர் புன்னகை செய்தார். அவளுக்கு வெட்கம் வந்து விட்டது. என்

னவோ, அப்போதுதான் முதன் முதலாகப் பார்ப்பது போன்று அவர் பார்த்தால், அவளுக்கு வெட்கம் வராதா, என்ன?

“சாரதம், ஏன் இப்படி வெட்கப்படுகிறாய்? எனக்கு இன்னும் ஏழெட்டு வருஷம்

போனால் சஷ்டியப்த பூர்த்தி நடக்கப் போகிறதே, தெரியுமோ?''

"ஓ, தெரியுமே!.... இன்னும் இருபது, இருபத்திரண்டு வருஷம் போனால் எனக்கும் அறுபது ஆகிடத் தான் போகுது! அப்போது நீங்க என்னைக் கேலி பண்ணாமலா இருக்கப் போறீங்க....?''

செந்தில் வேலன் தம் மனைவி சொன்ன அந்தக் கெடுவில் அடியெடுத்து வைத்து நின்றார். ஏனோ அந்த எதிர்காலம் பேயிருட்டுப்போல பயங்கரமாகக் காட்சியளித்தது.

"சாரதம்!''

வெளியே தெரியாமல் விம்மி அழுதார் செந்தில் வேலன்; பிறை மாடத்தில் இருந்த விபூதியைக் கையில் எடுத்து வந்து அவள் நெற்றியில் பூசினார். அவளுடைய புன்னகை அவருக்கு அச்சம் தந்தது.

அணையப் போகுமுன் விளக்கு அழகாக ஒளி வீசித் திகழுமாமே....?

வானம் வெளிவாங்கத் தொடங்கியது.

சிலம்புப்பரல் : **இருபத்து நான்கு**

**"கரிகாலா! விதியோ, வினையோ, ஆண்டவனே என்னுடைய ஒரு கண்ணில் வெண்ணெயையும் இன்னொரு கண்ணிலே சுண்ணாம்பையும் இட்டு, என்னை சுட்டுச் சாம்பலாக்கிச் சிதைக்க, நான் செத்த மனிதனாகவே ஆகி விட்டேன்!"**

பதிவு கடிதத்தைக் கையெழுத்திட்டு வாங்கினார் செந்தில்வேலன். முத்திரையில் பூவை மாநகர் என்ற எழுத்துக்கள் தெளிவாகத் தெரிந்தன. அவசரம் அவசரமாக உறையை திறந்தார்; உள்ளுறையைக் காணத் துடித்தார்; பர்மாவிலிருந்து வந்திருந்த அந்தப் பையனின் முகம் தோன்றியது; தம் மகள் பூங்குழலியின் கவனம் நடராஜன்மீது சென்று திரும்பிக் கொண்டிருந்ததைக் கண்டவர் அவர்; எழுதிய கடிதத்தை ஞாபகப் படுத்திக் கொண்டார். 'வேலாயுதக் கடவுளின் கிருபையினால் உன் ஜாதகமும் என் மகள் பூங்குழலியின் ஜாதகமும் பொருந்தி விட்டால், இந்த ஐப்பசியிலேயே முகூர்த்தம் வைத்துவிட வேண்டியதுதான்!' என்ற வரிகள் அவர் எழுதிய கடிதத்தின் கடைசிப் பகுதியாக அமைந்தன. கப்பலில் வந்து இறங்கிய அழகன் நடராஜன் தன்னுடைய ஜாதகக் குறிப்பின் நகலையும் பதில் கடிதத்தையும் அனுப்பியிருந்தான்.

செந்தில் வேலன் பூஜை அறைக்குள் நுழைந்து, நடராஜனின் ஜாதகத்தையும் பூங்குழலியின் ஜாதகத்தையும் முருகன் படத்துக்குக் கீழே வைத்து எடுத்து, பிறகு சட்டையின் உட்பைக்குள் திணித்து கொண்டார். பூங்குழலியைக் கூப்பிட்டு, தம் பணியைத் தற்காலிகமாக ஏற்கும்படி அவளிடம் சொன்னார். தாயின் அருகில் அவள் உட்கார்ந்தாள். கையில் நாவல் ஒன்று இருந்தது.

அவர் ஹாலைக் கடந்தார்; சுவர்க் கடிகாரம் ஒரு தவணை 'டங்' என்றது. பார்த்தார்; மணி பதினொன்று, நிமிஷம் முப்பது. ராகுகால நினைவு ஏற்பட்டது. திங்கட்கிழமை என்னும் சிந்தனையும் உண்டானது. நிம்மதி பூத்த இதயத்தோடு நடந்தார். புதிய ஊரில் நுழைவதுபோல ஓர் உணர்ச்சி பரவியது.

சோதிடவல்லுனரிடமிருந்து விடை பெற்று மீண்டும் தம் பங்களாவில் நின்றார் செட்டியார். முருகனிடம் ஓடினார்; நெடுஞ்சாண் கிடையாக விழுந்தார். "அப்பனே, என்மனத்தில் பாலை வார்த்தாய். பூங்குழலி—நடராஜன் ஜாதகங்கள் அற்புதமாகப் பொருந்தி விட்டன. எல்லாம் உன் கருணையேதான்!" என்று உணர்ச்சி வயப்பட்டுக் கூறினார்.

தம் மனைவியின் இடம் தேடிச் சென்ற வழியில் செந்தில் வேலனின் கண்களுக்கு அவர் புதல்வி கண்ணகி இலக்கானாள்.

அன்புத் திருமகளின் தாழ்வாய்க் கட்டையை தொட்டுப் பற்றிக் கேட்டார் அவர் :

"என்னம்மா, சாப்பிட்டியா?"

"நீங்களே இன்னும் சாப்பிடலையே, அப்பா? அதற்குள்ளே நான் எப்படிச் சாப்பிடுவது?...." என்றாள் கண்ணகி.

மகளுடைய முகத்தைப் பார்க்கக் கூட அவருக்குத் தெம்பில்லை. அவளுடன் அன்பு பாராட்டிப் பேசி நாட்கள் எத்தனையோ ஆகிவிட்டனவே? 'அப்பா' என்று கூறிய வார்த்தைகளின் அர்த்தத்தை அவர் அறியாமல் இல்லை. பூங்குழலி – கரிகாலன் ஜோடி தம்பதியாகப் போவதாகச் சொன்னதன் விளைவை அவர் உணராமலா இருந்திருப்பார்? அவர் உணரவில்லை யென்றுதானே கரிகாலன் கணித்திருந்தான்? கரிகாலனிடம் சொன்ன 'நல்ல செய்தி'யைக் கண்ணகி அறியமாட்டாளே, பாவம்!

'கரிகாலா, என் பேரிலே உனக்குக் கெட்ட கோபம் இருக்கும். நான் என்ன செய்யட்டும்? என்னை இப்படிச் சித்திரவதை செய்வான் இந்த முருகன் என்று நான் கனவிலேயும் நினைக்கவில்லை. சாரதத்தின் உடல்

நிலை என்னைப் பைத்தியமாகவே ஆக்கிவிட்டது. அன்றைக்கு சாரதத்தைப் பார்த்தபோது, அவள் கண்கள் இருந்த நிலை என்னைப் பயப்பட வைத்தது. அதற்குத் தக்கமாதிரி அவளும் பூங்குழலியின் கல்யாணப் பேச்சை ஆரம்பித்து விட்டாள். உன் ஜாதகமும் பூங்குழலியின் ஜாதகமும் பொருத்தமாக அமைந்திருக்கிறதென்று சொல்வதைத் தவிர வேறு மார்க்கம் தெரியவில்லை. அவளுடைய இறுதிக் காலத்தில் இந்த ஒரு நல்ல சேதியைக் கேட்ட நிம்மதியிலாவது அவள் கண்ணை மூடட்டுமேயென்று ஒரு சபலம். அதற்காகவே நான் அவளிடம் "இரண்டாவது பெரிய பொய்'யைச் சொன்னேன். அதைக் கேட்டு, நீ என்னைத் தவருகப் புரிந்து கொண்டிருப்பாய். உன் மீது தவறில்லை. குற்றவாளி நான்தானே?.... பாவம், கண்ணகிக்குத்தான் மனச் சங்கடம் குறையவில்லை. மழை விட்டும் தூவானம் விடாத கதை போலானது. என்னேடு முகங் கொடுத்துப் பேசமாட்டேன் என்கிருள். 'அப்பா' என்று அழைப்பதே அபூர்வமாகி விட்டது. எல்லாக் கஷ்டங்களும் என்றுதான் விடியுமோ?....கண்ணகியிடம் ஜாதக விஷயத்தின் உண்மையைச் சொல்ல வேண்டுமென்றுதான் எனக்கும் இஷ்டம். ஒரு சமயம், அவள் மூலம் உண்மை அம்பலமாகி, அது சாரதத்தின் காதுகளுக்கும் எட்டிவிட்டால் ஆபத்தாகி விடாதா? அதற்குத்தான் கண்ணகியிடம் இது வரை நான் சொல்லவில்லை. நீயும் சொல்லி விடாதே!....கண்களிலே எண்ணெய் ஊற்றிக் கொண்டு நான் கண்ணகியைக் கண்காணித்துக் கொண்டிருக்கிறேன். அவள் இங்கிருந்து, என் நிழலை விட்டு விலகாத அளவுக்குக் காவல் காத்துக் கொண்டிருக்கிறேன் நான்.

'கரிகாலா!....எனக்கு இரண்டு பெண்களும் இரண்டு கண்கள்தான். ஆனல் விதியோ, வினையோ, ஆண்டவனே ஒரு கண்ணில் வெண்ணெயையும் ஒரு கண்ணில் சுண்ணும்பையும் இட்டு, என்னைச் சுட்டுச் சாம்பலாக்கிச் சிதைக்க, நான் செத்த மனிதனுகவே ஆகிவிட்டேன்!....கண்ணகியின் கதையில் துன்பத்துக்குப் பிறகு இன்பம்!....ஆனல் என் மூத்த பெண் பூங்குழலிக்கோ இன்பத்துக்குப் பிறகு துன்பம்!....பாவம், அவளை ஏமாற்றப் போகிறேனே நான்....! முற்பிறப்பிலே என்னென்ன பாவம் செய்தேனே, தெரியவில்லை!....



'கரிகாலா, ஒன்று மட்டும் உறுதியாகச் சொல்லுகிறேன். உனக்குத்தான் கண்ணகி!....எனக்கு இன்னெரு ஆசையும் இருக்கிறது. ரங்கூன் பையன்—நம் இனத்தைச் சேர்ந்த நடராஜனுக்கும் பூங்குழலிக்கும் பொருத்தம் சரியாகியிருக்கிறது. என் பூர்வீக ஊரான பூவைமாநகரை பார்க்க வேண்டுமென்று பூங்குழலி ஆசைப்பட்டாள். உன் ஊரான அறந்தாங்கிக்கும் கூட்டிக் கொண்டு போகவேண்டுமென்று நச்சரித்தாள். நடராஜன் என் மாப்பிள்ளையாகி விட்டால், அவள் பூவைமாநகருக்குச் செல்வாள். ஆனல், அறந்தாங்கியை இனி எண்ணத் தேவையில்லையல்லவா? என் சாரதத்தின் உடல்நிலை தேறியவுடன், சமயம் பார்த்து அவளிடம் பூங்குழலியைப்பற்றின புதிய விவரத்தைச் சொல்லிவிடுகிறேன். அப்போதுதான் இந்த அதிர்ச்சியை அவளால் தாங்க முடியும். ஒரே முகூர்த்தத்திலே இரண்டு கலியாணங்களை நடத்தினுல்தான் எனக்கு உயிர் வரும்! என் அப்பனைத்தான் நான் நம்பியிருக்கிறேன்....!'

தமக்கை மகனிடம் இதயம் திறந்து பேசிய சம்பவம் செந்தில் வேலனல் மறக்க இயலாததொன்று.

"வாங்க அப்பா; சாப்பிடலாம்!'' என்ருள் கண்ணகி.

அவருக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை.

அவள் வதனத்தில் குறுக்கிட்டு ஓடிய நகைக்கீற்று மறைவதற்குள் மறுமுறையும் அன்போடு நோக்கினுர் அவர். தந்தை உள்ளத்தில் நிறைவு வரம்பு கட்டியது. அன்றையப் பொழுதுக்குள் இரண்டு முறை 'அப்பா' என்று அழைத்து விட்டாள் கண்ணகி; போதும் போதாதற்கு அத்தி பூத்த பாங்கிலே சிரிப்பு வேறு. ஒருமுறை கடற்கரைக்குக் கண்ணகியை அழைத்துச் சென்று "அப்பா, அப்பா!'' என்று அவள் அழைக்கக் கேட்டு மெய் சிலிர்த்துப் போன நிகழ்வும் ஊடாடியது. சுடு நீர் சொட்டியது.

கண்ணகியின் கையில் 'திருக்குறள்' காணப்பட்டது. அவள் படித்த பக்கத்தைக் கூர்ந்து நோக்கினுர் செட்டியார். கீழ்த்தொங்கலில் இருந்த சில வரிகள் அவர் பார்வையில் பட்டன.

'குற்றமற்ற ஒரு நன்மை உண்டாக்கும் நோக்கத்துடன் ஒரு பொய்யைச் சொன்னுலும், அது வாய்மையாகவே கொள்ளப் படும்.'

நிறைந்த இதயத்தை விட்டு ஓர் இன்பப் பெருமூச்சு வெளியானது.

செந்தில் வேலன் பசியை மறந்திருந்தார். ஆனால் கண்ணகியோ பசியை நினைவுறுத்தினள். மகளின் திருப்திக்கென்று அவர் சாப்பாட்டுக்கு முன் குந்தி எழுந்தார். அலம்பின கையின் ஈரம் இன்னும் உலரவில்லை. சாரதத்திடம் சென்றார். அவள் கட்டை போல கிடந்தாள். பூங்குழலிக்கு நெடுங்கதையில் கவனம். அவளிடம் சாப்பிடச் செல்லும்படி உரைத்தார். அவளோ கடிதத் துண்டு ஒன்றை நீட்டினள்.

பூங்குழலிக்குக் கண்ணகி எழுதி அனுப்பிய கடிதம். கண் நிறைந்த காதலரை அடையப் போகும் பூங்குழலி கொடுத்து வைத்த புண்ணியவதி எனவும், கரிகாலன்—பூங்குழலி திருமணத்தை தான் இருந்து நடத்த எண்ணியிருப்பதாகவும், அவர்கள் திருமணம் முடிந்தவுடனே கண்ணகி ஊர் செல்லப்போவதாயும் குறிப்பிடப்பட்டிருந்தது. கடிதத்தின் ஆரம்பத்தில் காணப்பட்ட 'அன்பு மிக்க அக்கா' என்பதையும் முடிவில் இருந்த 'உன் அன்புத் தங்கை கண்ணகி' என்பதையும் இரண்டு மூன்று தரம் படித்தார் செட்டியார்; தஞ்சாவூர்ப் பொம்மையென சலனமிழந்து காணப்பட்டார் பெரியவர்!—தஞ்சாவூர் பொம்மையென்ருல், தலையாட்டிப் பொம்லமயல்ல....!

> சிலம்புப்பரல் : **இருபத்தைந்து**
>
> **கரிகாலன் அவ்விடத்திற்கு வந்து நின்ருன். 'தொடரும்' என்று எண்ணியிருந்த நீள்கதை அரைகுறையாக நின்று போனதை அவன் அறிந்து கொண்டான்!**

**வை**ர அட்டிகை மீண்டும் கண்சிமிட்டியது. செந்தில் வேலன் செட்டியாரிடம் அது பண்டைக் கதையை நினைவூட்டும் ஞாபகக் குறிப்பாக மாறி தொலைக்க வேண்டுமா?....பொய் புனையத் தெரியாமல் அகப்பட்டு விழித்த தம் மனைவிக்காக வருந்தியது அவருடைய மனம்; அநீதியாகப் பழி சுமத்தப் பெற்றது கண்டு ஆருத் துயர் எய்திய தம் அருமைப் புதல்வி கண்ணகியின் பரிதாப நிலையை ஆராய்ந்து கண் கலங்கினர். 'உலகம் விசித்திரமானது; சரி. ஆனல், இங்கே என் சாரதம் என்னையே விசித்திர பொருளாக்கி விட்டாளே?....'—அமுத கண்ணகியின் விழிநீரை தாம் துடைத்தெடுத்து ஆறுதல் மொழிந்தபோது, எதிர்பாராமல் நாலைந்து முறை குறுக்கிட்டு மறைந்த சாரதாம்பாளின் பயம் உண்ட வனத்தை எண்ணினர். 'ம்....!'

சாரதாம்பாளுக்குச் சுய நினைவு இல்லை. இம்மாதிரியான நிலை அடிக்கடி ஏற்பட்டது. ஒவ்வொரு முறையும் அவள் சாவின் வாசலை தொட்டு விளையாடித் திரும்பிக் கொண்டிருந்தாள். ஒவ்வொன்றும் ஒவ்வொரு 'கண்டமாக' வாய்த்தது—நித்திய கண்டம்! அநித்திய வாழ்வுக்கு விடப்பட்ட சவால்!

சாரதாம்பாளைப் போலவே செந்தில் வேலனின் நிலையும் இருந்தது.

பூங்குழலி இல்லம் அல்லோல கல்லோலப் பட்டது. கரிகாலனும் அம்பலவாணனும் வெளித் தாழ்வாரத்திலிருந்து எட்டிப் பார்த்து உள்ளே நடக்கும் நடப்பைப் பற்றி யூகித்தவாறு இருந்தார்கள். டாக்டர் மாற்றி டாக்டர் வந்து போய்க் கொண்டிருந்தார். கணக்கப்பிள்ளை குமாரலிங்கம் ஒரு ரூபாய், இரண்டு ரூபாய், ஐந்து ரூபாய், பத்துரூபாய், நூறு ரூபாய் என்று நோட்டுக்களை அடுக்கி வைத்துக் கணக்குகளைக் குறித்துக் கொண்டிருந்தார். 'ஞாபகச் சிட்டை' அருகில் இருந்தது.

செட்டியாரின் முகத்தில் ஈயாடவில்லை. முகத்திரையில் தீராத சஞ்சலம் அப்பப்பட்டிருந்தது. கலைந்து போன சித்திரம் போல சாரதாம்பாள் படுத்திருந்தாள். சுண்ணும்புக் கட்டிபோல் ஆகியிருந்தது அவளது முகம். பூங்குழலி துயர் வடிவானள். அவள் விழிகள் வெளித் தாழ்வாரத்திற்கு ஓடி ஓடி மீண்ட சந்தர்ப்பங்களும் உண்டு. சின்னவள் அல்லி

அடிக்கடி மூக்கை உறிஞ்சிக் கொண்டிருந்தாள். கவுன் ஓரங்களில் ஈரம் இருந்தது.

புதிய வைர அட்டிகையைக் கையிலெடுத்துக் கொண்டார் செந்தில் வேலன்; மெள்ள அவளது தலைமாட்டுக்கு நெருங்கி உட்கார்ந்து கொண்டார். கண்ணீரை கட்டுப்படுத்த முடியவில்லை. கண்ணகி மருந்தை ஊற்றி நீட்டினாள். அவளுடைய வதனம் பொலிவற்றிருந்தது: விழிகள் சிவந்திருந்தன.

"சாரதம்," என்று அழைத்து அவளது உடலைத் தீண்டித் தட்டி எழுப்பினார் செட்டியார். சாரதாம்பாள் லேசாகக் கண் மலர்ந்தாள். விழிகளின் கங்குகளில் நீர் கரை சேர்ந்திருந்தது. அவள் முதலில் பூங்குழலியையும் அல்லியையும் நோக்கினாள். அல்லி 'அம்மா!' என்று ஓடி வந்து தாயைக் கட்டியணைத்துக் கதறினாள். பூங்குழலிக்கும் அல்லிக்கும் வித்தியாசம் குறைச்சல் — அழுகையின் தராதரத்திலே! பூங்குழலி உணர்ச்சி வசப்பட்டாள்; அவளும் அல்லி மாதிரி வாய்விட்டு அழுது புலம்பினாள்.

"சாரதம், மருந்தைச் சாப்பிடு!'' என்று கூறித் தேம்பினார் செட்டியார்.

"இனி மருந்து மாயமெல்லாம் வீண்!'' — விதியின் கைரேகையைப் புரிந்து கொண்டவள் கணக்காக அவள் செப்பினாள்.

"அப்படியெல்லாம் அடிக்கடி சொல்லக் கூடாது, சாரதம். மருந்தைக் குடி. ரொம்பவும் நல்லது....!''

சாரதாம்பாள் ஒரு மிடறு கூட மருந்தை உட்கொள்ளவில்லை. அதற்குள் வாந்தி யெடுத்தாள். செந்தில் வேலன் தம் பெண்சாதியின் உதடுகளையும் முகத்தையும் வெந்நீரால் பதமாகத் துடைத்து விட்டார்.

கண்ணகி நின்ற திசைக்குத் தாவியது சாரதாம்பாளின் கட்புலன்.

'கண்ணகியை நல்ல இடத்திலே கல்யாணம் செஞ்சு கொடுங்க....! கண்ணகி, என்னை மன்னிச்சுப்பிடு, கண்ணே! உன்னை 'புரிஞ்சுக்கிட்டு', என்னைப் புரிஞ்சுக்காம அன்னிக்கு உன்னைப்பத்தி உங்க அப்பாகிட்டே அவதூருச்சொன்ன அந்தத் தப்புக்கு ஆண்டவன் காலிலே மன்னிப்பு வேண்டிக் கிட்டுத்தான் அம்மா, இப்பிடி இத்தனை நாளா நான் படுத்துக் கெடக்குறேன். என்னை கடவுள் நிச்சயமா மன்னிக்கவே மாட்டான். மகளை தாய் பழி சுமத்தலாமா?....

கொண்டவருக்கு முந்தானை போட்டவளே தாலி கட்டியவரை ஏசலாமா? ஈசன் என்னை திரும்பிப் பார்க்கவும் ஒப்பார்; ஆனல், நீ என்பொண்ணு. நீ என்னை மன்னிச்சுப்பிடுவே. தெரியும். இந்த ஆறுதல் எனக்குப் போதும், கண்ணகி! உன் அக்காளையும் தங்கச்சியையும் மறந்திடாதேம்மா....! உன் அப்பாவை இனிமேல் நீங்க மூணு பேருந்தான் கவனிச்சுக்க வேணும். அவருக்கு இந்தப் பாவியாலே எவ்வளவு துன்பம்!.... ஏங்க, உங்க கற்பகத்தோடே படத்தையாச்சும் ஒரு வாட்டி காட்டப்பிடாதா?'' என்று வேண்டினாள் அவள்.

செந்தில் வேலன் திரும்பி வந்த போது, கற்பகத்தின் புகைப்படம் அவரிடம் காணப்பட்டது. வைத்த

கண் வாங்க மனமின்றி படத்தையே உறுத்துப் பார்த்தாள் சாரதாம்பாள்.

கண்ணகியின் கண்களில் குருதித் திவலைகள் துளித்தன. "அம்மா!" என்று கூப்பாடு எழுப்பினுள்.

சாரதாம்பாள் திரும்பி கண்ணகியின் பக்கம் தலையைச் சாய்த்தாள். "அழாதேம்மா!.... அழாதே!" என்று ஆறுதல் சொன்னுள்.

தம் ஜீவன் தம்மை விட்டு விலக வேளை பார்த்துக் கொண்டிருப்பதை உணரத் தலைப்பட்டார் செந்தில் வேலன். உடம்பு ஆட்டம் கண்டது. மெத்தையில் இருந்த வைர அட்டிகையை எடுத்தார்; சாரதாம்பாளை நெருங்கினுர்; அதை அவள் கழுத்தில் அணிவித்தார்.

சாரதாம்பாள் அழுதாள். "பயப்படாதீங்க; இது ஆனந்த பாஷ்பம்!" என்று அந்தமுடன் சிரித்தாள்.

"ஏங்க, பூங்குழலி கல்யாணத்தைக் காண முடியாது என்னுலே!.... மாப்பிள்ளையையும் பூங்குழலியையும் கூப்பிட்டு ஜோடியாய் நிற்க வையுங்க; அதையாச்சும் பார்த்து சந்தோஷப்படுறேன்!...." என்று விம்மினுள் சாரதாம்பாள்.

தீ நெஞ்சில் பரவியது. கையிலிருந்த மூக்குக்கண்ணாடி நழுவிச் சிதறியது. "முருகா! இது என்ன சோதனை?" என்று கதறினுர். என்ன செய்வதென்று புரியாமல் விழித்தார் செட்டியார்.

"மிஸ்டர் கரிகாலன்!" என்று அழைத்தார் டாக்டர்; உறவுக் குறிப்பை அறிந்தவர்!

கரிகாலன் ஓடோடி வந்தான்; வந்த அவசரத்தில் தூணில் மோதிக் கொண்டான்; ரத்தம் பீறிட்டது.

பூங்குழலி தன் அத்தான் கரிகாலனுக்காகக் காத்து நின்று தவித்துக் கொண்டிருந்தாள்! 'முள் எடுக்கும் பாவனையில் முறுவல் நகை பூத்த' சகுந்தலையின் மூவண்ணச் சித்திரம் பூங்குழலியின் ஆர்வக் கனலை கிளறியது. துஷ்யந்தனின் எழிலார் உருவம் அவள் பார்வையில் பட்டது. அப்போது கரிகாலனின் உருவத்தைத்தான் அவளால் காண முடிந்தது. மனிதர் உலகிலே காதலர்களாக ஆக முடியாமல், தேவர் உலகிலே காதலர்களாக ஆன அம்பிகாபதி – அமராவதி ஜோடியின் சித்திரமும் புன்னகை காட்டியது. பூங்குழலிக்குப் பயம் அண்டியது.

வளர்கதை

"ஐயோ....சாரதம்!" என்று வீரிட்டார் செந்தில் வேலன் செட்டியார்.

கரிகாலன் அவ்விடத்திற்கு வந்து நின்ருன். 'தொடரும்' என்றெண்ணியிருந்த நீள்கதை அரைகுறையாக நின்று போனதை அவன் அறிந்து கொண்டான்! O

இரும்புத் திரை

'சிவகாமி'
ஜெயஸ்ரீ

'சிவகாமி'
லக்ஷ்மிபிரபாவும் குழந்தையும்

# புதிய விளம்பரம்

நா. பார்த்தசாரதி

வராக மூர்த்தி தம் அருமைப் பெண் பத்மாவைக் கடிந்து கொண்டார்.

"ஏனம்மா, நீ என்னிடம் ஒரு வார்த்தை சொல்லியிருக்கப் படாதா? நான் நாலு 'செட்' தைத்து அனுப்பி யிருப்பேனே?... 'கம்பெனி கீப்' பண்ணவேணுமோல்லியோ? உன் தோழிகளெல்லாம் 'பாட்மிண்டன் கோர்ட்டுக்'குப் போறபோது 'யூனிபாரமா' இந்த 'டிரஸ்'தான் உபயோகிக்கிறான்னு, நீயும் ஏன் போட்டுக்கப்படாது?..."

வராக மூர்த்தியின் பெண் கையில் பூப்பந்து மட்டையோடு தன் தோழிகளுடன் விளையாடப் புறப்பட்டுக் கொண்டிருந்த சமயத்தில் தான் மேற்படி பிரச்சினை எழுந்தது. பூப்பந்து விளையாடப் பெண்களுக்கென்று அந்தக் 'கண்டோன்மெண்ட்' பகுதியில் இருந்த அழகிய புல் தரையோடு கூடிய விளையாட்டுக் கூடத்துக்குத் தான் அவர்கள் கிளம்பிக் கொண்டிருந்தார்கள். அவ்வளவு பேரிலும் கர்நாடகமாக காட்சியளித்தவள் வராக மூர்த்தியின் பெண் பத்மாதான்.

மற்றப் பெண்கள், உடம்பை இறுகப்பிடித்துக்கொண்டிருக்கும் ஆணுடையில் காட்சியளித்தனர். மார்புக்கு மேலே சிவப்பும் கீழே வெண்மையுமாக இரு வண்ணத்தில் விளையாட்டு உடை பாணியில் அது இறுக்கமாகவும் பிடித்தமாகவும் இருந்தது. அரையில் முழுக் கால் சட்டை; 'பாப்' செய்த தலையயானாலும், ஆறு கஜம் ஜார் ஜெட்சேலையும், முழங்கை தொடும் சோளியுமாக அவள் அந்தப் பெண்கள் கூட்டத்தில் தனிப்பட்டவளாக காட்சியளித்தாள். ரோஜாப் பூக்களின் குவியலுக்கு நடுவே எப்

படியோ தப்பித் தவறி ஓர் அரளிப் பூவும் விழுந்து கிடப்பது போல் அவளுடைய கோலம் அங்கே மாற்றுக் குறைந்து, பொருத்தமின்றி விளங்கியது.

அதைத்தான் வராக மூர்த்தி மகளிடம் குறிப்பிட்டுச் சொல்லிக் கடிந்து கொண்டிருந்தார். "எனக்கெதுக்கு அப்பா இதெல்லாம்?" என்று சொல்லி விட்டுப் புள்ளி மான் குதித்தோடுவது போல் பந்தாடும் மெல்லிய மட்டையைச் சுழற்றிக் கொண்டே தோழிகளோடு குதித்து ஓடி விட்டாள் பப்பி.

'அவள் வேண்டாம்' என்று சொன்னதற்காக வராக மூர்த்தி சும்மா இருந்துவிடுவாரா, என்ன? அப்புறம் அவருடைய கௌரவம் என்ன ஆவது? 'எந்தப் பரதைப் பயல் வீட்டுப் பெண்களெல்லாமோ நாகரீகம் கொண்டாடுகிற போது ஊரிலேயே பெரிய ஜவுளிக் கடைக்குச் சொந்தக்காரரான என் பெண்ணுக்கு ஏன் குறை வைக்க வேண்டும்?' லட்சாதிபதிகள், இரண்டு மூன்று கோடீசுவரர்கள் உள்பட அந்தஸ்தை வெளிக் காட்ட முயலும் தகுதி உள்ளவர்கள் வசிக்கின்ற இடமாயிற்றே அது? 'பாரீஸ் நாகரீகத்'தைப் பச்சையாகக் கடைப் பிடிக்கின்ற இடம் இல்லையா அது?

'பணத்தின் அடித்தளத்தின் மீதிருந்த பாவனை' என்கின்ற பீடு ஒரு காலத்தில் பணக்கார ஆண் பிள்ளைகளின் பெருந்தன்மையில் நிலவியிருந்திருக்கலாம். அதெல்லாம் பழைய விவகாரம். இப்போதெல்லாம் அது பணக்கார வீட்டுப் பெண் பிள்ளைகளின் ஆடையிலும், உயர் குதிச் செருப்பிலும் அடங்கிப் போய் விட்டது. நட்புக்கு உரியவர்களுடன் இருக்கும்போது, ஒரேவகைத் தோற்றம் கொண்டு அமைய வேண்டியது பட்டணக் கரைக்கு மிக இன்றியமையாத ஒரு விவகாரம்!

எத்தனையோ விலையுயர்ந்த ரகத் துணிகள் குவிந்து கிடக்கும் பிரம்மாண்டமான ஜவுளிக் கடையின் சொந்தக்காரரான வராக மூர்த்தியிடம் தையல் தொழிலில் பட்டம் வாங்கின ஆறு தையற்காரர்கள் அவர் கடையில் வேலை பார்க்கிறார்களே! மறுநாள் சாயங்காலம் பப்பி விளையாடக் கிளம்புவதற்கு முன்பே நாலு இணை காற் சட்டையும் விளையாட்டுமேலங்கியும் தயாராகி விட்டன!

அவள் அதை அணிந்துகொண்டு 'கம்பெனி கீப்' பண்ணுகிற அழ

கைப் பார்ப்பதற்காக வராகமூர்த்தி ஜவுளிக் கடையிலிருந்து வீட்டுக்குக் கிளம்பினார்.

"பப்பீ, ரொம்பவும் பிரமாதமம்மா! கிளப்பிலிருந்து திரும்பறபோது நினைவாக ஸ்டுடியோவுக்கு போய் ஒரு போட்டோ எடுத்துக்கோ. 'காபினட்' அளவில் உடனே ஒரு காப்பி போட்டுத் தரச் சொல்லு. வீட்டுக்கு அழகாகக் கண்ணாடி போட்டு மாட்டிக்கிடுவோம்!'' என்று கூறி வியந்தார் வராக மூர்த்தி.

மூன்று நாட்கள் கழித்து, வராக மூர்த்தியின் வீட்டு முன்புற ஹாலில் பப்பியின் அந்தக் கோலம் கண்ணாடிக்குள் சட்டமிடப்பட்டு அழகு பூத்துக் கொண்டிருந்தது. கையில் ஒயிலாக ஓங்கிய பூப்பந்து மட்டையோடு அந்த விளையாட்டு உடைகளில், அவளைக் கவர்ச்சிகரமாகப் பிடித்திருந்தான் புகைப்பட நிபுணன்.

பப்பி அன்றிலிருந்து தொடர்ந்து தோழிகளுடன் இணைந்திருந்து ஓர் ஒருமைப் பாட்டை உண்டு பண்ணிக் கொண்டு வந்தாள். வராக மூர்த்தி மனம் பூரித்துக் கொண்டு வந்தார்.

பப்பி பல விளையாட்டுப் போட்டிகளில் கலந்து வெற்றி பெற்றாள். உள்ளூரிலும் வெளியூரிலும் 'விளையாட்டுப் பத்திரிகை'கள் அவளைப் பிரமாதப் படுத்திப் புகழ்கிற அளவுக்கு விளையாட்டிலே முன்னேற்றம் அடைந்து விட்டாள். முன்னேற்றத்திற்குத் தக்கபடி ஒரு வெளித் தோற்றமும் முன்னேறிக் கொண்டு வந்ததில் வியப்பில்லையல்லவா?

ஒவ்வொரு வருஷமும் தீபாவளிக்கு இரண்டு மாதம் இருக்கும் போது, தம் ஜவுளிக் கடையின் முகப்பில் இருக்கும் அலங்கார விளம்பரக் கண்ணாடிக் கூண்டில் ஏதாவது புதுக் கவர்ச்சியான விளம்பர முறையைக் கையாண்டு கூட்டத்தைக் கவர்வது வராக மூர்த்தியின் வழக்கம். திரைச் சந்தையில் பேருள்ள 'நட்சத்திரம்' மாதிரி 'பிளைவுட்' பலகையில் சித்திரம் எழுதிப் பெரிதாக அலங்கரித்துக் கண்ணாடியில் வைப்பார். பக்தி பூர்வமாக, கிருஷ்ண பரமாத்மா கோபிகா ஸ்திரீகளின் வஸ்திரத்தைக் கவருவது போல் அரங்கமைப்பு செய்து புன்னைமரக் கிளையில் தம் கடைப் புடவைகளை தொங்க விட்டிருப்பார். இப்படி எத்தனை எத்தனையோ புதுக் கவர்ச்சி முறைகளைக் கொண்டு தீபாவளி வியாபாரத்தை அபிவிருத்தி செய்வார். ஆனால் கவர்ச்சி என்கிற அம்சம் காய்ச்சின பாலைப் போல் என்பது வராக மூர்த்திக்கு நன்றாகத் தெரியும். சீக்கிரம்

திரிந்து விடும்; அல்லது புளித்துப் போகும். பின் மறுபடியும் புதுப் பால் கறந்து காய்ச்சினல் தான் உண்டு. நேற்று எது ஜனங்களைக் கவர்ந்ததோ அதனுடைய கவரும் ஆற்றல் நேற்றோடு தீர்ந்தது. இன்றைக்குப் புதிதாகவும் அதிக வேகமாகவும் கவர வேறு ஒன்று வர வேண்டும். நாளைக்கு அதை விட ஆற்றலுள்ள — வேகமுள்ள புதிய அம்சம் வரவேணும். 'விளம்பரம்'

## யாருக்குப் பொங்கல்?

### இதயவேந்தன்

செங்கதிரில் முத்திருக்கும் செந்தமிழ்த்
திரு நாடு
செம்மலர்கள் பூத்திருக்கும் செங்கரும்புக்
காடு
நங்கவிஞன் இவ்வாறு நவின்றிட்ட
சொல்லை
நான் நம்பித்தேடினேன் எங்கேயும் இல்லை!
ஆனைகள் தான் போரடிக்கும் ஊர் ஒன்றும்
இல்லை!
அரும்பசியே இல்லாத உழவர்களும்
இல்லை!
பானையிலே பொங்கலிட்டுப் பரிமாறும்
காட்சி
பண்டைநாள் போலில்லை இது தமிழன்
வீழ்ச்சி!

பகுத்துண்டு வாழ்வதற்குப் படைத்
தார்கள் பொங்கல்
பாடுபடும் காளைக்கும் அதிலுண்டு பங்கு;
வகுத்துப்பார் தமிழா நீ! எத்தனைநாள்
உகுப்பார்
வயல்வாழ்வோர் கண்ணீரை?
அதையார்ப குப்பார்?

என்கிற தத்துவம் இதுதான். 'அலங்காரக் கண்ணாடிப் பெட்டி' விளம்பரத்திற்கு இந்த ஆண்டு அதிகக் கவர்ச்சியுள்ள அம்சம் வேண்டுமென்று நினைத்தார் வராக மூர்த்தி. கல்கத்தாவிலிருந்து விளம்பரக் கம்பெனிகள் பலவற்றுக்கு ஆலோசகரான பிரெஞ்சு நாட்டுச் சித்திரக்காரனை வரவழைத்தார்.

அவன் தன்னோடு கல்கத்தாவில் இருந்து ஏராளமான படங்கள், பத்திரிகைக் கத்தரிப்புகள், மாதிரி விளம்பரச் சித்திரங்கள் எல்லாம் வாரிக் கொண்டு வந்திருந்தான். பெரிய பெரிய விலையுயர்ந்த பலகைகளை அளவாகக் கத்தரித்து பின்புறம் சட்டமடித்து இணைத்துக் கொண்டு சித்திர வேலையைத் தொடங்கினான். தன்னைத் தவிர வேறுயாரையும் மேற்படி பெட்டிப் பக்கம் நெருங்க விடவில்லை. அவன் தனிமையில் இல்லா விட்டால் அவனுக்கு வேலை ஓடாதாம்; அவன் புதுப்பித்துக் காட்டப் போகும் கவர்ச்சிகரமான புதுமையை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார் வராக மூர்த்தி.

"வெகு நாட்களாக என் மனத்திலிருந்த ஒரு அதியற்புத அழகை உங்கள் 'ஷோ கேஸி'ல் உருவாக்கிக் காட்டப் போகிறேன்!" என்று புதிர் வேறு போட்டிருந்தான் அந்த அபூர்வ ஓவியன். பதினைந்து நாட்களை முழுமையாக எடுத்துக் கொண்டான் அவன்.

"வேலை முடிந்து விட்டது. நாளைக்கு ஷோ கேசைத் திறந்து விடலாம்," என்று முக மலர்ச்சியோடு வந்து சொன்னான் ஓவியன். "நீயும் வா பப்பீ; ரொம்ப திறமையான ஓவியர். பிரமாதமாக ஏதோ செய்திருக்கிறார்; பார்க்கலாம்," என்று தம் பெண்ணையும் அழைத்துக் கொண்டு வந்தார் வராக மூர்த்தி.

வராக மூர்த்தியையும், அவர் பெண்ணையும் அலங்காரக் கண்ணாடிப் பெட்டிக்குள் கூட்டிச் சென்றார் ஜவுளிக்கடை மானேஜர்.

உள்ளே போய், பலகையில் சட்டமடித்து நிறுத்தியிருந்த படத்தைப் பார்த்தவுடன், மூன்று பேரும் திகைத்து விட்டனர்.

வராகமூர்த்தி ஒன்றும் புரியாமல் விழித்தார்.

பப்பி விளையாட்டுடையில் பூப்பந்து மட்டையை ஓங்கிக் கொண்டு ஒயிலாக நிறுத்திய கோலத்தில் எடுத்த படம் பெரிதாக்கப்பட்டு அந்தப் 'பிளைவுட்' பலகையில் இருந்தது. மூக்கு முழி முகம் எல் அச்சாக அவளேதான்...! விளம்பரக் கவர்ச்சிக்காகத் திருத்தம் செய்திருந்தான் ஓவியன்.

"ஐயோ!...எனக்கு ஒரு மண்ணும் தெரியாதம்மா!....நான் செய்வேனு இப்படி?" என்று மகளைச் சமாதானப்படுத்தி விட்டு, "எங்கே அந்த அக்கிரமக்கார ஓவியன்?" என்று கூச்சலிட்டார் வராக மூர்த்தி.

"நீங்கள் தான் செய்திருக்கிறீர்கள் அப்பா! உங்களுடைய முகத்தில் விழிக்கவே சங்கடமாயிருக்கிறது எனக்கு!" என்று அழுகையும் விசும்பலாகக் கூறி, அவரை நம்ப மறுத்து, வீட்டுக்கு ஓடி விட்டாள் பப்பி.

மகளே நம்ப மறுத்துத் தம் மேல் குற்றம் சாட்டி விட்டு ஓடியதைப் பார்த்தபோது, வராக மூர்த்தியின் கொதிப்பு அதிகமாயிற்று.

ஓவியனை அழைத்தார்.

ஆத்திரம் வளர்ந்தது!

ஓவியன் வந்து நின்றான். பளீரென்று கன்னத்தில் ஓர் அறை வைத்து விட்டுக் கேட்டார்: "எதைப் பார்த்து இதை வரைந்தாயடா ராஸ்கல்? உள்ளதைச் சொல்லி விடு!"

அவன் பேசாமல் 'விளையாட்டுப் பத்திரிகை'யை எடுத்துக் காண்பித்தான். இரண்டு வருஷத்துக்கு முந்திய இதழ் அது. அதில் அவர் பெண்ணின் அந்தப் படம் அதே கோலத்தில் வெளியாகியிருந்தது.

"முட்டாள்! இது என் மகள் படமடா! பிழைத்துப் போ!...." அந்தப் பலகைப் படத்தைச் சுக்கு நூருக உடைத்து வீட்டு வெந்நீர் அடுப்புக்கு அனுப்பி வைத்தார் வராக மூர்த்தி.

"அந்த ஏற்பாடு தானுகச் செய்ததில்லே. ஸ்போர்ட்ஸ் இதழொன்றில் வந்திருந்த அவள் படம் நல்ல கவர்ச்சிகரமான அமைப்பில் இருந்ததினுல், விளைந்த வம்பு!" என்று பப்பியை நம்பச் செய்து,

தாம் நல்லபிள்ளையாவதற்கு மிகவும் சிரமப்பட்டார் வராக மூர்த்தி.

"என்ன ஐயா, வராகமூர்த்தி! இந்த வருஷம் உம் ஷோ கேஸில் ஒண்ணுமே இல்லேயே?....இருண்டு வழிகிறது! 'கம்பெனி கீப்' பண்ணவாவது ஏதாவது வைக்கப் படாதோ...?" என்று பக்கத்து ஜவுளிக் கடைக்காரர் ஒரு நாள் கேட்டார்.

"'கம்பெனி கீப்' பண்ணற விவகாரத்தையே விட்டுட்டேன். நாம இருக்கிறபடி இருந்தாப் போதும்!" என்று வராக மூர்த்தியிடமிருந்து அழுத்தமாகப் பதில் வந்தது! ❀

# அமரருள் உயர்ந்த அன்பர்

கல்கி அவர்களைப் பற்றி எழுத, நான் கொஞ்சமும் அருகதையற்றவன். காரணம், எனக்குச் சிறு பிள்ளைத்தனமான அறிவுமாறி, பொறுப்புணர்ச்சியையும் முதிர்ச்சியையும் நான் அடைவதற்கு முன், கல்கி அவர்கள் காலமாகி விட்டார். அவர் இறந்தவுடன் ஏற்பட்ட அதிர்ச்சியோடு, திடீரென பொறுப்புணர்ச்சியும் அறிவு முதிர்ச்சியும் உண்டாயின. இத் திடீர் மாறுதல் என்னையே வியப்பிலாழ்த்தியது. அவர் உயிருடன் உலவி பற்பலசாதனைகளையும் புரிந்தபோது அவரருகே இருந்து உதவும் பாக்கியம் எனக்குக் கிட்டவில்லை. பெரும்பாலும் என் நேரம் பள்ளிக் கூடத்திலும் கலாசாலையிலும் விளையாட்டுக்களிலும் கழிந்து விட்டது. அவருடைய சாதனைகளை இன்று எண்ணிப் பார்த்துப் பெருமைப் படுகிறேனேயொழிய, அவர் உயிர் வாழ்ந்தபோது அவற்றின் அருமை பெருமைகளை, அதைப்பற்றிய தன்மையை முற்றிலும் உணரவில்லை.

அவர் சென்ற விடங்களுக்கெல்லாம் சென்று, அவர் பேசியதை எல்லாம் கேட்டு, அவரது அலுவல்களிலெல்லாம் நெருங்கிய தொடர்பு கொண்டு வந்தவர்கள் பலர். அவர் இட்ட பணிகளை மகிழ்ச்சியுடன் உடனுக்குடன் நிறைவேற்றி, அவரது பாராட்டுதல்களையும் திருத்தங்களையும் ஏற்றுக் கொண்டவர்கள் பலர். அப்படிப்பட்டவர்கள் அவருடன் இருந்து உழைத்ததுகுறித்து இன்று பெருமிதமும் மகிழ்ச்சியும் அடையலாம். அவர்களுக்குக் கிடைத்த அந்த வாய்ப்பை இன்று பயன்படுத்துவதில் தவறில்லை; நல்ல முறையில் பண்புடன் அதைச் செய்ய வேண்டும்.

இந்த அரிய வாய்ப்புக்களெல்லாம் எனக்குக்கிட்டியதேயில்லை. அவருக்கு நான் செய்த பணிகள் தந்தை–மகன் என்ற முறையிலே வீட்டில் நடக்க வேண்டிய சிறு சிறு பணிகள்தாம். தினம் ஒரு மலர்மாலையுடன் அவர் வீடு திரும்பியபோது அதைத் தொட்டுப் பார்த்தும் அணிந்து பார்த்தும் குதூகலித்திருக்கிறேன். ஆனால் அந்த மாலைகள் அவருக்கு அணிவிக்கப்

தமிழ்ப் பேராசிரியரின் வாழ்வு அற்புதமான சரித்திர வரலாறு போன்றதுதான்; எத்தனையோ நிகழ்ச்சிகள் விளைந்திருக்கின்றன! ஒன்றிரண்டினைப்பற்றி கல்கி அவர்களின் அருமைப் புதல்வரே இப்போது எழுதுகிறார்.

பட்ட காரணத்தையும் சந்தர்ப்பத்தையும் அதிகமாக அறிந்ததில்லை. சில கூட்டங்களுக்கு மட்டும் அவருடன் போக நேர்ந்தது நினைவிக்கிறது. அவற்றில் குறிப்பாக இரண்டு கூட்டங்களை பற்றிக்கூற நினைக்கிறேன். ராஜதானிக் கல்லூரியில் நடந்தது ஒரு கூட்டம். மற்றொரு கூட்டம் கோகலே மண்டபத்தில் நடந்தது.

கல்கி அவர்களுடைய நகைச்சுவை பற்றி எல்லோரும் சொல்கிறார்களல்லவா? அதில் ஒரு விசேஷம்; அந்த நகைச்சுவை முன்கூட்டியே தயாரித்து வைத்துப் பேசுவதல்ல. பேசப் போகும் தருணத்தில் அந்த வினாடியில், இயற்கையாகவே (spontaneous) அது தோன்றும்.

ராஜதானிக் கல்லூரியில் மாணவர்களுக்கு கல்கி

அவர்களை அறிமுகப் படுத்தி வைத்தார் பேராசிரியர் ஒருவர்: ''கல்கி அவர்களை உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். அவரது நாவல்களைப் படிக்காதவர்கள் யார்? கல்கி அவர்களுக்கு யோசனை கூற விரும்புகிறேன். தமது கதைகளுக்கு கதாநாயகர்களையும் கதாநாயகிகளையும் அவர் எங்கோ தேடி அலைய வேண்டாம். இந்தக் கல்லூரிக்கு வந்துவிட்டால் போதும். இதன் 'வராந்தா'க்களில் எண்ணற்ற கதாநாயகர்களையும் கதாநாயகிகளையும் (மாணவ-மாணவிகளை) காணலாம்.'

அடுத்தபடியாக கல்கி பேச எழுந்தார்கள்.

---

கி. ராஜேந்திரன்

---

''கதாநாயகர்களே! கதாநாயகிகளே!'' என்று தமது பேச்சைத் துவக்கினார்கள். அவ்வளவுதான்; கல்லூரியே இடிந்துவிழுந்துவிடும்போல கரகோஷமும் ஆரவாரமும் எழுந்தன!

கோகலே மண்டபத்தில் கம்பன் நினைவுநாள் கொண்டாடினார்கள். கல்கி அவர்கள் தலைமை தாங்கினார். கம்பனைப் பிடிக்காத கும்பல் ஒன்று துரதிருஷ்டவசமாக மண்டபத்துக்குள் புகுந்து விட்டது. கூட்டம் நடைபெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டியதைத் தனது பொறுப்பாக்கிக் கொண்டது அந்தக் கூட்டம். நாற்காலிகள் உடைந்தன. 'மைக்' அதிர்ந்தது.

ஒரே கணம் யோசித்து கல்கி அவர்கள் பேச எழுந்தார். சிரமத்தைப் பாராது உரத்த குரலில் பேசினார்: ''கம்பனைப் பிடிக்காத அன்பர்கள் சிலர், கம்பனிடம் உள்ள கோபத்தையெல்லாம் திரட்டி வைத்து, மேஜை நாற்காலியிடமும், 'மைக்'கிடமும் காட்டுகிறார்கள். கம்பன் தப்பித்தான்! பாவம், நாற்காலிகள்...!'' என்றார்.

கூச்சல் அடங்கிவிட்டது. களேபரம் நின்றுவிட்டது. கூட்டம் அமைதியாக நடைபெற்று முடிந்தது.

***

ஒரே ஒரு முறைதான் அவருடைய எழுத்துடன் தொடர்பு கொள்ளும் பெறற்கரிய பேறு பெற்றேன் நான். தமது இறுதிக் காலத்தில் பேனாப் பிடித்து எழுத முடியாத நிலையில் என்னை அருகே அழைத்தார்கள். 'அமரதாரா' அப்போது 'கல்கி'யில் தொடர்ந்து வெளியாகிக் கொண்டிருந்தது. உடல் நலக்குறைவு என்று கூறி அதனை தற்காலிகமாகச் சில வாரங்கள்கூட நிறுத்தி வைக்க விரும்புவதில்லை அவர். பேனாவையும் காகிதத்தையும் என்னிடம் கொடுத்து, அவர் சொல்லி வர, என்னை எழுதச் செய்தார். இன்றைக்கும் பேனாவைக் கையில் எடுக்கும் போதெல்லாம் அந்தக் காட்சி நினைவுக்கு வருகின்றது. அன்று அவர் பேனாவை எடுத்துக் கையில் கொடுத்து எழுதச் செய்ததாலேயே இன்று நானும் ஏதோ ஓரளவுக்கு எழுதி வருகிறேன் என்று கருதுகின்றேன்.

கல்கி அவர்களைப்பற்றி நாம் நிறையப் பேசுகிறோம்; எழுதுகிறோம். அவருடைய சாதனைகளைக் கண்டு வியந்து பாராட்டவும் செய்

கிறோம். ஆனால் தன்னைப் பற்றி அவர் என்ன நினைத்தார்? தன்னைப் பற்றி கல்கி அவர்கள் எழுதுவதோ பேசுவதோ மிக அபூர்வம். அநேகமாக, இது இல்லை என்றே சொல்லி விடலாம். அது அவருக்குப் பிடிக்காத விஷயங்களில் ஒன்று. எனக்குத் தெரிந்து இரண்டு இடங்களில்தான் தன்னைப் பற்றியே எழுதியுள்ளார் அவர். ஒன்று, 'அலை ஓசை'யின் முன்னுரை. மற்றது, 'பொன்னியின் செல்வ'னின் முடிவுரை. இந்த இரண்டு இடங்களிலும் கூட அவருடைய தற்பெருமையைக் காண முடியாது; அவையடக்கத்தைத்தான் காணபோம்:

'அலை ஓசை'யின் முன்னுரையிலிருந்து சில வரிகள்:

"....உம்முடைய புத்தகங்களில் ஏதேனும் பிற்காலத்தில் நிலைத்திருக்கலாம் என்று கருதுகிறீரா? ஐம்பது வருஷம், நூறு வருஷமாவது உயிரோடிருக்கக் கூடிய நூல் என்று நீர் எழுதிய நூல்களில் எதையாவது சொல்ல முடியுமா?'' என்று நண்பர் கேட்டார். "இப்போது எப்படி உங்கள் கேள்விக்குப் பதில் சொல்ல முடியும்? நூறு வருஷம் கழித்துக் கேளுங்கள். சொல்கிறேன்!'' என்றேன்.

நண்பருடைய கேள்விக்கு சரியான பதில் சொல்லாமல் மழுப்பி விட்டேன். ஆனால் அவருடைய கேள்வி என் மனத்தில் கிடந்து உழன்று கொண்டேயிருந்தது. பெருந்தொந்தரவு அளித்துக் கொண்டும் இருந்தது. ஏதாவது புதிய கதை எழுதி வரும் போது, "இது எத்தனை நாளைக்கு உயிரோடிருக்கும்? எத்தனை தடவை படிப்பதற்குத் தகுதியுள்ளதாக இருக்கும்?'' என்ற எண்ணம் தோன்றி விடும்.

....இதை (அலை ஓசை) புத்தக வடிவில் கொண்டு வருவது உசிதமாக இருக்குமா என்ற போராட்டம் மனத்திற்குள் நிகழ்ந்தது. அதைத் தீர்த்துக் கொள்வதற்காக ஒரு தடவை அடியிலிருந்து படித்துப் பார்த்தேன். நண்பரின் கேள்விக்கு விடை கிடைத்தது. நான் எழுதிய நூல்களுள் ஏதாவது ஒன்று ஐம்பது அல்லது நூறு வருஷங்கள் நிலைத்திருக்கத் தகுதியுடையது என்றால், அது 'அலை ஓசை'தான் என்ற எண்ணம் படிக்கும் போதே உள்ளத்தில் தானாக உதயமாயிற்று!....''

இப்படிச் சொன்ன போது 'அலை ஓசை' நூறு வருஷங்கள்தாம் உயிருடன் இருக்கும் என்று முடிவு கட்டியதோடு மட்டுமல்லாமல், தமது

யைப் போல கல்கியும் தமிழ் உள்ளளவும் தமிழ் மக்கள் உள்ளங்களில் வாழ்வார்.

'பொன்னியின் செல்வன்' முடிவுரையை முடிக்கும் பாணியைப் பாருங்கள்:

"....இந்தக் கதையின் ஆசிரியரைக் காட்டிலும் அறிவிலும் ஆற்றலிலும் ஆராய்ச்சியிலும் மிக்கவர்கள் வருங்காலத்தில் சோழ சரித்திரத்தை அடிப்படையாகக் கொண்ட பல மகோன்னதமான நவீனங்களை எழுதித் தமிழகத்துக்கு மேலும் மேலும் தொண்டு செய்வார்கள் என்று நம்புகிறேன்!...."

தன்னைப் பற்றியே குறைவாகச் சொல்லிக் கொள்வது எளிதான காரியமல்ல. அசாத்தியமான துணிவும் நெஞ்சுரமும் வேண்டும். அதிலும் மகா மேதைகள் அவையடக்கத்துடன் இப்படிப் பேசும்போது, "அடக்கம் அமரருள் உய்க்கும்" என்ற வள்ளுவன் வாக்குத்தான் நினைவுக்கு வருகின்றது. இன்று கல்கி அவர்களை 'அமரர்' என்ற அடைமொழி போட்டு தமிழ் மக்கள் அன்புடன் அழைப்பதன் காரணமும் இதுதானே?

பேராசிரியர் திரு 'கல்கி' அவர்கள்

மற்றப் புத்தகங்கள் அதற்குப் பல வருஷங்களுக்கு முன்பாகவே மடிந்துவிடும் என்றும் தீர்மானித்து விட்டார் கல்கி. தமிழ் மக்கள் இதனை நிச்சயம் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். வள்ளுவனைப் போல, கம்பனைப் போல, பாரதி

❋ ❋ ❋

## கதிரவனும் கன்னியும்

கல்யாணம் ஏ. கே. சாந்தாமணாளன்

காலை இளம்பரிதி பூத்தான் – இளம்
கன்னியவள் பொன்னுடலில் வேர்த்தான்;
வாலைக் குமரிமுகம் பார்த்தான் – அவள்
வாயிதழில் செந்நிறத்தைச் சேர்த்தான்!

வண்ண மலர்ச்சூடி நின்றாள் – கரு
வண்டுவிழி அழகாலே வென்றாள்;
எண்ணம் இனித்திடவே சொன்னாள்–" இன்று
ஏருழவர் தைப்பொங்கல் நன்னாள்!"

தேனிலவு முகத்தாளின் சொல்லை – அவன்
தேனெனவே கொண்டிடவே இல்லை;
வானமரன் மதிமயங்கி நின்றான்–" இன்பம்
வந்த 'தை'க்கா? அவளிதழ்க்கா?" என்றே!



# தமிழர் பொங்கல்!

கவிஞர் பாரதிமோகன்

வேலவன் குன்றம் தன்னில்
வெற்றியாய்க் கொடியை நாட்டி,
காலன் வந்தெதிர்த்த போதும்
கடுஞ் சமர்புரிந்து நாமும்
சாலவே தமிழ் நாட்டின்கண்
தண்டமிழ் ஆட்சி கண்டோம்;
மாலவன் அருளே வேண்டும்
மகிழவே தமிழர் பொங்கல்!

உள்ளமுங் களிக்கும் நல்ல
உழவரின் திருநாள்ப் பொங்கல்;
வள்ளுவன் மொழிந்த வாக்காம்;
வாழ்வெலாம் களிக்கும் பொன்னாள்;
அள்ளியே கொட்டும் செந்நெல்
ஆனந்தம் பொங்கும் பொங்கல்;
தெள்ளிய தமிழ் முழக்கம்
தெருவெலாம் பொங்கும் வாழ்வே!

# பொங்குது பொங்கல்!

இராம. வேலாயுதம்

மாடோ டுழைத்த பெரியவர் – இன்றும்
மாட்டை வணங்கினர் தெய்வமாய்;
ஓடாய் இளைத்த ஏருழவர் – நன்கு
உண்டு மகிழ்கின்றார் பொங்கலை!

திங்கள் முகத்துடை நங்கையர் – தங்கள்
செங்கை வளையல் குலுங்கிட
திங்க ளொளிதனில் கூடியே – கும்மி
சேர்ந்து கொட்டினர் பாடியே!

உண்ண உணவை விளைவிப்போர் – இன்று
உவந்து பொங்கிடும் பொங்கலை
எண்ணத் திலேற்றியே வாழ்த்துவோம்! – என்றும்
ஏழை யுழவரைப் போற்றுவோம்!

"மாணவர்களே, இது ஒரு நல்ல வாய்ப்பேயாகும். நீங்கள் பேசிக் கொண்டிருந்ததை நானும் கேட்டுக் கொண்டிருந்தேன். சில மாணவர்கள் இந்தப் போட்டியில் கலந்து கொள்ள விரும்புவதையும் உணர்கின்றேன். இந்த அழகுப் போட்டியில் எல்லோரும் பங்கெடுத்துக் கொள்ளுங்கள். இந்தப் போட்டியை நானே தலைமை தாங்கி நடத்துகின்றேன். முதன்மை பெறுகின்றவருக்கு நான் நல்ல பரிசும் தர எண்ணுகின்றேன். நாளைக்குப் பொங்கல் விடுமுறை நாள். ஆதலால் நீங்கள் அனைவரும் பகல் மூன்று முப்பது மணிக்குப் பள்ளிக்கு வந்துவிடுங்கள். நான் உங்களை நன்றாகக் கவனித்து, இப்பள்ளிக்கே சிறந்த ஓர் அழகனைத் தேர்ந்தெடுத்து விடுகின்றேன்!" என்றார் தலைமை ஆசிரியர்.

இதனைக் கேட்டதும் பிள்ளைகள் அனைவரும் பெருமகிழ்வு கொண்டார்கள்.

பொங்கலன்று பகல் மூன்றுமணி இருக்கும். அழகுப் போட்டியில் பங்கு கொள்ள பிள்ளைகள் பெரும்பாலோர் வந்தனர். 'பார்வையாளர்கள்' என்னும் முறையில் பலர் வந்திருந்தனர்.

இறை வணக்கம் நிகழ்ந்தது.

"அழகு என்பது உங்கள் ஆடை அலங்காரங்களைப் பார்த்தோ, நிறத்தை மட்டும் பார்த்தோ சொல்லி விடக்கூடியது அன்று. இதற்குப் பல முறைகள் இருக்கின்றன. நான் அந்த முறைப்படி உங்கள் அனைவரையும் கூர்ந்து கவனித்து உங்களுள் அழகன் யாவன் என்பதைத் தேர்ந்

---

பாப்பா உமா:

# வித்தைக் குரங்கு

**அழ. வள்ளியப்பா**

ஒட்டுப் போட்ட சட்டை – அதை
உடம்பில் மாட்டிக் கொண்டு
குட்டிக் கரணம் போடும் – இந்தக்
குரங்கைப் பாராய், தம்பி!

குல்லாப் போட்ட குரங்கு – எம்பிக்
கோலைத் தாண்டும் குரங்கு.
பல்லை இளித்துக் காட்டி – நம்மைப்
பழிக்கும் பொல்லாக் குரங்கு!

நாமம் போட்ட குரங்கு – நன்கு
நடனம் ஆடும் குரங்கு.
'ராமா ராமா' என்றால் – உற்று
நம்மைப் பார்க்கும் குரங்கு!

கூழைக் கும்பிடு போடும் – இது
கோல் எடுத்தால் ஆடும்.
வாழைப்பழத்தைக் கொடுத்தால்-அதை
வாயில் அடக்கிக் கொள்ளும்.

தகரக் குவளை ஏந்தும் – இது
'சலாம்' போட்டு நெருங்கும்.
நகர்ந்து ஓட வேண்டாம் – ஒரு
நயாப் பைசாப் போடு!

தெடுப்பேன்!'' என்று மீண்டும் தலைமை ஆசிரியர் கூறினார்.

அவ்விதம் அவர் அங்கேயிருந்த அனைவரையும் அளவெடுத்துப் பார்த்தும், நிறுத்துப் பார்த்தும், மார்பு கண், பல், விரல்கள் முதலியவைகளைக் கவனித்துப் பார்த்தும் முடிவதற்கு மாலை ஆறு மணி ஆகி விட்டது. முடிவில் அவர் படித்த பட்டியலின்படி வரதனே முதன்மையான அழகுடைய மாணவனாகத் தோன்றினான்.

"கரிவரதன்' என்று பலராலும் கேலி செய்யப்பெற்ற வரதன் எனும் மாணவனே உண்மையான அழகன்!'' என்பதை மாணவர்களுக்கு அந்த ஆசிரியர் விளக்கிக் கூறினார்.

"கருமை நிறமுடைய வரதனை நான் அழகுப் போட்டியில் சிறந்தவனாகத் தேர்ந்தெடுத்தது உங்களுக்கு ஆச்சரியத்தைத் தரக்கூடும். அவன் வயதுக்கேற்ற உயரம், உடலுக்கு ஏற்ற நிறை, மார்பு அளவு முதலியன இருக்கட்டும். அவன் பற்களைப் பாருங்கள். முல்லை மலர் போன்று ஒளிர்கின்றன பற்கள். மற்றவர்கள் பற்கள் அடுக்குப் பற்கள், முன் வந்துள்ள கோரைப் பற்கள், தேய்ந்த சொத்தைப் பற்கள் இவ்விதமே இருக்கின்றன. மற்றவர்களின் பற்கள் கறை படிந்துள்ளன. பற்களைச் சுத்தமாக வைத்திருப்பதிலும் அவனே சிறந்திருக்கின்றான். சிரித்த முகம் கொண்ட வரதனை நேரில் எந்தப்புறம் பார்த்தாலும் அவன் நமக்கு நல்ல தோற்றத்தையே தருகிறான். அவனுக்கு நல்ல உடற்கட்டும் இருக்கின்றது.

"நீங்கள் கறுமையைக் குறைவாகக் கருதக்கூடாது. வரதனும் உங்களைப் போல் ஆடை அணிகள் அணிந்து கொண்டால் மிக அழகாகவே தோன்றுவான். ஏழை மகன் என்றாலும், அவனுடைய பிஞ்சு மனம் நிதி நிறைந்தது; நீதி நிரம்பியது; நேர்மை அமைந்தது! கல்வி கேள்வி புத்திசத்திகளிலும் அவனே சிறப்புப் பெற்றிருக்கிறான்.

"வடிவழகு மட்டும் போதாது. வரதன் குணத்திலும் சிறந்தவன்; கல்வியிலும் சிறந்தவன் என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். ஆதலால், இந்தப் பள்ளிக்கு வரதனே அழகு மன்னன்; அவனே வடிவழகன்; குணவழகன்; அறிவழகன்! அவனையே உங்களுக்கு குறிப்பாக்கிக் கொண்டு, அவனைப் போல நடக்கப் பாடுபடுங்கள்! மாணவர்களை நம்பியிருக்கும் நம் நாடு அப்போதுதான் வாழ்வும் வளமும் எய்திச் செழிக்கும்!'' என்று சொல்லிக் கொண்டே அந்த ஆசிரியர் வரதனுக்கு ஒரு வெள்ளிக் கோப்பையையும் திருக்குறளையும் பரிசாகத் தந்தார்.

மாணவர்கள் அனைவரும் "வடிவழகன் வரதன் வாழ்க! பொங்கல் திருநாள் பொங்கும் மகிழ்வால் வாழ்க! வாழ்க!'' என வாழ்த்தித் தங்கள் மகிழ்வினைத் தெரிவித்துக் கொண்டனர். ○


குடும்பக் கட்டுப்பாடு
கர்ப்பத்தடை
இம்மாத்திரைகளை 12 தினங்கள் உட்கொண்டால் கர்ப்பக்கட்டுப்பாட்டுக்குப் பாதுகாப்பளிக்கிறது
முழு சிகிச்சைக்கான 24 பில்லைகள் பாக்கிங் விலை ரூ. 12/- அஞ்சல் தனி

இந்தியாவிலும் வெளிநாடுகளிலுமிருந்து பலதுறைகளிலுமுள்ள இதை உபயோகித்த எண்ணற்றவர்களிடமிருந்து ஏராளமான நற்சாட்சிப் பத்திரங்கள் கிடைத்துள்ளன.
அரங்கில் "ஸ்பெக் டாப்லெட்டுகள்" (ரிஜிஸ்டர்டு) பெண்மணிகள் வாயில் போட்டு சாப்பிடுவதற்கு வழங்கப்படுகிறது.
எங்கும் கிடைக்கும்
தந்தி "ORCAS" (ஸ்தாபிதம் 1946) போன் 55357
சீனு அண்ட் கோ., 28, R. தாண்டவராய கிராமணி தெரு, மதராஸ்-21.
சிலோன் சிங்கப்பூர் 8 (சிலோன்) ஏஜண்டுகள் N. C. M. ஸ்டோர்ஸ் 82 மெயின் தெரு கொழும்பு-11. (ADVT. PERMITTED UNDER G.O. MS. NO. 121 HEALTH)

FOR DEPENDABLE

SALES & SERVICE

# K. ORR & CO.,

40, CHINNATHAMBI STREET, MADRAS-1.

Phone: 3519 GRAMS: PRESUNDRY

Paper, Printing Machines, Printing Ink, Printers Materials, Sand and Emery Paper, Match Chemicals, Stitch Buttons and Zips



வண்ணாத்திப்பூச்சியைப் புஷ்பம் வசீகரிப்பதுபோல,
இவை மக்களை வசீகரிக்கின்றன.

பிரசிடெண்ட் வெஜிடபிள் கூந்தல் தைலம்,
டால்கம் பௌடர்கள் &
ஸ்னோ

டாய்லெட்ஸ்

தயாரிப்பாளர்கள்
ரேதாட் டிரேடிங் கம்பெனி,
சென்னை-1

# இவர்களைப் பற்றி நான்

**தலைவர் ம. பொ. சி :**

இவ்வாண்டுப் பொங்கல் மலருக்கும் பிள்ளையார் சுழி இட்டுத் தொடங்கி வைக்கின்றார் தன்னேரில்லாத் தமிழர் தலைவர். சிலம்புச் செல்வர் என்ற சிறப்புப் பட்டம் பெற்றவர். உடலும் உள்ளமும் தமிழ் நாட்டுக்கும் தமிழ் மொழிக்கும் காணிக்கையாக்கப் பட்டிருப்பவை. உயிர்ப்பும் உயிரும் 'தமிழ், தமிழ்' என முழங்கிக் கொண்டிருப்பதற்கு அவரது அரும் பெருந் தொண்டுகளே சாட்சியமாக அமைய வல்லன. வணக்கத்திற்குரிய அன்புத் தலைவர் அவர்களைப்பற்றி எழுத இந்தச் சில வரிகள் எங்ஙனம் போதும்?

**டாக்டர் மு. வரதராசனர் :**

மு. வரதராசன் என்ற பெயருக்குப் பின்னே இலக்கியச் சிறப்புப் பட்டங்கள் பெற்று, பெயருக்குத் தலையில் 'டாக்டர்' பட்டம் சுமந்திருக்கும் தமிழ்ப் பேராசிரியர் அவர்கள் மாணவர் சமுதாயத்திற்கு ஓர் ஒப்பற்ற தலைவர்.

**கி. வா. ஜகந்நாதன் :**

'செந்தமிழ்ச் செல்வர்' இவர். தமிழ்த் தாத்தாவின் தலைமைச் சீடர். இலக்கியத்தின் தொன்மைச் சிறப்புக்கும், புதுமை வளத்திற்கும் பாலம் சமைத்துக் கொண்டிருப்பவர். இவர் 'ஜோதி'.

**பம்மல் சம்பந்தனர் :**

தமிழ் மக்களால் கௌரவிக்கப்பட்டு, 'பத்ம பூஷண்' என்று அரசினரால் போற்றப்பட்டு வருகின்ற திரு ப. சம்பந்தனர், நாம் கண்டு பெருமை கொள்ளும் வகையில் நற்றகைமை பூண்டு வாழ்ந்து கொண்டு வருகின்றார். நாடக இலக்கியம் பற்றிய பேச்சு தமிழ் மேடையில் ஆரம்பமாகும் தருணங்களிலெல்லாம், தோற்றுவாய்ப் பகுதிக்குத் தகுதி காட்டும் ஒன்றிரண்டு பெயர்களுள் ஒன்று திரு சம்பந்தனருடையது!

**லா. ச. ராமாமிருதம் :**

தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தின் வரலாற்றினிலே, பொற் சுடரென ஒளி காட்டி, ஒளியூட்டும் பெயர் இது. இவர் எழுத்தாளரின் எழுத்தாளர்; சிந்தனையாளர்கட்குச் சிந்தனையூற்று. தமிழ்ச் சிறு கதை இலக்கியத்தைக் காக்கவல்ல வல்லமையும் திறனும் நம்பிக்கையும் கொண்டவர். சிலருக்கு இவரது எழுத்துக்கள் புதிராகத் தோன்றலாம். வாழ்க்கையே ஒரு புதிர் தானே?

**கவி கா. மு. ஷெரீப்**

தமிழரசுக் கழகத்தின் தலைவர்களிலே ஒருவர்; 'கவி' என தமிழறிஞர் வ. ரா. வினல் போற்றப் பெற்றவர்; 'சாட்டை'யைச் சொடுக்கி அரசியல் உலகிற்கு விழிப்புணர்வைத் தூண்டி வரும் தன்னலமிலாத் தேசத் தொண்டர் இவர். சிறப்புற எழுதுவதைப் போல சிறப்புறப் பேசவும் வல்லவர். 'சிட்டுக் குருவி', 'ஏரிக்கரை மேலே' போன்ற பிரபலமெய்திய திரைப் பாடல்களின் வாயிலாக ரசிகத் தமிழ் நெஞ்சங்களிலே வாழ்ந்து கொண்டிருப்பவர்.

**கு. அழகிரிசாமி :**

தாமிரபருணியின் செழிப்பில் வளர்ந்து தமிழ்ச் செழிப்புக் கொண்டிலங்கும் சிறந்த கதாசிரியர். புதுமைப்பித்தனை நினைவூட்டிக் கொண்டிருக்கும் சிந்தனையாளர் இருவரில் இவரும் ஒருவர். பாடுவார்; கட்டுரையாளர்; பண்பட்ட பேனவை வைத்துக் கொண்டிருக்கிறார்.

**டாக்டர் மா. ராசமாணிக்கனர் :**

ஆலவாய்த் திருப்பதியினின்றும் தமிழ் அலைகள் விளையாடும் தமிழ் நாட்டுத் தலைநகருக்கு வருகை தந்திருக்கும் இவர், தற்போது சென்னைப் பல்கலைக் கழகத்தில் பணி இயற்றி வருகிறார். இவரது பயன் மிக்க ஆராய்ச்சி நூல்களிலே, 'சைவ சமய வளர்ச்சி' சிறந்த பெருநூல்.

**எஸ். லட்சுமி சுப்பிரமணியம் :**

புதிய தொடர்மாலையின் முதல் ஆசிரியை இவர். விகடன் சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றிருக்கிறார். வளர்கதைகள் சிலவும் இவரது கைவண்ணம் கொண்டு விளங்குகின்றன. வளைக்கரம் பற்றும் தமிழ்ப் பேனா வழி வழிச் சிறப்புடன் பொலிவு காட்டும் என்பதே நியதி.

**வ. உ. சி. சுப்பிரமணியன் :**

கப்பலோட்டிய தமிழரின் திருமகனர் என்பதைச் சொல்லித் தெரிய வேண்டுமென்பது இல்லை. ஜாதிச்சம்பாப் பயிருக்குத் தனி மகத்துவம் உண்டல்லவா? 'அமெரிக்கன் ரிப்போர்ட்டர்' தமிழ்ப்பகுதியின் ஆசிரியப் பொறுப்பினை ஏற்று வருகிறார்.

**அரு. இராமநாதன் :**

இராஜ ராஜ சோழரின் சரித்திரப் புகழை தமிழ் நாடக அரங்கத்தில் நிலைபெறச் செய்த 'அகத்தியர்' இவர். பேராசிரியர்

பூவை

# யோசிக்கும் வேளையில்

கல்கி அவர்களால் அகத்தியராக்கப் பட்ட வர். விரல் விட்டு எண்ணக்கூடிய சிறந்த சரித்திரக் கதாசிரியர்களிலே இவருக்கும் இடமுண்டு. திரையும் இலக்கியமும் இவர் பெயரை கட்டிக் காக்கும் உரிமை கொண் டவை!

**பரலி சு. நெல்லையப்பர் :**

பாட்டுக்கொரு புலவன் பாரதியின் உயிர்த்-தோழர்; பாரதியை நினைவூட்டிக் கொண்டிருக்கும் தொண்டர்.

**பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்:**

தமிழ்த் திரையுலகம் மறக்கவொண்ணுத் தமிழ்க் கவிஞர்; வாழும் பாடல்களில் வாழ்பவர். 'மகனே கேள்!' படப் பாட்டு இவரது தனித்தன்மைக்கு எடுத்துச்சொல்.

**மயிலை சிவ. முத்து :**

எழுபதாண்டு இளைஞர். இளம் மாணவர் களின் தந்தை இவர்; இவ்வாண்டு, தமிழ் எழுத்தாளர் சங்கப் பரிசு பெற்றவர்.

**அழ. வள்ளியப்பா :**

உண்மையான குழந்தைக் கவிஞர்; பய னுள்ள அன்பு உள்ளம்.

**மாயூரம் கீரன் :**

தமிழரசுக் கழகத் தொண்டர் வரிசையில் அமைகின்ருர்; புலவர். முறைப்படி கற்றுத் தெளிந்த நற்கவிஞர்.

**ஜெகசிற்பியன் :**

ஒரு மகாமக காலத்திற்கு அதிகமாக பேனவை நம்பிக் கொண்டிருப்பவர். பரிசு பெற்ற கதாசிரியர். 'நரிக்குறத்தி' பரிசு பெற்றது. விகடன் அலுவலகத்திற்கு நன்றி உரித்தானது. க. நா. சு. பிரச்சினை வரி சைப்பட்டது இக்கதை.

**கமலா விருத்தாசலம் :**

திருமதி புதுமைப்பித்தன் அவர்களின் எழுத்துக்கள் என் கண்களைக் குளமாக்கி விட்டன. தமிழ்மண் பாக்கியம் செய்தது என்கிருேம்; ஆனல், தமிழ் மண்ணில் எழுத்தாளனுக மட்டும் பிறக்கக் கூடாதோ?

**மாயாவி :**

பம்பாய்த் தமிழ் எழுத்தாளர். சுவையூட் டும் சம்பவங்களைக் கோத்து, சுவை மணம் கொண்ட கதம்ப மலர்ச் சரங்களை தொடுத் துக் கொடுப்பதில் சமர்த்தர்.

**நா. பார்த்தசாரதி :**

குறிஞ்சி மலரின் ஏற்றம் பரப்பும் வண்ணமணிச் சிறுகதைகள் சிலவற்றைப் படைத்து, குறுகியகால அளவில் தனக் கென ஓர் இடத்தை ஏற்படுத்திக் கொண்ட திறமைசாலி இவர்.

**அகிலன் :**

இவர் 'பாவை விளக்கு அகிலன்'. 'குணச் சித்திரப் புதின வேந்தன்.' தமிழ் நவீன இலக்கியத்தின் பெருமையைக் காப்பாற்று பவர்களில் குறிக்கத் தகுந்தவர்.

**கி. ராஜேந்திரன் :**

தவச் செல்வர் தமிழ்ப்பேராசிரியர் கல்கி அவர்களின் தவச் செல்வர் இவர் என்பது நீங்கள் அறிந்த உண்மை. 'கல்கி' ஆசிரியர் குழுவினரில் ஒருவர். இளமைத் தொடக்கம் தொட்டே, பேரும் புகழும் இவரை அண்டி வந்து கொண்டிருக்கின்றன. 'பொங்கி வரும் பெருநிலவு'-இவர் படைத்த சுவை படைத்த தொடர்கதை. தந்தையைப் போலவே இவரும் தரமுள்ள நகைச்சுவை யுடன் மேடைகளில் பேசத் தெரிந்தவர்.

**இதயவேந்தன் :**

தமிழரசுக் கழகம் வளர்த்துத்தந்த இளம் பேச்சாளர்களுள் ஒருவர். நாடகாசிரியர். கவிகளும் புனைவார்.

**பாரதிமோகன் :**

நாட்பட்ட கவிஞர்; நன்கு எழுதுபவர்.

**தமிழ்க்கோவன் :**

புதுவை வாழ் இளங் கவிஞர்; புரட்சிக் கவிஞரின் மரபொட்டி எழுதப் பழகியவர்.

**இரா. பரமசிவம் :**

பள்ளி ஆசிரியர்; வளர்ந்து வரும் கதா சிரியர்; விகடன் மாணவர் திட்டத்தில் இடம் பெற்ற நல்ல கவிஞர்.

**இராம. வேலாயுதம் :**

கல்லூரி மாணவர் வாழ்வுதொட்டுக் கவி புனைந்து வருகிருர். ஆர்வமும் துடிப்பும் கொண்ட பூவை வாசி.

**ர. தங்கவேலன் :**

குழந்தைக் கவிஞரின் வாரிசுகளில் ஒருவர்.

**இளம்பாரதி :**

மதுரைக் கவிஞர்; பாடல்களில் முதிர்ச்சி பெற்ற இளவல்.

**மு. வேங்கடபாரதி :**

மனமும் மணமும் சேர்த்துப் பாமாலை தொடுக்கத் தெரிந்தவர்.

**திருச்சி வாசுதேவன் :**

கதை, நாடகம் முதலியனவும் எழுதி வரும் பாடலாசிரியர்.

**கல்யாணம் சாந்தா மணாளன் :**

பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் மெய்ச் சீடர். அதனல்தான் 'கல்யாணம்' முன் நிற்கிருர். உயிர்க் கவிகள் புனைவார்.

**உங்களுக்கு எங்கள் நன்றி!**

197659

¼, ½, 1 பவுண்டு பாக்கெட்

களிலும் 20, 7, 3, 1, பவுண்டு

வாக்குவம் டின்களிலும்

கிடைக்கும்.

**மை காப்பி கம்பெனி,**

84, சைடாம்ஸ் ரோடு,

அப்பாராவ் கார்டன்ஸ் சென்னை-7.

அச்சிட்டு வெளியிடுபவர், ஆசிரியர்: ஜி. உமாபதி, உமா பிரிண்டர்ஸ்.
4/32, தாதா முத்தியப்பன் தெரு, சென்னை-1. (தமிழ் நாடு) போன்: 31800.

பேனுக்களில் ரத்தினம் போல் திகழும் புதிய

# பைலட் – கெமி-கோல்ட் மூடிகொண்டது




PP 239a

TRADE MARK

நிர்வாக ஆபீஸ்:
பைலட் பென் கம்பெனி (இந்தியா)
பிரைவேட் லிமிடெட்
'கத்தோலிக் சென்டர்'
அரமனைக்காரன் தெரு, மதராஸ்-1.

தொழிற்சாலையும், ரிஜிஸ்டர்ட் ஆபீஸும்:
கதிர்வேடு கிராமம், பொள்ளல் போஸ்டு, புழலேரி, செங்கல்பட்டு ஜில்லா.

கிளை ஆபீஸ்கள்:
343, அப்துல் ரஹ்மான்தெரு, பம்பாய்-3. 9, சௌரங்கீ ரோட், கல்கத்தா-13
8-B, ஸிந்தால் டிரஸ்ட் பில்டிங், ஆஸப் அலி ரோட், புது டில்லி.

Regd. No. M. 6309 **UMA** January 1960
Registered as a Newspaper in Ceylon.

இலங்கையில் கிடைக்கும் இடம்: **AVRA Ltd. Colombo.**

Edited, Printed and Published by G. Umapathy, at Uma Printers,
"Uma House" 4/32, Thathamuthiappan Street, Madras-1. (Tamil Nadu)